# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2018

www.tnpscthervupettagam.com














SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ........ 1**

**தமிழ்நாடு செய்திகள் ........ 12**

அனைத்து மகளிர் மெட்ரோ இரயில் நிலையம் ........ 12
புவிசார் குறியீடு - நாகர்கோவில் கோவில் நகை ........ 12
தமிழ்நாட்டுப் பொருளாதாரம் ........ 13
வல்வில் ஓரி திருவிழா ........ 13
தமிழ்நாட்டின் முதல் அரசு பயிற்சி பெற்ற பிராமணரல்லாத அர்ச்சகர் ........ 13
நீதிபதி R.ரகுபதி ஆணையம் ........ 14
சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ........ 14
5 புதிய வருவாய்த்துறை வட்டங்கள் ........ 15
சுகன்யா சம்ரிதி திட்டத்தில் பதிவு ........ 15
விசாகா குழு ........ 16
iCRAFPT 2018 ........ 16
பிளாஸ்டிக் மாசுபாடு இல்லா தமிழகம் - பிரச்சாரம் ........ 16
முதன்முறையாக ஆளுநர் கொடியேற்றம் ........ 17
சொற்குவை திட்டம் ........ 18
இந்தியாவின் மிக உயரமான படப்பிடிப்புத் தளம் ........ 18
மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018 - 2030 ........ 18

**தேசியச் செய்திகள் ........ 18**

போர்த்திறன் சார்ந்த வர்த்தக அங்கீகாரம் (Strategic Trade Authorization - 1 - STA - I) - இந்தியா ........ 18
ஹோமியோபதி மத்திய சபை (திருத்த) மசோதா, 2018 ........ 19
குற்றவியல் சட்ட (திருத்த) மசோதா, 2018 ........ 19
போர்த்திறன் சார்ந்த கூட்டாண்மை வழிகாட்டுதல்கள் ........ 20
சுவச்தா பக்வாடா ........ 21
ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரை ........ 21
அரசியலமைப்பு (123வது திருத்தம்) மசோதா 2017 ........ 22
Move Hack ........ 22
புவிசார் குறியீட்டிற்கான முத்திரை மற்றும் வாசகம் ........ 23
தலைமறைவு நிதி மோசடியாளர்கள் மசோதா ........ 24
இந்தியாவின் முதல் தொடர் சங்கிலி (Block Chain) மாவட்டம் ........ 24
பிரதான் மந்திரி உஜ்வாலா திட்டம் – இலக்கு நிறைவேற்றம் ........ 24
தேசிய விளையாட்டு பல்கலைக் கழக மசோதா, 2018 ........ 25
புதுமையோடு ஒருங்கிணைப்புத் திட்டம் ........ 25
மூன்று பெண் நீதிபதிகள் - இந்தியா ........ 26
சுவச் பாரத் திட்டம், கிராமின் - உலக சுகாதார நிறுவனம் ........ 26
தொழிற்முறை கல்லூரி இடங்கள்: தமிழ்நாட்டின் 69% இட ஒதுக்கீடு ........ 27
ICANN ccNSO சபையின் முதல் இந்திய உறுப்பினர் ........ 27
கைபேசி சொந்தமுடமையில் அதிக பாலின இடைவெளி - இந்தியா ........ 28
தடை செய்யப்பட்ட பகுதிக்கான அனுமதி தளர்த்தப்படுதல் ........ 29

பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா ....29
64-வது நிறுவனர் தினம் – லலித் கலா அகாடமி ....30
மாநிலங்களவை துணைத் தலைவர் தேர்தல் ....30
நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம் ....30
ICRISAT உடனான தெலுங்கானாவின் புரிந்துணர்வு ஒப்பந்தம் ....31
மக்கள் பிரநிதித்துவ (திருத்த) மசோதா ....31
4 கூடுதல் NDRF படைப்பிரிவு ....31
OBC மாணவர்களுக்கான பள்ளிக் கல்விக்கு பிந்தைய உதவித் தொகை ....32
புதிய எச்.ஐ.வி. முக்கிய தளங்கள் ....32
நடுவர் தீர்ப்பாயம் மற்றும் உடன்பாடு செய்தலுக்கான (திருத்த) மசோதா 2018 ....32
வர்த்தகப் பிரச்சனைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான சட்டதிருத்தம் ....33
சிறப்பு ஆயுதங்கள் மற்றும் செயல்தந்திர முறைகளுக்கான குழு (SWAT) ....33
மதத் மற்றும் சக்யோக் நடவடிக்கை ....34
A.K.பூட்டானி PMFPYயின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமனம் ....34
கடல் உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத் தலைவர் நியமனம் ....35
வட இந்தியாவின் முதல் விண்வெளி ஆராய்ச்சி மையம் ....35
நிதி ஆயோக்கின் பிட்ச் டு மூவ் (Pitch To Move) போட்டி ....35
மஹாதாயி நீர் விவகார தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு ....35
சர்வதேச சிறுதானிய ஆண்டு ....36
அஞ்சல் நெடுஞ்சாலைத் திட்டம் ....36
ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் ....37
மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டம் - 2022 ....38
பாஸ்கர் இராமமூர்த்தி குழு ....38
B. சசிகிரன் குழு ....39
பண்ணையிலிருந்து கிராமப்புற வருமானம் ....39
சகாயாத்ரி - ஃபிஜிக்கு நல்லெண்ண பயணம் ....40
ஒருங்கிணைப்பு குழு அமைப்பு ....41
தாயகம் திரும்பிய புரு அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் தளர்வு ....41
பராக் 8 ஏவுகணை ....41
தேசிய ஊட்டச்சத்து மாதம் ....42
குறிப்பிட்ட சுகாதார எச்சரிக்கைகளின் புதிய தொகுப்பு ....42
சர்வதேச பௌத்த மாநாடு 2018 ....43
7 மாநில ஆளுநர்கள் நியமனம் ....43
இணையதள பாலியல் வன்முறை ....43
மேலவைத் தேர்தலில் நோட்டா வசதி நீக்கம் ....44
ஸ்டெர்லைக்காக 3 உறுப்பினர் குழு ....44
BNHSன் முதல் பிராந்திய மையம் ....45
மூலோபாய கூட்டுக்கொள்கையின் கீழ் முதல் ‘இந்தியாவில் தயாரித்தல்’ திட்டம் ....45
தேசிய தேர்தல் உருமாற்ற கைபேசிச் செயலி (NETA) ....45
எஸ்.ஜே.வஜீஃப்தார் ....46
3வது இந்திய பெருங்கடல் மாநாடு ....46
FAME இந்தியா - II ....46
E21 பிரச்சாரம் ....47

ஆளில்லா விமானங்களுக்கான (Drones) விதிமுறைகள் – மத்திய அரசு ....47
இஞ்சேத்தி ஸ்ரீனிவாஸ் குழு ....48
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரோந்துக் கப்பல் – சோதனை ஓட்டம் ....48
பொலிவுறு இந்தியா ஹக்கத்தான் - 3வது பதிப்பு ....49
புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் - மத்திய அமைச்சரவை ....49
**சர்வதேசச் செய்திகள் ....50**
தேசிய சட்டசபையில் இடம் பெற்ற முதல் இந்து ....50
பாகிஸ்தான் பொது தேர்தல்கள் ....50
உயர் தெளிவுத் திறன் கொண்ட பூமியைக் கண்காணிக்கும் செயற்கைக் கோள் - சீனா ....51
உலகப் பள்ளிகளின் விவாதத்திற்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் (WSDC 2018) ....52
முதலாவது நேபாள – இந்திய நாடுகளின் சிந்தனைச் சாவடிகளின் மாநாடு ....52
கடற்கொள்ளைக்கு எதிரான மையத்தின் தலைமையிடம் மாற்றம் - ஐரோப்பிய யூனியன் ....52
சுதந்திரமான ஆணையக் குழு ....53
விசா பொது மன்னிப்பு திட்டம் - ஐக்கிய அரபு அமீரகம் ....53
ஜிம்பாப்வே தேர்தல் ....53
UK-ன் புதிய உடலுறுப்பு தான திட்டம் ....54
உலகின் வெறுமையான விமான நிலையம் ....54
வெனிசுலாவின் நாணயத்திலிருந்து 5 பூஜ்ஜியங்கள் நீக்கம் ....55
பாகிஸ்தான் - ரஷ்யா ஒப்பந்தம் ....55
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் ....56
மைத்ரீ – 2018 ....56
பசிபிக் பெருமுயற்சி – 2018 ....56
பாலஸ்தீனம் ஒரு இறையாண்மை அரசு - கொலம்பியா அங்கீகாரம் ....57
ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் அமைதிப் பயற்சி - 2018 ....57
உலகின் முதல் தொடர் சங்கிலி பத்திரம் ....57
2018 உலகளாவிய வாழத் தகுந்த நகர குறியீடு ....58
சர்வதேச நைட்ரஜன் துவக்க முயற்சியின் தலைவர் ....58
மெய்ப் பொருளியலின் 24வது உலக காங்கிரஸ் மாநாடு ....59
ஈரான் நடவடிக்கைக் குழு ....60
கேரள வெள்ள பாதிப்பு – நிவாரணக் குழு ....60
ஹஜ் யாத்ரீகர்களுக்கு இலவச தங்கும் அறை – சவுதி அரேபியா ....60
மாலியின் அதிபர் மறு தேர்வு ....61
போலி செய்திகளைத் தடுக்க புதிய சட்டம் ....61
'எசலா மகா பெரஹெரா' திருவிழா ....62
ஈரானின் முதல் உள்நாட்டு போர் விமானம் தயாரிப்பு ....62
பிணை எடுப்புத் திட்டத்திலிருந்து கிரீஸ் மீள்தல் ....63
அமெரிக்கா மீதான WTO சர்ச்சை ....63
உலகின் முதல் பீங்கானுக்கான 4D அச்சிடல் ....63
ஸ்வீடனின் 'பெண்ணிய வெளியுறவுக் கொள்கை' ....64
G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்கள் கூட்டம் ....64
ஆர்க்டிக் கடல் வழியாக பயணம் செய்யும் முதல் சரக்குக் கப்பல் ....65
முதல் பெண் போர் விமானி – ஜப்பான் ....65
4-வது ஆசிய தேர்தல் பங்குதாரர்களின் மன்றம் ....66

முதலாவது சார்க் (SAARC) விவசாய கூட்டுறவு வணிக மன்றம் ....66
**பொருளாதாரச் செய்திகள் ....67**
சலுகை நிதித் திட்டம் ....67
சூரிய ஒளி மின்கலத்தின் இறக்குமதி மீது விதிக்கப்படும் 25 சதவிகித பாதுகாப்பு வரி ....67
டிஜிட்டல் பணம் செலுத்துதல் - நிதி ஆயோக்கின் ஆய்வு....68
டிஜிட்டல் பணம் செலுத்துதல் மீதான பணம் மீளப்பெறல்....68
GST சபையின் சலுகைகள்....69
அமைச்சர்கள் குழு – சுரேஷ் பிரபு தலைமை....69
அலுவல்சாரா இயக்குநர்கள்....69
தேசிய பண வழங்கீடு சங்கத்தின் சான்றிதழ் ....70
அதிகப்படியான பங்காதாயம் - ரிசர்வ் வங்கி....70
கருவிழி உறுதிப்பாடு - ஆக்சிஸ் வங்கி (Axis Bank) ....71
2016-2017ல் உள்நாட்டு பணம் அனுப்புதலுக்கான முதன்மை ஆதாரம் - UAE....71
TReDS முறையில் பரிவர்த்தனை செய்யும் முதல் பொதுத்துறை நிறுவனம்....72
இந்திய வங்கிக் கூட்டமைப்பு - 2018....72
ஐ-பத்திரம் (Bond - I)....73
ரூ.8 லட்சம் கோடி சந்தை மூலதனத்தை கடந்த முதல் இந்திய நிறுவனம் ....73
சர்வதேச நடுவர் தீர்ப்பாயம் - ரிலையன்ஸ் ஆற்றல் நிறுவனம் ....73
கோல்டுமேன் சச்ஸ் – பிராச்சி மிஸ்ரா....74
கல்விக் கடன் – RBI அறிக்கை....74
RBIயின் வருடாந்திர அறிக்கை 2017-2018 ....75
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....75**
புதிய வடிவம் - ஸ்கூடாய்டு (Scutoid)....75
குழந்தைகள் சிறிய தலையுடன் பிறப்பதற்குக் காரணமான ஜிகா வைரஸ் - கண்டுபிடிப்பு....76
E-அக்ஷிராயன்....76
மீயொலி இடைமறிப்பு ஏவுகணை ....76
சஹீர் நஹின் கைபேசி செயலி....77
WOW (பெண்களின் நலன் - Wellness Of Women) கைபேசி செயலி ....77
நாசாவின் வர்த்தக ரீதியிலான விண்கலம்....78
ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட் (நுரைமம்)....79
ரைஸ்க்ரீக் (RISECREEK) ....79
உலகின் முதல் வெப்ப மின்கல ஆலை ....80
முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் ஒலிம்பிக்ஸ்....80
சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தில் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள் ....81
ஆன்ட்ராய்ட் 9.0 பதிப்பின் Pie பதிப்பு வெளியிடப்படுதல்....81
நிர்யாத் மித்ரா கைபேசி செயலி....82
பல தரப்பு பண வழங்கீடு ஏற்பு கருவி ....82
சீனாவின் முதல் அதிவேக விமானம்....82
மத்தியப் பிரதேச ஊழியர்களுக்கு GPS பொருத்தப்பட்ட கைக்கடிகாரம் ....83
கேமியோஸ் (Cameos)....83
அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க தகவு....84
அதிக தூரத்தில் உள்ள கதிர்வீச்சு (ரேடியோ) பால்வெளி மண்டலம்....84
ஒளி ஊடுருவும் தன்மையுடைய மீத்திறன் - காப்பு கூழ்மம் உருவாக்கம் ....85

NPCI – UPI 2.0 ...85
ATGM ஹெலினா வெற்றிகரமாக பரிசோதிப்பு ...85
திறம் வாய்ந்த வான்வளிக்கள எதிர்ப்பு ஆயுதம் (SAAW) - வெற்றிகர சோதனை ...86
கலப்பு கோதுமை மரபணு கண்டுபிடிப்பு ...87
உலகின் அதிக தேய்மான எதிர்ப்பு உலோகக் கலவை ...87
நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணை ...87
நீர் மறுசுழற்சி ஆராய்ச்சி நிறுவனம் ...88
**குறைந்த செலவு கொண்ட வெளியேற்ற உமிழ்வு** ...88
ரீமிக்ஸ் – உள்ளுடல் GPS ...89
சந்திரனில் உறைந்த நீர் படிவுகள் ...89
CERT-In அறிக்கை ...89
5G வழிகாட்டும் குழு - AJ பால்ராஜ் ...90
ஐரோப்பிய காற்று அளவு செயற்கைக்கோள் ...90
பேப்லெஸ் சில்லு வடிவமைப்பு காப்பகம் ...91
OSIRIS -Rex விண்கலம் ...91
நாசாவின் இரண்டு மெய்நிகர் யதார்த்தச் செயலிகள் ...92
புதிய ஆன்லைன் தளம் - கெய்ல் ...92
CBSE-ன் டிஜிட்டல் கல்வி களஞ்சியம் ...93
புத்தாக்க ஆலோசனைக் குழு ...93
இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் – ஆராய்ச்சித் திட்டம் ...94
ரஷ்யாவின் புதிய இடைமறிப்பு ஏவுகணை சோதனை ...94
இராணுவப் பயிற்சி - வோஸ்டோக் 2018 ...95
உலகின் சிறிய மருத்துவ இயந்திர மனிதன் ...95

**சுற்றுச்சூழல் செய்திகள் ...96**

உயிரி எரிபொருள் கொள்கையை செயல்படுத்தும் முதல் மாநிலம் ...96
ஆழ்கடல் பணிக்கான செயல்திட்டம் ...96
காற்றின் தர ஆய்வு - C40 காற்றின் தர வலையமைப்பு ...97
2019 நிதியாண்டிற்குள் 5 நதிநீர் இணைப்பு திட்டங்கள் ...97
கங்கை புத்தாக்கத் திட்டத்தை கண்காணிப்பதற்கான குழு ...98
மீள இயலாத கொதிப்பு இல்லமாக மாறும் பூமி ...98
UNESCOவின் பட்டியலில் கஞ்சன்ஜங்கா உயிர்க்கோள இருப்பு ...99
இந்தியாவின் அதிக மாசுபட்ட நகரம் - குருகிராம் ...99
வாகனங்களின் மீதான வண்ணக் கோடுடைய ஸ்டிக்கர்கள் ...100
RUCO ...100
எரிபொருள் பயன்பாட்டிற்காக பெட்ரோலிய கரி (Petroleum Coke – Pet Coke) இறக்குமதி ...101
ஃபால் ஆர்மி புழு (FAW) ...102
கேரளாவில் புயல் எச்சரிக்கை மையம் ...102
கேரள பாரம்பரிய மீட்புத்திட்டம் ...103
இமயமலைப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சி - 5 கருப் பொருள் அறிக்கைகள் ...103
இந்தியாவின் முதலாவது பயோ எரிபொருளால் இயங்கும் விமானம் ...104
சிறுத்தை மீள்அறிமுகத் திட்டம் ...105
அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மைய (CSE) ஆய்வு ...105

**மாநிலச் செய்திகள் ...107**

B-மையம் ..... 107
யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அங்கீகாரம் ..... 107
முக்கிய மந்திரி - யுவ நேஷ்தம் ..... 107
முதலாவது டிரேகன்ஃப்ளை திருவிழா - தில்லி ..... 107
தேசிய மக்கள் பதிவேடு இறுதிவரைவு- அஸ்ஸாம் ..... 108
முகல்சராய் இரயில்வே நிலையம் ..... 108
கொசு ஒழிப்பு இரயில் வண்டி ..... 109
கோவாமைல்ஸ் ..... 109
நகர ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையின் நாய்ப் படை ..... 109
உலகின் மிகப்பெரிய பறவை சிலை ..... 110
பசு காவலர்களுக்கு அடையாள அட்டை அளிக்கும் முதல் மாநிலம் ..... 110
சசி பூசன் பெஹ்ரா குழு ..... 110
தேசிய தலைநகரில் பிச்சையெடுத்தல் குற்றவிலக்களிக்கப்படுதல் ..... 111
முக்கிய மந்திரி கன்யா உத்தன் யோஜனா ..... 111
ஸ்வச்ச மேவ ஜயதே ..... 111
'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு 'உச்சி மாநாடு ..... 112
கூடுதல் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்கள் - கர்நாடகா ..... 112
கன்யாஸ்ரீ திட்டம் - குடும்ப வருமான உச்ச வரம்பு ..... 112
ஷஹித் சமன் திவாஸ் ..... 113
பேரிடர் பதிலெதிர்ப்புப் படை - தெலுங்கானா ..... 113
இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கான முதலாவது கருத்தரங்கு ..... 113
மதம் சார்ந்த நூல்கள் அவமதிப்பு தண்டனைக்குரியது ..... 113
சத்தீஸ்கரின் நயா ராய்ப்பூர் பெயர் மாற்றம் ..... 114
இந்தியாவின் மிகப் பெரிய தொழில்நுட்ப மையம் ..... 114
பந்தேல்கண்ட் விரைவுப் பாதை பெயர் மாற்றம் ..... 114
இலவச மின்சாரம் – SC/ST குடும்பங்கள் ..... 115
மாநிலங்களுக்கிடையேயான முதல் காற்று சக்தி திட்டம் ..... 115
மு ஹீரோ மு ஒடிசா ..... 115
மேற்கு வங்காளத்திற்கு அளிக்கவிருக்கும் கடனுக்கு ஒப்புதல் - ADB ..... 115
கூகுள் - ஆந்திரப் பிரதேச மாநில பைபர் நெட் ..... 116
மாநில பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்திட திருத்த மசோதா ..... 116
இந்தியா உலக வங்கியுடன் கடன் ஒப்பந்தம் ..... 117
**பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 117**
புகழ்மிக்க பீல்ட்ஸ் விருது - அக்ஷய் வெங்கடேஷ் ..... 117
ராஜுவ் சத்பாவனா விருது ..... 118
சிறந்த பாராளுமன்றத்திற்கான விருதுகள் ..... 118
பிங்காலி வெங்கைய்யா - 141வது பிறந்த நாள் ஆண்டு விழா ..... 119
AIBD தலைவர் ..... 119
பார்ச்சூனின் (Fortune) '40-ன் கீழ் 40' தரவரிசை ..... 120
புத்திக் கூர்மைக்கான உலகப் பட்டியலில் கொல்கத்தா நபர் முன்னிலை ..... 120
வெள்ளை மாளிகை பத்திரிகை நிரூபர் சங்கம் ..... 121
தேசிய பெண்கள் ஆணையம் (NCW) ..... 121
சர்வதேச புவியியல் தேனீ உலக சாம்பியன்ஷிப் ..... 121

ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி ..... 122
வரலாற்றில் அதிக செல்வாக்கு மிகுந்த பெண் - BBC ..... 122
2018 அல்பானி மருத்துவ மையப் பரிசு ..... 123
இந்தியாவின் பணக்காரப் பெண்மணி ..... 123
கல்கத்தா விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் மன்ற வருடாந்திர விருதுகள் ..... 124
WHO - புகையிலை ஒழிப்பு தின விருது 2018 ..... 125
ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் மறைவு ..... 125
வாஜ்பாயின் மறைவிற்குப் பின் மூன்று விருதுகள் ..... 126
ஐ.நா.வின் 'லீஜியன் ஆப் மெரிட்' (Legion of Merit) விருது ..... 126
அதிக தேசபக்தியுள்ள குறீயீடு ..... 127
அதிக சம்பளம் பெற்ற பெண் விளையாட்டு வீரர்கள் ..... 127
ரவீணா தண்டன் - சஞ்சய் காந்தி தேசிய பூங்காவின் விளம்பரத் தூதர் ..... 128
வி.எஸ்.நய்ப்பால் - மறைவு ..... 128
2017ஆம் ஆண்டின் சிறந்த நல்லாசிரியருக்கான தேசிய விருது ..... 129
இலங்கையின் தேசிய செயல்திறனுக்கான விருதுகள் 2018 ..... 129
சதீஷ் ரெட்டி - DRDO-ன் புதிய தலைவர் ..... 129
குல்தீப் நய்யர் - மறைவு ..... 130
ஆசியாவை மாற்றியமைத்ததில் பெரும் பங்களிப்பாளர் விருது ( Game Changer award ) ..... 131
UNEP-ன் துணை பொதுச் செயலாளர் சத்யா S. திரிபாதி ..... 131
காகாடு பயிற்சி 2018 ..... 132
2018 ஆம் ஆண்டின் சிறந்த இந்தி புத்தகம் ..... 132
**விளையாட்டுச் செய்திகள் ..... 133**
IAAF வைர லீக் ..... 133
1000வது டெஸ்ட் - இங்கிலாந்து ..... 133
2018 RBC கனடாவின் ஓபன் கோல்ப் பட்டம் ..... 134
பிரிக்ஸ் U-17 கால்பந்து 2018 ..... 134
பாட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டி ..... 134
விராட் கோலி - ஐசிசி தரவரிசைப் பட்டியல் ..... 135
தன் பாலினத்தவர் விளையாட்டுகள் - பாரீஸ் ..... 136
பெண்கள் உலக கோப்பை ஹாக்கி 2018 ..... 136
உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் 2018 - மற்ற நிகழ்வுகளின் வெற்றியாளர்கள் ..... 137
COTIF கோப்பை 2018 ..... 137
மேற்கு ஆசியா கால்பந்து பெடரேஷன் கோப்பை ..... 138
உலக இளையோர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் - 2018 ..... 138
ஆசிய நாடுகள் கோப்பை 2018 ..... 138
வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) 2018 ..... 139
ஐரோப்பிய சுற்றுப் பயணக் கோப்பை ..... 140
நேபாளம் - நெதர்லாந்து சர்வதேச ஒருநாள் போட்டி ..... 140
மெசி - பார்சிலோனாவின் அணித் தலைவர் ..... 140
ITF Futures ஆடவருக்கான டென்னிஸ் போட்டி ..... 141
டொராண்டோ மாஸ்டர்ஸ் ..... 141
இந்தியாவின் இளமையான குழிப்பந்தாட்டக்காரர் ..... 142
இந்தியாவின் 53-வது கிராண்ட் மாஸ்டர் ..... 143

பெண்கள் கிராண்ட் மாஸ்டர் ... 143
SAFF 15 வயதுக்குட்பட்ட மகளிர் சாம்பியன்ஷிப் ... 143
ஆசிய விளையாட்டுக்கள் - 18வது பதிப்பு ... 144
உலக அளவில் இந்தியாவின் முதலாவது பதக்கம் - சைக்கிள் போட்டி ... 144
5 கேட்சுகளைப் பிடித்த 4வது இந்திய விக்கெட் காப்பாளர் ... 145
துப்பாக்கி சுடுதல் உலக கோப்பை - 2020 ... 145
யோனெக்ஸ் – சன்ரைஸ் வியட்நாம் ஒபன் - 2018 ... 146
ஜீலன் கோஸ்வாமி ஓய்வு ... 146
கோ-கோவுக்கு அங்கீகாரம் ... 147
FIFA U-20 உலகக் கோப்பை - பிரான்ஸ் 2018 ... 147
பெல்ஜியன் கிராண்ட் பிரிக்ஸ் ... 147
T20 வரலாற்றில் அதிக ஓட்டங்களை கட்டுப்படுத்திய பந்து வீச்சாளர் ... 148
**முக்கிய தினங்கள் ... 149**
ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினம் - ஜூலை 30 ... 149
உலக தாய்ப்பாலூட்டும் வாரம் 2018 ... 150
சர்வதேச நண்பர்கள் தினம் - ஜூலை 30 ... 150
உலக வனப் பாதுகாவலர் தினம் - ஜூலை 31 ... 151
தேசிய தர்பூசணி தினம் - ஆகஸ்டு 3 ... 152
நண்பர்கள் தினம் - ஆகஸ்டு 5 ... 152
ஹிரோசிமா தினம் – ஆகஸ்ட் 6 ... 153
தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்டு 07 ... 153
வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 76ம் ஆண்ட விழா – ஆகஸ்ட் 08 ... 154
சர்வதேச பூனை தினம் - ஆகஸ்டு 8 ... 155
உலகின் பூர்வ குடிகளுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்டு 9 ... 155
உலக உயிர் எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10 ... 156
உலக புகைப்படத் தினம் – ஆகஸ்ட் 19 ... 156
உலக கொசுக்கள் தினம் - ஆகஸ்ட் 20 ... 156
சத்பாவன திவாஸ் (நல்லிணக்க நாள்) - ஆகஸ்ட் 20 ... 157
உலக மூத்த குடிமக்கள் தினம் – ஆகஸ்ட் 21 ... 157
தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21 ... 158
அடிமை வணிகம் மற்றும் அவற்றை ஒழித்தலை நினைவு கூறுவதற்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 23 ... 158
சர்வதேச வண்ண நீர்த் திருவிழா 2018 – ஆகஸ்ட் 23 ... 159
சமஸ்கிருத திவாஸ் - ஆகஸ்ட் 26 ... 160
தெலுங்கு மொழி நாள் – ஆகஸ்ட் 29 ... 160
தேசிய விளையாட்டுகள் தினம் – ஆகஸ்ட் 29 ... 160
அணுஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 29 ... 161
**இதரச் செய்திகள் ... 161**
டிஜிட்டல் கல்வியறிவு நூலகம் ... 161
சந்தாலி ... 162
‘நமது பாதுகாப்பு, நமது உரிமைகள்’ பிரச்சாரம் ... 162
ராஜ் பவன் - கர்நாடக ஆளுநர் ... 162
**உலகின் மிகப் பழமையான பாலாடைக்கட்டி** ... 163
கலீத் ஹோசினியின் ‘கடல் பிரார்த்தனை ‘(Sea Prayer) ... 163

# TNPSC துளிகள்

- புதிய கோள்களை கண்டறிவதற்கான நாசாவின் வெளிக் கோள்களை ஆய்வு செய்ய அனுப்பப்படும் செயற்கைக் கோள் (Transiting Exoplanet Survey Satellite - TESS) செயல்படத் துவங்கியுள்ளது. ஏப்ரல் 2018-ல் வெற்றிகரமாக செலுத்தப்பட்ட இச்செயற்கைக் கோள் தகவல்களை சேகரிக்கத் துவங்கியுள்ளது.
- நாடு முழுவதும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை 3 லட்சம் பொதுச் சேவை மையம் மூலம் செயல்படுத்த பொதுச் சேவை மையம் மற்றும் தேசிய சுகாதார கணக்குகள் ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- சென்னையின் மெட்ராஸ் மருத்துவ கல்லூரியின் (Madras Medical College) கிழக்கில் கட்டப்பட்டுள்ள செங்கோட்டை (Red fort) ஆனது அருங்காட்சியகமாக மாற்றப்படவிருக்கிறது. இது 1897-ல் கட்டப்பட்டது. இக்கோட்டை இந்தோ-சாராசீனிக் வகையான கட்டிட அமைப்பைச் சார்ந்தது.
    - இக்கோட்டையை 'முதல் நிலை பாரம்பரிய கட்டிடம்' என்று நீதியரசர் E.பத்மநாபன் தலைமையிலான குழு வகைப்படுத்தியுள்ளது.
- நாட்டில் குற்றங்களை துப்பறிகின்ற கருவிகள் வரிசையில் முதல் முறையாக தெலுங்கானா காவல்துறை முக அங்கீகார முறையை ஆரம்பித்துள்ளது. இந்த மென்பொருள் TSCOP என்கிற தெலுங்கான மாநில காவல்துறையின் கைபேசி செயலியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் களப் பணியாற்றும் காவல் துறை பணியாளர்கள் குற்றவியல் தரவு மையத்தை எங்கிருந்தாலும் அணுகி சந்தேகிக்கப்படும் குற்றவாளியின் முகத்தை சரிபார்க்க முடியும்.
- ஆப்பிள் நிறுவனம் 1 டிரில்லியன் டாலர்கள் மதிப்புடைய முதல் அமெரிக்க பொது வர்த்தக நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இந்த தொழில்நுட்ப நிறுவனத்தின் பங்குகள் 2.8 சதவிகிதம் அதிகரித்து 207.05 டாலர்கள் என்ற அளவில் உயர்ந்துள்ளது.
- 61வது உலக சாந்தா கிளாஸ் மாநாடு டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் நகரத்தில் நடத்தப்பட்டது.
- நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு விஜய் தாக்கூர் சிங்கை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செயலாளராக (கிழக்கு) நியமித்துள்ளது.
- புகழ்பெற்ற தொழிலதிபர்களான குமாரமங்கலம் பிர்லா மற்றும் Y.C.தேவேஸ்வர் ஆகியோர் ஏர் இந்தியாவின் அலுவல் சாராத தனிச் சுதந்திரமுடைய இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
    - முதல்முறையாக பெரிய தொழிலதிபர்கள் ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் மன்றத்தில் பெயரிடப்பட்டுள்ளனர்.
- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் IMPRINT - II (Impacting Research Innovation and Technology) திட்டத்தின் கீழ் 112 கோடி ரூபாய் மதிப்புள்ள 122 புதிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கான முன்மொழிதலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - புதுதில்லியில் மனித வள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தலைமையில் நடைபெற்ற IMPRINT - II உயர்மட்டக் குழுவின் சந்திப்பில் இப்புதிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- நிலவுக்கு அனுப்பப்பட உள்ள இந்தியாவின் இரண்டாவது திட்டமான சந்திராயன் - 2 திட்டத்தினை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (Indian Space Research Organisation - ISRO) ஜனவரி 2019-க்கு தள்ளி வைத்துள்ளது. இத்திட்டம் இரண்டாவது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
    - இஸ்ரேல் நிலவிற்கான திட்டத்தினை டிசம்பர் 2018-ல் தொடங்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இந்த தாமதத்தினால் நிலவின் மீதான மிதமான தலையிறங்குதலில் இந்தியா 4வது இடத்தினை இஸ்ரேலிடம் இழக்க வாய்ப்புள்ளது.
- சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு 25 விமான நிலையங்கள் மற்றும் 5 துறைமுகங்களில் 165 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கான மின்னணு விசா வசதியினை நீட்டித்துள்ளது.
- தமிழக அரசு சார்பில் உணவு பாதுகாப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைமை அதிகாரியாக சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நடுவர் மன்ற கூடுதல் தலைமை நீதிபதி ஏ.ஜாகீர் உசேன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- உயிர்க் காப்பீடு அல்லாத பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி S.கோபக் குமாரை அந்நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பொது மேலாளராக நியமித்துள்ளது. இவரது நியமனம் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.
    - இதற்கு முன் கோபக் குமார் ஜிஐசி ஹவுசிங் (GIC Housing) நிதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றினார்.
- இந்தியாவின் மத்திய வங்கியின் தகவலின்படி ஜூன் மாதத்தில் கைபேசி பணப்பையின் மூலம் மேற்கொண்ட பணப்பரிமாற்றத்தின் மதிப்பானது ரூ.14,632 கோடி என்ற மைல்கல்லை எட்டியுள்ளது. அம்மதிப்பு மே மாத பரிமாற்றத்துடன் ஒப்பிடும் போது 42 சதவீதம் அதிகரித்துள்ளது.
    - மே மாதத்தில் பரிமாற்றத்தின் எண்ணிக்கையானது எப்போதும் இல்லாத அளவுக்கு 325.41 மில்லியன் என்ற நிலையை எட்டியது. ஆனால் ஜூன் மாதத்தில் 309.62 மில்லியன் என்ற அளவிற்கு அதாவது 5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- உடனடியாக செயலி அடிப்படையின் மூலம் தனிக்கடன் வழங்குவதற்காக, (லேசிபேயின் (lazypay) மூலமாக) இந்தியாவில் முன்னிலை வகிக்கும் வங்கியில்லாத நிதி நிறுவனமான ரிலையன்ஸ் மணி (Reliance Money) என்ற நிறுவனத்துடன் பேயு (Pay U) என்ற நிறுவனம் உத்திமுறையிலான ஒப்பந்தம் செய்துள்ளது.
- ஆண்ட்ராய்டு பயனாளர்களுக்காக இந்தியாவின் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையமானது My Call மற்றும் DND 2.0 என்ற செயலிகளை UMANG (United Mobile application for New-age Goverance) தளத்துடன் ஒருங்கிணைத்துள்ளது.
- கவிஞர் மகுடீஸ்வரன், சிற்பி பவுண்டேசனின் 'இலக்கிய சிற்பி' விருதினை பெற்றுள்ளார்.
- மத்திய அரசின் சார்பில் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் K.K.வேணுகோபால் தலைமை நீதிபதியால் விசாரணை செய்யப்படும் அரசியலமைப்பு சார்ந்த வழக்கு விசாரணைகளின் காணொளி காட்சியினை ஒன்றிலிருந்து மூன்று மாதங்கள் வரையிலான சோதனை கால அடிப்படையில் பதிவு செய்யலாம் மற்றும் நேரலையாக ஒளிபரப்பலாம் என்று உச்சநீதிமன்றத்திடம் கூறியுள்ளார்.

- இலங்கையைச் சேர்ந்த மட்டைப்பந்தாளர் தனுஷ்கா குணதிலகா 'நடத்தை விதித் தொகுப்பினை' மீறியதை அடுத்து எல்லா விதமான சர்வதேச மட்டைப்பந்து விளையாட்டுகளிலிருந்தும் இலங்கை கிரிக்கெட்டினால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
    - இது கொழும்புவில் இலங்கை மற்றும் தென் ஆப்பிரிக்கா இடையிலான 2வது மற்றும் கடைசி சோதனையாட்டத்தில் 3வது நாள் ஆட்டத்தின் இறுதியில் நடைபெற்றது.
- ஜெர்மனியை சேர்ந்த நடுகள வீரர் மெசட ஓசில், இனவாதத்தினை மேற்கோளிட்டு காட்டி ஜெர்மனியின் தேசிய கால்பந்து அணியினை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளார். மெசட் ஓசில் ஜெர்மனியில் பிறந்து ஜெர்மனிக்காக கால்பந்து விளையாடினாலும் அவரின் மூதாதையர்கள் துருக்கியை சேர்ந்தவர்கள் என்பதால் துருக்கியிடம் இரட்டை குடியுரிமையைப் பெற்றுள்ளார்.
- 1962-ஆம் ஆண்டு, சுங்கத்துறை சட்டத்தின் பிரிவு 159-ன் கீழ் அரசாங்கம் 328 ஜவுளித் துறைக்கான பொருட்களின் மீது நடப்பில் இருக்கும் 10 சதவிகித வரியை 20 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்த்தியுள்ளது.
- 2018-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 17-ஆம் தேதி கோவளம் கடற்கரையில் Covelong Point Surf Festival என்ற திருவிழாவின் 6-வது பதிப்பினை சென்னை நடத்த இருக்கின்றது.
- முதல் முறையாக ஆசியாவில் 2019-ஆம் ஆண்டு ரக்பி உலகக் கோப்பையை ஜப்பான் நடத்த இருக்கின்றது. இது ரக்பி உலகக் கோப்பையின் 9-வது பதிப்பாகும்.
- வெனிசுலாவின் குடியரசுத் தலைவரான நிக்கோலஸ் மதுரோ ராணுவ நிகழ்ச்சியில் பங்கேற்கும் போது வெடிகுண்டுகள் வைத்து படுகொலை செய்யப்படும் முயற்சியில் இருந்து தப்பித்து இருக்கின்றார். இவர் 2013-ஆம் ஆண்டு பொதுவுடைமைவாதியான ஹியூகோ சாவோஸிற்குப் பதிலாகப் பதவியேற்றார்.
- தனது உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டமைக்காக சவுதி அரேபியா கனடாவுடனான தனது அனைத்து ராஜ்ஜிய, வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளைத் துண்டிப்பதாக அறிவித்துள்ளது.
    - மேலும் தனது தூதரை திரும்பப் பெற்றும், கனடா நாட்டுத் தூதரை வெளியேற்றியும் இருக்கின்றது.
- எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையின் 175வது வருட சேவைக்கான கொண்டாட்ட விழாவின் போது, தமிழ்நாடு சுகாதாரத் துறை அமைச்சர் C.விஜய பாஸ்கர் மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே புதிதாக பிறந்த குழந்தைகள் திருடப்படுவது (அ) காணாமல் போவதை தடுப்பதற்காக ரேடியோ அதிர்வெண் அடையாள குறியீட்டு சேவையினை (RFIT Service - Radio Frequency Identification Tag) தொடங்கி வைத்தார்.
- மும்பையின் செயின்ட் சேவியர்ஸ் கல்லூரி அதன் முதல் கிருத்துவரல்லாத கல்லூரி முதல்வரை பெற உள்ளது. இது இக்கல்லூரியின் 150 வருட வரலாற்றில் முதல்முறையாகும். ராஜேந்திர சிந்தே இக்கல்லூரியின் 150 வருடத்தை கடந்த தினமான செப்டம்பர் 1 அன்று பொறுப்பினை ஏற்றுக் கொள்வார்.
    - கல்லூரி முதல்வராக நியமிக்கப்பட்ட கல்லூரியின் தற்போதைய தாவரவியல் துறை தலைவர், இயேசு சபையை சாராத முதல் கல்லூரி முதல்வர் டாக்டர்.பாப்பிஸ்ட் அக்னெல் மெனீசில்ஸை அடுத்து பதவி ஏற்க உள்ளார்.

- 2018ம் ஆண்டு ஆகஸ்டு 7ம் தேதியன்று மறைந்த தி.மு.க. தலைவர் M.கருணாநிதிக்கு, ஆகஸ்டு 8ம் தேதியன்று அஞ்சலி செலுத்திய பின் பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத நபருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- பணியாளர் துறைக்கான இணைமந்திரி ஜிதேந்திர சிங் மக்களவையில் 2005ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்திய குடிமகன்கள் மட்டுமே தகவல் கோர முடியும் என்று எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளார். வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் RTIக்கான விண்ணப்பங்களை பதிவு செய்ய இயலாது.
- முன்னாள் மிச்சிகன் மாநில சட்டமன்ற உறுப்பினரான ரஷிதா லேயிப் ஜனநாயகக் கட்சியின் சார்பாக அமெரிக்க காங்கிரசிற்கு தேர்ந்தெடுக்கப்பட உள்ள முதல் முஸ்லீம் பெண்மணியாக உள்ளார். இவர் அமெரிக்க காங்கிரசின் மக்கள் பிரதிநிதித்துவ சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பிரபல பால் மற்றும் பால் பொருட்களுக்கான அமுல் பிராண்டின் விளம்பரதாரர்களான குஜராத் கூட்டுறவு பால் கூட்டமைப்பு நிறுவனத்திற்கு இந்திய சர்வதேச விளம்பர சங்கம் (International Advertising Association India – IAAI) 'வருடத்தின் விளம்பரதாரர்' விருதினை வழங்கியுள்ளது.
- ஜனவரி 29, 2020-ல் அன்று முடிவடையும் தனியுரிமை மற்றும் குடியுரிமைகள் மேற்பார்வை குழு உறுப்பினர் என்ற பதவியின் கால வரையரையான 6 வருட காலத்தின் மீதமுள்ள காலத்திற்கு புகழ்பெற்ற இந்திய அமெரிக்க சட்ட பேராசிரியர் மற்றும் சட்ட நிபுணர் ஆதித்யா பம்சாயை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார்.
    - இது ஒரு நாட்டில் தனியுரிமை மற்றும் குடியுரிமைகள் ஆகியவற்றை காப்பதற்காக சுதந்திரமாக செயல்படும் நிறுவனம் ஆகும்.
- நாட்டில் தொழில் முனைவோரின் புனிதத்தினை மேம்படுத்துவதற்கான அரசின் திட்டத்தினை நிறைவு செய்வதற்காக ஸ்டார்ட்-அப் இந்தியா நிறுவனம், ஸ்டார்ட் அப் அகேடமியா கூட்டணி என்ற திட்டத்தினை தொடங்கியுள்ளது. இது ஒரே மாதிரியான களங்களில் பணிபுரியும் கல்வி அறிஞர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே வழிகாட்டுதலுக்கான வாய்ப்புகளை வளர்ப்பதற்கான தனிப்பட்ட திட்டமாகும்.
- 51-வது ASEAN வெளிநாட்டு அமைச்சர்கள் சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெற்றது. இது சிங்கப்பூரின் வெளிநாட்டு அமைச்சர் லீ ஹிசெய்ன் லூங்க்-ஆல் தலைமை தாங்கப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவின் அமித்தி ஒப்பந்தம் மற்றும் கூட்டுறவில் ஈரான் அதிகாரப்பூர்வமாக இணைந்தது.
- தேசிய மனித உரிமை ஆணையத்தின் குறும்பட விருது திட்டம் 2018-ன் கீழ் சிம்லாவைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் தேவ்கன்யா லோத்தெத்தாவின் திரைப்படம் "Behind The Bars" முதல் பரிசினை வென்றுள்ளது.
- ஆசியான் நாடுகளுக்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் இடையே உள்ள உறவை பலப்படுத்த 'Act East Business Show' என்ற நிகழ்ச்சியை மேகாலயா நடத்தியது. இந்த நிகழ்ச்சி வடகிழக்குப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சகத்துடன் இணைந்து இந்திய வர்த்தக சங்கத்தால் நடத்தப் பட்டது.
- தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (Telecom Regulatory Authority of India - TRAI)

தலைவராக ராம் சேவாக் சர்மா- ஐ ஆகஸ்ட் 2018 க்கு பிறகும் செப்டம்பர் 2020 வரை (அவர் 65வது வயதை அடையும் வரை) மறுநியமனம் செய்ய அமைச்சரவை நியமனக்குழு (Appointments Committee of the Cabinet) ஒப்புதல் அளித்துள்ளது.

- ஹாங்காங் மற்றும் ஷாங்காய் வங்கி நிறுவனம் (Hong Kong and Shanghai Banking Corporation) முதலீட்டாளர்களின் கருத்துகள், சுய விவரங்கள், பயனர் ஆணைகள் மற்றும் ஒப்பந்த விலை போன்ற தகவல்களை நேரடியாக அணுகுவதன் மூலம் மூலதனச் சந்தையினூடாக மூலதனத்தை உயர்த்துவதை எளிதாக்க ஒரு புதிய டிஜிட்டல் தளமான 'மை டீல்' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகளாவிய புத்தாக்க பட்டியல் (Global Innovation Index) 2018 புதுடெல்லியில் தொடங்கப்பட்டது. இந்நிகழ்வானது GII-ன் நிறுவன பங்குதாரரான இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII)-ஆல் உலக அறிவுசார் சொத்து நிறுவனம் (WIPO) மற்றும் இந்திய தொழில்துறை கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
    - உலகளாவிய புத்தாக்க பட்டியலில் 2017ல் இருந்த 60ம் இடத்திலிருந்து 2018ல் 57வது இடத்திற்கு இந்தியா உயர்ந்துள்ளது.
- புதுடெல்லியில் 3வது இந்திய நேபாள ஒருங்கிணைப்பு கூட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் இரு நாடுகளின் எல்லைப் பாதுகாப்பு படைகளுக்கு (Border Guarding Forces) இடையேயான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை அதிகரிப்பதேயாகும்.
- ஆசியான்-வடகிழக்கு மாநிலங்களுக்கிடையேயான உறவை வலுப்படுத்த 5வது 'கிழக்கு செயற்பாடு வணிக காட்சி' ஒன்றை மேகாலயா நடத்தியது. இந்நிகழ்ச்சியினை இந்திய வர்த்தக சங்கமும் வடகிழக்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சகமும் (MDoNER) கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான M.வெங்கையா நாயுடு பதவியேற்று தனது முதல் ஆண்டை சமீபத்தில் நிறைவு செய்தார். இவர் இந்தப் பதவிக் காலத்தில் நாட்டின் 29 மாநிலங்களில் 28 மாநிலத்திற்கு பயணம் செய்து இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர்களில் ஒருவராக சாதனை படைத்துள்ளார்.
- உரத்தொழிலில் முக்கிய நிறுவனமான IFFCO ஆனது காங்கிலடோஸ் டி நவாரா என்ற நிறுவனத்துடன் இணைந்து பஞ்சாபின் லூதியானாவில் உணவு பதப்படுத்துதல் ஆலையை அமைக்கவிருக்கிறது. இந்தக் கூட்டிணைவின் மூலம் கூட்டுறவு நிறுவனமான IFFCO ஆனது உணவு பதப்படுத்துதல் துறையில் முதல்முறையாக ஈடுபடுகிறது.
- நிதி ஆயோக் ஆனது உள்துறை அமைச்சகம் மற்றும் அந்தமான் & நிகோபார், லட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களின் நிர்வாகங்களுடன் இணைந்து அத்தீவுகளின் முழுமையான வளர்ச்சிக்காக முதலீட்டாளர்கள் மாநாட்டை புதுடெல்லி, பிரவாசி பாரதீய கேந்திராவில் ஏற்பாடு செய்திருந்தது.
    - இந்த மாநாட்டை நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியான அமிதாப் காந்த் தொடங்கி வைத்தார்.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் M.வெங்கையா நாயுடு அவர்கள் பாராளுமன்ற விவகாரங்கள், புள்ளி விபரங்கள் & திட்ட செயல்படுத்துதல் துறை அமைச்சர் விஜய் கோயல் எழுதிய 'பெபக் பாத்' புத்தகத்தை புதுடெல்லியில் வெளியிட்டார்.
- அமெரிக்காவின் ஹவுஸ்டனில் 19 வது வருடாந்திர இந்திய அமெரிக்க கிரேட்டர்

ஹவுஸ்டன் வர்த்தக சபையில் (IACCGH) தொழில்களில் பெண்கள் : மாற்றத்தை ஏற்படுத்தியதற்கான விருதினைப் பெற்ற மூன்று பெண்களில் இந்திய அமெரிக்கரான அருணா விஸ்வநாதன் அவர்களில் ஒருவராக கௌரவிக்கப்பட்டார்.

- இந்திய தரக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி நாட்டில் ராஜஸ்தானில் உள்ள இரயில் நிலையங்கள் தூய்மையானதாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் ஜோத்பூர் ரயில் நிலையம் முதல் இடத்தில் உள்ளது.
- ஐதராபாத், நேரு விலங்கியல் பூங்காவில் அழிந்து வரும் உயிரினங்களுக்கான ஆய்வகத்தில் மரபியல் ஆதார சேமிப்பு வசதியை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஹர்ஷவர்தன் திறந்து வைத்தார்.
- அடுத்த வருட துவக்கத்தில் செலுத்தப்படவிருக்கும் சந்திரயான் - 2 திட்டத்தின் கோள் இறங்குவிண்கலத்திற்கு (Lander) இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தையான விக்ரம் சாரா பாயின் பெயரான 'விக்ரம்' என்ற பெயர் சூட்டப்பட உள்ளது.
- பஞ்சாப் மாநில அரசு சொத்துப் பதிவு செய்வதற்கான 'தட்கல் சேவையை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் மற்ற 28 மாநிலங்களில் முதன்முறையாக சத்தீஸ்கர், மாநில இளைஞர் மேம்பாட்டிற்காக 'திறன் மேம்பாட்டு உரிமையை' வழங்கியுள்ளது.
- வரலாற்றில் முதன்முறையாக 14 ஆகஸ்ட் 2018 அன்று அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.70-07 ஆகச் சரிந்தது.
- மத்தியப் பிரதேசத்தின் ஆளுநர் ஆனந்தி பெண் படேல் சத்தீஸ்கர் மாநில கூடுதல் ஆளுநராக இந்திய குடியரசுத் தலைர் ராம்நாத் கோவிந்தால் நியமிக்கப்பட்டுள்ளார். சத்தீஸ்கர் மாநில ஆளுநர் பால்ராம்ஜி தாஸ் தான்டன் மறைந்ததையடுத்து இந்த கூடுதல் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
- ஆயுதப் படையில் பணிபுரியும் பணியாளர் தேர்வு ஆணையத்தின் பெண் அதிகாரிகளுக்கு நிரந்தர ஆணையம் அமைக்கப்படும் என இந்தியப் பிரதமர் தனது 72வது சுதந்திர தின உரையின் போது குறிப்பிட்டார். தற்போதைய திட்டத்தின் கீழ் ஆயுதப்படையில் பெண்கள் கீழ்நிலை பதவிகளில் அமர்த்தப்படாமல் அதிகாரிகள் நிலையிலேயே பணியமர்த்தப் படுகின்றனர்.
- இந்தியன் வங்கி சங்கம் இகோன் செஹெண்டர் இண்டர்நேஷனல் (Egon Zehnder International) என்ற நிறுவனத்தை வங்கிகள் மன்ற அமைப்பு (Banks Board Bureau - BBB) என்ற நிறுவனத்திற்கு அறிவொளி பங்குதாரராக நியமித்துள்ளது. அறிவொளி பங்குதாரராக இகோன் செஹெண்டர் இண்டர்நேஷனல் ஆனது இந்தியாவின் பொதுத் துறை வங்கிகளுக்கு தலைசிறந்த தலைமை அபிவிருத்தி வியூகங்களை வடிவமைத்து செயல்படுத்த மற்றும் நிறுவனப்படுத்த உதவுகிறது.
- இரஷ்யாவிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக மூத்த இராஜ தந்திரி D.பால வெங்கடேஷ் வர்மா நியமிக்கப்பட்டுள்ளார். 1998ம் ஆண்டு இந்தியப் வெளியுறவுச் சேவை அதிகாரியான வர்மா தற்போது ஸ்பெயினில் இந்திய தூதராக பணியாற்றுகிறார்.
- QR கோடு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் அருங்காட்சியகத்தை உருவாக்கும் இந்தியப் பிரதமரின் தொலைநோக்கு பார்வையினையடுத்து இரயில்வே அமைச்சகமானது இந்திய இரயில்வேயின் பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வை பரவச் செய்யும் பொருட்டு இந்த வருட சுதந்திரத் தினத்தன்று 22 இரயில் நிலையங்களில்

'டிஜிட்டல் திரையை' செயல்படுத்தியுள்ளது.

- o இத்திட்டமானது இந்திய இரயில்வேயின் மரபுக்களை ஒன்று முதல் இரண்டு நிமிட நீளமுடைய திரைப்படத் துண்டுகளை எல்.இ.டி திரையில் காண்பிப்பதாகும்.

❖ தமிழ்நாடு அரசால் பேரிடர் மேலாண்மைக்கென்று WW.tnsdma.com என்ற வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் பேரிடர் மேலாண்மையில் தொடர்புடைய அரசு ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் பேரிடர் அபாய மேலாண்மை உத்திகளை வழங்குவதற்கான 'ஆசியன் பேரிடர் தயார்நிலை மையத்துடன்' (Asian Disaster Preparedness Centre) அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

❖ பனினி மொழி ஆய்வகமானது சமீபத்தில் மொரிஷியஸில் உள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் இளைஞர்களிடையே இந்தி மொழியை எழுதுதல் மற்றும் படித்தலை ஊக்குவிக்கவும் மொழி மேம்பாட்டிற்காகவும் தொடங்கப்பட்டது.

- o இது மொரிஷியஸில் நடைபெற்ற 11வது உலக இந்தி மாநாட்டையடுத்து வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் ஆல் தொடங்கப்பட்டது.

❖ பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் நாசிர் ஜம்ஷெட் சூதாட்ட புகாரின் அடிப்படையில் அந்நாட்டு கிரிக்கெட் வாரியத்தால் 10 ஆண்டுகள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளார்.

- o கடந்த 2 வருடங்களில் இவருக்கு இரண்டாவது முறையாக தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖ ஆவின் நிறுவனம் தனது தயாரிப்புகளின் விற்பனையை ஹாங்காங்கில் தொடங்கியுள்ளது. மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஏற்கனவே அவை விற்கப்படுகின்றன.

❖ பிப்ரவரி 8, 2019 அன்றிலிருந்து நகர்ப்புறங்களில் இரவு 9 மணி, கிராமப்புறங்களில் மாலை 6 மணி, நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாலை 4 மணி ஆகிய நேரங்களுக்கு பிறகு ஏடிஎம் எந்திரங்களில் பணம் நிரப்பக் கூடாது என மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு வழங்கியுள்ளது.

❖ சென்னையில் இந்து நாடகத் திருவிழாவின் 14வது பதிப்பின் துவக்கத்தில் பெயரிடப்படாதது - 1 என்ற நாடகத்திற்காக அன்னி ஜெயிடிக்கு சிறந்த நாடக ஆசிரியர் விருது 2018 வழங்கப்பட்டது.

- o இந்த விருதானது ரூ.2 லட்சம் ரொக்கப் பரிசினை உடையது. இந்த விழாவின் முதன்மை ஆதரவாளர் எஸ் வங்கி (Yes Bank) ஆகும்.

❖ மின் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (APTEL- Appellate Tribunal for Electricity) தலைவராக நீதிபதி மஞ்சுளா செல்லூர் மின்சக்தி அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு இவர் மும்பை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தார்.

- o இவர் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி மற்றும் கர்நாடகா உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி ஆவார்.

❖ இங்கிலாந்து மட்டைப் பந்தாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் லார்ட்ஸி-ல் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரராகியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 3 தனித்தனி இடங்களில் 100க்கும் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வீரர் முத்தையா முரளிதரனையடுத்து ஒரே இடத்தில் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர் இவரேயாவார்.

❖ திரைப்பட நடிகர் அக்சய் குமார் இந்திய அரசாங்கத்திற்கான சிறப்பு சாலை பாதுகாப்பு

விழிப்புணர்வு பிரச்சார விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். "சாலை பாதுகாப்பு - உயிர் பாதுகாப்பு" என்ற இப்பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக சாலை பாதுகாப்பில் பொது விழிப்புணர்வை உருவாக்க அக்சய் நடித்த 3 குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- 2018ஆம் ஆண்டில் 72வது சுதந்திர தினத்தில் தெலுங்கானா அரசாங்கம் கண் பராமரிப்பு திட்டமான 'கண்டி வெலுகு' (கண் ஒளி) என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தெலுங்கானாவில் ஒவ்வொரு குடிமகனுக்கும் இலவச கண் பரிசோதனை, மருந்துகள், கண்ணாடிகள் மற்றும் அறுவை சிகிச்சை போன்ற கண் பராமரிப்புகளை வழங்குகிறது. இத்திட்டமானது 3.7 கோடி மக்களை உள்ளடக்குகிறது.
- ஆகஸ்ட் 13ம் தேதி உலக உறுப்பு நன்கொடை தினம் (WODD – World Organ Donation Day) ஆனது ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தங்கள் விலைமதிப்பற்ற உறுப்புகளை தானம் செய்வதை ஊக்குவிக்க அனுசரிக்கப்படுகிறது.

- அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களும் அவற்றின் வளாகங்களில் நொறுக்குத் தீனி விற்பனையை தடைசெய்யுமாறு பல்கலைக்கழக மானியக் குழுவானது (UGC) சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.
- சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சந்தையில் வர்த்தகம் ஆனது எளிதாக்கப்படுவதை உறுதி செய்ய தேசிய தளவாடங்கள் தளத்தை (National Logistics Portal) மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் உருவாக்கி வருகிறது. இந்த தளமானது அனைத்து EXIM (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி) பங்குதாரர்களையும், உள்நாட்டு வர்த்தகம் மற்றும் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளின் இயக்கத்தையும் ஒரே மேடையில் இணைக்கின்றது.
- முன்னாள் ஆட்சியாளரான உதயகுமார் வர்மாவை தொழில்துறை குழு (Assocham) ஆனது தனது புதிய பொதுச் செயலாளராக நியமித்துள்ளது. இவர் ஏறக்குறைய 14 ஆண்டுகளாக அப்பதவியினை வகித்த D.S.ராவத்திற்கு அடுத்து பதவியேற்கிறார்.
- வரும் அக்டோபரிலிருந்து விமானங்களில் 30,000 அடி உயரத்திலும், பயணிகள் அழைப்புகளை மேற்கொள்ளலாம் மற்றும் இணையத்தில் உலவலாம் என தொலைத்தொடர்பு துறை தெரிவித்துள்ளது. முன்னதாக இந்திய வான்வெளிக்குள் 9850 அடி உயரம் முதல் குரல் மற்றும் தரவு சேவைகளை வழங்க உள்ளூர் மற்றும் சர்வதேச விமானங்கள் அனுமதிக்கப்படும் என டிராய் அறிவித்திருந்தது.
- பாகிஸ்தானின் சிக்கன இயக்கத்தின் ஒரு பகுதியாக தன்னிச்சையான அரசு நிதி உபயோகம் மற்றும் அதிபர், பிரதமர் உட்பட அனைத்து அரசு அதிகாரிகள், தலைவர்களின் முதல் வகுப்பு விமானப் பயணத்தை அந்நாட்டின் புதிய அரசாங்கம் தடைசெய்துள்ளது.
- ஆகஸ்ட் 23 அன்று இலங்கையின் ஜாப்னாவில் நல்லூர் கந்தசாமி கோவிலின் வருடாந்திர திருவிழா புனித கொடியேற்று நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த 25 நாள் திருவிழாவில் தேர்த் திருவிழாவானது அனைத்து நிகழ்வுகளிலும் மிகவும் பிரபலமானதாகும்.
- உத்திரப் பிரதேச அரசு ஏற்பாடு செய்திருந்த கிருஷி கும்ப் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியானது லக்னோவில் உள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சிக் கழகத்தில் (டெலிபாக்) நடைபெற்றது.
  - விவசாயத் துறையில் விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில்

தொடங்குபவர்கள் ஆகியோருக்கிடையே அறிவையும் நிபுணத்துவத்தையும் பரிமாறிக் கொள்ள ஒரு தளத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

- 2018 செப்டம்பரில் அருணாச்சலப் பிரதேச அரசு 'அருணாச்சல மாற்றம் & விரும்பத்தகுந்த தலைமைத்துவம்' (Arunachal Transformation & Aspirational Leadership - ATAL) என்ற கூடுகையை நடத்தவுள்ளது. பொதுக்கொள்கை மற்றும் ஆளுமைத் திட்டங்களில் மாநிலத்தின் 18 முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்களை ஈடுபடுத்துவதே இந்த 3 நாள் ATAL மாநாட்டின் நோக்கமாகும்.
- அறிவுப் பகிர்வு, உலக கலாச்சார கருத்துகளுக்கு வழி வகுத்தல் ஆகியவற்றிற்காக ஒருங்கிணைக்கப்பட்ட மேடையில் பணியாற்றுவதற்காக பூடானின் திம்புவில் 2018ம் ஆண்டின் மலை எதிரொலி இலக்கிய விழாவின் 9வது பதிப்பு தொடங்கியது. இது இந்தியா மற்றும் பூட்டானுக்கு இடையே உள்ள 50 ஆண்டு கால இராஜாங்க உறவுகளைக் கொண்டாடுகிறது.
- மூத்த கிரிக்கெட் வீரான வி.வி.எஸ்.லக்ஷ்மணனின் '281 மற்றும் அதற்கு அப்பால்' (281 and beyond) என்ற புத்தகமானது வரும் நவம்பர் 2018ல் வெஸ்ட்லேண்ட் ஸ்போர்ட்ஸ் மூலம் வெளியிடப்படவுள்ளது. 2001ஆம் ஆண்டு ஈடன் கார்டனில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆட்டத்திலிருந்து 281 ரன்கள் என்ற இந்த தலைப்பு எடுத்துக் கொள்ளப்பட்டது.
- ஆஸ்திரேலிய பசுமைக் கட்சியில் உள்ள பாகிஸ்தானில் பிறந்த மெஹ்ரின் ஃபருகி, நாட்டின் செனட்டில் முதல் இஸ்லாமிய பெண்ணாக இடம் பிடித்துள்ளார். பசுமைக் கட்சியின் லீரையனன் கடந்த மே மாதம் ஓய்வு பெற்றதையடுத்து இவர் அவருக்கு பதிலாக பொறுப்பேற்றுள்ளார்.
- இந்தியா-கென்யா கூட்டு வர்த்தகக் குழுவின் 8வது கூட்டம் கென்யாவின் நைரோபியில் நடைபெற்றது.
- பாஜக தலைவரும் முன்னாள் பிரதமருமான அடல் பிஹாரி வாஜ்பாயி பற்றிய புத்தகமான 'அடல் ஜி நே கஹா' (Atal Ji Ne Kaha) ஆனது பிரதமரால் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் பிரிஜேந்திர ரெஹியால் எழுதி தொகுக்கப்பட்டது. இவர் இதற்கு முன் புகழ்பெற்ற தூர்தர்ஷன் தயாரிப்பாளராகவும், மூத்த பத்திரிக்கையாளராகவும் இருந்தவர் ஆவார்.
- காங்க்டாக்-ன் ராஜ்பவனில் நடைபெற்ற விழாவில் சிக்கிமின் 16வது ஆளுநராக கங்கா பிரசாத் பதவியேற்றார். இவ்விழாவில் இடைக்கால சிக்கிம் உயர் நீதிமன்ற நீதிபதியான மீனாட்சி எம்.ராய் பிரசாத் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
  - இதற்கு முன் ஆளுநராக இருந்த சீனிவாஸ் பாட்டீல்-ஐத் தொடர்ந்து இவர் பதவியேற்றுள்ளார்.
- உத்திரக்காண்டின் 7வது ஆளுநராக பாபா ராணி மௌரியா பதவியேற்றார். உத்தரகாண்ட் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜீவ் சர்மா டேஹ்ராடூனிலுள்ள ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கிருஷண் காந்த் பால்-ஐத் தொடர்ந்து மௌரியா ஆளுநராகியுள்ளார்.
  - மேலும் இவர் மார்கரேட் என்பவருக்கு (ஆகஸ்ட் 2009 முதல் மே 2012 வரை) அடுத்து உத்தரகாண்ட் ஆளுநராகும் இரண்டாவது பெண்மணி ஆவார்.
- ஜிம்பாபே கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் லால்சந்த் ராஜ்புத் நியமிக்கப்பட்டுள்ளார்

- சென்னையின் மெரினா மற்றும் எலியட் கடற்கரையின் துணைப் பாதைகளை கட்டண வாகன நிறுத்துமிடமாக தமிழ்நாடு கார்ப்பரேஷன் மாற்றவுள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள கத்துவா மாவட்டத்தின் ஜவஹர் நவோதயா வித்யாலயா பசோலியில் 22வது இளைஞர் பாராளுமன்ற போட்டி (Youth Parliament competition) நடைபெற்றது. இந்நிகழ்வினை சண்டிகர் பகுதியின் நவோதயா வித்யாலயா சமிதி ஏற்பாடு செய்திருந்தது.
- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராமகிருஷ்ண ராவ் எழுதிய 'காலோனியல் சின்ட்ரோம் : தி விதேஷி மைண்ட் செட் இன் மாடர்ன் இண்டியா' (Colonial Syndrome: The Videshi Mind Set in Modern India) என்ற புத்தகத்தை குடியரசுத் துணைத் தலைவர் எம். வெங்கையா நாயுடு வெளியிட்டார்.
  - இந்தப் புத்தகமானது தனித்துவமான வேறுபாடு அல்லது இந்தியாவின் பழமையான பண்பாடு மற்றும் தற்போதைய நிலைமைக்கிடையேயான தொடர்பின்மை ஆகியவற்றை முன்வைக்கிறது.
- ஜி.எஸ்.டி. வரிவிகித குறைப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக முறையீடு செய்வதை ஊக்குவிப்பதற்காக தேசிய மிகை இலாபத் தடுப்பு மையமானது (National Anti-Profiteering Authority -NAA) சேவை எண் 011-2400643 என்ற தொலைபேசி எண்ணை துவங்கியுள்ளது.
- நாட்டின் அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவிகளுக்கு இலவச சுகாதார துப்பரவுத் துணிகளை வழங்கும் உலகின் முதல் நாடாக ஸ்காட்லாந்து உருவெடுத்துள்ளது.
- நமீபியா குடியரசுக்கான அடுத்த உயர் ஆணையராக பிரஷாந்த் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அயர்லாந்துக்கான இந்தியாவின் அடுத்த தூதுவராக சந்தீப் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தனது தலைநகரமான யோங்யாங்கில் வரும் அக்டோபர் 27-ல் தொடங்கப்படவுள்ள ஆசிய இளைஞர் மற்றும் இளையோருக்கான பளுதூக்கும் சாம்பியன்ஷிப் – 2019 ஐ வடகொரியா நடத்துகிறது.
- புது தில்லியில் FICCI-ஆல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொலிவுறு இரயில்வே கூட்டமைப்பை மத்திய இரயில்வே மற்றும் நிலக்கரித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தொடங்கி வைத்தார்.
- மத்திய அரசின் சிந்தனைச் சாவடியான நிதி ஆயோக் தனது மூவ்ஹேக் நிகழ்ச்சிக்கு உதவி செய்வதற்காக ஆழ்ந்த புலமை வாய்ந்த தொழில்நுட்ப பங்காளரான கணிணி சில்லு வடிவமைப்பு நிறுவனம் NVIDIA -வை நியமித்துள்ளது.
  - இந்தியாவில் இயங்கும் எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்ட தீர்வுகளை கூர்ந்து கவனிப்பதற்காக மூவ்ஹேக் எனும் உலக இயக்க ஹக்கத்தான் நிகழ்ச்சியை நிதி ஆயோக் ஏற்பாடு செய்திருந்தது.
- இந்திய மொழிகளிலும், குறிப்பாக உள்ளூர் மொழிகளிலும் ஆன்லைன் உள்ளடக்கத்தைப் பொருத்துவதற்காக நவ்லேகா (Navlekha) திட்டத்தை மிகப்பெரிய தேடுபொறி நிறுவனமான கூகுள் அறிமுகப்படுத்தியுள்ளது. இது புது தில்லியில் நடைபெற்ற நான்காவது 'Google for India' நிகழ்ச்சியில் கூகுளின் பிற தயாரிப்புகளின் மேம்பாட்டுடன்

இணைந்து வெளியிடப்பட்டது.

- o 'நவ்லேகா' (Navlekha) என்பது 'எழுதுவதற்கான புதிய வழி' என்று பொருள் கொண்ட சமஸ்கிருத சொல்லாகும். இதன் நோக்கம் இணைய தளத்தை எளிமைப்படுத்துவதன் மூலம் 1,35,000 உள்ளூர் மொழியில் வெளியீட்டாளர்களை ஆன்லைனிற்கு கொண்டு வருவதாகும்.

❖ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது இ - சிகரெட்கள் மற்றும் இதர மின்னணு நிகோடின் வழங்கல் அமைப்புகளின் (ENOS – Electronic Nicotine Delivery Systems) தயாரிப்பு, விற்பனை மற்றும் விளம்பரங்களை அனுமதிக்கக் கூடாது என்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

❖ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது, புவி அறிவியல் அமைச்சகத்தின் தலைமைத் திட்டமான "கடல்-சேவைகள், தொழில்நுட்பம், கூர்நோக்கல், வளங்கள் படிமமாக்கம் மற்றும் அறிவியல் (SMART – Smart Ocean Service, Technology, Observations, Resources modelling and Science) என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- o O – SMART–ன் செயல்படுத்துதலானது நீடித்த வளர்ச்சி இலக்கு – 14 தொடர்பான பிரச்சனைகளைக் களைய உதவும். நீடித்த வளர்ச்சி இலக்கு-14-ன் நோக்கம் பயன்பாட்டை பாதுகாப்பது ஆகும்.

❖ ஐக்கிய இராஜ்ஜியத்திற்கான இந்திய உயர் ஆணையராக ருச்சி கன்ஷ்யாம் நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது அப்பதவியில் இருக்கும் Y.K. சின்ஹாவின் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஜிம்பாபே குடியரசின் அதிபராக எமர்சன் நன்ககவா பதவி ஏற்றார். ஜிம்பாபேயின் முன்னாள் அதிபர் ராபர்ட் முகாபே 2017 ஆம் ஆண்டு நவம்பரில் பதவி விலகினார். புதிய அதிபருக்கான தேர்தல் இந்த ஆண்டு நடைபெற்றது.

❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) துருவநிலை செயற்கைக் கோள் ஏவுவாகனம் (PSLV - Polar Satellite Launch Vehicle) மற்றும் சிறிய செயற்கைக் கோள் ஏவு வாகனம் (SSLV - Small Satellite Launch Vehicles) ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பணியை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கவுள்ளது. திறன் கட்டமைப்பில் தனியார் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் K.சிவன் அறிவித்துள்ளார்.

❖ மத்தியப் பிரதேசத்தில் நீர்ப்பாசனம் மற்றும் அமைப்பின் திறன் ஆகியவற்றை விரிவுபடுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக $375 மில்லியன் மதிப்புடைய கடன் ஒப்பந்தத்தை மத்திய அரசாங்கம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB - Asian Development Bank) ஆகியவை இணைந்து கையெழுத்திட்டுள்ளன.

❖ உயிரிதொழில்நுட்பத் துறை (DBT), மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் சர்வதேச ஆற்றல் முகமை (IEA - International Energy Agency) ஆகியவை தூய ஆற்றல் மாற்றத்திற்கான கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- o இந்தியாவில் தூய்மையான ஆற்றல் தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் செயல்முறை விளக்கம் ஆகியவற்றை விரைவுபடுத்துவதற்காக தூய ஆற்றல் கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவாக ஒத்துழைப்பை அதிகரிக்க இது

முயல்கிறது.

- அஸ்ஸாம் மாநில ஆளுநர் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் 1958 (AFSPA - Armed Forces (Special Powers) Act)-ன் பயன்பாட்டை மாநிலம் முழுவதும் அடுத்த 6 மாத காலத்திற்கு நீட்டித்துள்ளார். இது உடனடியாக அமலுக்கு வரும் என்று அறிவித்துள்ளார்.
    - தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசியக் குடிமக்கள் பதிவேட்டின் திருத்தச் செயல்முறையின்போது சட்ட ஒழுங்கைப் பராமரிப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- உலக தகவல் தொழில்நுட்ப நிறுவனமான IBM ஆனது தனது “Call for Code” என்ற புது முயற்சிக்காக இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் (பெர்சிஸ்டண்ட் சிஸ்டம்ஸ், இன்வெஸ்ட் இந்தியா, கேப்ஜெமினி மற்றும் நாஸ்காம்) இணைந்துள்ளது. Call for Code-ன் நோக்கமானது பேரிடர் மேலாண்மைக்கான உலகத் தீர்வுகளை உருவாக்குவதாகும்.
- அருணாச்சல பிரதேச மாநில சட்டசபையானது மாநிலத்தில் 3 புதிய மாவட்டங்களை (பக்கே - கெசாங், லோபா ராடா, ஷீ யோமி) உருவாக்குவதற்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- மத்திய மின்சாரத் துறை மற்றும் புதிய & புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் அமைச்சகத்தின் இணை அமைச்சர் R.K.சிங் ‘இந்திய மின் அமைப்பிற்கான வானிலைத் தகவல் வாயில்’ என்ற ஆவணத்தை வெளியிட்டார்.
    - மின்துறையின் அனைத்து பிரிவுகளிலும் வானிலை வாயிலின் மேம்பட்ட பயன்பாட்டை அளிப்பதற்காக IMD (India Meteorological Department) உடன் இணைந்து POSOCO (Power System Operation Corporation) இந்த ஆவணத்தை தயாரித்துள்ளது.

## தமிழ்நாடு செய்திகள்

### அனைத்து மகளிர் மெட்ரோ இரயில் நிலையம்

- சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL - Chennai Metro Rail Ltd) ஆனது ஷெனாய் நகர் மற்றும் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையங்களை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பினை பெண்களே மேற்கொள்வார்கள் என்று அறிவித்துள்ளது.
- பெண்கள் மேம்பாட்டின் ஒரு பகுதியாக 2018ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று ஷெனாய் நகர் நிலையத்தை அனைத்து மகளிர் அதிகாரிகளிடம் CMRL அளித்தது.
- சென்னையில் மொத்தமாக 26 மெட்ரோ இரயில் நிலையங்கள் உள்ளன.

### புவிசார் குறியீடு - நாகர்கோவில் கோவில் நகை

- இந்திய அரசின் புவிசார் குறியீட்டு பதிவேட்டு அலுவலகம் நாகர்கோவில் கோவில் நகைகளுக்கு அதிகாரப்பூர்வ சான்றிதழை அளித்துள்ளது.

- இந்த நகையை உருவாக்குவதில் குச்சுக் கல் என்றழைக்கப்படும் ஒரு வித்தியாசமான சிவப்பு மற்றும் பச்சைக்கல் உபயோகப் பயன்படுத்தப்படுகிறது.



- இந்த கோவில் நகை 9வது நூற்றாண்டில் சோழர் வம்சத்து ஆட்சிக் காலத்தில் தோன்றியதாகக் கருதப்படுகிறது.
- இந்த பாரம்பரியமான நகை மதிப்புமிக்க பல ரத்தினங்கள் மற்றும் கற்கள் பதிக்கப்பட்ட தங்கத்தாலானது. மேலும் இது பாரம்பரியமான நடனக் கலைஞர்களால் உபயோகிக்கப்படும் அளவிற்கு அதிகாரப்பூர்வமான ஒன்றாகும்.

## தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

- 2017-2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு 8.09 சதவிகித அளவிற்கு பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் பண விலக்கல் நடவடிக்கையின் விளைவுகளிலிருந்தும், 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் விளைவுகளிலிருந்தும் மீண்டது.
- இதற்கு மூல காரணம் விவசாயம் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட இரட்டை இலக்க வளர்ச்சி விகிதமும், அதற்கு உறுதுணை புரிந்த மற்ற இரண்டு துறைகளான தொழிற்துறையும் சேவைத்துறையும் ஆகும்.
- விவசாயத்துறை 15.1 சதவிகிதமும், தொழிற்துறை 7.75 சதவிகிதமும் சேவைத் துறை 6.55 சதவிகிமும் வளர்ச்சி கண்டது.

## வல்வில் ஓரி திருவிழா

- நாமக்கல்லில் உள்ள கொல்லிமலையில் இரண்டு நாள் வல்வில் ஓரி திருவிழா ஆகஸ்டு 2ம் தேதி தொடங்கப்பட்டது.
- கி.பி.200ம் ஆண்டில் கொல்லி மலைகளை ஆட்சி செய்த மன்னன் வல்வில் ஓரியின் புகழை நினைவுகூற வேண்டி ஒவ்வொரு வருடமும் மாவட்ட நிர்வாகம் இத்திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கின்றது.
- இந்த மன்னன் தனது வில் வித்தைக்காகவும் தனது வள்ளல் தன்மைக்காகவும் பெரிதும் அறியப்படுகிறார்.

## தமிழ்நாட்டின் முதல் அரசு பயிற்சி பெற்ற பிராமணரல்லாத அர்ச்சகர்

- தமிழ்நாட்டில் முதல் முறையாக, மதுரையில் உள்ள கோவில் ஒன்று அனைத்து சாதித்

தடைகளையும் தகர்த்து, பிராணமல்லாதவரை அர்ச்சகராக நியமித்துள்ளது.

- 1970ம் ஆண்டில் கருணாநிதி அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் ஒரு ஆணையை பிறப்பித்தார்.
- ஆனால் இந்த ஆணை உச்சநீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது.
- மீண்டும் 2006ம் ஆண்டில், கருணாநிதி மீண்டும் ஒரு ஆணையை பிறப்பித்தார். இம்முறை 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் உச்சநீதிமன்றம் அந்த ஆணையை உறுதி செய்தது.
- 2006ம் ஆண்டு உத்தரவை தொடர்ந்து, எஸ்சி/எஸ்டி சமூகத்தைச் சார்ந்த 24 நபர்கள் உள்பட 206 ஆண் நபர்கள் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான கோவில்களில் பயிற்சி பெற்று இளநிலை அர்ச்சகர் சான்றிதழை பெற்றனர்.
- இவ்வருடம் மார்ச் முதல் தேதி, பயிற்சி பெற்ற 206 நபர்களில் ஒருவரான T.மாரிச்சாமி என்பவர் மதுரை தல்லாகுளம் ஐய்யப்பன் கோவிலில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார்.
- பாரம்பரியமான அர்ச்சகர்களின் பரம்பரை வழியை சாராமல், முறையாக அர்ச்சகராக பயிற்சி பெற்று பிறகு கோவில்களில் பூஜை செய்பவராக நியமிக்கப்படும் முதல் நபர் இவராவார்.
- இந்நியமனம் தனிக் கோவில்களின் ஆகம சாத்திர விதிகளுக்கு உட்பட்டு (பிரார்த்தனை, கோவில் கட்டிடம் மற்றும் சடங்குகள்) செய்யப்பட்டது.
- 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது தீர்ப்பில் உச்சநீதிமன்றம், 2006ம் ஆண்டு வெளியிட்ட உத்தரவை தடை செய்ய மறுத்து விட்ட அதே சமயம், அர்ச்சகர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட கோவில்களில் செய்யப்படும் வழிபாட்டிற்கு தொடர்புடைய ஆகம விதிகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும் என்று தீர்ப்பளித்தது.
- இத்தீர்ப்பே 2017ம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான கேரள அரசு தலித் வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அர்ச்சகராக நியமிக்க வழிவகை செய்தது.

## நீதிபதி R.ரகுபதி ஆணையம்

- தமிழ்நாடு உயர்நீதிமன்றம், நீதிபதி R. ரகுபதி ஆணையத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.
- இந்த ஆணையம் 2011ல் அதிமுக அரசால் 2006-2011 ஆண்டுகளுக்கிடையே சட்ட சபை மற்றும் தலைமைச் செயலக வளாக கட்டுமானப் பணிகளில் நடைபெற்ற முறை கேடுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டது.

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

- நீதிபதி விஜயா கமலேஷ் தஹில் ரமானி சென்னை ராஜ்பவனில் நடைபெற்ற விழாவில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.




- முன்னாள் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி - உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றதையடுத்து நீதிபதி தஹில்ரமானி இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் புதிய தலைமை நீதிபதிக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## 5 புதிய வருவாய்த்துறை வட்டங்கள்

- தமிழக முதலமைச்சர் எடப்பாடி, K.பழனிச்சாமி 5 புதிய வருவாய்த் துறை வட்டங்களை தொடங்கி வைத்தார்.
- புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்கள்
    - மதுரை மாவட்டத்தில் கள்ளிக்குடி
    - இராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜசிங்க மங்களம்
    - தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல்
    - திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன் விளை
    - நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர்

## சுகன்யா சம்ரிதி திட்டத்தில் பதிவு

- சுகன்யா சம்ரிதி திட்டத்தின் ஒட்டுமொத்த பதிவு செய்தலில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. இத்திட்டமானது மத்திய அரசின் பெண் குழந்தைகளுக்கான முதன்மை சேமிப்புத் திட்டமாகும்.
- இது கடந்த 3 ஆண்டுகளில் 15.95 லட்சம் கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து 2940 கோடி ரூபாய் வசூலித்துள்ளது.
- இது ஜூன் 2018 வரை கிடைத்த புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டது.

## விசாகா குழு

- தமிழ்நாடு காவல்துறை வரலாற்றில் முதன்முறையாக பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் பற்றிய புகார்களை ஆய்வு செய்ய விசாகா குழு அமைக்கப்பட்டுள்ளது.
- உச்சநீதி மன்றத்தால் வழங்கப்பட்ட விசாகா வழிகாட்டுதல்களை பூர்த்தி செய்வதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவானது சீமா அகர்வால் - ADGP தலைமையில் செயல்படும்.
- குழு உறுப்பினர்கள்
    - சீமா அகர்வால் - ADGP (தலைவர்)
    - S.அருணாச்சலம் - ADGP
    - தேன்மொழி - DIG
    - சரஸ்வதி - SP (ஓய்வு)
    - ரமேஷ் - DGP அலுவலகத்தில் பணிபுரிபவர்



## iCRAFPT 2018

- 2018 ஆம் ஆண்டிற்கான உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்பத்தின் சமீபத்திய முன்னேற்றங்கள் மீதான சர்வதேச கருத்தரங்கு (International Conference on Recent Advances in Food Processing Technology - iCRAFPT) தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது.
- இக்கருத்தரங்கின் கருத்துருவானது, "உணவு பதப்படுத்துதல் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்" ஆகும்.
- இந்த கருத்தரங்கு உணவு ஆராய்ச்சியில் முன்னிலையில் உள்ள சர்வதேச மற்றும் சர்வதேசப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கான மதிப்புமிக்க மற்றும் முக்கியமான தளமாகும்.

## பிளாஸ்டிக் மாசுபாடு இல்லா தமிழகம் - பிரச்சாரம்

- 2019ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழிகளைத் தடை செய்யப்படுவதையடுத்து தமிழக முதலமைச்சர் பிளாஸ்டிக் மாசுபாடு இல்லா தமிழ்நாடு என்ற பிரச்சாரத்தை துவங்கியுள்ளார்.



**Kicking plastic**

Ahead of the complete ban on one-time use plastics from January 1, 2019, the State govt. has stepped up its campaign against plastics, with a series of initiatives

CM Edappadi K. Palaniswami handing over a cloth bag to actor Vivek, an ambassador for the anti-plastic campaign ▪ S.R. RAGHUNATHAN

**Ambassadors for the campaign**

Suriya Sivakumar

Jyothika

Karthi

**Steering committee set up**

▪ 10-member committee to monitor overall implementation of the ban on one-time use and throwaway plastic

▪ Members include the chief secretary, secretaries in the finance department, rural development and panchayat raj department, environment & forests department, municipal administration & water supply department, health & family welfare department, cooperation, food & consumer protection department, micro, small & medium enterprises department, school education department and the member secretary of the Tamil Nadu Pollution Control Board

**Regional coordinators appointed**

1. P. Amudha
Chennai and Salem regions

2. Santosh Babu
Coimbatore and Tiruchi regions

3. Rajendra Ratnoo
Tirunelveli and Madurai regions

**Initiatives launched on August 23**

▪ CM launched the logo of the campaign

▪ New website www.plasticpollutionfreetn.org has all details of govt. efforts

▪ Mobile-based application 'Plastic Pollution Free Tamil Nadu' launched

▪ CM also released promotional documentaries prepared by Tamil Nadu Pollution Control Board

▪ Display of items which are alternative to one-time use plastics

▪ CM also handed over subsidies to entrepreneurs who are involved in manufacturing items that are alternatives to one-time plastic

- மேலும் அவர் இதற்கென பிரத்தியேக இணையதளமான www.plasticpollutionfree.org மற்றும் பிளாஸ்டிக் மாசுபாடு இல்லா தமிழ்நாடு 'Plastic Pollution Free Tamil Nadu' என்ற அலைபேசி செயலியையும் தொடக்கி வைத்தார்.
- நடிகர்களான சூர்யா, கார்த்தி, ஜோதிகா மற்றும் விவேக் ஆகியோர் இந்த பிரச்சாரத்தின் விளம்பர தூதர்களாகவும் சூழலுக்கு உகந்த பைகள் உபயோகத்தை ஊக்குவிக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## முதன்முறையாக ஆளுநர் கொடியேற்றம்

- தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் சுதந்திரதின விழாவின்போது முதன்முறையாக ராஜ்பவனில் இந்திய மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்தார்
- வழக்கமாக ஜனவரி 26 குடியரசு தினத்தன்று மெரினாவில் வண்ணமயமான விழாவில் மட்டுமே ஆளுநர் மூவர்ணக் கொடியேற்றுவார்.
- ராஜ்பவனில் தேசியக் கொடியை புரோஹித் ஏற்றியதன் மூலம் 1974 ஆம் ஆண்டிலிருந்து கடைபிடிக்கப்பட்டு வந்த பாரம்பரியத்தை முறியடித்தார்.
- அந்த ஆண்டிற்கு (1974) முன்னர் மாநில அரசின் அதிகாரப்பூர்வ சுதந்திரதின விழாவில் ஆளுநர் கொடியேற்றுவது நடைமுறையிலிருந்தது.
- ஆனால் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முயற்சிகளால் இந்தச் சலுகை பின்னர் நாட்டிலுள்ள அனைத்து முதலமைச்சர்களுக்கும் வழங்கப்பட்டது.

## சொற்குவை திட்டம்

- தமிழ்நாடு அரசானது சொற்குவை திட்டத்தை தொடங்க உள்ளது.
- இந்தத் திட்டம் 'மிகவும் தேடப்பட்ட' வார்த்தைகளுடன் படங்களை இணைப்பதோடு அனைத்து தமிழ் வார்த்தைகள் மற்றும் ஆங்கில வார்த்தைகளை அவற்றின் உண்மையான 'பொருள்களுடன்' வழங்குகிறது.

## இந்தியாவின் மிக உயரமான படப்பிடிப்புத் தளம்

- இந்தியாவின் மிகஉயர்ந்த படப்பிடிப்புத் தளமான MGR நூற்றாண்டு படப்பிடிப்பு தளம் பையனூரின் கலைஞர் நகரில் தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- 56 அடி உயரமும், 110 மீட்டர் நீளமும், 100 அடி அகலமும் உடைய இந்த படப்பிடிப்புத் தளமானது தென்னிந்திய திரைப்பட கூட்டுறவு சங்கத்தின் கூட்டமைப்பு (Federation of Film Employees Union of South India -FEFSI) மூலம் திரட்டப்பட்ட நிதி வாயிலாக பையனூரில் கட்டப்பட்டுள்ளது.

## மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018 - 2030

- முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018 – 2030 ஐ வெளியிட்டார்.
- இத்திட்டம் பேரிடர் ஆபத்து குறைப்பிற்கான சென்டாய் கட்டமைப்பின் வரிசையில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் தயாரிக்கப்பட்டது.
- இதன் நோக்கம் மாநிலத்தின் வளர்ச்சி நெறிமுறைகளில் முறையான அணுகுமுறை, அனைவருக்குமான வளர்ச்சி மற்றும் பேரிடர் ஆபத்துகளின் முக்கியத்துவம் மூலமாக பேரிடர் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்பான தமிழ்நாட்டைக் கட்டமைப்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## போர்த்திறன் சார்ந்த வர்த்தக அங்கீகாரம் (Strategic Trade Authorization - 1 - STA - I) - இந்தியா

- அமெரிக்கா இந்தியாவினை போர்த்திறன் சார்ந்த வர்த்தக அங்கீகாரம் (STA-1) பெற்ற நாடாக அறிவித்துள்ளது.
- இதன் மூலம் மேம்பட்ட மற்றும் அதிநவீன தொழில்நுட்ப தயாரிப்புகளை அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்க முடியும்.
- இத்தகைய அந்தஸ்து இந்தியாவினை அமெரிக்காவின் நேச மற்றும் பங்குதாரர் நாடுகளான NATO (North Atlantic Treaty Organization) - வுடன் சமநிலைக்குக் கொண்டு வரும்.
- தற்போது STA-I பட்டியலில் 36 நாடுகள் உள்ளன. இந்த பட்டியலில் இடம் பெற்ற முதல்

தெற்காசிய நாடு இந்தியா ஆகும். STA-I நாடுகளாக அந்தஸ்து பெற்ற மற்ற ஆசிய நாடுகள் ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகியனவாகும்.

- STA-1 அந்தஸ்து, அங்கீகரிக்கப்படாத (அ) அனுமதிக்கப்படாத குறைந்த பாதிப்பு அளிக்கக்கூடிய இலக்குகளுக்கான வர்த்தக கட்டுப்பாடு பட்டியலில் உள்ள குறிப்பிட்ட பொருட்களை ஏற்றுமதி, மறு ஏற்றுமதி மற்றும் உள்நாட்டிற்குள் வர்த்தகம் செய்து கொள்ளவும் அங்கீகாரம் அளிக்கிறது.
- தனிப்பட்ட உரிமங்கள் இன்றி இந்தியாவிற்கு அனுப்பப்படும் ஏற்றுமதி நிர்வாக விதிமுறைகளுக்கு உள்ளாகும் தொழில்நுட்ப ஏற்றுமதிகளின் நோக்கத்தினை இந்த STA-1 அந்தஸ்து விரிவடையச் செய்யும்.


## ஹோமியோபதி மத்திய சபை (திருத்த) மசோதா, 2018

- மே 2018-ல் குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர சட்டத்திற்கு பதிலாக ஹோமியோபதி மத்திய சபை (திருத்த) மசோதா 2018-னை குரல் வாக்கெடுப்பின் மூலம் மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- திருத்தப்பட இருக்கும் ஹோமியோபதி மத்திய மன்ற சட்டம் 1973 ன் படி மத்திய ஹோமியோபதிக்கான மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்றம் ஹோமியோபதி கல்வி மற்றும் அணுகுமுறைகளை சீரமைக்கிறது.
- இம்மசோதா 1973 சட்டத்தினை திருத்தி அமைக்கிறது. இத்திருத்தம் மத்திய சபையினை திருத்தியமைக்கிறது. இத்திருத்தம் மே 18,2018 முதல் நடைமுறைக்கு வருகின்றது.
- மாற்றி அமைக்கப்பட்டதிலிருந்து ஒரு வருடத்திற்குள் இச்சபை மீண்டும் அமைக்கப்படும்.
- இடைப்பட்ட காலத்தில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட ஆளுநர்கள் குழு இச்சபையின் பொறுப்புகளை ஆற்றும்.
- ஆளுநர்கள் குழு, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட புகழ்பெற்ற ஹோமியோபதி கல்வியாளர் மற்றும் புகழ்பெற்ற நிர்வாகிகள் உட்பட 7 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.
- மத்திய அரசு இந்த உறுப்பினர்களில் ஒருவரை குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கும்.

## குற்றவியல் சட்ட (திருத்த) மசோதா, 2018

- 12 வயதிற்கு கீழ் உள்ள சிறுமிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அளிக்கும் குற்றவியல் சட்ட (திருத்த) மசோதா, 2018-ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.

- இம்மசோதா ஏப்ரல் 2018-ல் குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர சட்டத்திற்கு பதிலாக அமையும். மேலும் இந்திய குற்றத் தண்டனை விதி (Indian Penal Code - IPC), குற்றவியல் நெறிமுறைச் சட்டம் (Criminal Procedure Code), பாலியல் வன்முறைகளிலிருந்து குழந்தைகளைக் காத்தல் சட்டம் (Protection Children from Sexual Offences - POSCO) மற்றும் இந்திய சான்றுரைச் சட்டம் (Indian Evidence Act) போன்றவற்றையும் இம்மசோதா திருத்தி அமைக்கிறது.




*இம்மசோதாவில்*

- 12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குபவர்களுக்கு 20 வருட கடும் காவல் தண்டனை (அ) ஆயுட் தண்டனை (அ) மரண தண்டனை விதிக்கப்படும்.
- 12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை கும்பல் கற்பழிப்புக்கு உள்ளாக்குபவர்களுக்கு மரண தண்டனை (அ) மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை விதிக்கப்படும்.
- 16 வயதிற்குட்பட்ட சிறுமிகளிடம் பாலியல் வன்முறையில் (அ) கும்பலாக பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு முன் ஜாமீன் வழங்கப்படாது.
- விரைந்த புலனாய்வு மற்றும் வழக்கு விசாரணை ஆகியவற்றை இரண்டு மாதத்திற்குள் முடிக்க வேண்டும்.
- கற்பழிப்பு வழக்குகளுக்கான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கு 6 மாத கால அவகாசம் வழங்கப்படும்.

## போர்த்திறன் சார்ந்த கூட்டாண்மை வழிகாட்டுதல்கள்

- மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் அமைந்த பாதுகாப்பு கையகப்படுத்துதல் சபை (Defence Acquisition Council - DAC) போர்த்திறன் சார்ந்த கூட்டாண்மை வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- உள்நாட்டு பாதுகாப்புக் கருவிகள் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பினை அதிகப்படுத்துவதற்கு இது ஒரு முக்கிய முயற்சியாக கருதப்படுகிறது.
- முக்கியத் தொழில்நுட்பம் மற்றும் உயர் உள்நாட்டு உள்ளடக்கம் ஆகியவற்றின் பரிமாற்றத்தினை ஊக்குவிப்பதற்கான வலியுறுத்தலுக்கு இந்த போர்த்திறன் சார்ந்த கூட்டாண்மை மாதிரி வழிவகுக்கிறது.
- இம்மாதிரியின் நான்கு பிரிவுகள்
    - நீர் மூழ்கிக் கப்பல்கள்,
    - ஒற்றை என்ஜின் போர் விமானம்,

- o ஹெலிகாப்டர்கள் மற்றும்
- o ஆயுதமேந்திய போர் பீரங்கிகள்

  ஆகியன தனியார் துறைக்கு என்று குறிப்பாக ஒதுக்கப்பட்டுள்ளன.

❖ இம்மாதிரியின் கீழ் வரும் அனைத்து கொள்முதல்களும் இதற்காகவே தனிப்பட்டதாக அமைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட திட்டக்குழுவினால் செயல்படுத்தப்படும். அதிக கவனம் மற்றும் சரியான நேரத்தில் செயல்படுத்துதல் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சுவச்தா பக்வாடா

❖ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், அதனுடன் இணைக்கப்பட்ட அலுவலகங்கள் மற்றும் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எண்ணெய் மற்றும் வாயுக்களுக்கான மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவை சுவச்தா பக்வாடாவை 2018 ஆம் ஆண்டு ஜூலை 01 முதல் ஜூலை 15 வரையிலான இரண்டு வார காலத்திற்கு கொண்டாடியது.

❖ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் கொண்டாடிய இந்தப் பக்வாடாவின் முக்கியக் கருத்துரு, "புதுப்பித்தல் மற்றும் நீடிப்புத்திறன்" ஆகும்.

❖ முதன்முறையாக எண்ணெய் மற்றும் வாயுக்களுக்கான மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அலுவலகங்களுக்கான சுவச்தா தர வரிசை வெளியிடப்பட்டது.

- o முதலாவது - ONGC (Oil and Natural Gas Corporation)
- o இரண்டாவது - IOCL (Indian Oil Cooperation Ltd)
- o மூன்றாவது - HPCL (Hindustan Petroleum Corporation Ltd)

❖ சமீபத்தில் வெளியிடப்பட்ட 'Fortune Global 500' பட்டியலில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனம் (ONGC) 197வது இடத்தைப் பெற்றுள்ளது.

❖ சமீபத்தில் நடைபெற்ற இன்பரா ஜகான் நிகழ்ச்சியில் இன்பரா ஜகான் விருது (INFRA Icon Award) ஒன்ஜிசி (ONGC)-க்கு வழங்கப்பட்டது.

❖ ஏப்ரல் 2016-ல் சுவச்தா பக்கவாடா தொடங்கப்பட்டது.

❖ இதன் நோக்கம் பிரச்சனைகள் மீதான தீவிரமான கவனத்தை செலுத்துதல் ஆகும். அமைச்சகங்கள்/அவற்றின் துறைகள் ஆகியவை சுவச்தாவை பதினைந்து நாட்களுக்கு கடைபிடித்து வருகின்றன.

## ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரை

❖ 2018ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று சத்தீஷ்கர் தலைநகரான ராய்ப்பூரில் ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரை தொடங்கப்பட்டது.

❖ இந்த யாத்திரை ராய்ப்பூரிலிருந்து பிலாஸ்பூர் நோக்கி சென்று பிறகு சத்தீஷ்கரின் முக்கிய நகரங்களுக்கும் செல்ல முடிவு செய்திருக்கிறது.

- இதற்கு முன் ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரை குஜராத், உத்தரப்பிரதேசம், ஒடிசா, உத்தராகண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்றது.
- இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் வேலை உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாநிலத்தில் ஸ்டார்ட் அப் இந்தியா யாத்திரையை ஸ்டார்ட் அப் இந்தியா நடத்துகிறது.

## அரசியலமைப்பு (123வது திருத்தம்) மசோதா 2017

- மக்களவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பு (123வது திருத்தம்) மசோதா, 2017 என்ற மசோதாவை ஒரு மனதாக நிறைவேற்றியுள்ளது.
- இந்த அரசியலமைப்பு திருத்த மசோதா தேசிய பட்டியலிடப்பட்டோர் ஆணையம் மற்றும் தேசிய பழங்குடியினர் ஆணையத்திற்கு நிகராக தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்க எண்ணுகிறது.
- இம்மசோதாவானது
    - தேசிய பட்டியலிடப்பட்டோர் ஆணையம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட விவகாரங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தை ரத்து செய்கின்றது.
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களை கொண்டதாகவும், அவர்களது பதவிக்காலம் மற்றும் பணி நிபந்தனைகள் அனைத்தும் குடியரசுத் தலைவரால் முடிவு செய்யப்படும் என்று குறிப்பிடுகின்றது.
    - அரசியலமைப்பில் புதிய ஷரத்து 338-B ஐ சேர்ப்பதன் மூலம் அரசியலமைப்பு அமைப்பு அந்தஸ்தை அளிக்க எண்ணுகிறது.
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு எந்தவொரு புகார்களையும் விசாரிக்கும் வண்ணம் உரிமையியல் நீதி மன்றத்திற்கு உண்டான அதிகாரங்களை வழங்குகின்றது.

## Move Hack

- நிதி ஆயோக் இந்தியாவில் எதிர்கால போக்குவரத்து விவகாரங்களுக்காக எண்ணங்களைத் திரட்டும் வகையில் "Move Hack" என்ற Global Mobility Hackathon எனப்படும் கருத்தரங்கை ஆரம்பித்துள்ளது.
- உலகில் இது முதன் முறையாக
    - பொதுப் போக்குவரத்து
    - தனியார் போக்குவரத்து
    - சாலைப் பாதுகாப்பு
    - பலநிலை இணைப்பு மற்றும்
    - புதிய தலைமுறை போக்குவரத்து தொழில்நுட்பங்கள் (பூஜ்ய உமிழ்வு வாகனங்கள் மற்றும் நகரத்திற்குள்ளேயான வான்வழிப் போக்குவரத்து) ஆகிய அனைத்தையும் அரசால் நடத்தப்படும் கருத்தரங்கத்தோடு ஒருங்கிணைக்க எண்ணுகின்றது.

- இந்த கருத்தரங்கம் இருமுனை பரப்புரை அணுகுமுறையை கொண்டுள்ளது. அவையாவன
    - Just Code It (தொழில்நுட்பம், உற்பத்தி, மென்பொருள், தகவல் ஆய்வு ஆகியவற்றில் புதுமைகள் ஏற்படுத்துவதன் மூலம்)
    - Just Solve It (புதுமையான வர்த்தக எண்ணங்கள் அல்லது நீடித்த தீர்வுகள்)
- இந்த கருத்தரங்கம் சிங்கப்பூர் அரசின் ஒத்துழைப்போடு Hacker Earth என்ற நிறுவனத்தால் இயக்கப்படுகிறது.
- PWC என்ற நிறுவனம் அறிவுசார் பங்குதாரர் ஆகும். NASSCOM என்ற நிறுவனம் யுக்திசார் பங்குதாரர் ஆகும்.

## புவிசார் குறியீட்டிற்கான முத்திரை மற்றும் வாசகம்

- வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை புவிசார் குறியீடு அளிக்கப்பட்ட பொருட்களுக்கு மூவர்ணக் கொடி முத்திரையை வெளியிட்டுள்ளது.




- இந்த முத்திரை "வியக்கத்தகு இந்தியாவின் விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள்" என்ற வாசகத்தை அதன் அடியில் அச்சிடப்பட்டு கொண்டிருக்கின்றது.
- ஒரு திறந்தவெளிப் போட்டியில், வெற்றிக்கான முத்திரை அதிரி சாட்டர்ஜி என்பவராலும், வெற்றிக்கான வாக்கியம் அகான்சா திரிபாதி என்பவராலும் வடிவமைக்கப்பட்டது.
- புவிசார் குறியீட்டிற்கான முத்திரையையும் வாசகத்தையும் தேர்ந்தெடுத்தற்கான நோக்கம் யாதெனில் அறிவுசார் சொத்துரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்துவதும், நாட்டில் புவிசார் குறியீடு கொண்ட பொருட்களின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துவதும் ஆகும்.

## தலைமறைவு நிதி மோசடியாளர்கள் மசோதா

- மோசடி செய்துவிட்டு சட்ட நடைமுறையிலிருந்து தப்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்கு செல்லும் மோசடியாளர்களை தடுப்பதற்கான தலைமறைவு நிதி மோசடியாளர்கள் மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார்.
- பொருளாதார குற்றத் தடுப்பு என்பது எந்தவொரு தனிநபரும் ரூ.100 கோடி அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் பொருளாதார மோசடியில் ஈடுபட்டு குற்றவியல் நடைமுறையிலிருந்து தப்பிப்பதற்காக இந்தியாவை விட்டு வெளியேறுவோரை கைது செய்வதாகும்.
- இப்புதிய சட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றமானது ஒரு நபரை தலைமறைவு நிதி மோசடியாளர்கள் என்று அறிவிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும் இந்த நீதிமன்றம் பினாமியின் சொத்துகள் உள்பட இவ்வாறு அறிவிக்கப்பட்ட நபரின் சொத்துகளை இச்சட்டத்தின் மூலம் பறிமுதல் செய்ய முடியும்.
- தலைமறைவு நிதி மோசடியாளர்கள் மசோதா – 2018 (Fugitive Economic Offenders Bill, 2018) ஆனது, மாநிலங்களவையில் ஜூலை 25 அன்று நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா மக்களவையில் ஜூலை 19 அன்று நிறைவேற்றப்பட்டது.
- மேலும் குடியரசுத் தலைவர் பின்வரும் மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளார் :
    - மாற்றுமுறை ஆவணங்கள் (திருத்தம்) சட்டம், 2018
    - அரசு வங்கிகள் (நீக்குதல் மற்றும் திருத்தம்) சட்டம், 2018
    - குறிப்பிட்ட நிவாரணச் (திருத்தம்) சட்டம், 2018.

## இந்தியாவின் முதல் தொடர் சங்கிலி (Block Chain) மாவட்டம்

- இந்தியாவின் முதல் தொடர் சங்கிலி மாவட்டத்தை நிறுவுவதற்காக டெக் மகிந்திரா நிறுவனத்துடன் இணைந்து தெலுங்கானா மாநில தகவல் தொழில்நுட்பம், மின்னணு மற்றும் தொலை தொடர்புத்துறை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இவ்வொப்பந்தம், ஹைதராபாத்தில் நடைபெற்ற 2018 சர்வதேச தொடர் சங்கிலி காங்கிரஸ் மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது.
- நிகரிடை பிணையத்தில் (Peer to Peer Network) தகவல்களை சேமிப்பதற்கான, பரவலாக்கப்பட்ட அழியாத டிஜிட்டல் பதிவேடு என்பதே தொடர் சங்கிலி எனப்படும் பிளாக் செயின் தொழில்நுட்பமாகும்.
- இத்தரவு மையம் எண்ணிலடங்கா அளவிற்கு எளிதில் தகவல்களை சேமிக்கும் வண்ணம் நிலையான சேமிப்புகளில் அல்லாமல் மேகக் கணினிகளில் தகவல்களை சேமிக்கின்றது.

## பிரதான் மந்திரி உஜ்வாலா திட்டம் – இலக்கு நிறைவேற்றம்

- மத்திய அரசு, பிரதான் மந்திரி உஜ்வாலாத் திட்டத்தின் (Pradhan Mantri Ujjawala Yojana - PMUY)

கீழ் ஏறக்குறைய 8 மாதங்களுக்கு முன்பாகவே (35 மாதங்களுக்குப் பதில் 27 மாதங்களில்) 5 கோடி இலவச எல்பிஜி இணைப்புகள் அளிக்கும் இலக்கினை அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

- ❖ இத்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 65 சதவிகித இணைப்புகளை அளித்துள்ள 6 மாநிலங்கள் உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், மத்தியப் பிரதேசம் ராஜஸ்தான் மற்றும் ஒடிசா ஆகியவையாகும்.
- ❖ ஒட்டு மொத்த பயனாளிகளில் ஏறக்குறைய 47 சதவிகிதத்தினர் சமூகத்தில் எஸ்சி/எஸ்டி போன்ற பின்தங்கிய வகுப்பினர் ஆவர்.
- ❖ நாடு முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இறப்புகளுக்கு காரணமாக உள்ள வீட்டினுள் ஏற்படும் உட்புற காற்று மாசுவை தீர்க்க அரசு எடுத்துள்ள ஒரு சரியான நடவடிக்கையாக இத்திட்டம் (PMUY) உள்ளதென்று உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்து இருக்கின்றது.

## தேசிய விளையாட்டு பல்கலைக் கழக மசோதா, 2018

- ❖ இந்தியாவின் முதல் தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழகத்தை மணிப்பூரின் மேற்கு இம்பாலில் நிறுவுவதற்காக, தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழக மசோதா, 2018 என்ற மசோதாவை குரல் வாக்கெடுப்பு மூலம் மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இப்பல்கலைக்கழகம், விளையாட்டு அறிவியல், விளையாட்டுத் தொழில்நுட்பம், விளையாட்டு மேலாண்மை மற்றும் விளையாட்டுப் பயிற்சி ஆகிய துறைகளில் விளையாட்டுக் கல்வியினை மேம்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.
- ❖ இம்மசோதா தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்த மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்க, ஏற்கனவே 2018ம் ஆண்டு மே மாதம் குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழக அவசரநிலைச் சட்டம் 2018 என்பதை பதிலீடு செய்கிறது.

## புதுமையோடு ஒருங்கிணைப்புத் திட்டம்

- ❖ இன்வெஸ்ட் இந்தியா நிறுவனம் ஆற்றல் நிறுவனங்களுடன் இணைந்து ஆற்றல் துறையில் உள்ள ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்காக புதுமையோடு ஒருங்கிணைப்பு (Integrate to Innovate - i2i) என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.
- ❖ ஆற்றல் துறையில் உள்ள மிகப் பெரிய நிறுவனங்களுக்கும் சிறிய ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கும் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக மின்சாரத் துறையில் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கான 3 மாத திட்டம் இதுவாகும்.
- ❖ இந்நிறுவனம் மத்திய அரசின் அலுவல் பூர்வமான முதலீட்டு மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு நிறுவனமாகும்.
- ❖ இந்நிறுவனம் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## மூன்று பெண் நீதிபதிகள் - இந்தியா

- ❖ மதராஸ் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்த்தப்பட்ட பிறகு, இந்திய நீதித்துறை வரலாற்றில் உச்சநீதிமன்றம் புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- ❖ முதல் முறையாக உச்சநீதிமன்றம் மூன்று பெண் நீதிபதிகளை கொண்டிருக்கும். அவர்களாவன
  - o நீதிபதி R.பானுமதி
  - o நீதிபதி இந்து மல்ஹோத்ரா
  - o நீதிபதி இந்திரா பானர்ஜி
- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் சமீபத்தில் நீதிபதி இந்திரா பானர்ஜி, ஒரிசா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வினீத் சரண் மற்றும் உத்தரகாண்ட் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி K.M.ஜோசப் ஆகியோரை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்தார்.
- ❖ நீதிபதி இந்திரா பானர்ஜி உச்சநீதிமன்ற வரலாற்றில் எட்டாவது பெண் நீதிபதியாவார்.
- ❖ இவர் பின்வருபவர்களை தொடர்ந்து பதவியேற்கிறார்.
  - o பாத்திமா பீவி
  - o சுஜாதா வி மனோகர்
  - o ருமா பால்
  - o கியான் சுதா மிஸ்ரா
  - o ரஞ்சனா பிரகாஷ் தேசாய்



- ❖ தற்சமயம் இந்திய உச்சநீதிமன்றம் 22 நீதிபதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ நீதிபதி கீதா மிட்டல் ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டு ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக வரலாறு படைத்துள்ளார்.
- ❖ சிந்து சர்மா அம்மாநில உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி என்ற சிறப்பை பெற்றிருக்கின்றார்.


## சுவச் பாரத் திட்டம், கிராமின் - உலக சுகாதார நிறுவனம்

- ❖ உலக சுகாதார நிறுவன அறிக்கையின் படி 2014 அக்டோபர் முதல் 2019 அக்டோபர் வரையில் வயிற்றுப்போக்கு மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு (புரோட்டீன்) தொடர்புடைய ஏறக்குறைய மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட இறப்புகளை சுவச் பாரத் திட்டம் - கிராமின் தடுக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ சுவச் பாரத் திட்டம் - கிராமின் என்பதன் மூலமாக அதிகரிக்கப்பட்ட துப்புரவு வசதிகளின் காரணமாக ஏற்பட்ட சாத்தியமான சுகாதார தாக்கம் பற்றிய ஆய்வறிக்கை மத்திய

குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகத்திற்காக உலக சுகாதார நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

## தொழிற்முறை கல்லூரி இடங்கள்: தமிழ்நாட்டின் 69% இட ஒதுக்கீடு

- தமிழ்நாட்டைச் சேர்ந்த NEET தேர்வில் (National Eligibility Cum Entrance Test) வெற்றி பெற்ற இரண்டு மாணவர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தலையிட உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.
- இம்மனுவின் படி 69% இடஒதுக்கீடு என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமையான, எந்தவொரு மனிதனும் சாதி, மதம், பாலினம், இனம் மற்றும் இதர விஷயங்களின் அடிப்படையில் பாகுபடுத்தப்படக் கூடாது என்பதற்கு எதிரானதாகும்.
- உச்ச நீதிமன்றம் ஒதுக்கிய 50% இட ஒதுக்கீட்டினை வேண்டி இம்மனு உச்ச நீதிமன்றத்திடம் அளிக்கப்பட்டது.




- அதன் விளைவாக தமிழ்நாடு 69% இட ஒதுக்கீட்டிற்கு வழி செய்யும் வகையில் சட்டம் ஒன்றை இயற்றியது. இச்சட்டம் அரசியலமைப்பின் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.
- கொள்கை அடிப்படையிலான 69% இட ஒதுக்கீட்டின் நியாயத் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான குழு ஜூலை 2011-ல் ஒரு அறிக்கையினை தாக்கல் செய்தது.
- இந்த அறிக்கையானது எந்தவொரு குறிக்கோள் அடிப்படையிலான விதிகளும் இல்லாமல் சாதாரணமாக 1985-ன் அம்பா சங்கர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 69% இடஒதுக்கீட்டினை உறுதி செய்துள்ளது என இந்த மனு கூறுகிறது.

## ICANN ccNSO சபையின் முதல் இந்திய உறுப்பினர்

- நியமிக்கப்பட்ட பெயர்கள் மற்றும் எண்களுக்கான இணையதள குழுமத்தின் (Internet Corporation for Assigned Names and Numbers - ICANN) பரிந்துரைக் குழு, நாட்டின் குறியீட்டு ஆதரவு நிறுவனத்தின் (Country Code Supporting Organisation - CCNSO) புதிய சபை உறுப்பினராக அஜய் தத்தாவினை தேர்ந்தெடுத்துள்ளது.
- இவர் CCNSO-ன் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.
- CCLTD (Country Code top-level domains) விவகாரங்கள் மற்றும் உலகெங்கிலும் இருக்கும் அனைத்து நாடுகளின் குறியீட்டு உயர்நிலை இயக்குநர்களை பிரதிநிதிப்படுத்துதல்

ஆகியவற்றுக்கான ICANN- ன் கொள்கை மேம்பாட்டு அமைப்பு CCNSO ஆகும்.


- ❖ இவர் இரண்டு வருட பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அக்டோபர் 2018ல் ஸ்பெயினில் நடைபெற உள்ள ICANN-ன் 63வது சந்திப்பில் இவர் பதவி ஏற்க உள்ளார்.
- ❖ இவர் உலக அளவில் இந்தியாவிற்கான பிரதிநிதியாக இருப்பார். மேலும் ccNSO-ன் உறுப்பினராக ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் பசிபிக் தீவுகளின் பொறுப்பாளரும் ஆவார்.

*Internet Corporation for Assigned Names and Numbers (ICANN)*

- ❖ இணையதளத்தில் களப் பெயரினை மேற்பார்வையிடுதலில் பொறுப்பு கொண்ட இலாப நோக்கமில்லாத (அரசு அல்லாத) தனியார் கழகம் ICANN ஆகும்.
- ❖ இது 1998-ல் நிறுவப்பட்டது. அமெரிக்காவினைச் சேர்ந்த கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்ஜெல்ஸ் இதன் தலைமையிடமாகும்.

## கைபேசி சொந்தமுடமையில் அதிக பாலின இடைவெளி - இந்தியா

- ❖ சமீபத்தில் LIRNEAsia வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ஒப்பிடக்கூடிய 18 நாடுகளில் இந்தியாவானது கைபேசி சொந்தமுடமையில் அதிக பாலின இடைவெளியைக் கொண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ இணையத்தைப் பெண்கள் அணுகுவதில் இந்தியா மற்ற நாடுகளை விட கீழ் நிலையில் உள்ளது.




- ❖ LIRNEAsia ஆனது தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் திட்டத்தின் (ICT - Information and Communication Technology) சிந்தனைச் சாவடி ஆகும். இது 2005ஆம் ஆண்டு முதல் ஆசியா-பசிபிக்கில் ஏழைகளுக்கு ஆதரவான, சந்தைகளுக்கு ஆதரவான ஆராய்ச்சிகளில் பங்கெடுத்து வருகிறது.
- ❖ இந்தியாவில் ஒட்டு மொத்தமாக 80 சதவீத ஆண்களிடம் கைபேசி உள்ளது. ஆனால் ஆண்களுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் 43 சதவீத பெண்களிடம் மட்டுமே கைபேசி உள்ளன. இதற்குக் காரணம் போதிய விழிப்புணர்வு இல்லாததே ஆகும்.

- இந்த வித்தியாசமானது இந்தியாவை பாகிஸ்தான், வங்காள தேசம் ரவாண்டா உள்பட மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது பாதியளவு விஞ்சியிருக்கிறது என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்த பாலின இடைவெளியானது கிராமப்புறங்களில் 52 சதவீதமாக உள்ளது. நகர்ப்புறங்களில் பாலின இடைவெளியானது 34 சதவீதமாக உள்ளது.
- இந்தியாவில் மொத்தமுள்ளவர்களில் 64 சதவீதத்தினர் இணையத்தைப் பற்றி அறியாதவர்களாக உள்ளனர். இது மற்ற நாடுகளுடன் (பாகிஸ்தான் மற்றும் வங்க தேசத்தைத் தவிர) ஒப்பிடும் போது அதிகமான சதவீதம் கொண்டுள்ளது.
- இந்தியாவில் இணையப் பயன்பாடு 19 சதவீதமாகும். (நைஜுரியா, கானா, கென்யா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளை விடக் குறைவு)

## தடை செய்யப்பட்ட பகுதிக்கான அனுமதி தளர்த்தப்படுதல்

- மத்திய உள்துறை அமைச்சகம், 2022-ஆம் ஆண்டு டிசம்பர் வரை வெளிநாட்டினர் (தடைசெய்யப்பட்ட பகுதிகள்) ஆணை, 1963 என்ற ஆணையின் கீழ் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் உள்ள 29 ஆளில்லா தீவுகளை தடைசெய்யப்பட்ட பகுதிக்கான அனுமதி முறையிலிருந்து விலக்கியிருக்கின்றது.
- இம்முடிவு சுற்றுலாத் துறையை ஊக்குவித்து பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த எண்ணுகின்றது.
- ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் சீனாவைச் சேர்ந்த குடிமகன்கள் மற்றும் இந்நாடுகளை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டவர்கள் அந்தமானிற்கு வருகை தரும்போது கண்டிப்பாக குறிப்பிட்ட பகுதிக்கான அனுமதியைப் பெற வேண்டும்.
- மாயாபந்தர் மற்றும் திஜிலிப்பூர் தீவுகளுக்கு வருகை தருகையில் மியான்மரைச் சேர்ந்த குடிமக்களும் அந்த அனுமதியைப் பெற வேண்டும்.
- இது தவிர, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் பழங்குடியினப் பகுதிகள் ஆகியவற்றைப் பார்வையிட தகுந்த அதிகாரிகளிடம் தேவைப்படும் ஒப்புதல்களைப் பெற வேண்டும்.

## பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா

- மத்திய நீர்வளத் துறை அமைச்சகம், நபார்டு வங்கி, தேசிய நீர் மேம்பாட்டு ஆணையம் ஆகியன பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனாவின் 99 முன்னுரிமையளிக்கப்பட்ட பாசனத் திட்டங்களின் மத்திய பங்களிப்புக்கான நிதிக்காக ஒரு திருத்தப்பட்ட ஒப்பந்த குறிப்பாணையில் கையெழுத்திட்டுள்ளன.
- நீண்ட கால நீர்ப்பாசன நிதியின் மூலமாக இத்திட்டத்திற்கு நிதியளிக்கப்படுகின்றது.
- இந்த திருத்தப்பட்ட ஒப்பந்தமானது நேரத்திற்கு தேவையானபடி பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனாத் திட்டத்தின் கீழ் முன்னுரிமையளிக்கப்பட்டத் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியை மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் அளித்திட இயலச் செய்யும்.

## 64-வது நிறுவனர் தினம் – லலித் கலா அகாடமி

- 2018-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 7-ஆம் தேதி புது தில்லியில் லலித் கலா அகாடமியின் 64-வது நிறுவனர் தினக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.
- இந்நிறுவனம் 1954-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 5-ஆம் தேதி, இந்திய அரசால் தேசிய மற்றும் கலாச்சார அடையாளத்தை உருவாக்க நிறுவப்பட்டது.
- இக்கொண்டாட்டத்தில் புகழ்பெற்ற கலைஞர் கணேஷ் பைனே பற்றி பிரணவ் ரஞ்சன் ராய் எழுதிய "A Painter of Eloquent Silence" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.
- இப்புத்தகம், அந்த ஓவியக் கலைஞரின் வாழ்க்கை மற்றும் அவரது படைப்புகள் பற்றிய சுயசரிதைப் புத்தகமாகும். இது லலித் கலா அகாடமி மற்றும் அகர் பிரகார் கலைக்கூடம் ஆகியவற்றுடன் இணைந்து வெளியிடப்பட்டது.
- 2018-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் அகாடமியில் நடத்தப்பட உள்ள 12-வது மூன்றாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்ச்சி பற்றிய முத்திரையை அமைச்சர் வெளியிட்டார்.

## மாநிலங்களவை துணைத் தலைவர் தேர்தல்

- தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளரான ஹரிவம்ச நாராயண சிங் மாநிலங்களவை துணைத் தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் 125 வாக்குகள் பெற்று வெற்றியடைந்துள்ளார்.



- காங்கிரசைச் சேர்ந்த எதிரணி வேட்பாளரான B.K.ஹரிபிரசாத் 105 வாக்குகள் பெற்றார்.
- சிங் முன்னாள் பத்திரிக்கையாளரும், பீகாரைச் சேர்ந்த ஐக்கிய ஜனதா தளக் கட்சித் தலைவரும் ஆவார்.
- துணைத் தலைவருக்கான பதவி கேரளாவைச் சேர்ந்த காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான P.J.குரியனின் ஓய்வைத் தொடர்ந்து 2018ம் ஆண்டு ஜூன் முதல் காலியாக இருந்தது.
- தற்போதைய மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்கள் 244. முழு அவையில் வெற்றி பெற 123 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.
- பாஜக 73 உறுப்பினர்களைக் கொண்டுள்ள அவையின் மிகப்பெரிய கட்சியாகும். 50 உறுப்பினர்களைக் கொண்டுள்ள காங்கிரஸ் மிகப்பெரிய எதிர்க் கட்சியாகும்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம்

- நிதி ஆயோக் அமைப்பும் இந்திய தொழிற்துறை கூட்டமைப்பும் (Confederation of Indian Industry - CII) நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில்

கையெழுத்திட்டுள்ளன. மேலும் இரண்டு அமைப்புகளும் 3 ஆண்டு கால கூட்டு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளன.

- ❖ இந்த ஒப்பந்தம் புதுதில்லியில் நடைபெற்ற அரசு மற்றும் வணிக பங்குதாரர் மாநாடு நடைபெற்ற சமயத்தில் கையெழுத்திடப்பட்டது.
- ❖ இம்மாநாடு நிதி ஆயோக், இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- ❖ இம்மாநாட்டின் ஒரு பகுதியாக, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை உலகம் அடைவதற்கான இந்தியாவின் தீர்வுகள் என்ற அறிக்கையை இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு வெளியிட்டது.

## ICRISAT உடனான தெலுங்கானாவின் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ❖ தெலுங்கானா மாநிலம் மித வெப்ப மண்டல பகுதிகளுக்கான சர்வதேச ஆராய்ச்சி பயிர்கள் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (International Crops Research Institute for the Semi-Arid Tropics - ICRISAT) கையெழுத்திட்டுள்ளது.
- ❖ காக்கத்தியா என்ற திட்டத்தின் தாக்கம் குறித்து ஆராய்வதே இதன் நோக்கமாகும்.
- ❖ காக்கத்தியா திட்டம் என்பது தெலுங்கானாவில் உள்ள அனைத்து சிறு பாசன தொட்டிகள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்யும் திட்டமாகும்.

## மக்கள் பிரநிதித்துவ (திருத்த) மசோதா

- ❖ மக்களவை, அரசு ஊழியர்கள் வாக்காளர்களின் வரிசையில் பதிலளிப்பு வாக்குமுறையை வெளிநாட்டு இந்தியர்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான வசதியை மக்கள் பிரதிநிதித்துவ (திருத்த) மசோதா -2017 என்ற மசோதாவின் மூலம் குரல் வாக்கெடுப்பின் வழியாக நிறைவேற்றியுள்ளது.
- ❖ இந்த மசோதா மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (RPA) 1950 மற்றும் மக்கள் பிரநிதித்துவ சட்டம் (RPA) 1951 ஆகியவற்றை திருத்தி பதிலளிப்பு வாக்கு முறையை அனுமதிக்கவும், மேற்கண்ட சட்டங்களில் உள்ள சில விதிகளை பாலின நடுநிலை கொண்டதாகவும் செய்ய முயல்கிறது.
- ❖ இந்த மசோதா இரண்டு சட்டங்களிலும் 'மனைவி' என்ற வார்த்தையை "துணை" என்று மாற்றியுள்ளது.
- ❖ தற்போது அரசு ஊழியர்கள் மட்டுமே பதிலளிப்பு வாக்கு முறையில் வாக்களிக்க இயலும்.

## 4 கூடுதல் NDRF படைப்பிரிவு

- ❖ மத்திய மந்திரி சபை, இந்தியாவின் பேரிடர் எதிர்ப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய பேரிடர் எதிர்ப்பு படையில் (National Disaster Response Force - NDRF) கூடுதலாக நான்கு படைப்பிரிவுகளை திரட்ட ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்த நான்கு படைப்பிரிவுகள் முதலில் கீழ்க்கண்டவாறு திரட்டப்படும்,
- இந்திய திபெத்திய எல்லைக் காவல் படையில் 2 படைப்பிரிவு, அஸ்ஸாம் ரைஃபிள் (ARs) மற்றும் எல்லை பாதுகாப்புப் படை (BFS) ஆகியவற்றில் தலா ஒரு படைப்பிரிவு.
- பின்னர் இந்த நான்கு படைப்பிரிவுகளும் NDRF படைப்பிரிவாக மாற்றப்படும்.
- இந்த படைப்பிரிவுகள் ஜம்மு மற்றும் காஷ்மீர், இமாச்சல் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் டெல்லி தேசிய தலைநகர் பிராந்தியம் ஆகிய பகுதிகளில் பேரிடர் பாதிப்பு விவரங்களின் அடிப்படையில் அமர்த்தப்படும்.

## OBC மாணவர்களுக்கான பள்ளிக் கல்விக்கு பிந்தைய உதவித் தொகை

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) இந்தியாவில் படிக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்கான பள்ளிக் கல்விக்கு பிந்தைய உதவித் தொகையை (PMS - OBC) 2020 வரை தொடரவும் திருத்தவும் ஒப்புதல் அளித்துள்ளது.
- PMS-OBC ஆனது 1998-99 முதல் செயல்பாட்டில் உள்ள சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் முதன்மைத் திட்டம் ஆகும்.
- இது முழுமையான மத்திய நிதியுதவி திட்டமாகும்.
- பள்ளிக் கல்விக்கு பிந்தைய அல்லது மேல் நிலையில் கல்வி பயிலும் OBC மாணவர்களின் படிப்பை முடிக்க நிதி உதவி வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## புதிய எச்.ஐ.வி. முக்கிய தளங்கள்

- சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகத்தின் படி, மேகாலயா, மிசோரம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் புதிதாக எச்ஐவி முக்கிய தளங்களாக உருவாகியுள்ளன.
- எச்ஐவியுடன் ரெட்ரோவைரல் எதிர்சிகிச்சை (PLHIV-ART) பின்பற்றக்கூடியவர்களின் அடிப்படையில்
    - மகாராஷ்டிரா அதிகபட்சமாக 2.03 லட்சம் பேரைக் கொண்டுள்ளது.
- இதைத் தொடர்ந்து
    - ஆந்திரப் பிரதேசம் 1.78 லட்சம் பேரையும், கர்நாடகா 1.58 லட்சம் பேரையும் கொண்டுள்ளது.
- HIV காவல் கண்காணிப்பு (HIV Sentinel Surveillance - SSU) ஆனது தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பினால் (National AIDS Control Organization - NACO) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஆய்வாகும். மக்கள் தொகையில் எச்ஐவியால் அதிக பாதிப்புக்குள்ளாகும் பிரிவுகளில் மிகப்பெரிய வழக்கமான ஆய்வுகளில் இந்த ஆய்வும் ஒன்றாகும்.

## நடுவர் தீர்ப்பாயம் மற்றும் உடன்பாடு செய்தலுக்கான (திருத்த) மசோதா 2018

- இந்தியாவில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய வணிக சிக்கல்களுக்குத் தீர்வு காண வகை செய்யும் வகையில் நடுவர் தீர்ப்பாயம் மற்றும் உடன்பாடு செய்தலுக்கான (திருத்த)

மசோதா - 2018 ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.

- இது உள்நாட்டு மற்றும் சர்வதேச தீர்ப்புகளை சமாளிக்க விதிகள் மற்றும் வரையறைகளையும் சமரச நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய நடுவர் தீர்ப்பாயம் மற்றும் உடன்பாடு செய்தலுக்கான சட்டம் 1996 ஐ திருத்துகிறது.
- இந்த மசோதா இந்திய நடுவர் தீர்ப்பாயக் குழு (ACI- Arbitration Council of India) எனும் சுதந்திரமான அமைப்பை நடுநிலைத் தீர்ப்பு, சமரசம் மற்றும் பிற மாற்று வழியில் சர்ச்சைகளை சரி செய்தல் போன்றவற்றை ஊக்குவிக்க நிறுவியுள்ளது.
- இந்த அமைப்பு உச்சநீதிமன்ற நீதிபதி அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது நடுவர் சார்ந்த நடத்தை பற்றி அறிவு கொண்ட நபரைத் தலைவராகக் கொண்டிருக்கும்.
- இந்த மசோதா முன்னதாக அனைத்து சர்வதேச வர்த்தகத்திற்கான நடுவர் தீர்ப்பாயம் கொண்டுள்ள 12 மாத காலக்கெடுவை நீக்குவதையும் முன்மொழிந்துள்ளது.

## வர்த்தகப் பிரச்சனைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான சட்டதிருத்தம்

- மாநிலங்களவை ஆகஸ்ட் 10, 2018 அன்று வர்த்தகங்களுக்கான நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றத்தின் வர்த்தகங்களுக்கான பிரிவு மற்றும் வர்த்தக மேல்முறையீட்டுப் பிரிவு (திருத்த) மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா மாநில அரசுகள்
    - உயர்நீதி மன்றங்கள் அசல் உரிமையியல் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளிலும் கூட மாவட்ட அளவில் வர்த்தகங்களுக்கான நீதிமன்றங்களை அமைக்கவும்,
    - உயர்நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பிற்கு உட்படாத பகுதிகளில் கூட மாவட்ட அளவில் வர்த்தகங்களுக்கான மேல்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்கவும்

  அனுமதியளிக்கிறது
- இந்த திருத்தமானது வர்த்தகங்களுக்கான நீதிமன்றத்தின் பண மதிப்பு எல்லையை ரூ.1 கோடியில் இருந்து ரூ.3 லட்சமாக குறைத்துள்ளது.
- இது குறைந்த மதிப்புள்ள வர்த்தக சிக்கல்களை தீர்ப்பதற்கான கால அளவை (தற்போது 1445 நாட்கள்) குறைக்கும் மற்றும் எளிதாக வர்த்தகம் செய்யக் கூடிய நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் தரவரிசையை உயர்த்தும்.

## சிறப்பு ஆயுதங்கள் மற்றும் செயல்தந்திர முறைகளுக்கான குழு (SWAT)

- இந்தியாவிலேயே இதுவரையில் எந்தவொரு காவல்துறையிலும் இல்லாததாக, முதன்முறையாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக 36 கமாண்டோக்களை உள்ளடக்கிய அனைத்து பெண் சிறப்பு ஆயுதங்கள் மற்றும் செயல்தந்திர முறைகளுக்கான (SWAT- *Special Weapons And Tactics*) குழுவை டெல்லி காவல்துறை உருவாக்கியுள்ளது.



- புதிய அணியில் உள்ள 36 பெண் கமாண்டோக்கள் அனைவரும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவர்.
- இந்த பெண் கமாண்டோக்கள் ஆகஸ்ட் 15, 2018 சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது செங்கோட்டையிலும், இந்தியா வாயில் பகுதியிலும் பணி அமர்த்தப்படுவர்.
- இந்த சிறப்பு ஆயுதங்கள் மற்றும் செயல்தந்திர முறைகளுக்கான குழு டெல்லி காவல்துறை ஆணையரான அமுல்யா பட்நாயக்கின் சிந்தனையாகும்.

## மதத் மற்றும் சக்யோக் நடவடிக்கை

- இந்திய கடற்படையானது கேரளாவின் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கையான மதத் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக இந்திய இராணுவம் சக்யோக் நடவடிக்கையை துவக்கியுள்ளது.
- இந்த இரு நடவடிக்கைகளும் சிவில் நிர்வாகத்தின் மீட்பு, நிவாரண முயற்சிகள் மற்றும் தேசிய பேரிடர் நிவாரண குழு (NDRF – National Disaster Responsive Force) ஆகியவற்றிற்கு உதவுகின்றன.



## A.K.பூட்டானி PMFPYயின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமனம்

- பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் (PMFPY) தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) மூத்த ஆட்சியாளரான ஆஷிஷ் குமார் பூட்டானி மே 9, 2020 வரை மத்தியப் பணியாளர் அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - o பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டமானது ஒரு நாடு - ஒரு திட்டம் என்ற அடிப்படையில் 2016ம் ஆண்டு துவங்கப்பட்டது.

  - இத்திட்டமானது இதற்கு முன்னிருந்த அனைத்து திட்டங்களின் சிறந்த அம்சங்களை உள்ளடக்கியும் அதேசமயம் முன்னிருந்த குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை நீக்கியும் விரைவான காப்பீட்டு வசதியை விவசாயிகளுக்கு உறுதி செய்கிறது.

## கடல் உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத் தலைவர் நியமனம்

❖ இந்திய ஆட்சிப் பணி அலுவலர் K.S.சீனிவாஸ் அவர்கள் மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நகர் சார்ந்த கடல் உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்றார்.

## வட இந்தியாவின் முதல் விண்வெளி ஆராய்ச்சி மையம்

❖ முழுநேர விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமானது வடஇந்தியாவில் முதன்முறையாக ஜம்மு நகரில் அமைக்கப்படவுள்ளது. இது ஆராய்ச்சிக் கல்வி மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

❖ விண்வெளி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான மற்றுமொரு நகரம் வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது அகர்தலாவில் உள்ள தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தின் (NIT – National Institute of Technology) கீழ் செயல்படும்.

## நிதி ஆயோக்கின் பிட்ச் டு மூவ் (Pitch To Move) போட்டி

❖ இந்தியாவின் புதிதாக தொழில் முனைவோர் தங்கள் வியாபார யோசனைகளை புகழ் பெற்ற மன்றத்திடம் வழங்குவதற்கான தனித்துவமான வாய்ப்பை வழங்குவதற்காக நிதி ஆயோக் 'பிட்ச் டு மூவ்' என்ற போட்டியை துவங்கியுள்ளது.

❖ இந்தத் தளத்தை பயன்படுத்தி பல்வேறு துறைகளில் உள்ள புதிய தொழில் நிறுவனங்கள் தங்கள் கருத்துகளை தொழில் தலைவர்கள் மற்றும் கூட்டு முதலாளிகளிடம் வழங்கி முதலீடுகளைப் பெற முடியும்.

❖ இது இன்வெஸ்ட் இந்தியா (Invest India) மற்றும் இந்திய மோட்டார் தயாரிப்பாளர் சங்கத்துடன் (Society of Indian Automobile manufactures - SIAM) இணைந்து நிதி ஆயோக்கால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## மஹாதாயி நீர் விவகார தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு

❖ கடந்த 50 வருடங்களாக மஹாதாயி அல்லது மந்தோவி ஆற்றின் நீர்ப் பகிர்வு குறித்து கோவா, கர்நாடகா, மஹாராஷ்டிராவுக்கு இடையே இருந்து வந்த சச்சரவுகளுக்கு மஹாதாயி நீர் விவகார தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

  - இந்த தீர்ப்பாயம் நதியைச் சார்ந்துள்ள மாநிலங்களுக்கிடையேயான நீர்ப் பகிர்வு குறித்த சச்சரவுகளை தீர்ப்பதற்காக மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்

விவகாரச் சட்டம் 1956-ன் கீழ் 2010 நவம்பர் மாதம் அமைக்கப்பட்டது.

## சர்வதேச சிறுதானிய ஆண்டு


- 2019 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கக் கோரி ஐ.நா சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பிற்கு (Food & Agricultural Organization) இந்தியா முன்மொழிந்து வேண்டுகோள் விடுத்துள்ளது.
- மேலும் இத்தாலியின் ரோம் நகரில் 2018 அக்டோபரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள விவசாயக் குழுவின் (committee on Agriculture - COAG) 26வது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் இந்த முன்மொழிதலைச் சேர்க்க இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்த முன்மொழிதலை உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO – Food and Agriculture Organization) அதன் உறுப்பு நாடுகளோடு ஏற்றுக் கொள்வதன் மூலம் ஐ.நா பொதுச் சபை ஆனது 2019ம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்க வழிவகை செய்யும்.




- இந்தியா 2018ம் ஆண்டை தேசிய சிறுதானிய ஆண்டாக கொண்டாடுகிறது. சிறுதானிய ஆண்டாக அனுசரிப்பதன் மூலம் சிறுதானிய உற்பத்தி மற்றும் கொள்முதலை ஊக்குவிக்க இது உதவுகிறது.

## அஞ்சல் நெடுஞ்சாலைத் திட்டம்

- நேபாளத்தின் தெற்குச் சமவெளிப் பகுதியில் கட்டப்பட்டுவரும் முதல் கட்ட அஞ்சல் நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு கூடுதலாக ரூ.470 மில்லியன் (நேபாளி பணத்தை) இந்தியா வழங்கியுள்ளது.
- ஹலக்கி ராஜ் மார்க் என்று அழைக்கப்படும் இச்சாலை நேபாளத்தின் தராய் பகுதியின் குறுக்காக கிழக்கில் பத்ரப்பூரிலிருந்து மேற்கே தோத்தாரா வரை நாட்டின் முழு அகலத்தை இரண்டாகப் பிரிக்கிறது.




- நேபாளத்தின் பழமையான நெடுஞ்சாலையான இது அனைத்து இமயமலைப் பகுதி நாடுகளின் போக்குவரத்து, அஞ்சல் சேவைகளை எளிதாக்குகிறது.
- இத்திட்டத்தின் முதல் தொகுப்பானது ஏற்கனவே முடிக்கப்பட்டு ஜனவரி 2017ல் சேவைக்கு திறக்கப்பட்ட தங்காதி – பஜானியா – சத்தி மற்றும் லக்மி திக்காபூர் – காக்ராவ்லா ஆகிய இரண்டு சாலைப் பிரிவுகளை உள்ளடக்கியது.

## ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம்

- ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் முதல் திட்டமாக 'வடகிழக்கு சுற்று : இம்பால் மற்றும் கொங்க்ஜோம்' ஆனது மணிப்பூரில் தொடங்கப்பட்டது.
- இத்திட்டமானது மணிப்பூரின் காங்லா கோட்டை மற்றும் கொங்க்ஜோம் ஆகிய இரண்டு தளங்களை உள்ளடக்கியது.
- இத்திட்டத்தின் கீழ் மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்கிறது.
- இத்திட்டமானது மத்திய சுற்றுலாத்துறையால் கருத்துறு அடிப்படையிலான சுற்றுலா சுற்றுப் பாதைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இது பொதுநிதிக்காக மேற்கொள்ளப்படும் திட்ட கூறுகளுக்கான 100% மத்திய நிதியுதவி திட்டமாகும்.
- மேலும் இது பெரு நிறுவன சமூக பொறுப்பின் கீழ் தன்னார்வ நிதிக்கான வசதியை அளிக்கும் வசதியையும் கொண்டுள்ளது.
- காங்லா கோட்டையானது கடந்த கால மணிப்பூர் மீட்டீ ஆட்சியாளர்களின் பாரம்பரிய இருக்கையாக 1891ஆம் ஆண்டு வரை இருந்துள்ளது.
- மணிப்பூரின் இம்பால் நகரில் உள்ள பழைய கோவித்தாஜீ கோவில் மிகப்பெரிய இந்து, வைணவ கோவிலாகும்.

## மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டம் - 2022

- இந்திய பிரதமர் தனது 72வது சுதந்திரதின உரையில் இந்தியா 2022ல் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமான 'ககன்யான்' என்ற திட்டத்தின் கீழ் மனிதனை விண்வெளிக்கு அனுப்ப உள்ளதாக கூறினார்.
- இத்திட்டம் வெற்றியடைந்தால் உலகில் இதுவரை விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் வரிசையில் இந்திய நான்காவது நாடாக இடம் பிடிக்கும். முதன்முதலில் விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியர் முன்னாள் இந்திய விமானப்படை (IAF) விமானியான ராகேஷ் சர்மா ஆவார்.
- இன்டர் காஸ்மோஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏப்ரல் 2, 1984ல் ஏவப்பட்ட சோவியத் யூனியனின் சோயுஸ் T-11 பயணத்தில் இவரும் ஒருவராவார்.
- மனித விண்கலத் திட்டத்திற்கு தேவைப்படுகின்ற சில வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்ட தொழில் நுட்பங்களாவன
    - டிசம்பர் 2014ல் ஜி.எஸ்.எல்.வி எம்கே IIIயின் சோதனைக் கலம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
    - மேலும் சோதனைக் குழுவினரின் மறுநுழைவு திறன் நிரூபணச் சோதனையும் பரிசோதிக்கப்பட்டது.
    - ஜூன் 2017 ஜி.எஸ்.எல்.வி. எம்.கே. III யின் முதல் வளர்ச்சி பயணச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
    - ஜூலை 2018ல் குழுவின் தப்பிக்கும் அமைப்புமுறை கொண்ட முதல் பயணச் சோதனை பரிசோதிக்கப்பட்டது.

## பாஸ்கர் இராமமூர்த்தி குழு

- மேம்படுத்தப்பட்ட ஜெ.இ.இ (Advanced JEE – Joint Entrance Examination) தேர்வில் மாற்றங்கள் செய்வதற்கு பரிந்துரைப்பதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 5 நபர் கொண்ட குழுவை முன்மொழிந்துள்ளது.
- இந்த ஆண்டு நுழைவுத் தேர்வில் குறைந்த எண்ணிக்கையிலான நபர்கள் தகுதி பெற்றுள்ளதையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவானது,
    - தேர்வு எழுதுபவரின் திறனை சோதனை செய்வதற்காக வலுவான மற்றும் அறிவியல்பூர்வமான நுழைவுத் தேர்வு அமைப்பை மேம்படுத்த இக்குழு அமைச்சகத்திற்கு தனது பரிந்துரைகளை அளிக்கும். மேலும் தேர்வு எழுதுபவர்கள் பயிற்சி நிறுவனங்களை சார்ந்திருப்பதை குறைக்கவும் இக்குழு தனது பரிந்துரைகளை அளிக்கும்.
- ஐஐடி – மெட்ராஸின் இயக்குநர் பாஸ்கர் இராமமூர்த்தி இக்குழுவிற்கு தலைமை வகிப்பார்.

- இக்குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் –
  1. அபே கரந்திகர் (ஐஐடி – கான்பூரின் இயக்குநர்)
  2. வினீத் ஜோஷி (தேசிய போட்டித் தேர்வுகள் முகமையின் பொது இயக்குநர்)
  3. ஐஐடி பாம்பேயின் பேராசிரியர் கண்ணன் மவுடுகலயா

## B. சசிகிரன் குழு

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI – Food Safety and Standards Authority of India) உணவுப் பெயரிடல் மற்றும் விதிகளை காட்சிப்படுத்துதல் தொடர்பான உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் (பெயரிடல் மற்றும் காட்சிப்படுத்துதல்) விதிகள், 2018 ன் வரைவை கண்காணிப்பதற்காக மூன்று நபர் கொண்ட குழுவை உருவாக்கியுள்ளது.
- இக்குழுவிற்கு ஊட்டச்சத்திற்கான தேசிய நிறுவனத்தின் (NIN – National Institute of Nutrition) முன்னாள் இயக்குநர் B. சசிகிரன் தலைமை வகிப்பார். தற்போதைய NIN-ன் இயக்குநர் ஹேமலதா மற்றும் எய்ம்ஸின் அகச்சுரப்பியல் நிபுணர் நிகில் தன்டோன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்ற உறுப்பினர்களாவர்.
- FSSAI ஆனது உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் (பெயரிடல் மற்றும் காட்சிப்படுத்துதல்) விதிகள் 2018-ன் வரைவை ஏப்ரல் 2018-ல் வெளியிட்டது.
- இது பெட்டியில் அடைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களில் கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவை அதிகமாக இருந்தால் அட்டையில் கண்டிப்பாக சிவப்பு கோடு இட வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது.
- ஆனால் மத்திய சுகாதார அமைச்சகம் இந்த வரைவின் விதிகளை கிடப்பில் வைத்துவிட்டு, வரைவு விதிகளை கண்காணிப்பதற்காக நிபுணர் குழுவை அமைத்துள்ளது.

## பண்ணையிலிருந்து கிராமப்புற வருமானம்

- வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (National Bank for Agriculture & Rural Development -NABARD) அனைத்திந்திய கிராமப்புற நிதி உள்ளடக்கல் கணக்கெடுப்பு 2016-17ன் படி, பயிர்சாகுபடி மற்றும் கால்நடை வளர்ப்பிலிருந்து சராசரியாக 43% வருமானத்தை மட்டுமே விவசாய குடும்பங்கள் பெறுகின்றன.

**AVERAGE MONTHLY INCOME OF RURAL HOUSEHOLDS**

| Income Source | Agricultural Households | Non-Agricultural Households | All Households |
|---|---|---|---|
| Cultivation | 3,140 | NA | 1,494 |
| Livestock Rearing | 711 | NA | 338 |
| Other Enterprises | 489 | 851 | 679 |
| Wage Labour | 3,025 | 3,940 | 3,504 |
| Govt/Pvt Service | 1,444 | 2,326 | 1,906 |
| Other Sources | 122 | 152 | 138 |
| All Sources | 8,931 | 7,269 | 8,059 |

*Figures in Rupees*

- 2015-2016 ஐ குறிப்பு காலமாகக் கொண்ட இந்த கணக்கெடுப்பின்படி, பொருளாதார நடவடிக்கையின் போது ஏற்படும் செலவினங்களை கழித்த பிறகு இந்திய கிராமப்புற குடும்பங்களின் சராசரி நிகர மாத வருமானம் 8059 ரூபாய் ஆகும்.

## சகாயாத்ரி - ஃபிஜிக்கு நல்லெண்ண பயணம்

- இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்காக நல்லெண்ண அடிப்படையில் இந்திய கடற்படை கப்பல் (INS) சகாயாத்ரியின் பயணம் ஃபிஜி குடியரசு நாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



- இந்த கடற்படைக் கப்பலானது ஹவாயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பசிபிக் கடற்கரை நாடுகள் கூட்டு போர்ப் பயிற்சியில் (RIMPAC - 2018) கலந்து கொண்டு இந்தியா வரும் வழியில் தீவு நாடான ஃபிஜிக்கு பயணம் செய்கிறது.
- INS சகாயத்ரி (F49) கப்பலானது உள்நாட்டில் கட்டப்பட்ட இந்திய கடற்படையின் ஒரு பகுதியான ஷிவாலிக் வகையின் மூன்றாவது மற்றும் சமீபத்திய புலப்படாத பீரங்கி கப்பல் ஆகும்.

## ஒருங்கிணைப்பு குழு அமைப்பு

- ❖ மத்திய நீர் ஆணையத் தலைவர் 'நரேந்திர குமார்' தலைமையில் ஒருங்கிணைப்பு குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.
- ❖ கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மற்றும் முல்லை பெரியாறு, ஆழியாறு சம்பந்தப்பட்ட திட்டங்களிலிருந்து வெள்ள நீர் வெளியேற்றப்படுவதை ஒருங்கிணைப்பதே இதன் குறிக்கோள் ஆகும்.
- ❖ முல்லை பெரியாறு அணையின் நீர்மட்ட உயர்வு மற்றும் தொடர்ந்து அதிகரித்து வரும் நீர்வரத்து ஆகியவற்றை CWCன் தலைவர் கண்காணிப்பார்.

## தாயகம் திரும்பிய புரு அகதிகளுக்கான ஒப்பந்தத்தில் தளர்வு

- ❖ மத்திய உள்துறை அமைச்சகமானது திரிபுராவிலிருந்து மிசோரம் மாநிலத்திற்கு குடி பெயர்ந்த புரு புலம்பெயர்வோருக்கான விதிமுறைகளை தளர்த்துவதாக ஒப்புதல் அளித்து 'நான்கு முனை ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தமானது ஜூலை 2018ல் இந்திய அரசாங்கம், மிசோரம் மற்றும் திரிபுரா அரசாங்கம் மற்றும் புரு இடம் பெயர்ந்த மக்கள் மன்றம் ஆகியவற்றிற்கிடையே கையெழுத்திடப்பட்டுள்ளது.

*தளர்வுகள்*

- ❖ புரு அகதிகளுக்கு ரூ.4 லட்சம் பண உதவியாக கிடைக்க குறைந்த பட்ச தங்கு காலம் 3 வருடத்திலிருந்து 2 வருடமாக தளர்த்தப்பட்டுள்ளது. (அல்லது ஒன்றரை வருடம் கூட)
- ❖ அவர்கள் திரும்பி வந்தவுடன் உடனடியாக ரூ.4 லட்ச உதவித் தொகையில் 90% ஐ வங்கி கடனாக பெறலாம். மேலும் நிதியுதவிக்கான விதிமுறைகளும் தளர்த்தப்படலாம்.
- ❖ கட்டிட உதவியானது ஒன்று அல்லது இரண்டு தவணைகளில் பெறலாம்.

## பராக் 8 ஏவுகணை

- ❖ இந்தியா மற்றும் இஸ்ரேல் இணைந்து தயாரித்த பல்நோக்கு பராக் 8 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை கொள்முதல் செய்வதாக இஸ்ரேலிய கடற்படை அறிவித்துள்ளது.
- ❖ இது இஸ்ரேலிய கடற்படையின் சார்-6 ரக வழித்துணைக் கப்பல்களின் செயல்திறனை விரிவாக்குவதற்காக பயன்படுத்தப்படும்.




- ஒரு நீண்ட தூர இலக்குடைய நிலத்திலிருந்து வானுக்கு பாயும் (LR-SAM) அல்லது நடுத்தர தூர இலக்குடைய நிலத்திலிருந்து வானுக்கு பாயும் (MR-SAM) ஏவுகணையான பராக்-8 (எபிரேய மொழியில் மின்னல் -8) வானில் செயல்படும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பாகும்.
- இது அதிகபட்சமாக 2 மாக் வேகம் வரையிலும் அதிகபட்ச தூரமாக 70 கி.மீ. வரையிலும் பாயும் (100 கி.மீ வரை அதிகப்படுத்த முடியும்).
- இந்த ஏவுகணையானது வான் வழி, கடல் அல்லது நிலத்திலிருந்து வரும் விரிவான கடற்பகுதி அச்சுறுத்தல்களுக்கு எதிராக பரவலான மற்றும் குறிப்பிட்ட பகுதிகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது.

## தேசிய ஊட்டச்சத்து மாதம்

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது நாட்டின் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிரான போராட்டத்தைக் குறிக்கும் வகையில் 2018 செப்டம்பர் மாதத்தை தேசிய ஊட்டச்சத்து மாதமாக அறிவித்துள்ளது.
- 'ஹர் கர் போஷான் யோகர்' (ஒவ்வொரு வீட்டிலும் ஊட்டச்சத்து கொண்டாட்டம்) என்ற செய்தியுடன் அனைத்து வீடுகளையும் அடையும் நோக்குடன் இம்மாதம் முழுவதும் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

## குறிப்பிட்ட சுகாதார எச்சரிக்கைகளின் புதிய தொகுப்பு

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது அனைத்து புகையிலை கட்டுகளுக்கான புதிய சுகாதார எச்சரிக்கைகளை அறிவித்துள்ளது.
- இது சம்பந்தமாக சிகரெட் மற்றும் பிற புகையிலை பொருள்கள் (பொதி கட்டுதல் மற்றும் பெயரிடல்) விதிகள் 2008இல் சில திருத்தங்களைச் செய்துள்ளது.
- திருத்தப்பட்ட விதிகளானது செப்டம்பர் 1, 2018ல் இருந்து நடைமுறைக்கு வரும்.

- இதன் கீழ் அரசாங்கம் இரண்டு தனித்தனி படத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளது.
- இது தவிர படங்கள், எச்சரிக்கை எண் ஆகியவை புதிய எச்சரிக்கையின் முக்கிய அம்சங்களாகும்.

## சர்வதேச பௌத்த மாநாடு 2018

- சர்வதேச பௌத்த மாநாடு (IBC – International Buddhist Conference) 2018 ஆனது புதுடெல்லியில் நடைபெற்றது. இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் இது துவக்கி வைக்கப்பட்டது.
- இது சர்வதேச பௌத்த மாநாட்டின் 6-வது பதிப்பாகும். புத்தரின் பாதை - ஒரு வாழும் பாரம்பரியம் என்பது இதன் கரு ஆகும்.
- இம்மாநாடு மஹாராஷ்டிரா, பீகார் மற்றும் உத்திரப் பிரதேச மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து சுற்றுலாத்துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- IBC-2018 க்கு ஜப்பான் ஒரு பங்களிப்பு நாடாகும்.
- மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகமானது சர்வதேச பௌத்த மாநாட்டை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துகிறது.
- முந்தைய மாநாடுகள் செப்டம்பர் 2014ல் புத்தகயா மற்றும் வாரணாசியிலும் அக்டோபர் 2016ல் சாரநாத் / வாரணாசியிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.
- 2016ல் நடைபெற்ற மாநாட்டில் ASEAN நாடுகள் கௌரவிக்கப்பட்டன.

## 7 மாநில ஆளுநர்கள் நியமனம்

- பீகார், ஹரியானா, உத்தரகாண்ட், ஜம்மு & காஷ்மீர், சிக்கிம், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய 7 மாநில ஆளுநர்களை ஷரத்து 156ன் கீழ் தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.
  - சத்யபால் மாலிக் – ஜம்மு & காஷ்மீர்
  - லால் ஜி தாண்டன் – பீகார்
  - தத்தகட்டா ராய் – மேகாலயா
  - கங்கா பிரசாத் – சிக்கிம்
  - கப்தன் சிங் சோலாங்கி – திரிபுரா
  - சத்யதேவ் நாராயண் ஆர்யா – ஹரியானா
  - பேபி ராணி மௌரியா – உத்தரகாண்ட்

## இணையதள பாலியல் வன்முறை

- தேசிய குற்ற ஆவணக் காப்பகமானது (NCRB – National Crime Records Bureau) குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆபாசப் படங்கள், பாலியல் வன்முறைகள் மற்றும் வன்புணர்வு காட்சிகள்

ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான முதன்மை ஆணையமாக மத்திய உள்துறை அமைச்சகத்தால் (MHA) நியமிக்கப்பட்டுள்ளது.

- NCRB ஆனது வலைதளங்களில் குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆபாசப் படைப்புகள், பாலியல் வன்முறைகள் மற்றும் வன்புணர்வு காட்சித் தகவல்களை முறையீட்டின் அடிப்படையிலோ அல்லது தானே முன்வந்தோ நடவடிக்கை எடுக்கும்.
- மேலும் இது முறையீடுகளைப் பெறவும் நடவடிக்கை எடுக்கவும் வலைதளமொன்றை தொடங்குவதை கட்டாயமாக்கியுள்ளது.

## மேலவைத் தேர்தலில் நோட்டா வசதி நீக்கம்

- மேலவைத் தேர்தலில் நோட்டா (மேற்கூறியவற்றில் எதுவுமில்லை) வசதியை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. மேலும் இது மறைமுக தேர்தலில் நியாயத்தை தோற்கடித்து ஜனநாயக மதிப்பீடுகளை அழிக்கிறது எனக் கூறியுள்ளது.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, A.M. கான்வில்கர் மற்றும் D.V. சந்திரசௌத் ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் அமர்வால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- இது ஜூன் 2014ல் வெளியிடப்பட்ட மேலவைத் தேர்தலில் நோட்டா விருப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை ரத்து செய்துள்ளது.
- 2013ம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பினைத் தொடர்ந்து நோட்டா வசதியானது மக்களவைத் தேர்தலில் (நேரடி தேர்தல்) இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது ஜனவரி 2014ல் வெளியிடப்பட்ட அறிவிப்பு வழியாக மேலவைத் தேர்தலுக்கும் (மறைமுக தேர்தல்) விரிவுபடுத்தப்பட்டது.

## ஸ்டெர்லைக்காக 3 உறுப்பினர் குழு

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT- National Green Tribunal) ஸ்டெர்லைட் நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகளை ஆராய 3 உறுப்பினர்களைக் கொண்ட சுதந்திரமான குழுவை உருவாக்குவதாக அறிவித்துள்ளது.
- இந்த குழுவானது
  - ஓய்வு பெற்ற நீதிபதியைத் தலைவராகவும்
  - 2 தொழில்நுட்ப அதிகாரிகளையும்
  - சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திலிருந்து ஒருவரையும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து மற்றொருவரையும் கொண்டது.
  - இந்த குழு ஆறு வாரங்களுக்குள் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.

## BNHSன் முதல் பிராந்திய மையம்

- பம்பாய் இயற்கை வரலாற்று சமூகம் (Bombay Natural History Society -BNHS) ஆனது ஒடிசாவில் உள்ள சில்கா ஏரிக்கு அருகில் உள்ள சதுப்பு நில ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வளாகத்தில் தனது முதல் பிராந்திய மையத்தை செயல்படுத்தியுள்ளது.
- இந்த பறவையினத் தொகுதி ஆய்வகமானது மாதிரிகளை சேகரித்தல் மற்றும் நாலாபானா பறவைகள் சரணாலயத்தை கண்காணிப்பதன் மூலம் பறவைகளைத் தாக்கும் நோய்கள் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.
- BNHS ஆனது பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய அரசு சாரா நிறுவனங்களில் ஒன்றாகும்.
- இது மும்பையின் ஹார்ன்பில் ஹவுஸை தலைமையிடமாகக் கொண்டு 1883ஆம் ஆண்டு செப்டம்பர் 15ல் தொடங்கப்பட்டது.

## மூலோபாய கூட்டுக்கொள்கையின் கீழ் முதல் 'இந்தியாவில் தயாரித்தல்' திட்டம்

- 21,000 கோடி ரூபாய் செலவில் இந்திய கடற்படைக்கு 111 பயன்பாட்டு ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அரசாங்கத்தின் 'இந்தியாவில் தயாரித்தல்' திட்டத்திற்கு கணிசமான ஊக்குவித்தலை வழங்கும் நோக்கமுடைய, இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் மதிப்புமிக்க மூலோபாய கூட்டு (Strategic Partnership-SP) மாதிரியின் கீழ் செயல்படும் முதல் திட்டமாகும்.
- இந்த (SP) ஆனது, வெளிநாட்டின் பெரிய ஆயுத தயாரிப்பாளர்களுடன் இணைந்து இந்திய தனியார் துறையின் மேம்பட்ட ஆயுதம் தயாரிக்கும் பங்கை அதிகரிக்க முற்படுகிறது.

## தேசிய தேர்தல் உருமாற்ற கைபேசிச் செயலி (NETA)

- பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை மதிப்பீடு செய்வதற்காக தேசிய தேர்தல் உருமாற்ற கைபேசி செயலியை (NETA – National Electoral Transformation) முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அறிமுகப்படுத்தினார்.
- 27 வயதுடைய தொழில்முனைவோரான பிராத்தம் மிட்டலின் சிந்தனையில் உருவான 'NETA – உறுப்பினர்களின் அறிக்கை அட்டையாகும்'. இந்தத் தளத்தின் மூலம் வாக்காளர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை மதிப்பீடு மற்றும் திறனாய்வு செய்ய முடியும்.
- இந்தச் செயலியானது முதன்முதலில் 2018 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இராஜஸ்தானின் அஜ்மீர் மற்றும் ஆல்வார் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களின் போது பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் இந்தச் செயலி பயன்படுத்தப்பட்டது.

## எஸ்.ஜே.வஜீஃப்தார்



- ஸ்டெர்லைட் ஆலையை மூடுவது தொடர்பான தீர்ப்புக்கு எதிரான வேதாந்தாவின் மனு குறித்து முடிவெடுப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.ஜே.வஜீஃப்தார் தலைமையிலான 3 உறுப்பினர்கள் குழுவை தேசிய பசுமை தீர்ப்பாயம் நியமித்துள்ளது.
- எஸ்.ஜே.வஜீஃப்தார் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றங்களின் முன்னாள் தலைமை நீதிபதி ஆவார்.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- இந்தக் குழு இரண்டு வாரங்களுக்குள் தனது பணியைத் தொடங்கி ஆறு வாரங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

## 3வது இந்திய பெருங்கடல் மாநாடு

- இந்திய பெருங்கடல் மாநாட்டின் 3வது பதிப்பு வியட்நாமின் தலைநகரான ஹனோய் நகரில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் 3வது மதிப்பை இந்திய அறக்கட்டளையானது
  - வியட்நாம் தூதரக அகாதெமி
  - எஸ்.ராஜரத்தினம் சர்வதேச ஆய்வுகளுக்கான பள்ளி (RSTS – Rajaratnam School of International Studies)
  - இலங்கை மற்றும் வங்காள தேச சர்வதேச மற்றும் யுக்திசார் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.
- பிராந்திய கட்டமைப்புகளை கட்டுதல் என்பது இதன் கரு ஆகும்.
- இந்த மாநாடானது டெல்லியைச் சேர்ந்த சிந்தனைச் சாவடியான இந்திய அறக்கட்டளையில் சிங்கப்பூர், இலங்கை மற்றும் வங்காள தேசத்தில் உள்ள பங்காளர்களுடன் இணைந்து தொடங்கப்பட்ட வருடாந்திர மாநாடாகும்.
- இது வரை மாநாட்டின் இரண்டு பதிப்புகள் முறையே சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் 2016, 2017ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

## FAME இந்தியா - II

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மின் வாகனங்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக சலுகை அளிக்கும் திட்டமான FAME இந்தியா திட்டத்தை செப்டம்பர் 7 அன்று தொடங்கி வைக்கிறார்.
- புது தில்லியில் நடத்தப்படவிருக்கும் உலக இயக்க மாநாடான ‘மூவ்’ (MOVE) மாநாட்டின்

தொடக்க அமர்வின் போது இத்திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

- இத்திட்டத்தின் முதல் பகுதி ஆரம்ப நிலையில் 2 வருடங்களுக்கு (அதாவது 2017 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை) முன்மொழியப்பட்டது. ஆனால் இதன் காலம் 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் இரண்டு முறை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- FAME இந்தியா திட்டத்தின் விரிவாக்கம்: மின் வாகனங்களை (கலப்பு) வேகமாக ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் தயாரித்தல் (Faster Adoption and Manufacturing of Hybrid & Electric Vehicles - FAME).
- நாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களை ஊக்குவிப்பதற்காக தேசிய மின் இயக்கத் திட்டத்தின் கீழ் (NEMM – National Electric Mobility Mission) 2015 ஆம் ஆண்டில் FAME தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை கனரக தொழிற்சாலை அமைச்சகம் மேற்பார்வையிடுகிறது.

## E21 பிரச்சாரம்

- 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை கையாளுவதற்கு மாணவர்களுக்கு திறன் அளிப்பதற்காக மெட்ராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIT – Indian Institute of Technology) தொழில்முனைவோர் பிரிவு (E-Cell) 'E21 பிரச்சாரத்தைத்' தொடங்கியுள்ளது.
- இதன் நோக்கம் சென்னையில் உள்ள பல்வேறு பள்ளிகளில் பயிலும் 150 மாணவர்களின் புதுமைப்புனைவு, படைப்புத்திறன், தொழில் முனைவுத்திறன், தலைமைப் பண்பு மற்றும் சவால்களை எதிர்த்து போராடுதல் ஆகியவற்றின் திறன்கள் மீதான கவனத்தை செலுத்துதல் ஆகும்.

## ஆளில்லா விமானங்களுக்கான (Drones) விதிமுறைகள் – மத்திய அரசு

- மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது தொலைமுறைக் கட்டுப்பாட்டில் இயங்கும் விமான அமைப்பிற்கான (Drones – ஆளில்லா விமானம்) விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- ஆளில்லா விமானத்தை பதிவு செய்தல் மற்றும் பயன்படுத்துவதற்காக 'டிஜிட்டல் வான் தளம்' (The Digital Sky Platform) என்ற டிஜிட்டல் செயல்முறையை இந்தியா உருவாக்கியுள்ளது.
- இது நாட்டில் முதன்முறையாக 'அனுமதி இல்லாமல், புறப்படக் கூடாது' என்பதை செயல்படுத்தும் ஆளில்லா போக்குவரத்து மேலாண்மை தளமாகும் (UTM – Unmanned Traffic Management).
- காற்றுவெளியானது
    1) சிவப்பு மண்டலம் (பறப்பதற்கு அனுமதி இல்லை)
    2) மஞ்சள் மண்டலம் (கட்டுப்படுத்தப்பட்ட காற்று வெளி)
    3) பச்சை மண்டலம் (தானியங்குவதற்கான அனுமதி)

என்று பிரிக்கப்பட்டுள்ளது.

- ஆளில்லா விமானங்கள் நானோ, நுண்ணிய, சிறிய, இடைநிலை மற்றும் பெரியவை என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- நானோ-வைத் தவிர தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (NTRO – National Technical Research Organisation), ARC (ARC- Airlines Reporting Corporation) மற்றும் மத்திய நுண்ணறிவு நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து ஆளில்லா விமானங்களுக்கும் "தனித்துவ அடையாள எண்" (UIN – Unique Identification Number) வழங்கப்படும்.
- ஆளில்லா விமானப் பணிப்படையானது (The Drone Task Force) மத்திய இணையமைச்சர் ஜெயந்த் சின்ஹா தலைமையில் அமைக்கப்பட்டது. இப்படை ஆளில்லா விமான விதிமுறைகள் 2.0 ற்கான பரிந்துரைகளை அளிக்கும்.

## இஞ்சேத்தி ஸ்ரீனிவாஸ் குழு

- இந்திய அரசால் அமைக்கப்பட்ட இஞ்சேத்தி குழுவானது தனது அறிக்கையை மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.
- இது குற்றங்களுடன் தொடர்புடைய கட்டமைப்பை ஆய்வு செய்வதற்காக நிறுவனங்கள் சட்டம் 2013-ன் கீழ் அமைக்கப்பட்டது.
- இதன் முக்கிய பரிந்துரைகளாவன
  - வழக்கமான குற்றங்களைத் தீர்ப்பதிலிருந்து சிறப்பு நீதிமன்றங்களை விடுவிக்க பெருநிறுவன குற்றங்களைச் சீரமைத்தல்.
  - கடுமையான குற்றங்களுக்கு தற்போது வழக்கத்திலுள்ள சட்டங்களையே தொடர்தல்.
  - தொழில்நுட்ப ரீதியாக அல்லது நடைமுறை ரீதியாக இருக்கும் குறைபாடுகளை உள்துறை தீர்ப்பு செயல்முறைக்கு மாற்றல்.

## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரோந்துக் கப்பல் – சோதனை ஓட்டம்

- கட்டுப்பள்ளியின் எல் & டி கப்பல் கட்டும் துறையில் ஏழு கப்பல்களின் வரிசையில் ஒரு பகுதியாக, இந்திய கடற்படையின் இரண்டாவது கடல் ரோந்துக் கப்பலான 'வீரா' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



- எல் & டி ஆல் வடிவமைக்கப்பட்ட இதற்கு முந்தைய ரோந்து கப்பல்களான 'விக்ரம்' (2017,அக்டோபர்) மற்றும் 'விஜயா' (2018, ஜனவரி) ஆகிய இரண்டு கப்பல்கள் தற்பொழுது சோதனை ஓட்டத்தில் இருக்கின்றன.

## பொலிவுறு இந்தியா ஹக்கத்தான் - 3வது பதிப்பு

- உலகின் மிகப்பெரிய திறந்தவெளி புத்தாக்க மாதிரியான பொலிவுறு இந்திய ஹக்கத்தான் 2019-ன் மூன்றாவது பதிப்பினை மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் புது தில்லியில் திறந்து வைத்தார்.
- இந்த நாடு தழுவிய புதிய முயற்சியானது நாம் அன்றாடம் சந்திக்கக்கூடிய சில பிரச்சனைகளை தீர்ப்பதற்காக மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட வாயில் ஆகும். இது பிரச்சனைகளை தீர்ப்பதற்கான மனப்போக்கை உருவாக்கும்.
- இதை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், AICTE (All India Council for Technical Education), பெர்சிஸ்டண்ட் சிஸ்டம்ஸ் மற்றும் i4c ஆகியவை இணைந்து நடத்துகிறது.
- இது இரண்டு துணை பதிப்புகளைக் கொண்டது.
  1) மென்பொருள் பதிப்பு - 36 மணி நேர மென்பொருள் உருவாக்குதல் போட்டி
  2) வன்பொருள் பதிப்பு - 5 நாட்கள் வன்பொருள் உருவாக்குதல் போட்டி

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் - மத்திய அமைச்சரவை

- இரயில்வே துறையில் அறிவியல் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக மற்றும் மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் கொரிய குடியரசின் இரயில்வே ஆராய்ச்சி அமைப்புகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையே கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளர்ப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளுக்கிடையே சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளுக்கிடையேயான திருத்தப்பட்ட விமான சேவைகளின் ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளுக்கிடையேயான வர்த்தக ஒத்துழைப்பு செயல்திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வர்த்தக ஒத்துழைப்பு செயல்திட்டமானது இரு நாடுகளுக்கிடையே வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும்.

# சர்வதேசச் செய்திகள்

## தேசிய சட்டசபையில் இடம் பெற்ற முதல் இந்து

- பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மகேஷ் குமார் மலானி, தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள தார்பர்கர் தொகுதியிலிருந்து தேசிய சட்டசபையில் இடம் பெற்ற முதல் இந்து ஆவார்.
- NA-222 தொகுதியில் ஜனநாயக கூட்டணியை சேர்ந்த எதிர்போட்டியாளரான அரப் சக்கவுல்லாவினை மலானி தோற்கடித்தார்.
- மலானி, பாகிஸ்தான் மக்கள் கட்சியினால் முன்மொழியப்பட்டு நியமிக்கப்பட்ட உறுப்பினராக 2003-2008 ஆண்டு காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.
- 2013-ல் நடைபெற்ற பொது தேர்தலில், மலானி சிந்து மாகாண சபையின் உறுப்பினராக (Member of Provincial Assembly - MPA) தேர்ந்தெடுக்கப்பட்டார்.



## பாகிஸ்தான் பொது தேர்தல்கள்

- கிரிக்கெட் நட்சத்திர வீரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சி (Pakistan Tehreek - e - Insat - PTI) தேசிய சட்டசபையில் 269 இடங்களில் 116 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.
- பாகிஸ்தான் வரலாற்றில் குடியியல் அரசாங்கத்திற்காக தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது தேர்தல்களில் கடைசித் தேர்தலில் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சி வெற்றி பெற்றுள்ளது.
- ஆனால் இவரது கட்சி தனிப்பெரும்பான்மை பெறவில்லை. எனவே அவரது கட்சி கண்டிப்பாக கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்க இயலும்.
- மாகாண அளவில்
    - பஞ்சாப்பில் பெரிய கட்சியாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) – Pakistan Muslim League (Nawaz) or PML (N)
    - கைபர் பகுதுன்குவாவில் பாகிஸ்தான் இ இன்சாப்
    - சிந்துவில் பாகிஸ்தான் மக்கள் கட்சி (Pakistan's Peoples Party - PPP)

- o பலூசிஸ்தானில் பலூசிஸ்தான் ஆவாமி கட்சி (Balochistan Awami Party - BAP)

ஆகியவை உருவெடுத்துள்ளன.

- ❖ மொத்த இடங்களில் 172 இடங்களை பெறும் கட்சி (அ) கூட்டணியே அரசினை அமைக்க முடியும்.
- ❖ சபாஷ் சரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் 64 இடங்களை வென்றுள்ளது.
- ❖ தேசிய சட்டசபையின் மூன்றாவது இடத்தினை 39 இடங்களை வென்ற மத்திய பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இடது சாரி அணி பெற்றுள்ளது.

## உயர் தெளிவுத் திறன் கொண்ட பூமியைக் கண்காணிக்கும் செயற்கைக் கோள் - சீனா

- ❖ சீனாவின் ஒளியியல் தொலை உணர் செயற்கைக் கோளான கோஃபென் - 11 (Geofen - 11) என்ற செயற்கைக் கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ❖ இது அந்நாட்டின் உயர் தெளிவுத் திறன் கொண்ட பூமியைக் கண்காணிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ இது சீனாவின் வடக்கு சான்க்ஷி மாகாணத்தில் உள்ள தய்யுன் செயற்கைக் கோள் செலுத்தும் மையத்திலிருந்து லாங் மார்ச் 4B ஏவுகலத்தின் மூலம் ஏவப்பட்டது.
- ❖ செயற்கைக் கோள்களை ஏந்திச் செல்லும் லாங் மார்ச் ஏவுகலத்தின் ஒட்டு மொத்தமான 282-வது பயணம் இதுவாகும்.



- ❖ கோஃபென்-11 என்பது துணை அளவி தெளிவுத்திறன் கொண்ட ஒளியியல் செயற்கைக் கோள் ஆகும். இச்செயற்கைக் கோள் சீனாவின் விண்வெளி தொழில்நுட்ப குழுமத்தினால் (CAST - China Academy of Space Technology) வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டில் கோஃபென் வரிசையில் 6வது செயற்கைக் கோள் இதுவாகும். இதற்கு முன் கோஃபென்-1, பெரிய கோஃபென்-5 மற்றும் கோஃபென்-6 ஆகிய மூன்று செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன. இந்த அனைத்து செயற்கைக் கோள்களும் சூரிய ஒத்திசைவு சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.
- ❖ சீனாவின் உயர் தெளிவுத்திறன் கொண்ட பூமியைக் கண்காணிக்கும் அமைப்பானது (CHEUS - China High revolution Earth observation System) 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2020ஆம் ஆண்டில் ஒளியியல் மற்றும் செயற்கைத் துளை ரேடார் செயற்கைக் கோள்கள் மூலம் அனைத்து வகையான வானிலை மற்றும் அனைத்து நாட்களுக்குமான வானிலை ஆகியவற்றை இது அளிக்கும்.

## உலகப் பள்ளிகளின் விவாதத்திற்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் (WSDC 2018)

- குரோஷியாவின் ஜாக்ரெப்பில் நடைபெற்ற உலகப் பள்ளிகளின் விவாதத்திற்கான சாம்பியன்ஷிப் போட்டிகளில் (WSDC-World School Debating Championship) 2018-ல் இந்தியாவைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர்.
- சீனா இந்தியாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.
- இப்போட்டிகளில்
    - சரண்யா இரவீந்தரன், தேஜாஸ் சுப்பிரமணியம் மற்றும் ஹேமந்த் சக்கரவர்த்தி - PSBB பள்ளி, சென்னை.
    - மணியா குப்தா - நீரஜா மோடிப் பள்ளி, ஜெய்ப்பூர்
    - தனன்ஜய், அசோக் - தி இண்டர்நேஷனல் பள்ளி, பெங்களூரு

    ஆகிய மாணவர்கள் பங்கேற்றனர்.
- WSDC என்பது ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த உயர் பள்ளி நிலையிலான அணிகள் பங்குபெறும் ஆங்கில மொழியில் விவாதிக்கும் போட்டியாகும்.
- முதன்முறையாக இந்த சாம்பியன்ஷிப் போட்டிகள் 1988-ல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன. 2017ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்ற சாம்பியன்ஷிப் போட்டியில் சிங்கப்பூர் வெற்றி பெற்றது.
- 2019ஆம் ஆண்டிற்கான உலக பள்ளிகளின் விவாதிக்கும் சாம்பியன்ஷிப் போட்டிகள் இலங்கையின் கொழும்புவில் நடைபெறவிருக்கிறது.

## முதலாவது நேபாள – இந்திய நாடுகளின் சிந்தனைச் சாவடிகளின் மாநாடு

- நேபாளம்-இந்தியா ஆகிய நாடுகளின் சிந்தனைச் சாவடிகளுக்கிடையே அதிக ஒத்துழைப்பை ஏற்படுத்துவது மற்றும் அறிவு வளங்களை பகிர்ந்து கொள்வது ஆகியவற்றிற்காக நேபாளம்-இந்தியா ஆகிய இரு நாடுகளின் சிந்தனைச் சாவடிகளின் மாநாடு நடைபெற்றது.
- சர்வதேச விவகாரங்கள் மற்றும் அரசதந்திரத்திற்கான ஆசியான் நிறுவனம் (Asian Institute of Diplomacy and International Affairs) மற்றும் நேரு நினைவக அருங்காட்சியக நூலகம் ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்துகின்றன.

## கடற்கொள்ளைக்கு எதிரான மையத்தின் தலைமையிடம் மாற்றம் - ஐரோப்பிய யூனியன்

- கடற்கொள்ளைக்கு எதிரான அட்லாண்டா ரோந்து மையத்தின் தலைமையகத்தை லண்டனிலிருந்து ஸ்பெயின் துறைமுகத்திற்கு மாற்ற ஐரோப்பிய யூனியன் நாடுகள் முடிவு செய்துள்ளன. இந்தத் தலைமையிட மாற்றம் 2019 மார்ச் 29 அன்று நடைபெறவிருக்கிறது.
- லண்டனை மையமாகக் கொண்டு ஆப்பிரிக்காவின் கொம்பு பகுதியில் செயல்படும் கடல்சார் பாதுகாப்பு மையம் (Maritime Secuirty Centre Horn of Africa) ஆனது கடற்பயணத்தின்

போது சோமாலியாவிலிருந்து ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து தெரிவிக்கும் மையம் ஆகும். இந்த மையத்தின் தலைமையிடமும் பிரான்சு துறைமுகமான பிரெஸ்டிற்கு மாற்றப்படவிருக்கிறது.

- 2009ஆம் ஆண்டில் ஸ்பெயின் கப்பல் கடத்தப்பட்டது உள்பட சோமாலியக் கடலோரப் பகுதிகளில் நடைபெறும் கடுமையான கடற்கொள்ளைகளை எதிர்த்து போராடுவதற்காக அட்லாண்டாவை 2008ஆம் ஆண்டு ஐரோப்பிய யூனியன் அமைத்தது.

## சுதந்திரமான ஆணையக் குழு

- மியான்மர் அரசாங்கமானது சிறுபான்மையினரான ரோஹிங்யா முஸ்லிம் இனத்திற்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக ஒரு சுதந்திரமான ஆணையக் குழுவை நியமித்துள்ளது.
- இக்குழுவில் உள்ள 4 உறுப்பினர்கள்.
  1) கென்சோ ஓசிமா - ஐ.நா.வுக்கான முன்னாள் ஜப்பானியத் தூதர் மற்றும் ஐ.நா.வின் முன்னாள் மனிதாபிமான விவகாரங்களுக்கான பொதுத் துணைச் செயலாளர்.
  2) ரோசரியோ மணலோ - பிலிப்பைனின் முன்னாள் துணை வெளியுறவு அமைச்சர்.
  3) மியா தெய்ன் - மியான்மர் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னாள் தலைவர்.
  4) ஆங் துன் தெட் - பொருளாதார வல்லுநர் மற்றும் ஐ.நா வின் முன்னாள் அதிகாரி.

## விசா பொது மன்னிப்பு திட்டம் - ஐக்கிய அரபு அமீரகம்

- ஐக்கிய அரசு அமீரகம் (United Arab Emirates - UAE) நூற்றுக்கணக்கான சட்டவிரோத வெளிநாட்டு தொழிலாளர்கள் பயனடையும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று மாத விசா பொது மன்னிப்புத் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- இத்திட்டம் தங்களது பணிக்காலம் முடிந்த பின்பும் அங்கு தங்கியிருக்கும் இந்தியர்களுக்கு பயனளிப்பதோடு அவர்கள் எவ்வித அபராதங்களும் செலுத்தாமல் தாய்நாட்டிற்கு திரும்பவும் மேலும் 6 மாதங்கள் கூடுதலாக அங்கு தங்கியிருந்து வேறு வேலை தேடிக் கொள்ளவும் வழி வகை செய்கின்றது.
- அடையாளம் மற்றும் குடியுரிமைக்கான மத்திய ஆணையமானது UAE நாட்டில் வெளிநாட்டவர்களின் உறைவிடம் மற்றும் உள்நுழைவு அனுமதி ஆகியவற்றுக்கு பொறுப்பான ஒரு நிறுவனமாகும்.
- UAE தமது நாட்டிலேயே அதிக அளவு எண்ணிக்கை கொண்ட புலம் பெயர்ந்த சமூகமான 2.8 மில்லியன் இந்தியர்களுக்கு புகலிடமாக உள்ளது.
- இப்பத்தாண்டுகளில் இத்திட்டம் UAE அரசாங்கம் அறிவிக்கும் மூன்றாவது பொதுமன்னிப்புத் திட்டமாகும். இத்திட்டம் அக்டோபர் 31 அன்றுடன் முடிவடையும்.

## ஜிம்பாப்வே தேர்தல்

- ஜிம்பாப்வேயின் குடியரசுத் தலைவரும் தற்போதைய ஆளும் கட்சியான ஜானு - PF (Zanu -

PF) என்ற கட்சியின் தலைவருமான மெர்சன் நங்காவா அந்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்கதும் கடுமையான போட்டி கொண்டதுமான குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

- நங்காவா எதிர்க்கட்சித் தலைவர் நெல்சன் சமிசா பெற்ற 44.3 சதவிகிதத்தோடு ஒப்பிடுகையில் 50.8 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளார்.
- 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக நூலிழை அளவிற்கு வாக்குகளைப் பெற்று சமிசாவிற்கு எதிராக மீண்டும் ஒரு தேர்தலை தவிர்த்துள்ளார்.

## UK-ன் புதிய உடலுறுப்பு தான திட்டம்

- நாட்டில் உள்ள இந்திய வழித் தோன்றல் சமூகத்தின் அவசர உடலுறுப்பு தேவையினை பூர்த்தி செய்வதற்காக உடலுறுப்பு மற்றும் திசு தானத்திற்கான சட்டத்தினை மாற்றுவதற்கான புதிய திட்டங்களை ஐக்கிய இராஜ்ஜியம் (United Kingdom - UK) அறிவித்துள்ளது.
- ஏற்கனவே உள்ள சட்டத்தில் செய்யப்பட உள்ள இந்த திருத்தமானது, உடலுறுப்பு மற்றும் திசு தானத்திற்கான இசைவின் புதிய முறையினை முன்மொழிகிறது.
- இதயமாற்று சிகிச்சையின் மூலம் காப்பாற்றப்பட்ட 10 வயது சிறுவன் மாக்ஸ் ஜான்சனின் நினைவாக இச்சட்டம் மாக்ஸின் சட்டம் என்றறியப்படுகிறது.
- தங்களின் பிரியமானவர்களின் இறப்பிற்கு பிறகு உறுப்பு தானம் செய்வதற்கு குடும்பத்தார்களின் முடிவு ஒரு விருப்ப உரிமை என்பது போன்ற, இந்தியாவில் உள்ள முறையை ஒத்தவாறு இச்சட்டத்தில் இணைக்க இந்த மாற்றங்கள் முயற்சி செய்யும்.
- இதன் கீழ், தனது உடலுறுப்புகளை தானம் செய்ய விரும்பாதவர்கள் தேசிய சுகாதார சேவையின் (National Health Service - NHS) உடலுறுப்பு தானம் செய்பவர்கள் பதிவேட்டில் (Organ Donor Register - ODR) அவர்களின் முடிவை பதிவு செய்ய முடியும்.

## உலகின் வெறுமையான விமான நிலையம்

- ஹம்பன்தோட்டாவில் உள்ள இலங்கையின் இழப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மத்தல ராஜபக்சா சர்வதேச விமானநிலையத்தினை இந்தியா இயக்க உள்ளதாக இலங்கை உள்நாட்டு விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
- இந்தியா இந்நிலையத்தினை இலங்கையுடன் கூட்டுமுயற்சியாக இயக்க உள்ளது.
- விமானங்களின் குறைவினால் மத்தல சர்வதேச விமான நிலையம் 'உலகின் வெறுமையான விமான நிலையம்' என்று அழைக்கப்படுகிறது.




- இதற்கு முன்பு ஹம்பன்தோட்டா துறைமுகம் சீனாவிடம் குத்தகைக்கு விடப்பட்டது நினைவிருக்கலாம்.

## வெனிசுலாவின் நாணயத்திலிருந்து 5 பூஜ்ஜியங்கள் நீக்கம்

- வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ நாட்டின் பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாணயமான பொலீவரிலிருந்து மூன்று பூஜ்ஜியங்களை அகற்றுவதற்கு ஏற்கனவே முடிவெடுத்து இருந்தார். இதனுடன் தற்பொழுது இரண்டு பூஜ்ஜியங்களுடன் சேர்த்து 5 பூஜ்ஜியங்களை நீக்க தற்பொழுது முடிவெடுத்துள்ளார்.
- இந்நடவடிக்கை, 2018-ன் இறுதியில் நாட்டின் பணவீக்கம் 1 மில்லியன் சதவீதம் என்ற அளவு இருக்கும் என்ற சர்வதேச செலாவணி நிதியத்தின் (International Monetary Fund - IMF) மதிப்பீட்டிற்கு பிறகு எடுக்கப்பட்டது.
- வெனிசுலாவின் இந்த பொருளாதார வீழ்ச்சி கடந்த 60 வருடங்களில் உலகின் ஆழமான ஒன்றாகும்.
- 2014-ன் எண்ணெய் விலை வீழ்ச்சியிலிருந்து எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (OPEC - The Organization of the Petroleum Exporting Countries) நாடுகளின் பொருளாதாரம் படிப்படியாக சரிந்து வருகிறது. இவ்வீழ்ச்சி, கடுமையான விலை கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு அதன் மூலம் பல வருடங்களாக ஏராளமான சலுகைகளை வழங்கிய சமத்துவ பொருளாதார முறையினை கடைபிடிக்க முடியாமல் செய்துவிட்டது.

## பாகிஸ்தான் - ரஷ்யா ஒப்பந்தம்

- ரஷ்யாவின் ராணுவப் பயிற்சி நிறுவனங்களில் பாகிஸ்தானின் படை உறுப்பினர்கள் அனுமதிக்காக பாகிஸ்தானும் ரஷ்யாவும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு உள்ளன.
- இந்த ஒப்பந்தம், பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரத்தில் நடைபெற்ற, இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கான உயர்மட்ட அமைப்பான ரஷ்யா-

பாகிஸ்தான் கூட்டு ராணுவ ஆலோசனைக் குழுவின் முதல் சந்திப்பில் நிறைவு விழாவின் போது கையெழுத்திடப்பட்டது.

❖ பாகிஸ்தானிய படை வீரர்கள் ரஷ்யா ராணுவப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி மேற்கொள்ளவிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர்

❖ ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ், சிலியின் இரண்டு முறை அதிபராக இருந்த மிச்செல்லே பச்செல்லட்டை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் என்ற பதவிக்கு தேர்ந்தெடுத்துள்ளார்.

❖ இவர் ஜோர்டான் தூதரான ஜெய்த் ராஅத் அல் ஹுசைன் என்பவருக்குப் பதில் பதவி ஏற்பார்.

❖ சிலியின் உயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவராவார்.

❖ அவரின் முதல் பதவிக் காலத்திற்குப் பிறகு உலகளவில் பாலின சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனமான ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பின் முதல் இயக்குநராக 2010-ல் பணியாற்றினார்.

## மைத்ரீ – 2018

❖ இந்திய இராணுவம் மற்றும் தாய்லாந்து அரச இராணுவம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி மைத்ரீ – 2018, ஆகஸ்ட் 6-லிருந்து ஆகஸ்ட் 19 வரை தாய்லாந்தில் நடத்தப்படுகிறது.

❖ பயங்கரவாதத்தினை எதிர்கொள்ளும் நோக்கில் இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையேயான பரஸ்பர புரிதல் மற்றும் நல்லியல்பினை மேம்படுத்துவதில் இது மிகவும் முக்கிய பங்காற்றியுள்ளது.

❖ மைத்ரீ – 2018, காலாட்படை பிரிவுகள் அடங்கிய படைப்பிரிவு நிலை பயிற்சியாகும்.

## பசிபிக் பெருமுயற்சி – 2018

❖ பன்னாட்டு தொலைத் தொடர்புக்காக இணைந்து செயலாற்றும் திட்டத்தின் (Multinational Communications Interoperability Program – MCIP) கீழ் தொலைத் தொடர்புப் பயிற்சியான "பசிபிக் பெருமுயற்சி – 2018" (Pacific Endeavor - 2018 – PE-18) நேபாளத்தின் காத்மண்டுவில் ஆகஸ்ட் 6, 2018 அன்று தொடங்கியது.

❖ இந்த 12 நாள் பயிற்சியின் முக்கிய குறிக்கோள் : ஆசிய பசிபிக் பகுதிகளில் பேரழிவு நேரங்களில் விழிப்புணர்வுடன் ஒருங்கிணைந்து செயல்பட இராணுவப் படைகளுக்கு பொதுவான தொலைத் தொடர்பு இயங்கு முறைகளை செயல்படுத்துவதே ஆகும்.

❖ இப்பயிற்சி நேபாள இராணுவம் மற்றும் அமெரிக்காவின் பசிபிக் தலைமை (United States Pacific Command – USPC) ஆகியவற்றின் இணைந்த முயற்சியாகும்.

- பசிபிக் பெருமுயற்சி 2005-ல் தொடங்கியது. மேலும், இது உடனடி மற்றும் பயனுள்ள விதத்தில் தொலைத் தொடர்புகளுக்கிடையேயான அமைப்பு முறைகளை பேரழிவு நிவாரண நடவடிக்கைகளின் போது இணைந்து செயலாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.

## பாலஸ்தீனம் ஒரு இறையாண்மை அரசு - கொலம்பியா அங்கீகாரம்

- கொலம்பியாவின் புதிய அதிபராக இவான் டுக்யூ பதவியேற்று சில நாட்களுக்குள் பாலஸ்தீனத்தை ஒரு இறையாண்மை அரசாக அங்கீகரித்தது.
- பாலஸ்தீனத்தை இறையாண்மை அரசாக அங்கீகரிக்காத ஒரே தென்அமெரிக்க நாடாக கொலம்பியா இருந்தது.
- பாலஸ்தீனிய அரசை அங்கீகரித்த 137வது நாடாக கொலம்பியா மாறியுள்ளது.
- ஐ.நா. பொதுச் சபை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் குறைந்தபட்சம் 163 நாடுகளால் பாலஸ்தீனம் ஒரு இறையாண்மை அரசாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இஸ்ரேல் 1967 போரில் கைப்பற்றிய காஸா, மேற்கு கரைப்பகுதி மற்றும் கிழக்கு ஜெருசேலம் ஆகியவற்றை இணைத்து ஒரு நாடாக உருவாக்க முயல்கிறது.

## ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் அமைதிப் பயற்சி - 2018

- ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் அமைதிப் பயிற்சி 2018 ரஷ்யாவின் மத்திய இராணுவ ஆணையத்தால் ரஷ்யாவின் செலியாபின்ஸ்க்கின் செபர்குல்லில் ஆகஸ்ட் 22 முதல் ஆகஸ்ட் 29 வரை நடத்தப்படவிருக்கிறது.
- SCO (Shanghai Cooperation Organisation) அமைதிப் பயிற்சி நடவடிக்கையானது ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை SCO உறுப்பு நாடுகளால் நடத்தப்படுகிறது.
- இந்தியா ஜூன் 2017ல் SCOன் முழுநேர உறுப்பினர் ஆன பின்பு இப்பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதன்முறையாகும்.
- இந்தப் பயிற்சியானது SCO சாசனத்தின் கீழ் உத்திமுறையிலான நடவடிக்கைகளையும், சர்வதேச கிளர்ச்சி எதிர்ப்பு அல்லது பயங்கரவாத சூழல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

## உலகின் முதல் தொடர் சங்கிலி பத்திரம்

- முழுவதும் சங்கிலித் தொடர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் பத்திரத்தை (Bond) உலக வங்கி விற்கவுள்ளது.
- இந்த தொழில் நுட்பமானது நிலையில்லாத மற்றும் நம்பகத் தன்மை குறித்த சந்தேகத்திற்கிடமான, அதே போல் குற்றவியல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பிட்காயின் போன்ற சங்கேத பணத்துடன் (Cryptocurrencies) தொடர்புடையதாகும்.

- இந்த பரிமாற்றமானது ஆஸ்திரேலிய காமன்வெல்த் வங்கியுடன் இணைந்து உலக வங்கியின் கண்டுபிடிப்பு ஆய்வகத்தின் சிந்தனையில் உருவாக்கப்பட்டதாகும்.
- இந்த சங்கிலித் தொடர் தொழில் நுட்பமானது வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதாகவும், இப்பத்திரங்கள் அனைவருக்கும் பொதுவாக இருப்பதால் பத்திரத்திலிருந்து விரைவாக பணமாக மாற்றி பரிமாற்ற நேரத்தை குறைக்கவும் இயலும்.

## 2018 உலகளாவிய வாழத் தகுந்த நகர குறியீடு


- பொருளாதார நிபுணர் நுண்ணறிவு அலகு (Economist Intelligence Unit - EIU) வெளியிட்டுள்ள உலகளாவிய வாழத்தகுந்த நகர குறியீட்டில் உலகின் 140 பெரிய நகரங்களில் ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

| The world's most liveable cities |
|---|
| 1. Vienna, Austria |
| 2. Melbourne, Australia |
| 3. Osaka, Japan |
| 4. Calgary, Canada |
| 5. Sydney, Australia |
| 6. Vancouver, Canada |
| 7. Toronto, Canada |
| 8. Tokyo, Japan |
| 9. Copenhagen, Denmark |
| 10. Adelaide, Australia |

Source: Economist Intelligence Unit Global Liveability Index 2018

## சர்வதேச நைட்ரஜன் துவக்க முயற்சியின் தலைவர்

- உலகளாவிய கொள்கை வகுக்கும் முயற்சியான சர்வதேச நைட்ரஜன் துவக்க முயற்சியின் (INI - International Nitrogen Initiative) தலைவராக முதன் முறையாக இந்திய-ஆசியப் பகுதியைச் சேர்ந்த இந்திய அறிவியலாளர் கல்வியாளர் ரகுராம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த சூழலியல் மற்றும் நீரியல் மையத்தைச் சேர்ந்த மார்க் சட்டன் என்பவர்க்கு அடுத்ததாக பதவியேற்றுள்ளார்.



- இது தவிர இவருடன் நியூயார்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் கட்னர் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்புது தலைவர்கள் ஜனவரி 1, 2019லிருந்து முறைப்படி செயல்படத் துவங்குவர்.
- INI-ன் பிராந்திய இயக்குனரின் கீழ் செயல்படும் ஆறு பிராந்திய மையங்களின் அமைப்புகளை (கிழக்காசியா, தெற்காசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, வடஅமெரிக்கா) வழி நடத்துவதே இவர்களின் பொறுப்பாகும்.

***சர்வதேச நைட்ரஜன் முன்முயற்சி (INI)***

- INI ஆனது 2003ல் சுற்றுச்சூழல் சிக்கல்களின் அறிவியல் குழு (Scope) மற்றும் சர்வதேச புவியீர்ப்பு - உயிர்க்கோள திட்ட (IGBP - International Geosphere-Biosphere Program) ஆதரவின் கீழ் அமைக்கப்பட்ட சர்வதேச திட்டமாகும்.
- INI ஆனது ஆறு பிராந்திய மைய இயக்குனர்களைத் தலைமையாகக் கொண்ட வழி நடத்தும் குழுவால் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- மேலும் INI ஆனது தற்போது சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான எதிர்கால புவி என்ற நிறுவனத்தின் (future earth) நீடித்த பங்குதாரர் ஆகும்.

## மெய்ப் பொருளியலின் 24வது உலக காங்கிரஸ் மாநாடு

- சீனாவின் பெய்ஜிங்கில் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 முதல் ஆகஸ்ட் 17-வரை மெய்ப் பொருளியலின் 24வது உலக காங்கிரஸ் (24th World Congress of Philosophy) மாநாடு நடைபெற்றது.
- இம்மாநாட்டை தத்துவ சமுதாயங்களின் சர்வதேச மன்றம் மற்றும் பீக்கிங் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்தியது. இதன் கருத்துரு 'மனிதனாக இருப்பதற்கு கற்பது' ஆகும்.
- இந்தக் காங்கிரஸ் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். சீனாவில் முதன் முறையாக இக்காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.
- இந்த காங்கிரஸ் முதன்முறையாக 1900 ஆம் ஆண்டு பிரான்ஸின் பாரிஸில் நடைபெற்றது. அதன் பின்னர் உலகில் நடைபெறும் மிகப் பெரிய தத்துவம் சார்ந்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
- வெவ்வேறு நாடுகளில் உள்ள இதில் உறுப்பினராக அங்கும் வகிக்கும் சமுதாயங்களில் ஏதேனும் ஒரு சமுதாயம் உலக காங்கிரஸ் மாநாட்டை நடத்தும் பொறுப்பினை மேற்கொள்ளும்.

## ஈரான் நடவடிக்கைக் குழு

- ஈரானுடன் ஒருங்கிணைப்பு மற்றும் தமது நாட்டின் கொள்கைகளை ஏற்படுத்த ஈரான் நடவடிக்கை குழு (IAG) ஒன்றை உருவாக்குவதற்காக அமெரிக்க செயலர் மைக் போம்பே அறிவித்துள்ளார்.
- நாட்டின் கொள்கை திட்டமிடல் துறையின் இயக்குநரான பிரெய்ன் ஹுக்கை இக்குழுவின் தலைவராகவும் அவர் அறிவித்துள்ளார்.
- பிரெய்ன் ஹீக் முறையாக ஈரானுக்கான சிறப்பு பிரதிநிதி என்றழைக்கப்படுவார்.
- ஈரானின் ஆட்சியின் நடத்தைகளை மாற்றுவதே இக்குழு அமைக்கப்படுவதின் அடிப்படை நோக்கமாகும்.

## கேரள வெள்ள பாதிப்பு – நிவாரணக் குழு

- கேரள வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் கலீபா பின் சையது அல் நஹ்யான் ஒரு சிறப்புக் குழுவை அமைத்துள்ளார்.
- இக்குழுவில்
  1. அமீரகத்தின் சிவப்பு பிறை (Red Crescent) மற்றும்
  2. ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதாபிமான அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் இடம் பெறுவர்.

## ஹஜ் யாத்ரீகர்களுக்கு இலவச தங்கும் அறை – சவுதி அரேபியா

- மினா நகரத்தில் ஹஜ் யாத்ரீகர்களுக்காக இலவச தங்கும் அறைகளை சவுதி அரேபியா அறிமுகப்படுத்தியுள்ளது.



- நூற்றாண்டு பழமையான ஹஜ் யாத்திரையை புதுப்பிக்கும் விதமாக சவுதி அரேபியா இந்த இலவச தங்கும் அறையை வெளியிட்டுள்ளது.
- இதன் நோக்கம் ஹஜ் பயணத்தின் போது வெளி விடுதிகளில் தங்க இயலாதவர்களுக்காக, இலவச ஓய்வு அறையை எற்படுத்தித் தருவதாகும்.
- இது கூட்டமான இடங்களில் ஓய்வறைகளின் பகுதிகளை குறைப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவின் ஒரு பகுதியாகும்.

- ஜப்பானின் புகழ்பெற்ற 'கேப்சூல் விடுதிகளின்' உத்வேகத்துடன் சவுதி அரேபியா இந்த ஓய்வு அறையை உருவாக்கியுள்ளது.
- மேலும் அரசாங்கமானது நிகழ் இடத்திலேயே மொழிபெயர்ப்பு மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைகளுக்காக செயலியை உருவாக்கியுள்ளது.

## மாலியின் அதிபர் மறு தேர்வு

- மாலியின் அதிபர் இப்ராஹிம் பொப்க்கர் கியேட்டா, எதிர்க்கட்சி வேட்பாளர் சவுமிலா சிஸ்ஸேயை வீழ்த்தி மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- முன்னாள் நிதியமைச்சரான சிஸ்ஸே, கியேட்டாவுக்கு எதிராக 2013ம் ஆண்டும் போட்டியிட்டு 32 சதவீத வாக்குகளைப் பெற்றார்.
- கியேட்டா தனது இரண்டாவது ஐந்து ஆண்டு காலத்திற்கு மாலியின் அதிபராக இருப்பார்.

## போலி செய்திகளைத் தடுக்க புதிய சட்டம்

- போலியான செய்திகளை வெளியிடும் சமூக வலைதள கணக்குகளை முடக்கவும், பத்திரிக்கையாளர்களுக்கு அபராதம் விதிக்கவும் அரசுக்கு அதிகாரம் அளித்து எகிப்து நாட்டு பாராளுமன்றம் சட்டமியற்றியுள்ளது.
- அதிபர் அப்தல் ஃபட்டா அல்-ஸிஸி ஆல் நியமிக்கப்பட்ட அதிகாரியை தலைவராகக் கொண்ட, ஊடகங்களை நிர்வகிக்கும் உயர்மன்றமானது இச்சட்டத்தை மேற்பார்வையிட்டு விதிமீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்.
- இம்மசோதா உயர்மன்றத்திடமிருந்து உரிமம் பெறாமல் வலைதளங்கள் தொடங்குவதை தடை செய்கிறது. மேலும் எந்தவொரு வலைதளங்களையும் தற்காலிக தடை அல்லது முடக்கம் செய்ய அனுமதியளிக்கிறது.
- சமீபத்தில் பத்திரிக்கை சுதந்திர குறியீடு 2017ல் 180 நாடுகளில் எகிப்து 161வது இடத்தைப் பிடித்துள்ளது.

## 'எசலா மகா பெரஹெரா' திருவிழா

- ஆகஸ்ட் 17ம் அன்று இலங்கையின் கண்டியில் வரலாற்று சிறப்பு வாய்ந்த எசலா மகா பெரஹெரா என்ற 10 நாள் திருவிழா ஒரு பெரும் ஊர்வலமாக ஆரம்பிக்கப்பட்டது.
- எசலா மகா பெரஹெரா திருவிழா ஆனது ஸ்ரீலங்காவின் பௌத்த திருவிழாக்களில் மிகப் பழமையானதும் மிகப்பெரியதும் ஆகும்.
- இது எசலாவில் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படுகிறது. இது ஞானத்தை அடைந்த பிறகு புத்தர் வழங்கிய முதல் போதனையை நினைவு கூறும் விழா என நம்பப்படுகிறது.
- இந்த சடங்கு புத்தரின் புனிதமான பல்லை தெருக்கள் வழியாக கொண்டு சென்று நடத்தப்படுகிறது. இது ஆசியாவின் மிக அழகான விழாக்களில் ஒன்று என நம்பப்படுகிறது.



- இந்த பண்டிகை கண்டியின் கெடம்பேயில் உள்ள மகாவலி ஆற்றில் நடைபெறும் பாரம்பரிய தியா - கெபிமா சடங்கு என்ற நீர் வெட்டு விழாக் கொண்டாட்டத்துடன் முடிவடைகிறது.

## ஈரானின் முதல் உள்நாட்டு போர் விமானம் தயாரிப்பு

- ஈரான் முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு கௌசார் என பெயரிடப்பட்டுள்ள தனது முதல் போர் விமானத்தை அதன் தலைநகரமான டெஹ்ரானில் நடைபெற்ற பாதுகாப்பு கண்காட்சியில் வெளியிட்டுள்ளது.
- இது 100% ஈரான் நாட்டிலேயே ஈரானால் தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட வான் பயண மின்னணுவியல் மற்றும் பல்நோக்கு ரேடார் பொருத்தப்பட்டட நான்காம் தலைமுறை போர் விமானமாகும்.
- இதன் பெயரான கௌசார் இஸ்லாமின் சொர்க்கத்தில் உள்ள ஆற்றினைக் குறிப்பதாகும். மேலும் இது குரானின் ஒரு அத்தியாயத்தின் தலைப்பாகும்.
- கடந்த சில வருடங்களில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பல போர் விமானங்களை ஈரான்

வெளியிட்டுள்ளது. 2013ம் ஆண்டு அமெரிக்காவின் F-22 மற்றும் F-35 உடன் ஒப்பிடக்கூடிய ஹீவாஹர் – 313 என்ற உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் விமானத்தை ஈரான் வெளியிட்டது.

## பிணை எடுப்புத் திட்டத்திலிருந்து கிரீஸ் மீள்தல்

- 8 ஆண்டுகளுக்கு பின்னர் ஐரோப்பிய பகுதி பிணை எடுப்புத் திட்டத்திலிருந்து கிரீஸ் மீண்டுள்ளது. இது 61.9 பில்லியன் யூரோ மதிப்புள்ள 3வது பிணையெடுப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) ஆகியவை கிரீஸ் நாட்டிற்கு பெரும் பொருளியல் சீரமைப்பு (Macroeconomic) மற்றும் வங்கிகளின் மறு மூலதனமாக்கல் ஆகியவற்றிற்காக 289 பில்லியன் யூரோக்களை 3 பிணை எடுப்புத் திட்டத்தின் கீழ் கடனாக வழங்கியுள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கூற்றுப்படி கடந்த 10 ஆண்டுகளில் கிரீசை விட கீழ்க்காணும் 4 நாடுகள் மட்டுமே பொருளாதாரத்தில் சுருங்கியுள்ளன.
    - ஏமன்
    - லிபியா
    - வெனிசுலா
    - ஈக்வடோரியல் கினியா

## அமெரிக்கா மீதான WTO சர்ச்சை

- உலக வர்த்தக அமைப்பிடம் (WTO – World Trade Organization) அமெரிக்காவிற்கு எதிராக ஒரு சர்ச்சையானப் புகாரை துருக்கி பதிவு செய்துள்ளது.
- இது துருக்கியிலிருந்து அமெரிக்கா செய்யும் எஃகு மற்றும் அலுமினிய இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் கூடுதல் சுங்கவரிகளை அடுத்து எடுக்கப்பட்டது ஆகும்.
- ஒரு தோல்வியடைந்த இராணுவப் புரட்சியில் ஈடுபட்டதாகக் கூறி சிறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, அடைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் போதகரை விடுதலை செய்யக் கோரிய அமெரிக்காவின் வேண்டுகோளை துருக்கி நிராகரித்ததற்காக இந்த கூடுதல் வரி விதிக்கப்பட்டது.

## உலகின் முதல் பீங்கானுக்கான 4D அச்சிடல்

- ஹாங்காங்கின் சிட்டி பல்கலைக்கழகத்தின் (CityU) ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக சிக்கலான, வடிவம் மாறும் பொருள்களை உருவாக்கப் பயன்படும் பீங்கான்களுக்கான உலகின் முதல் நான்கு பரிமாண (4D) அச்சினை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.



- 4D அச்சிடல் என்பது வழக்கமான 3D அச்சிடுதலுடன் நேரத்தையும் கூடுதல் மூலப் பொருளாக 4வது பரிமாணமாக இணைப்பதாகும்.
- பல்படிமம் மற்றும் பீங்கானின் நானோ துகள்களின் கலவையைக் கொண்டு ஒரு நூதனமான 'பீங்கான் மை'யையும் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- அச்சிடப்பட்ட பீங்கான் முன்பொருள்களைக் கொண்டு மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்யலாம்.
- உலோகப் பொருட்களை விட மின்காந்த சமிக்ஞைகளை அனுப்புதலில் பீங்கான் பொருட்கள் மிகச் சிறந்த செயல்திறன் கொண்டவை.

## ஸ்வீடனின் 'பெண்ணிய வெளியுறவுக் கொள்கை'

- உலகளாவிய அளவில் பெண்களின் உரிமைகளை ஊக்குவிப்பதற்காக நாட்டின் முதன்மை அணுகுமுறையை முன்னிலைப்படுத்த ஸ்வீடன் நாடு 'பெண்ணிய வெளியுறவுக் கொள்கை' கையேட்டை வெளியிட்டுள்ளது.
- 2014ல் துவக்கப்பட்டதிலிருந்து இது ஸ்வீடன் நாட்டின் வெளியுறவுத்துறை மந்திரி மார்கோட் வால்ஸ்ட்ராமின் தலைமையில் நடத்தப்படுகிறது.
- பொருளாதாரச் சுதந்திரத்தை ஊக்குவித்தல், பாலியல் வன்முறைகளுக்கெதிராக போராடுதல் மற்றும் பெண்களின் அரசியல் பங்களிப்பை மேம்படுத்துதல் ஆகியவை இக்கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.
- இது போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லைபீரியா மற்றும் பாலஸ்தீனிய பிரதேசங்கள் ஆகிய 5 நாடுகளில் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கைத் திட்டங்களை உள்ளடக்கியது.
- ஸ்வீடனின் பெண் தூதர்களின் எண்ணிக்கை 1996-ல் வெறும் 10 சதவீதத்திலிருந்து 2016-ல் 40 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

## G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்கள் கூட்டம்

- G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்கள் கூட்டமானது 2018 ஆகஸ்ட் 23-24 ல் அர்ஜென்டினாவின் சால்டாவில் நடைபெற்றது.
- இது 2018ம் ஆண்டின் இறுதியில் அர்ஜென்டினாவில் நடத்தப்படவிருக்கும் 'G20 தலைவர்களுக்கான 'ஷெர்பா டிராக்கின்' ஒரு பகுதியாக நடத்தப்பட்டுள்ளது.
- "நியாயமான மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கருத்தொற்றுமை கட்டமைப்பு"

என்பதே இக்கூட்டத்தின் கரு ஆகும்.

- வேலையின் எதிர்காலம், வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பு மற்றும் நிலையான எதிர்கால உணவு ஆகிய மூன்று முக்கியமான பிரச்சினைகள் இதில் நிகழ்ச்சி நிரலாக இடம் பெற்றன.

## ஆர்க்டிக் கடல் வழியாக பயணம் செய்யும் முதல் சரக்குக் கப்பல்

- 600 கொள்கலன்களை (Containers) சுமந்து செல்லும் 'வென்டா மெர்ஸ்க்' கப்பலானது வெப்பமான ஆர்க்டிக் பாதையில் செல்லும் உலகின் முதல் சரக்கு கப்பலாகியுள்ளது.
- பால்டிக் மற்றும் வடக்கு கடல் பகுதிகளுக்கான உமிழ்வு கட்டுப்பாட்டு பகுதியின் (Emission Control Area-ECA) தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தக் கப்பலானது சோதனை முறையில் தீவிரம் குறைந்த கந்தக எரிபொருளை (ultra-low sulphur fuel-ULSFO) பயன்படுத்த முடிவெடுத்துள்ளது.



- இது ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக் துறைமுகத்தை விட்டு புறப்பட்டு செப்டம்பர் கடைசியில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கு செல்லும் வழியில் பயணத்தில் உள்ளது.
- இது இந்த பாதையின் கடக்கும் திறனின் சாத்தியக் கூறுகளை சரிபார்த்து தரவுகளைச் சேகரிக்கும்.
- பனிக்கட்டிகள் இருக்கும் காரணத்தால் முன்னர் இந்த பாதை சாத்தியமற்றதாக கருதப்பட்டது. ஆனால் இது தற்பொழுது வெப்பநிலை உயர்வு மற்றும் கப்பல் துறையில் ஏற்பட்ட மேம்பாட்டுடன் இணைந்து சாத்தியம் ஆகியது.

## முதல் பெண் போர் விமானி – ஜப்பான்

- ஜப்பான் தனது முதலாவது பெண் போர் விமானியை நியமித்துள்ளது. இது பாரம்பரியமாக ஆணாதிக்கத்தில் உள்ள நாடுகளில் அதிக பாலின சமத்துவத்திற்கான தேசிய முயற்சியில் சமீபத்திய சாதனையாகும்.

- ஜப்பானிய வான்வெளி தற்பாதுகாப்புப் படையின் முதல் பெண் போர் விமானியாக லெப்டினென்ட் மிசா மட்சுஷிமா (26) ஆகியுள்ளார்.
- போர் விமானங்கள் மற்றும் உளவு விமானங்களின் விமானிகளைத் தவிர அனைத்துப் பதவிகளையும் பெண்களுக்கு வழங்க 1993ஆம் ஆண்டு விமானப்படை முடிவு செய்தது. ஆனால் இந்த வரம்பு 2015ல் நீக்கப்பட்டது.




## 4-வது ஆசிய தேர்தல் பங்குதாரர்களின் மன்றம்

- ஆசியப் பிராந்தியத்தில் மக்களாட்சி மற்றும் தேர்தல்களின் நிலை குறித்து விவாதிப்பதற்காக நான்காவது ஆசிய தேர்தல் பங்குதாரர்களின் மன்றம் இலங்கையின் கொழும்புவில் தொடங்கியது.
- இதன் கருத்துருவானது "முன்னேறும் தேர்தல் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை - குழுவாக ஜனநாயகத்தை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல்" ஆகும்.
- மஹாராஷ்டிராவின் தலைமைத் தேர்தல் அதிகாரி அஸ்வினி குமார் மற்றும் ஒரு அரசு சாரா நிறுவனம் ஆகியோர் இந்தியா சார்பாக இதில் கலந்து கொண்டனர்.
- இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மன்றமானது இலங்கை தேர்தல் ஆணையம் மற்றும் நேர்மையான தேர்தலுக்கான ஆசிய அமைப்பு (ANFREL - Asian Network for free Elections) ஆகியவற்றின் உதவியுடன் தெற்கு ஆசியாவில் முதன் முறையாக நடைபெற்றது.

## முதலாவது சார்க் (SAARC) விவசாய கூட்டுறவு வணிக மன்றம்

- நேபாளத்தின் காத்மாண்டுவில் முதலாவது தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பின் (SAARC – South Asian Association for Regional Cooperation) விவசாய கூட்டுறவு வணிக மாநாடு தொடங்கியது.
- மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் கருத்துறுவானது தெற்காசியாவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் 1 மற்றும் 2-ஐ அடைவதற்கு "விவசாயக் குடும்பங்களின் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் வலுப்படுத்துவதாகும்".
- விவசாய வளர்ச்சிக்கான சர்வதேச நிதி (IFAO – International Fund for Agricultural Development) என்ற நிறுவனத்தின் உதவியுடன் ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO – Food and Agricultural Organisation) மற்றும் ஆசிய விவசாயிகள் கழகம் ஆகிய இரு நிறுவனங்கள் இணைந்து இம்மாநாட்டை நடத்துகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## சலுகை நிதித் திட்டம்

- மத்திய அமைச்சரவை சலுகை நிதித் திட்டத்தினை 2018-2023 ஆகிய 5 வருடங்களுக்கு நீட்டித்து ஒப்புதல் அளித்துள்ளது. இது சலுகை நிதித் திட்டத்தின் முதலாவது நீட்டிப்பாகும். (CFS-Concessional Financing Scheme).
- வெளிநாடுகளில் பயன்படத்தக்க வகையில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களை இந்திய நிறுவனங்கள் ஏலத்தில் எடுப்பதை ஆதரிப்பதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டது.
- நிறுவனத்தின் உரிமையாளர் மட்டுமின்றி எந்த ஒரு இந்திய நிறுவனமும் இத்திட்டத்தில் பங்குபெற்று பயனடைந்திட இத்திட்டம் தாராள மயமாக்கப்பட்டுள்ளது.
- சலுகை நிதித் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட திட்டங்களை இந்திய வெளியுறவு அமைச்சகம் தேர்ந்தெடுக்கும். பின்னர், வெளியுறவு அமைச்சகம் இதை பொருளாதார விவகாரங்களுக்கான துறைக்கு அனுப்பி வைக்கும்.
- முக்கியத்துவம் வாய்ந்த முக்கியமான திட்டங்கள் இச்சலுகை நிதியைப் பெற்றிட அவை வகை வகையாகப் பிரிக்கப்பட்டு பொருளாதார விவகாரங்கள் துறைக்கான செயலாளர் தலைமையிலான குழுவால் அதற்கான முடிவு எடுக்கப்படும்.
- இக்குழுவில் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் உறுப்பினராக இருப்பார்.
- தற்பொழுது இத்திட்டம் எக்ஸிம் (EXIM Bank) வங்கி மூலம் செயல்படுத்தப்படுகிறது. அவ்வங்கி சலுகை நிதி அளிப்பதற்காக சந்தையில் இருந்து நிதியை உருவாக்கும்.
- மத்திய அரசாங்கம் எதிர் உத்தரவாதம் மற்றும் 2 சதவீத வட்டி சமநிலை ஆகிய உதவிகளை எக்ஸிம் வங்கிக்கு அளிக்கும்.
- LIBOR (The London Inter-bank Offered Rate) 6 மாதத்திற்கான சராசரி + 100 புள்ளிகளுக்கு மேல் இல்லாமல் கடன் உதவியை எக்ஸிம் வங்கி (EXIM BANK) நீட்டிக்கலாம். கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆனது வெளிநாட்டு அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்படும்.

## சூரிய ஒளி மின்கலத்தின் இறக்குமதி மீது விதிக்கப்படும் 25 சதவிகித பாதுகாப்பு வரி

- மத்திய அரசாங்கம் சீனா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரி ஒளி மின்கலத்தின் மீது 25 சதவிகித பாதுகாப்பு வரியை விதித்துள்ளது (ஒரே தொகுதி அல்லது பலகையில் தொகுக்கப்பட்டாலும் அல்லது தொகுப்படாவிட்டாலும்).

- இம்முடிவின் நோக்கம் உள்ளூர் சூரிய ஒளி மின்கல உற்பத்தித் துறையினருக்கு உதவுவது ஆகும்.
- வணிகத் தீர்வுகளின் பொது இயக்குனரகத்தின் (Directorate General of Trade Remedies) பரிந்துரையின்படி மத்திய அரசாங்கம் இம்முடிவை எடுத்துள்ளது.
- சீனா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைத் தவிர மற்ற வளரும் நாடுகளின் மீது இப்பாதுகாப்பு வரி விதிக்கப்படவில்லை.



## டிஜிட்டல் பணம் செலுத்துதல் - நிதி ஆயோக்கின் ஆய்வு

- நிதி ஆயோக் ‘கடன் சுயிசி’ என்ற ஆய்வை நடத்தியுள்ளது. நிதி ஆயோக் ‘டிஜிட்டல் பணம் செலுத்துதல் போக்குகள், பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புகள்’ என்ற சிற்றேட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் பணம் செலுத்துதல் சந்தையானது 2023 ஆண்டில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கைபேசி வழியே பணம் செலுத்துதலானது 2017-18ல் 10 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது. இது 2023ஆம் ஆண்டில் 190 பில்லியன் அமெரிக்க டாலர்களாக வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது டிஜிட்டல் பணம் செலுத்துதல் சிற்றேட்டின் இரண்டாவது வருடாந்திர பதிப்பாகும். இதற்கு முன் ஜூலை 2017-இல் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.

## டிஜிட்டல் பணம் செலுத்துதல் மீதான பணம் மீளப்பெறல்

- ரூபே மற்றும் பீம் தளங்கள் மூலம் வர்த்தகர் – நுகர்வோர் ஆகியோர் பரிமாற்றம் செய்வதன் மூலம் செலுத்திய சரக்கு மற்றும் சேவை வரியில் 20 சதவீதம் மீளப்பெறல் முறையில் நுகர்வோருக்கு திருப்பி அளிக்கப்படும். இச்சலுகை சோதனை முயற்சியாக மேற்கொள்ளப்படவுள்ளது. இம்முடிவு சமீபத்தில் நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரி (GST – Goods and Services Tax) ஆணையக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.
- பணம் மீளப்பெறல் சலுகையானது ஒவ்வொரு பரிமாற்றத்தின் போதும் ரூ.100 வரையிலான தொகையை நுகர்வோருக்கு திருப்பி அளிப்பதாகும்.
- டிஜிட்டல் சலுகை அளிக்கும் இப்புதிய சோதனைத் திட்டத்தில் உத்திரப் பிரதேசம், பிகார், மஹாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்கள் இணைய விருப்பம் தெரிவித்துள்ளன.

## GST சபையின் சலுகைகள்

- தேசிய தலைநகர் புதுதில்லியில் நடைபெற்ற GST (Goods & Service Tax) சபையின் 29 வது சந்திப்பில் இலக்கமுறை பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்காக பணச்சலுகைகளுக்கு அச்சபை ஒப்புதல் அளித்துள்ளது.
- GST சபையின் சந்திப்பு இடைக்கால நிதியமைச்சர் பியூஷ் கோயல் அவர்களால் தலைமை தாங்கப்பட்டது.
- Rupay மற்றும் BHIM தளங்களை பயன்படுத்தி வர்த்தகர் மற்றும் நுகர்வோருக்கு இடையேயான இலக்கமுறை பணபரிவர்த்தனைகளை மேற்கொள்வோருக்கு பரிவர்த்தனைக்கு ரூ.100 என்ற வீதத்தில் 20% பணம் திரும்ப அளிக்கப்படும் என்று GST சபை அறிவித்துள்ளது.

## அமைச்சர்கள் குழு – சுரேஷ் பிரபு தலைமை

- மத்திய அரசு 16 உறுப்பினர்கள் கொண்ட பிராந்திய பொருளாதாரக் கூட்டமைப்பு (Regional Cooperation Economic Partnership - RCEP) பேச்சுவார்த்தைகளைப் பற்றி முடிவு செய்ய மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையிலான 4 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர்கள் குழு ஒன்றை நியமித்துள்ளது.
- இக்குழு இந்தியாவானது அக்கூட்டமைப்பிற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாமா அல்லது வேண்டாமா என பிரதமருக்கு அறிவுறுத்துவதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.
- இக்குழு
    - நிதி (தற்காலிகமான) மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் – பியூஸ் கோயல்,
    - பாதுகாப்புத் துறை அமைச்சர் – நிர்மலா சீத்தாராமன்
    - வீட்டுவசதி நகர்ப்புறத் துறை அமைச்சர் – ஹர்தீப் பூரி

  ஆகியோரைக் கொண்டதாகும்.

- தற்போதைக்கு அக்கூட்டமைப்பில் சேர்வதா அல்லது வேண்டாமா என்பதற்கான தடைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இக்குழு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- மேலும் இக்குழு, 2019-ஆம் ஆண்டு, சிங்கப்பூரில் நடைபெற உள்ள RCEP (Regional Cooperation Economic Partnership) அமைச்சரவை கூட்டத்தில் இந்தியாவிற்கான யுக்தியை மெருகேற்றிட உதவும்.

## அலுவல்சாரா இயக்குநர்கள்

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு

1) சார்டர்ட் அக்கவுண்டன்ட் சுவாமிநாதன் குருமூர்த்தி

2) வியாபார வல்லுநர் சதீஷ் காசிநாத் மராத்தே

ஆகியோரை இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய மன்றத்தின் அலுவல் சாரா இயக்குநர்கள் நியமனத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.

- அவர்கள் நான்கு வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

*மத்திய இயக்குநர்கள் குழுமத்தின் உள்ளடக்கம்*

- இது RBI இயக்குநர் மற்றும் துணை இயக்குநர்களை (அதிகபட்சமாக நான்கு) கொண்டது.
- 4 அலுவல் சாரா இயக்குநர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு அலுவல்சாரா இயக்குநரும் இந்தியாவின் நான்கு பிராந்தியங்களை குறிப்பிடும் வகையில் டெல்லி, சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய இடங்களில் உள்ளூர் மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.
- RBI மட்டும் 10 அலுவல் சாரா இயக்குநர்களை நியமிக்கின்றது. (இந்திய பொருளாதாரத்தில் பல்வேறுபட்ட பகுதிகளில் சிறந்த நிபுணத்துவம் கொண்டவர்களை)
- இவர்கள் தவிர ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் படி மத்திய அரசின் பிரதிநிதி ஒருவரும், (வழக்கமாக நிதிச் சேவைகள் செயலாளர்) நியமிக்கப்படுகின்றார்.

## தேசிய பண வழங்கீடு சங்கத்தின் சான்றிதழ்

- qSPARC V2 தளத்தில் Rupay நுண்சில் தொடர்பு மற்றும் தொடர்பற்ற அட்டைகளை தயாரித்தல் மற்றும் தனிப்பயனாக்கம் செய்தவற்கான சான்றிதழை பெற்ற முதல் நிறுவனம் IDEMIA என்ற பிரான்சு நிறுவனம் ஆகும்.
- இச்சான்றிதழ் எல்லா வித பணவழங்கீட்டு காட்சிகளையும் சோதனை செய்தபிறகு இந்திய தேசிய பணவழங்கீடு சங்கத்தினால் வழங்கப்படுகிறது.
- qSPARC என்பது ஒற்றை அட்டையிலேயே 20 வரையிலான பணவழங்கீடு பயன்பாடுகளுடன் கூடிய பல்வேறு பணவழங்கீடு பயன்பாடுகளை ஏற்றும் வசதி உடைய திறந்த இடைமுக வளைய பணவழங்கீட்டு முறையாகும்.

## அதிகப்படியான பங்காதாயம் - ரிசர்வ் வங்கி

- ஜூன் 2018 என்ற கால அளவோடு முடிந்த வருடத்தில் ரிசர்வ் வங்கி கூடுதல் பங்காதாயமாக 50,000 கோடி ரூபாய்களை அரசிடம் ஒப்படைத்துள்ளது.
- 2017ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட 30,659 கோடி ரூபாயை விட இது 63 சதவிகிதம் அதிகமாகும்.
- ரிசர்வ் வங்கியின் அதிகப்படியான பங்காதாயம் என்பது அரசு வரியற்ற வருமானம் என்ற தலைப்பில் பெறும் கணிசமான வருவாய் அளவாகும். இவை குறிப்பாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் பகிர்ந்தளிக்கப்படும் பங்காதாயங்களாகும்.
- இந்த கூடுதல் வருமானத்தோடு நிதிப் பற்றாக்குறை இலக்கை எதிர்கொள்ள இருக்கும் அரசின் வாய்ப்பு, நிதி ஒருங்கிணைப்பு மற்றும் பட்ஜெட் கணிப்புகளால் முன்னேற்றமடைந்திருக்கின்றது.

- இந்த வருட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 3.3 சதவிகிதமாக கணிக்கப்பட்டுள்ளது.

## கருவிழி உறுதிப்பாடு - ஆக்சிஸ் வங்கி (Axis Bank)

- நுண் ATM வரைபட்டிகை (Tablets) மூலம் ஆதார் அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு கருவிழி ஸ்கேன் உறுதிப்பாடு வசதியினை நாட்டில் முதன்முறையாக ஆக்சிஸ் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த நுண் ATM வரைபட்டிகைகள், தரப்படுத்தப்பட்ட சோதனைகள் மற்றும் தரச்சான்றிதழ் (Standardisation Testing and Quality Certification - STQC) பெற்ற மற்றும் UIDAI-க்கு இணக்கமான முழுவதும் ஒருங்கிணைந்த கருவிழி சென்சார்கள் கொண்ட பதிவு செய்யப்பட்ட சாதனங்கள் ஆகும்.

## 2016-2017ல் உள்நாட்டு பணம் அனுப்புதலுக்கான முதன்மை ஆதாரம் - UAE

- இந்திய ரிசர்வ் வங்கியால் நடத்தப்பட்ட 2016-2017ம் ஆண்டுக்கான உள்நாட்டு பணம் அனுப்புதலுக்கான கணக்கெடுப்பில் ஐக்கிய அரபு அமீரகம் முதலிடத்தில் உள்ளது. வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட மிக அதிக நிதியை பெற்ற மாநிலமாக கேரளா உள்ளது.
- மொத்த பண அனுப்புதலில் UAE-ன் பங்கு 26.9% ஆகும். இதற்கு அடுத்த நிலையில் அமெரிக்கா (22.9%), சவுதி அரேபியா (11.6%), கத்தார் (6.5%) மற்றும் குவைத் (5.5%) ஆகியன உள்ளன.
- கணக்கெடுப்பின்படி, இந்தியாவினால் பெறப்பட்ட 82% மொத்த பணம் அனுப்புதல் 8 நாடுகளிலிருந்து வருகிறது.
- அந்த நாடுகளாவன:
    - UAE, அமெரிக்கா, சவுதி அரேபியா, கத்தார், குவைத், ஓமன், ஐக்கிய ராஜ்ஜியம் (U.K.) மற்றும் மலேசியா.
- மொத்தத்தில் கேரளா அதிகபங்கான 19% னைக் கொண்டுள்ளது. இதற்கு பிறகு மகாராஷ்டிரா (16.7%) கர்நாடகா (15%) தமிழ்நாடு (8%) மற்றும் டெல்லி (5.9%) ஆகியன உள்ளன.
- கேரளா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை அனைத்தும் சேர்ந்து மொத்த பண அனுப்புதலில் 58.7% பங்கைக் கொண்டுள்ளன.
- கணக்கெடுப்பிற்கான பதில்கள் 42 அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இது 2016-17ம் ஆண்டில் 98.3% மொத்த பண அனுப்புதலைக் கொண்டதாகும்.
- ரூபாய் வரைவு ஏற்பாடுகள் (Rupee Drawing Arrangement - RDA) பணம் அனுப்புதலுக்கான பிரபலமான வழி ஆகும். RDA மூலம் 75.2% பணம் அனுப்பப்பட்டுள்ளது.
- இதனையடுத்து, SWIFT (19.5%), Direct Transfer (3.4%) மற்றும் காசோலை மற்றும் வரைவு மூலம் 21.9% ஆகியன உள்ளன.

- மொத்த பணம் அனுப்புதலில் தனியார் வங்கிகளின் பங்கு 74.1% ஆகும். பொதுத் துறை வங்கிகளின் பங்கு 17.3% ஆகும். மீதமுள்ள பங்கு வெளிநாட்டு வங்கிகளினுடையதாகும்.

## TReDS முறையில் பரிவர்த்தனை செய்யும் முதல் பொதுத்துறை நிறுவனம்

- இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) ஆனது வர்த்தக ரசீதுகள் தள்ளுபடி அமைப்பு (TReDS) மேடையில் பரிவர்த்தனை செய்த முதல் பொதுத் துறை (PSU) நிறுவனமாகியுள்ளது.
- இந்த பரிவர்த்தனை பரோடா வங்கி (BOB) மூலமாக நிதியுதவி செய்யப்பட்டது.
- இந்த TReDS தளமானது பல நிதி நிறுவனங்களிடமிருந்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) வர்த்தக பெறுதல்களுக்கு நிதியளிக்க உதவுவதற்கான ஒரு நிகழ்நிலை மின்னணு நிறுவன தொழில் நுட்பமாகும்.
- TReDS என்பதன் விரிவாக்கம் Trade Receivables Discounting System என்பாதாகும்.
- அக்டோபர் 2017ல் மத்திய அரசானது சிறு, குறு மற்றும் நடுத்தர விற்பனையாளர்களுக்கு பணம் செலுத்துவதற்கு அனைத்து பெரிய பொதுத்துறை நிறுவனங்களும் TReDS தளத்தில் இணைவதை கட்டாயமாக்கியுள்ளது.
- இந்திய வரவுகள் பரிமாற்றம் (Receivable Exchange of India) ஆனது இந்தியாவின் முதல் TReDS தளமாகும். இது
  - தேசிய பங்குச் சந்தை
  - இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி
  - பாரத ஸ்டேட் வங்கி
  - ஐசிஐசிஐ வங்கி மற்றும் யெஸ் வங்கி ஆகியவற்றால் ஊக்குவிக்கப்படுகிறது.

## இந்திய வங்கிக் கூட்டமைப்பு - 2018

- இந்திய வங்கிக் கூட்டமைப்பு (India Banking Conclave) – 2018 ஆனது புதுடெல்லியில் 2018ம் ஆண்டு ஆகஸ்ட் 23-24ல் நடைபெற்றது.
- இது தனது அறிவுப் பங்காளர் மற்றும் அரசு சிந்தனைச்சாவடியான நிதி ஆயோக்குடன் இணைந்து பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி மையத்தால் (Center for Economic and Policy Research - CEPR) ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- இந்திய வங்கித் துறையை எதிர்காலங்களில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாற்றியமைப்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.
- CEPR ஆனது 1983ல் ஐக்கிய ராஜ்யத்தின் லண்டனில் நிறுவப்பட்டது. இது 1983-ல் ரிச்சர்ட் போர்டேஸ் ஆல் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஐரோப்பிய தொண்டு நிறுவனத்தால் நிதியளிக்கப்படுகிறது.
- ஐரோப்பா மற்றும் அதற்கு அப்பால் உள்ள பொருளாதாரக் கொள்கைகளின் தரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## ஐ-பத்திரம் (Bond - I)

- உலக வங்கியானது முதல் பொதுவான சங்கிலித் தொடர் பத்திரமான ஐ-பத்திரத்தை (Bond-I) உருவாக்கியுள்ளது. இது சங்கிலித் தொடர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, மாற்றப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படுகிறது.
- Bond-I என்பது சங்கிலித் தொடரால் வழங்கப்படும் புதிய கடன் கருவியின் (Blockchain Offered New Debt Instrument) சுருக்கமாகும். மேலும் இது ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள சுற்றுலாப் புகழ்பெற்ற போண்டி கடற்கரையையும் குறிக்கிறது.
- இந்த பத்திரத்திலிருந்து கிடைக்கும் நிதிகள் நிலையான அபிவிருத்தி முயற்சிகளுக்குச் (SDI – Susutainabale Development Initiative) செல்லும்.
- ஐ-பத்திரமானது ஆஸ்திரேலியன் டாலர்களில் குறிக்கப்படும் ஈத்தேரியம் சங்கிலித் தொடர் பத்திரமாகும். ஆஸ்திரேலியாவின் உள்ளூர் பணத்தில் வழங்கப்பட்ட வெளிநாட்டு பத்திரங்களைக் குறிக்கும் கங்காரு பத்திரமாக இது குறிக்கப்படுகிறது.
- உலக வங்கியானது ஆஸ்திரேலியாவின் காமன்வெல்த் வங்கியை (ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய வங்கி) இந்த பத்திரத்திற்கான ஒரே ஏற்பாட்டாளராக தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த பத்திரமானது இரண்டு ஆண்டு காலத்தை முதிர்ச்சி காலமாக உடையது மற்றும் இதன் வெளியீட்டிற்குப் பிறகு இது 100 மில்லியன் ஆஸ்திரேலியன் டாலரைப் (73.16 மில்லியன் அமெரிக்க டாலர்) பெற்றுள்ளது.

## ரூ.8 லட்சம் கோடி சந்தை மூலதனத்தை கடந்த முதல் இந்திய நிறுவனம்

- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (RIL – Reliance Industries Limited) ஆனது ரூ.8 லட்சம் கோடி (144 பில்லியன் டாலர்) சந்தை மூலதனத்தை கடந்த முதல் இந்திய நிறுவனம் ஆகியுள்ளது.
- இந்த RIL-இன் சந்தை மூலதன சாதனையானது முகேஷ் அம்பானியின் (இந்தியாவின் மிகப்பெரிய செல்வந்தர்) சொத்துக்களை 48 பில்லியன் டாலர் அளவிற்கு (ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி) உயர்த்தியுள்ளது.
- சந்தை மூலதனம் என்பது பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் நிறுவனத்தின் மதிப்பாகும். இது தற்போதைய பங்கு விலைகள் மூலம் மொத்த பங்குகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

## சர்வதேச நடுவர் தீர்ப்பாயம் - ரிலையன்ஸ் ஆற்றல் நிறுவனம்

- ரிலையன்ஸ் ஆற்றல் என்ற நிறுவனமானது தனது சொந்தத் துணை நிறுவனமான ரிலையன்ஸ் பவர் நெதர்லாந்து BV என்ற நிறுவனம் பிரஸ்டீஜ் கேபிடல் ஹோல்டிங்ஸ் (செஷல்ஸை மையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம்) மற்றும் கோகோஸ் ஜியாங் ஆகிய நிறுவனங்களுக்கு எதிரான வழக்கில் சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தால் 56 மில்லியன் இழப்பீடு பெற்றதாக அறிவித்துள்ளது.

- இந்தோனேஷியாவில் உள்ள நிறுவனங்களின் நிலக்கரி சுரங்கம் தொடர்பான ஒப்பந்தப் பிரச்சனைக்காக நடுவர் தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்றது.
- இந்தோனேஷியாவில் உள்ள சுகிகோ குழுவின் உரிமையாளர் கோகோஸ் ஜியாங் ஆவார். இந்தோனேஷியாவில் 2010ஆம் ஆண்டில் ரிலையன்ஸ் நிறுவனமானது பொருளாதார சலுகைகளை இந்த நிறுவனத்தின் 3 நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெற்றது.
- நடுவர் தீர்ப்பாயமானது சிங்கப்பூரில் உள்ள சிங்கப்பூர் சர்வதேச நடுவர் மையத்தின் விதிகளின் படி (SIAC - Singapore International Arbitration Centre) ஏற்படுத்தப்பட்டது.

## கோல்டுமேன் சச்ஸ் – பிராச்சி மிஸ்ரா

- உலக முதலீட்டு வங்கியான கோல்டுமேன் சச்ஸ் பிராச்சி மிஸ்ராவை நிர்வாக இயக்குநர் மற்றும் இந்தியத் தலைமை பொருளாதார நிபுணராக நியமித்துள்ளது.
- இவர் கோல்டுமேன் சச்ஸில் இணைவதற்கு முன்பு, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF – International Monetary Fund) உலகின் மேற்கு துருவத்தின் துணைப் பிரிவுத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றினார்.
- இந்தியாவில் கோல்டுமேன் சச்ஸ் வங்கி 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி தனது முதலாவது அலுவலகத்தை பெங்களூருவில் தொடங்கியது.
- இருந்தபோதிலும், இந்த வங்கியானது 1990 ஆம் ஆண்டு முதல் இந்திய வாடிக்கையாளர்களுக்காக பணியாற்றி வருகிறது. இது நாட்டில் உள்ள உயிர்ப்புள்ள முதலீட்டு வங்கியாகும்.

## கல்விக் கடன் – RBI அறிக்கை

- மத்திய வங்கியான RBI-ன் அறிக்கையின்படி, நாட்டில் கல்வித்துறைக்கு அதிகப்படியான கடன்களை அளித்து வருவது பொதுத்துறை வங்கிகள் ஆகும்.
    - கல்வித்துறைக்கு கடன் அளித்து வரும் பொதுத்துறை வங்கிகளின் பங்கு 91.42% ஆகும்.
- இந்த அறிக்கையின்படி,
    1) தமிழ்நாடு
    2) கேரளா
    3) கர்நாடகா
    4) ஆந்திரப் பிரதேசம்

ஆகிய தென் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், நாட்டின் இதர மாநிலங்களை விட அதிகமாக கல்விக் கடன் பெற்று கல்வி பயிலுகின்றனர்.


## RBIயின் வருடாந்திர அறிக்கை 2017-2018

- RBI-ன் வருடாந்திர அறிக்கையின் படி,
  - பண மதிப்பு நீக்கத்திற்குப் பிறகு புழக்கத்தில் உள்ள அனைத்து ரூபாய் நோட்டுகளில் 99.3 சதவீத நோட்டுகள் வங்கிகளுக்கு திரும்ப வந்துள்ளன.
  - தொடர்ந்து 3 ஆண்டுகளாக விவசாய உற்பத்தி வலுவான நிலையில் உள்ளது.
  - பணவழங்கீடுகளில் டிஜிட்டல் முறைமைகளை பெருமளவில் சார்ந்திருப்பது 2017-2018 ல் ஏற்பட்டது.
  - 2017-2018 ஆம் நிதியாண்டில் 2000 ரூபாய் போலி நோட்டுகளின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புதிய வடிவம் - ஸ்கூடாய்டு (Scutoid)

- மேற்புறச் செல்களின் (Epithelial cells) ஆய்வின் போது ஸ்கூடாய்டு எனப்படும் புதிய வடிவத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மேற்புற திசுக்கள் உடலின் பாதுகாப்பு கேடயமாக இயங்கும் மனித உடலை அமைக்கும் 4 வகையான திசுக்களில் ஒன்றாகும். இந்தப் பாதுகாப்பு கேடயம் மனித உடலின் இரத்த நாளங்கள் மற்றும் உறுப்புகளின் சுவர்களில் புறணியாக உள்ளன.




- ஸ்கூடாய்டு வடிவம் இறுதிப்பகுதியில் நான்கு பக்கங்களையும் மற்ற பகுதிகளில் 6 பக்கங்களையும் கொண்டுள்ளது. அதன் நீள்இறுதியின் ஒரு பகுதியில் முக்கோண மேற்பரப்பினையும் கொண்டுள்ளது.
- இது வடிவியலுக்கு முற்றிலும் புதிதாகும். மேலும் மேலிருந்து கீழான பார்வையில் வண்டுகளின் வெளியுறையினை (கேடயம் போன்ற அமைப்பு) ஒத்துள்ளது.
- திசுக்கள் மற்றும் உறுப்புகள் உருவாவது போல மேற்புற செல்களும் ஒன்றாக பிழிந்து, திருகி, வளைந்து ஸ்கூடாய்டு வடிவத்தின் அதிக ஆற்றலுடைய மற்றும் கடின முப்பரிமாண அமைப்பினை உருவாக்குகிறது.
- இந்தக் கடின வடிவம் நுண்ணுயிரிகளை நமது உடலின் தோல் (அ) உறுப்புகளினுள் நுழைவதிலிருந்து தடுக்கிறது. இது கட்டமைப்பினை நிலையாகவும் ஆற்றலுடைய திறன் வாய்ந்ததாகவும் ஆக்குகிறது.

## குழந்தைகள் சிறிய தலையுடன் பிறப்பதற்குக் காரணமான ஜிகா வைரஸ் - கண்டுபிடிப்பு

- குழந்தைகள் சிறிய தலையுடன் பிறப்பதற்குக் காரணமான ஜிகா வைரஸின் மூலக்கூறு மற்றும் செல்லுலார் இயக்கங்களை தேசிய மூளை ஆராய்ச்சி மையத்தின் (National Brain Research Centre - NBRC) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மைக்ரோசெப்லியுடன் பிறக்கும் குழந்தைகளின் தலை மற்ற குழந்தைகளின் தலையோடு ஒப்பிடும் போது சிறியதாக இருக்கும்.
- ஜிகா வைரஸின் உறை புரதங்கள் (E புரதம்) மூளை தண்டு உயிரணுக்களுக்குள் இந்த வைரஸ் செல்ல காரணமாகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த உறை புரதமானது கருவில் உள்ள நரம்புத் தண்டு உயிரணுக்களின் பெருக்கத்தைத் தடை செய்யும். மேலும் நரம்பு போன்று உருவெடுக்கும் உயிரணுக்களை இந்த உறை புரதங்கள் கொன்றுவிடுகின்றன.



Baby with Microcephaly

- ஜிகா வைரஸின் உறை புரதங்களை (E-Protein) சீரமைப்பதன் மூலம் வளரும் கருவில் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கலாம் மற்றும் தடை செய்யலாம் என்று இந்த ஆய்வு கூறுகிறது.

## E-அக்ஷராயன்

- புது தில்லியில் நடைபெற்ற இந்திய மொழிகளின் தொழில்நுட்ப துறையின் மாநாடான 'பஷந்த்தரா'-வின் போது டெஸ்க்டாப் மென்பொருளான E-அக்ஷராயனை மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஸ்கேன் செய்யப்பட்டு அச்சிடப்பட்ட இந்திய மொழிகளின் ஆவணங்களை யுனிகோடு குறியீட்டில் முழுவதும் திருத்தப்படக்கூடிய உரை வடிவில் மாற்றுவதற்காக வெளியிடப்பட்ட இலவச டெஸ்க்டாப் மென்பொருள் E-அக்ஷராயன் ஆகும்.
- இந்தி, வங்காளம், குர்முகி, தமிழ், கன்னடம் மற்றும் அஸாமி ஆகிய 7 இந்திய மொழிகளில் திருத்தம் செய்ய இந்த மென்பொருள் ஊக்கமளிக்கும்.

## மீயொலி இடைமறிப்பு ஏவுகணை

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மீயொலி இடைமறிப்பு ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது, இந்த ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வழியிலேயே இடைமறித்து அழிக்கும் தன்மையுடையது. இச்சோதனை ஒடிசாவின் கடலோரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஏவுகணை அமைப்பில் பொருத்தப்பட்டுள்ள மேம்பட்ட அம்சங்களை உறுதி

செய்வதற்காக இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது.

- ❖ வளிமண்டலத்திற்கு உள்ளே செயல்படும் ஏவுகணையானது மேம்பட்ட வான்பாதுகாப்பு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை இடைமறித்து அழிக்கும். இந்த ஏவுகணைக்கு இதுவரை முறையான பெயர் வைக்கப்படவில்லை.
- ❖ இடைமறித்துத் தாக்கும் இந்த ஏவுகணையானது ஊடுருவல் அமைப்புடன் கூடிய 7.5 மீட்டர் உயரம் கொண்ட ஒற்றை நிலையுடைய திண்ம எரிபொருட்களால் செலுத்தப்படக்கூடிய வழிகாட்டி ஏவுகணையாகும்.
- ❖ இந்தியாவின் இரட்டை அடுக்கைக் கொண்ட மீயொலி இடைமறிப்பு ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டுள்ளது. (BMD - Ballistic Missile Defence) (DRDO - Defence Research and Development Organisation)
- ❖ இது இரண்டு இடைமறிப்பு ஏவுகணைகளைக் கொண்டுள்ளது.
  1) வளிமண்டலத்திற்கு உள்ளே அல்லது குறைந்த உயரத்திற்கான மேம்பட்ட பகுதி பாதுகாப்பு ஏவுகணை (AAD-Advanced Area Defence)
  2) வளிமண்டலத்தின் வெளிப் பகுதிகளுக்கான பிருத்திவி பாதுகாப்பு ஏவுகணை
- ❖ DRDO ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த BMD ஏவுகணை 2022-ல் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கிறது.
- ❖ அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் திறன்மிக்க எதிர்ப்பு BMD அமைப்பைக் கொண்டுள்ளன. அந்த வரிசையில் BMD அமைப்பை பெற்ற நான்காவது நாடாக இந்தியா இணையவுள்ளது.

## சஹீர் நஹின் கைபேசி செயலி

- ❖ இமாச்சலப் பிரதேசம் “ஹார்ன் நாட் ஒகே” (Horn Not Ok – சத்தம் வேண்டாம்) என்ற விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் “சஹீர் நஹின்” (சத்தம் வேண்டாம்) என்ற கைபேசி செயலியையும் தனது மாநிலத் தலைநகரான சிம்லாவில் ஆரம்பித்திருக்கின்றது.
- ❖ இப்பரப்புரையின் முதற்கட்டம் சிம்லாவிலும் மணாலியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.
- ❖ இந்த கைபேசி செயலியானது இமாச்சலப் பிரதேசத்தின் தேசிய தகவலியல் மையம் அம்மாநிலத்தின் சுற்றுப்புறச் சூழல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
- ❖ இந்த செயலி பொது மக்களை ஒலி மாசு பற்றிய புகார்கள் அளித்திடச் செய்யும்.

## WOW (பெண்களின் நலன் - Wellness Of Women) கைபேசி செயலி

- ❖ வர்த்தகம் மற்றும் தொழிற்துறைக்கான இந்திய கூட்டமைப்பின் பெண்கள் பிரிவான FICCI மகளிர் அமைப்பு WOW என்ற கைபேசி செயலியை வெளியிட்டுள்ளது.
- ❖ இது நாடு முழுவதும் உள்ள பெண்கள் மத்தியில் முன்னெச்சரிக்கை சுகாதார நலன் பற்றி

விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணுகின்றது.

- WOW செயலியானது சென்னையைச் சார்ந்த அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தால் ஆதரிக்கப்படுகின்றது. இது புகழ்பெற்ற மருத்துவர்களை அணுகிடவும், சுகாதாரத் தகவல்களை பெற்றிடவும் உதவுகின்றது.
- இது காணொளிக் காட்சி மூலமோ, குரல் அழைப்பு அல்லது இ-மெயில் மூலமோ மருத்துவர்களை அணுகிட பயனாளிகளுக்கு உதவும் ஒரு நடைமேடையை எளிதில் பயன்படுத்திட உதவுகின்றது.
- பிக்கி (FICCI – Federation of Indian Chambers of Commerce and Industry) என்பது புதுதில்லியை தலைமையிடமாகக் கொண்ட இந்தியாவின் பழமையான மற்றும் மிகப்பெரிய வியாபார சங்கமாகும்.
- இது அரசு சாராத மற்றும் லாப நோக்கற்ற நிறுவனம் ஆகும். இது 1927ல் நிறுவப்பட்டது.


## நாசாவின் வர்த்தக ரீதியிலான விண்கலம்

- 2011-ஆம் ஆண்டுக்குப் பின் space shuttle என்ற விண்வெளி விண்கலத்தின் முதலாவது மனித விண்வெளி பயணத் திட்டத்திற்காக 9 விண்வெளி வீரர்களை நாசா தேர்ந்தெடுத்துள்ளது. இந்த 9 விண்வெளி வீரர்களுள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ்சும் ஒருவர்.



- போயிங் மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் இணைந்து வடிவமைத்த புதிய வணிக விண்கலத்தில் 9 விண்வெளி வீரர்களும் முதலாவது குழுவாக சோதனை ஓட்டங்களையும் விண்பயணங்களையும் மேற்கொள்வர் என்று விண்வெளி நிறுவனம் அறிவித்துள்ளது.
- விண்வெளி வீரர்கள் போயிங் CST – 100 ஸ்டார் லைனர் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் டிரேகன் கேப்சூலில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 2019 தொடக்கத்தில் பயணம் மேற்கொள்ளவிருக்கின்றனர்.


## ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட் (நுரைமம்)




- ❖ உலகின் ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட்டை சீனாவின் மூலக்கூறு தாவர அறிவியலின் சிறப்பு மையம் வடிவமைத்துள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ இச்சோதனையானது 16 குரோமோசோம்களைக் கொண்ட பிரிவரின் ஈஸ்ட் மீது நிகழ்த்தப்பட்டது.
- ❖ இந்த ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட் ஆனது தமது முன்னோர்களின் ஜீன்களில் மூன்றில் ஒரு பகுதியை மனிதர்களுடன் பகிர்கின்றது.
- ❖ ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட் திரிபைத் தயாரிப்பதற்காக மூலக்கூறு திருத்த தொழில்நுட்பமான CRISPR – Cas 09-ஐ ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.
- ❖ இந்த ஆய்வின் முடிவானது யூகேரியாட்களின் குரோமோசோம்களின் எண்ணிக்கையானது அது கொண்டிருக்கிற ஜீன் தகவல்களின் எண்ணிக்கையுடன் பொருந்துவதில்லை என தெரிவிக்கின்றது.
- ❖ அனைத்து ஜீன் தகவல்களும் ஒரே குரோமோசோமில் உள்ளன என்பதையும் இந்த ஆய்வின் முடிவு வெளிப்படுத்துகிறது.

## ரைஸ்க்ரீக் (RISECREEK)

- ❖ சக்தி திட்டத்தின் கீழ் 6 தொழிற்துறை - நிலை நுண்செயலிகளின் முதல் குடும்பத்தை சென்னையின் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தினைச் சேர்ந்த கணினி அறிவியலாளர் உருவாக்கியுள்ளார்.



- ❖ 300 சில்லுகளை (Chips) கொண்ட ஆரம்ப நிலைத் தொகுதி ரைஸ்க்ரீக் என்று பெயரிடப்பட்டுள்ளது. இது அமெரிக்காவின் ஓரிகானில் உள்ள Intel-ன் வசதியில் Linux இயங்கு முறையை இலவசமாக இயக்குவதற்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ சக்தி திட்டம் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் துவக்க முயற்சியாக 2014-ல் தொடங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் ஒரு பகுதிக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தினால் நிதி வழங்கப்படுகிறது.

- அவர்களின் இந்த வடிவமைப்பு திறந்த ஆதாரம் ஆகும். மேலும் மற்றவர்களால் இவ்வடிவமைப்பை ஏற்றுக்கொள்ள முடியும்.
- 350 MHz அதிர்வெண்ணுடன் NAVIC (இந்திய பிராந்திய வழிகாட்டும் செயற்கைக்கோள்) மற்றும் மின்னணுவின் Internet of Things (IOT) ஆகியவற்றின் தேவைகளை RISECREEK பூர்த்தி செய்யும்.

## உலகின் முதல் வெப்ப மின்கல ஆலை

- ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் N.சந்திரபாபு நாயுடு அமராவதியில் உலகின் முதல் வெப்ப மின்கல ஆலையினைத் தொடங்கி வைத்தார்.
- இது பாரத் ஆற்றல் சேமிப்பு தொழில்நுட்ப தனியார் நிறுவனத்தினால் (Bharat Energy Storage Technology Private Limited - BEST) தயாரிக்கப்பட்டது.
- இந்த வகையைச் சேர்ந்த மின்கலன்கள், ஆற்றல் உற்பத்திக்கான புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வளங்களை உயர்த்துதல் மற்றும் புதுப்பிக்க இயலா புதை படிம எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் உற்பத்தியினைச் சார்ந்திருத்தலை குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கார்பன் வெளிப்படுதலை குறைக்க உதவும் இத்தொழில்நுட்பம் மின்சார விநியோக அமைப்பினை சமநிலைப்படுத்துதல் மற்றும் உறுதிபடுத்துவதற்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- அதிக ஆற்றல் அடர்த்தி சேமிப்பு (High Energy Density Storage - HEADS) என்றறியப்படும் இச்சாதனம் 2016-ல் டாக்டர் பட்ரிக் க்ளென் என்பவரால் கண்டறியப்பட்டு காப்புரிமை பெற்ற தொழில்நுட்பமாகும்.

## முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் ஒலிம்பிக்ஸ்

- அனைத்து அரங்குகளையும் சுற்றி பாதுகாப்பை அதிகரிப்பதற்காக முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் முதல் ஒலிம்பிக் போட்டி டோக்கியோவில் 2020-ல் நடைபெறவிருக்கிறது.
- இதற்காக, ஒலிம்பிக் போட்டிகளில் செயல்படுத்தப்படும் இந்த வகையான முதலாவது அமைப்பை மேம்படுத்த விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் ஜப்பானின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு முன்னணி நிறுவனமான NEC உடன் ஒப்பந்தம் செய்துள்ளனர்.
- உலகத்தில் உள்ள மற்ற அமைப்புகளுடன் ஒப்பிடும் போது இத்தொழில்நுட்பம் ஆனது முன்பே பதிவு செய்யப்பட்ட புகைப்படத்துடன் முகத்தை 0.3 வினாடிகளில் பொருத்தி தெளிவுபடுத்தி விடும். இது மற்ற அமைப்புகளை விட வேகமான அமைப்பு ஆகும்.


## சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தில் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை
  - ஏலத்திற்கான தகவல் மேலாண்மை அமைப்பு (Bidder Information Management System - BIMS)
  - பூமி ராசி, பொது நிதி மேலாண்மை அமைப்பு இணைப்பு (Public Financial Management System)

  ஆகிய இரண்டு தகவல் தொழில்நுட்ப திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

- ஏல முறைகள் தொடர்பான முந்தைய கட்டமைப்பு முறைகள் மற்றும் நில கையகப்படுத்துதல் ஆகியவற்றை துரிதமாக்கிட இது எண்ணுகிறது.
- தேசிய நெடுஞ்சாலைப் பணிகளில் பங்குபெறுவதற்கான EPC முறையிலான ஒப்பந்தங்களை அடைவதற்கான ஏலதாரர்களின் தகுதிகளை முறைப்படுத்தும் அமைப்பு – BIMS
- பூமி ராசி என்ற இணைய வாயில் தேசிய தகவலியல் மையம் மற்றும் மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது. இது நாட்டின் ஒட்டுமொத்த வருவாய் தரவுகளையும் உள்ளடக்கியது.
- பூமி ராசியுடன் பொது நிதி மேலாண்மை அமைப்பை இணைத்தல் – அனைத்து பயனாளிகளுக்கும் நேரடியாக நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான நஷ்ட ஈடு முறைப்படுத்துவதற்கான ஒரு முக்கிய செயல்முறையாகும்.

## ஆன்ட்ராய்ட் 9.0 பதிப்பின் Pie பதிப்பு வெளியிடப்படுதல்




- கூகுள் ‘பை’ (Pie) எனப் பெயரிடப்பட்ட ஆன்ட்ராய்ட் 9.0 என்பதின் பதிப்பினை கூகுள் அலுவல்பூர்வமாக வெளியிட்டுள்ளது. இது பயனாளிகளின் டிஜிட்டல் நலனிற்காக செயற்கை நுண்ணறிவு முறையை ஆன்ட்ராய்டுடன் இணைக்கப்பட்டதாக இருக்கும்.
- இப்பதிப்பு, ஆன்ட்ராய்டின் ஓரியோ முறைக்கு அடுத்து வெளியிடப்படுகின்றது.
- இது செயலிகளை முன்னுரிமைப்படுத்தி, மின்கல சக்தியை அதிகப்படுத்துவது என்ற மின்கல தகவமைப்பு வசதியை உள்ளடக்கியதாக இருக்கும்.
- ஐபோன்-X என்ற மாதிரியில் உள்ள தேய்க்கும் வசதியைப் போல் இயங்கு தளத்தில் சுலபமாக இயங்கிட ஒரு புதிய சைகை அடிப்படையிலான இடைமுக வசதியையும் இது அறிமுகம் செய்கின்றது.
- இது தற்போதைக்கு கூகுளுக்கு சொந்தமான பிக்சல் மாதிரிகளில்

வெளியிடப்பட்டிருக்கின்றது. மற்ற கைபேசி மாதிரிகளில் இந்த வருடக் கடைசியில் வெளியிடப்படும்.

## நிர்யாத் மித்ரா கைபேசி செயலி

- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகம் நாட்டில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கென்று நிர்யாத் மித்ரா என்ற கைபேசி செயலியை வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த செயலியானது நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்கள் சங்கமான இந்திய ஏற்றுமதி சங்கத்தினர்கள் கூட்டமைப்பால் (Federation of Indian Export Organisation – FIEO) வடிவமைக்கப்பட்டது.
- FIEO என்பது வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் இந்திய தொழில்முனைவோர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் உதவிடுவதற்கு பொறுப்பானதாக இருக்கும் இந்தியாவின் தலைமை வர்த்தக மேம்பாட்டுச் சங்கமாகும்.
- இது 1965ம் ஆண்டு புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டு, வர்த்தகத்துறை அமைச்சகத்தாலும் தனியார் வர்த்தக மற்றும் தொழிற்துறையாலும் இணைந்து ஏற்படுத்தப்பட்டது.

## பல தரப்பு பண வழங்கீடு ஏற்பு கருவி

- இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி வியாபாரிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை சுலபமாக்கிட தனது பல தரப்பு பண வழங்கீடு ஏற்பு கருவியை (Multi Option Payment Acceptance Device - MOPAD) வெளியிட்டு இருக்கின்றது.
- இது ஒரே நேரத்தில் வியாபாரிகளுக்கு வர்த்தகம் செய்தலை எளிதாக்கிடவும் நுகர்வோர்களுக்கு டிஜிட்டல் வசதியை ஏற்படுத்திடவும் எண்ணுகின்றது.
- இது வாடிக்கையாளர்களை அட்டைகள், பாரத் QR Code, UPI மற்றும் SBI Buddy (மின்னணு பணப்பை) போன்றவை மூலமாக ஒற்றை விற்பனைப் பகுதி முனையத்தின் மீது பணம் செலுத்துதலை ஏற்படுத்திட இயலச் செய்யும்.
- இது வியாபாரிகளுக்கு பல தரப்புகளிலிருந்து வரும் பரிவர்த்தனைகளை முறைப்படுத்திட உதவிடும் வகையில் பலதரப்பு இயந்திரங்களை நீக்கிவிடும்.

## சீனாவின் முதல் அதிவேக விமானம்

- சீனா தனது முதல் அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட அதிவேக “அலை ஏறி” (Waverider) விமானம் ஷிங்காங் -2 (Starry sky – 2) என்ற விமானத்தை வெற்றிகரமாக சோனை செய்துள்ளது.
- “Waverider” வளிமண்டலத்தில் பறக்கக்கூடிய ஒரு விமானம் ஆகும். இது தனது அதிவேகத்தினால் காற்றுடன் உருவாக்கப்படும் அதிர்வலைகளை அதிக வேகத்தில்

பறக்க பயன்படுத்தும் ஒரு விமானம் ஆகும்.


- சமீபத்தில், அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகியவை இதே போன்ற சோதனைகளை மேற்கொண்டுள்ளன.
- இந்த அதிவேக Waverider விமானம் சீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்துடன் இணைந்து சீன அரசினால் இயக்கப்படும் விண்வெளி காற்றியக்கவியல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும்.
- இது சாதாரண மற்றும் அணு ஆயுதங்கள் இரண்டையும் சுமக்கக் கூடியதாகும்.
- இதன் அதிவேகம் மற்றும் கணிக்க இயலா வீச்சினால் சமீபத்திய எந்தவொரு ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்புக்குள்ளேயும் ஊடுருவும் திறன் உடையதாகும்.

## மத்தியப் பிரதேச ஊழியர்களுக்கு GPS பொருத்தப்பட்ட கைக்கடிகாரம்

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் நகராட்சி நிறுவனம் தனது 10,000 ஒற்றை பணியாளர்களை கண்காணிப்பதற்காக புவியிடங்காட்டி (GPS) பொருத்தப்பட்ட கைக்கடிகாரங்களை வழங்கியுள்ளது.
- நாட்டில் இம்மாதிரியான முயற்சி எடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

## கேமியோஸ் (Cameos)

- புதிய காணொளி அடிப்படையிலான 'கேமியோஸ்' என்றழைக்கப்படும் வினா விடை செயலியினை கூகுள் தனது செயலி களஞ்சியத்தில் தொடங்கியுள்ளது.
- இது மக்களை தங்களைப் பற்றிய வினாக்களுக்கு விடையளிக்க வைத்து அந்த விடைகளை நேரடியாக கூகுளில் பகிர்கிறது.
- இந்த செயலி பிரபலமானவர்கள் மற்றும் கூகுள் தேடலில் அதிகமாக தேடப்படும் பொது மனிதர்கள் ஆகியோரை குறி வைக்கிறது.




- இந்த கேமியோஸ் செயலியுடன் மற்ற இணையதளங்களில் விடையை வெளியிடுவதற்கு


பதிலாக ரசிகர்களின் வினாக்களுக்கு தங்களது சொந்த குரலிலேயே பதிலளிக்க பிரபலங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

## அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க தகவு

- ஆராய்ச்சி மேற்கொள்ளும் அமைப்புகளினை பற்றிய தகவல்களை கண்காணிப்பதற்கு "இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க தகவினை" மத்திய அறிவியல் அமைச்சகத்தின் பிரிவான விக்யான் பிரசார் தொடங்கியுள்ளது.
- இந்தத் தகவு, இந்தியாவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களைப் பற்றி காண்பிப்பதற்கு தொடங்கிய இணையதள அடிப்படையிலான அறிவியல் ஒளியலை வரிசை (Channel) India Science (indiascience.in) என்பதனை பின்பற்றுகிறது.
- விக்யான் பிரசார், இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பாகும்.

## அதிக தூரத்தில் உள்ள கதிர்வீச்சு (ரேடியோ) பால்வெளி மண்டலம்

- பூனாவைச் சேர்ந்த வானியலாளர்கள் இந்திய தொலைநோக்கியான மிகப்பெரிய மீட்டர் அலை ரேடியோ தொலைநோக்கியான GMRT ஐ (Giant Metre Wave Radio Telescope - GMRT) பயன்படுத்தி இதுவரை அறியப்படாத அதிக தூரத்தில் உள்ள பால்வெளி மண்டலத்தினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது 12 பில்லியன் ஒளி ஆண்டு தூரத்தில் அமைந்துள்ளது. கதிர்வீச்சு (ரேடியோ) பால்வெளி மண்டலம் அண்டத்தில் ஒரு அரிதான பொருள் ஆகும்.




- பிரபஞ்சம் தற்போதைய வயதில் எப்பொழுது 7 சதவீதமாக இருந்ததோ அந்தக் காலத்தைச் சேர்ந்தது இந்த கதிர்வீச்சு பால்வெளி மண்டலம்.
- GMRT என்பது 45 மீட்டர் விட்டம் கொண்ட முழு நீள ஒட்டமான பரவளைய ரேடியோ தொலைநோக்கியாகும்.
- இது ரேடியோ வானியற்பியலுக்கான தேசிய மையத்தினால் செயல்படுத்தப்படுகிறது.
- இந்த பால்வெளி மண்டலத்தின் தூரமானது ஹவாயில் உள்ள ஜெமினி வட தொலைநோக்கி மற்றும் அரிசோனாவில் உள்ள பெரிய நீள்தூர தொலைநோக்கி ஆகியவற்றால் கணக்கிடப்பட்டது.

## ஒளி ஊடுருவும் தன்மையுடைய மீத்திறன் - காப்பு கூழ்மம் உருவாக்கம்

- அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஏரோஜெல் (Aerogel) ஆனது பீர் தயாரிப்பின்போது வரும் கழிவுப் பொருட்களிலிருந்து உருவாக்கப்பட்ட வெப்ப எதிர்ப்பு திறனுடைய மீத்திறன் காப்புக் கூழ்மம் ஆகும். இது சந்திரன் அல்லது செவ்வாய் போன்ற புவிக்கு அப்பாலான வாழ்விடங்களில் பசுமை வீடு போன்ற வாழ்விடங்களை உருவாக்க உதவும்.
- மேலும் பூமியில் உள்ள கட்டிடங்களில் மிகப்பெரிய அளவில் ஆற்றல் செலவுகளைக் குறைக்கவும் இது உதவும். மேலும் சாளரங்கள், புவிக்கு அப்பாலான வாழ்விடங்களை உருவாக்கவும் இது உதவும்.
- இது வெப்ப காப்பு பொருள் மற்றும் உள் சக்தி சேமிப்பு மூலம் சூரிய ஒளி ஆற்றலை அறுவடை செய்ய உதவுகிறது. இதனால் குறிப்பாக செவ்வாய் அல்லது சந்திரனில் வெப்ப நிலையின் மிகப்பெரிய அலைவுகளிலிருந்து பாதுகாக்கிறது.

## NPCI – UPI 2.0

- இந்தியாவின் தேசியப் பண வழங்கீடுகள் நிறுவனமானது (National Payments Corporation of India - NPCI) ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகத்தின் (UPI – Unified Payment interface) மேம்படுத்தப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகம் 2.0-ஐத் தொடங்கியுள்ளது.
- ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகம் 2.0-ல் உள்ள அம்சங்களாவன:
  - பயனர் வியாபாரிக்கு பணம் செலுத்துவதற்கு முன்பாக வியாபாரி அனுப்பிய விலைப் பட்டியலை சரிபார்க்க முடியும்.
  - பயனர் ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகத்துடன் மிகைப்பற்று கணக்கை இணைக்க முடியும்.
  - பயனர் ஒரேயொரு முறை பயன்படுத்தக் கூடிய ஆணைகளை உருவாக்க முடியும். பயனர் பின் தேதியில் பண வழங்கீடுகளுக்காக பரிமாற்றங்களின் முன் அங்கீகாரத்தைப் பெற முடியும்.
  - பயனர் கையெழுத்திடப்பட்ட QR கோடுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் பண வழங்கீட்டை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் QR சேதமடைவதைத் தடுக்க முடியும்.
- UPI என்பது ஒரு குறிப்பிட்ட வங்கியின் பல்வேறு வங்கிக் கணக்குகளையும் ஒற்றைக் கைபேசிச் செயலி மூலம் கட்டுப்படுத்தும் அமைப்பு ஆகும். UPI என்பது பணவழங்கீடுகள் அமைப்பு ஆகும்.
- ஏப்ரல் 2016-ல் இந்தியாவின் தேசிய பண வழங்கீடுகள் நிறுவனம் UPI-ஐ தொடங்கியது.

## ATGM ஹெலினா வெற்றிகரமாக பரிசோதிப்பு

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, ஹெலிகாப்டரில் இருந்து ஏவப்படும் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை (Anti Tank Gudied Missile - ATGM) பொக்ரான் வரம்பில் இந்திய இராணுவ

ஹெலிகாப்டரில் இருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

- இதன் ஆயுத அமைப்பு அதன் முழு எல்லை வரை பரிசோதிக்கப்பட்டது.
- ஹெலினா என்பது ஹெலிகாப்டரில் இருந்து ஏவப்படும் NAG பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை பதிப்பு ஆகும். இது ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டு ஏவுகணைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (IGMDP) கீழ் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும்.
- இது இந்தியாவின் அரசுக்கு சொந்தமான ஒரே ஏவுகணை தயாரிப்பாளரான பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் ஆல் தயாரிக்கப் பட்டது.



- ஹெலினா ஆனது உலகின் மிக மேம்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையாகும்.
- இது ‘Fire and Forget’ எனும் கோட்பாட்டின் படி செயல்படும். மேலும் இது ஏவப்படும் முன் பூட்டப்படும் முறையில் செயல்படுகிறது. இதன் செயல்பாட்டு வரம்பு 7-10 கி.மீ. (வானில் ஏவப்பட்ட பிறகு) ஆக உள்ளது.

## திறம் வாய்ந்த வான்வளிக்கள எதிர்ப்பு ஆயுதம் (SAAW) - வெற்றிகர சோதனை

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மித எடை கொண்ட மென்சரிவு (Glide) குண்டான திறம் வாய்ந்த வான்வளிக்கள எதிர்ப்பு ஆயுதத்தை (SAAW- Smart Anti Airfield Weapon) இந்திய விமானப் படை விமானத்திலிருந்து தூக்கி எறிந்து DRDO ஆனது வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- SAAW திட்டமானது இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்திலேயே தயாரிக்கப்படும் வான்வெளிக்கள எதிர்ப்பு ஆயுதத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான ஒப்புதலை மத்திய அரசாங்கம் செப்டம்பர் 2013-ல் வழங்கியது.
- இந்திய விமானப் படை (IAF - Indian Air Force) மற்றும் இம்ராத் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து மத்திய நிறுவனமான பாதுகாப்பு ஆராயச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO - Defence Research and Development Organisation) இதை உள்நாட்டிலேயே தயாரித்துள்ளது.
- SAAW என்பது நீண்ட தூரத்திற்கு மிதமான எடை கொண்ட உயர் துல்லியத் தன்மையுடைய வழிகாட்டும் வான்வளிக்கள எதிர்ப்பு ஆயுதமாகும்.

## கலப்பு கோதுமை மரபணு கண்டுபிடிப்பு

- சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு முதன்முறையாக கோதுமை மரபணுவை கண்டுபிடித்துள்ளனர். இக்குழுவில் இந்தியாவைச் சேர்ந்த 18 விஞ்ஞானிகள் இடம் பெற்றுள்ளனர்.
- இந்த கண்டுபிடிக்கப்பட்ட மரபணுவானது முழுமையான கோதுமை மரபணுவின் 94 சதவீதத்தைக் (14.5 Gigabases) கொண்டுள்ளது.
- இத்திட்டத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித் தொழில் துறையினால் (Department of Biotechnology) நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- ரொட்டிக் கோதுமையானது கலப்பு ஹெக்சாபுளாய்டு மரபணுவைக் கொண்டுள்ளது. இது அரிசி மரபணுவை விட 40 மடங்கு பெரியதாகவும், மனித மரபணுவை விட 5 மடங்கு பெரியதாகவும் உள்ளது.
- உயர்தரம் கொண்ட குறிப்புரை மரபணுவானது பருவநிலை மாற்றத்திற்கு தாக்குப் பிடிக்கும் கோதுமை வகைகளின் விளைச்சலை அதிகப்படுத்த உதவும். இது வளர்ந்து வரும் உலக மக்கள் தொகையின் உணவுப் பிரச்சனைக்கு தீர்வு காணும். மேலும் இது உலக உணவுப் பாதுகாப்பு பிரச்சனைக்கு உதவும்.


## உலகின் அதிக தேய்மான எதிர்ப்பு உலோகக் கலவை

- சான்டியாவின் தேசிய ஆய்வகத்தைச் சேர்ந்த அமெரிக்க அறிவியலாளர்களால் அதிக வலிமையுள்ள எஃகுவைக் காட்டிலும் 100 மடங்கு நிலையான பிளாட்டினம்-தங்க உலோகக் கலவையை உருவாக்கியுள்ளனர்.
- இது நீலக்கல் மற்றும் வைரம் ஆகியவற்றின் வகுப்பைச் சேர்ந்தது.
- இந்த உலோகக் கலவையிலிருந்து ஒரு இணை டயர்கள் செய்யப்பட்டால் அவை தேய்மானமடையும் முன் பூமியை 500 முறை சுற்றி வர முடியும் எனக் கூறப்படுகிறது.

## நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணை

- இந்தியா தனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது அணுஆயுதத் திறன் கொண்ட நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணையை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இந்தியா கடந்த 20 வருடங்களாக இதற்கான பணியில் ஈடுபட்டு வந்தது.
- விசாகப்பட்டினம் கடற்கரையில் உள்ள உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அணு ஆயுதத் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பலான INS அரிஹந்த்திலிருந்து இரகசியமாக இந்த ஏவுகணை ஏவப்பட்டது.

- B-05 என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட இந்த ஏவுகணை இந்திய விமானப் படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஏவுகணையானது 10 மீ நீளமும் 750 கிலோ மீட்டர் சென்று தாக்கும் திறனும் கொண்டது. இந்த ஏவுகணை 10 டன்கள் எடையைக் கொண்டுள்ளது.



- இந்த வெற்றிகரத் திட்டத்தின் மூலம் நிலம், காற்று மற்றும் கடலுக்கடியிலிருந்து அணு ஆயுதத் திறன் கொண்ட ஏவுகணையை ஏவும் திறன் பெற்ற ஆறு நாடுகளின் பிரத்யேகமான சங்கத்தில் இந்தியா இணைந்துள்ளது.
- மற்ற நாடுகள் : ரஷ்யா, அமெரிக்கா, பிரான்சு, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் சீனா.

## நீர் மறுசுழற்சி ஆராய்ச்சி நிறுவனம்

- கரக்பூர் இந்திய தொழில்நுட்பக் கழகமானது (IIT) நீர்வளங்களை திரும்ப நிறைவாக்கவும் புத்துயிர் பெறச் செய்யவும் நீர் மறுசுழற்சி ஆராய்ச்சி மையத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.
- இது இரண்டு முன்னாள் மாணவர்களான அனீஷ் ரெட்டி & ஆதித்யா சௌபே ஆகியோரால் ஆரம்ப நிதி அளிக்கப்படுவதையடுத்து ஆதித்யா சௌபே நீர் மறுசுழற்சி ஆராய்ச்சி மையம் என பெயரிடப்பட்டுள்ளது.
- நகர்ப்புற இந்தியா எதிர் நோக்கும் இரண்டு முக்கியமான சிக்கல்களான கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுத்தமான குடிநீர் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை கையாள்வதே இம்மையத்தின் நோக்கங்கள் ஆகும்.

## குறைந்த செலவு கொண்ட வெளியேற்ற உமிழ்வு


- ஐஐடி – மெட்ராஸின் ஆராய்ச்சியாளர்கள் டீசல் வெளியேற்ற உமிழ்வு கட்டுப்படுத்தியை வடிவமைத்துள்ளனர்.
- பயன்பாட்டில் இருக்கும் பழைய டீசல் வாகனங்களின் வால்குழலுடன் இந்த வெளியேற்ற உமிழ்வு கட்டுப்படுத்தி இணைக்கப்பட்டுள்ளது.
- டீசல் வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுக்களை குறைப்பதற்காக இந்த கட்டுப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ரீமிக்ஸ் – உள்ளுடல் GPS

- உடலின் உள்ளேயுள்ள உள்வைப்புகள் மற்றும் கட்டிகளின் இடங்களை துல்லியமாக கண்டறியும் கம்பியில்லா 'உள்ளுடல் GPS' அமைப்பை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் (MIT – Massachusettes Institute of Technolgy) ஆராய்ச்சியாளர்கள் இந்த அமைப்பிற்கு 'ரீமிக்ஸ்' (ReMix) என பெயரிட்டுள்ளனர். மேலும் இது சென்டிமீட்டர் (Cm) அளவிலான துல்லியத்துடன் உள்வைப்புகளை எளிதில் கண்டறிவதற்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- நிகழ்நேர செயல்பாட்டு மருத்துவத் தகவல்களை துல்லியமாக வழங்காதது இந்த அமைப்பின் பிரதான குறைபாடாகும்.

## சந்திரனில் உறைந்த நீர் படிவுகள்

- சந்திரயான் – I விண்கலத்தின் தரவுகளைப் பயன்படுத்தி நாசா விஞ்ஞானிகள் நிலவின் துருவ மண்டலங்களின் இருண்ட மற்றும் குளிர்ந்த பகுதிகளில் உறைந்த நீர் படிவுகள் இருப்பதை உறுதி செய்துள்ளனர்.
- புதிதாக கண்டறியப்பட்டுள்ள உறைநீர் படிவுகள் பெரும்பாலும் துருவப்பகுதியில் அதிகபட்சமாக 156 டிகிரி செல்சியஸ் (-250 டிகிரி பாரன்ஹீட்) அளவை மீறி வெப்பநிலை செல்லாத முகப்பு பள்ளங்களின் நிழற்பகுதியில் அமைந்துள்ளன.




- சந்திரனின் சுழற்சி அச்சின் மிகச் சிறிய சாய்வு காரணமாக சூரிய ஒளியானது இந்த பகுதியை அடைவதில்லை.
- அக்டோபர் 22, 2008ல் ஏவப்பட்ட சந்திரயான் – I ஆனது இந்தியாவின் சந்திரனுக்கான முதல் திட்டமாகும்.

## CERT-In அறிக்கை

- இந்திய கணினி அவசரகால மீட்பு நிறுவனத்தின் (Indian Computer Emergency Response Team) சமீபத்திய அறிக்கையின் படி இந்திய அலுவலக இணைய தளங்களில் அதிகப்படியான

இணைய தாக்குதல்கள் சீனா, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் இருந்து நடத்தப்படுகின்றன.




- ❖ மொத்த இணைய தாக்குதல்களில் சீனாவானது 35% என்ற மிகப்பெரிய அளவில் இந்திய அதிகாரப்பூர்வ இணையதளங்கள் மீது தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா (17%), ரஷ்யா (15%), பாகிஸ்தான் (9%), கனடா (7%) ஆகியன உள்ளன.
- ❖ இந்த அறிக்கையானது தேசிய பாதுகாப்பு சபையின் செயலகத்திற்கும் (National Security Council Secretariat) பிற பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.
- ❖ CERT-In ஆனது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தகவல் தொழில்நுட்ப துறையின் கீழ் செயல்படும் தகவல் தொழில்நுட்ப (இணையம்) பாதுகாப்பிற்கான முதன்மை நிறுவனமாகும்.
- ❖ 2004ல் நிறுவப்பட்ட இது அழிவு மற்றும் ஊடுருவு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவின் இணையவெளி மற்றும் மென்பொருள் உட்கட்டமைப்பைப் பாதுகாக்கிறது.

## 5G வழிகாட்டும் குழு - AJ பால்ராஜ்

- ❖ ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் AJ பால்ராஜ் தலைமையிலான 5G வழிகாட்டும் குழுவானது தனது அறிக்கையினை தொலைத் தொடர்புத் துறையிடம் (DOT-Department of Tele Communication) சமர்ப்பித்தது.
- ❖ 5G-ஐ (ஐந்தாம் தலைமுறை) பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைப்பதற்காக 2017-ஆம் ஆண்டு செப்டம்பரில் மத்திய அரசாங்கம் இக்குழுவை அமைத்தது.
- ❖ இதன் நோக்கம் கம்பியில்லாத் தொழில்நுட்பத்தின் அடுத்த தலைமுறைக்காக உலகத் தரங்களை வரையறுப்பதற்கான செயல்முறையில் பங்கெடுப்பதை ஊக்குவிப்பதாகும்.
- ❖ இந்தியாவில் 5G-ஆனது வணிக ரீதியாக 2020-ல் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 5G-ன் பொருளாதாரத் தாக்கமானது $1 டிரில்லியனைவிட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இந்தியாவில் 5G-ஐ பயன்படுத்துதலை தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடு அடிப்படையில் மூன்று நிலைகளாக வகைப்படுத்த இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## ஐரோப்பிய காற்று அளவு செயற்கைக்கோள்

- ❖ கிரேக்க புராணங்களில் காற்றின் பாதுகாவலரின் பெயரான 'ஏயலஸ்' எனப் பெயரிடப்பட்ட செயற்கைக்கோளானது ஐரோப்பாவால் பிரெஞ்சு கயானாவிலிருந்து ஏவப்பட்டது.

- இந்த செயற்கைக் கோளானது பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தின் கீழ்மட்ட 30 கி.மீ. அளவில் காற்றை அளவிடும்.
- மேம்பட்ட லேசர் அமைப்பான 'டாப்ளர் காற்று லைடார்' (Doppler wind lidar) என்ற ஒற்றைக் கருவி இந்த செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டுள்ளது.
- இது சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பேரழிவு நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA – European Space Agency) ஆகியவற்றின் கூட்டு முயற்சியான 'கோபர் நிக்கஸ் திட்டத்தின்' ஒரு பகுதியாகும்.
- இது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்திற்கான ஏரியன் ஸ்பேஸின் 50வது ஏவுதல் ஆகும்.
- ஏயலஸ் ஆனது ESA-வின் திட்டமிட்ட 5வது புவி ஆய்வுப் பயணமாகும்.

## பேப்லெஸ் சில்லு வடிவமைப்பு காப்பகம்

- சில்லு வடிவமைப்புத் துறையில் புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கு உதவுவதற்காக பிரத்யேகமான பேப்லெஸ் சில்லு வடிவமைப்பு காப்பகத்தை (Fabless Chip Design Incubator - FabCI) ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (IIT – Indian Institute of Technology) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் இலக்கு உலக அளவில் போட்டியிடக்கூடிய மற்றும் அறிவுசார் சொத்து உரிமைகளை உருவாக்கக்கூடிய குறைந்தது 50 'இந்தியாவில் தயாரிக்கும்' சில்லு வடிவமைப்பு நிறுவனங்களை ஒன்று திரட்டுவதாகும்.
- இந்தியாவில் பேப்லெஸ் சில்லு வடிவமைப்பு காப்பகத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும். இது சில்லு வடிவமைப்பில் ஈடுபடும் புதிய நிறுவனங்களை சீர்படுத்துவதற்கான சூழலை உருவாக்குவதில் கவனத்தை செலுத்தும்.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (Meity - Ministry of Electronic and Information Technology) FabCI-ற்கு நிதி அளிக்கும். கேடன் டிசைன்ஸ் சிஸ்டம்ஸ், இன்க் மற்றும் 'மென்டோர் கிராபிக்ஸ்' ஆகிய நிறுவனங்கள் இதன் தொழில்நுட்ப பங்கீட்டு நிறுவனங்களாகும்.

## OSIRIS -Rex விண்கலம்

- நாசாவின் குறுங்கோள் விண்கலமான OSIRIS-Rex ஆனது அதன் இலக்கான பெனு (Bennu) குறுங்கோளின் முதல் படங்களைப் பிடித்துள்ளது. மேலும் தனது இரண்டு வருட பயணத்திற்குப் பிறகு அதன் இலக்கை நோக்கிய இறுதிக்கட்ட அணுகுமுறையைத் தொடங்கியுள்ளது.
- தோற்றங்கள், நிறமாலை விளக்கம், வளங்களைக் கண்டறிதல், பாதுகாப்பு - பாறைப்படிவு ஆய்வாளர் என்பதன் சுருக்கமே OSIRIS-Rex ஆகும்.
- OSIRIS-Rexல் உள்ள பாலிகேம் (Polycam) கேமராவான OCAMS மூலம் 2.1 மில்லியன் கி.மீ. தொலைவிலிருந்து குறிப்பிட்ட குறுங்கோளின் முதல் காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன.
- OSIRIS-Rex ஆனது கரிமச்சத்துள்ள குறுங்கோளான பெனு 101955ஐ ஆராய்வதற்காக 2016

செப்டம்பரில் ஏவப்பட்டது.

- இது நாசாவின் முதல் குறுங்கோள் மாதிரியாக்கத் திட்டமாகும். மேற்பரப்புப் பகுப்பாய்வு, மாதிரிகளைச் சேகரித்தல் மற்றும் பூமிக்கு பாதுகாப்பாக அனுப்புதல் ஆகியவை இதன் பணிகளாகும்.
- பெனு ஆனது அப்பல்லோவில் உள்ள ஒரு சிறிய மலையின் அளவையொத்த, பூமிக்கு அருகில் உள்ள கரிச்சத்துடைய குறுங்கோளாகும். இது 1999 செப்டம்பரில் LINEAR திட்டத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

## நாசாவின் இரண்டு மெய்நிகர் யதார்த்தச் செயலிகள்

- பயனர்கள் பகட்டான அண்ட இடங்களின் முன்னால் நின்று சுயபடம் எடுப்பதற்காக நாசா இரண்டு மெய்நிகர் யதார்த்த செயலிகளை உருவாக்கியுள்ளது.
- இவை 1) நாசா சுயபடங்கள் 2) நாசாவின் வெளிக்கோள் சுற்றுலா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- நாசா சுயபடங்கள் செயலியின் மூலம் பயனர்கள் பல்வேறு அண்ட இடங்களின் முன்னால் நின்று மெய்நிகர் விண்வெளி ஆடைகளுடன் சுயபடங்கள் எடுக்க முடியும்.
- நாசாவின் வெளிக்கோள் சுற்றுலாச் செயலியானது பயனர்கள் டிராப்பிஸ்ட் - 1 கோள் அமைப்புகளுக்கு மெய்நிகர் வழிகாட்டு சுற்றுலாவாக அழைத்துச் செல்லும். இது ஏறத்தாழ 5 கோள்களுக்கு அழைத்துச் செல்லும்.
- நாசாவால் ஏவப்பட்ட ஸ்பிட்ஸர்7 விண்வெளி நோக்கியின் 15வது ஆண்டை நினைவு கூறும் விதமாக சுயபடங்கள் செயலி மற்றும் வெளிக்கோள் சுற்றுலா ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

## புதிய ஆன்லைன் தளம் - கெய்ல்

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் திறன் மேம்பாடு & தொழில் முனைவு அமைச்சர் புதிய ஆன்லைன் தளமான ww.gailonline.com ஐ அறிமுகப்படுத்தியுள்ளார்.
- நாட்டின் இயற்கை எரிவாயு துறையில் இதுபோல் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது கெய்ல் குழாய்களின் கீழ் இயற்கை எரிவாயு பரிமாற்ற சேவைகளை பொதுவான வழங்குநரில் எளிதாகவும், திறமையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் முன்பதிவு செய்யும் திறனை செயல்படுத்த உதவுகிறது.
- இது இந்தியாவில் ஒரே மையமாக அல்லது பரிமாற்ற வர்த்தக தளமாக எரிவாயு வர்த்தகத்தை எளிதாக்குவதன் முதல் படியாகும்.
- இது எரிவாயு நுகர்வோர் குழாய் திறன் முன்பதிவுகளை நிகழ்நேரத்தில் ‘முதலில் வருவோர்க்கு முதல் சேவை’ என்ற அடிப்படையில் முன் பதிவு செய்யும் வசதியை அளிக்கிறது.

## CBSE-ன் டிஜிட்டல் கல்வி களஞ்சியம்

- மத்திய மின் ஆளுகை பிரிவுடன் (e-Governance) இணைந்து மத்திய உயர்கல்வி வாரியமானது (Central Board of Secondary Education -CBSE) 'பரிணம் மஞ்சுஷா' (Parinam Manjusha) என்ற டிஜிட்டல் கல்விக் களஞ்சியத்தை உருவாக்கியுள்ளது.
- இது அண்மையில் கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த அல்லது கல்வி ஆவணங்களை இழந்தவர்களுக்கு டிஜிட்டல் முறையில் மதிப்பெண் பட்டியல், மாற்றுச் சான்றிதழ்கள் மற்றும் வெற்றி பெற்ற சான்றிதழ்கள் ஆகியவற்றை CBSE உடன் இணைந்த கேரள பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் டிஜிட்டல் களஞ்சியமாக செயல்படுகிறது.
- இந்தக் கல்விக் களஞ்சியமானது டிஜிலாக்கருடன் ஒருங்கிணைக்கப்பட்டது.
- மாணவர்கள் https://digitallocker.gov.in மற்றும் https://digitallocker.gov.in ஆகிய தளங்களுக்குச் சென்று பயனர் பெயர் / கடவுச் சொல்லைப் பயன்படுத்தி தங்களது கல்வி ஆவணங்களைப் பதிவிறக்கலாம்.
- இந்த டிஜிட்டல் கல்வி ஆவணங்கள் சி.பி.எஸ்.இ தேர்வுக் கட்டுப்பாட்டாளரால் டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்படுகின்றன. இவை தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்படி சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும்.
- இந்த ஆவணங்கள் QR குறியீடுகளை கொண்டிருக்கும். எனவே டிஜிலாக்கர் (DigiLocker) செயலியைப் பயன்படுத்தி ஆவணங்களின் நம்பகத் தன்மையை சரிபார்க்க இயலும்.

## புத்தாக்க ஆலோசனைக் குழு

- மத்திய அரசாங்கமானது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான பிரதம அமைச்சரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவில் 21 உறுப்பினர்கள் உள்ளனர். (PM-STIAC - Prime Minister's Science, Technology and Innovation Advisory Council)
- இதற்குமுன் செயல்பட்டு வந்த பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் அறிவியல் சார்ந்த ஆலோசனைக் குழுவிற்குப் பதிலாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழு அரசாங்கத்திற்கான முதன்மை அறிவியல் ஆலோசகர் K. விஜயராகவன் தலைமையில் செயல்படும்.
- இக்குழு அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம் தொடர்பானை ஆலோசனைகளை பிரதம அமைச்சருக்கு அளிக்கும்.
- மேலும் இக்குழு பிரதம அமைச்சரின் அறிவியல்சார்ந்த தொலைநோக்குப் பார்வை மீதான செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும்.
- இக்குழுவானது முக்கியமான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திட்டங்களை வகுத்தல் மற்றும் தக்க நேரத்தில் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவும். இக்குழு பல்துறை தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்க உதவும்.
- இக்குழு நகரத்தை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திரள்கள் உள்ளிட்ட அறிவியலில் "தனிச்சிறப்புத் திரள்" உருவாக்குவதற்கான ஆலோசனைகளை

மத்திய அரசிற்கு வழங்கும்.

- ❖ இக்குழுவின் தலைவர் உள்பட ஒன்பது உறுப்பினர்கள் உள்ளனர்.
- ❖ இந்த ஒன்பது உறுப்பினர்களைத் தவிர, மேலும் 12 பேர் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருக்கின்றனர்.
    - o அறிவியல், தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் கல்வி தொடர்பான 11 பதவிசார் செயலாளர்கள், மத்திய அமைச்சர்கள் இக்குழுவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்படுகின்றனர்.

## இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் – ஆராய்ச்சித் திட்டம்

- ❖ உலகம் முழுவதும் உள்ள மக்களை பாதுகாப்பதற்காக அடுத்த தலைமுறை இன்புளுயின்சா தடுப்பு மருந்தை தயாரிப்பதற்காக 'ஹாரிசான் 2020' (Horizon 2020) என்ற ஆராய்ச்சித் திட்டத்திற்கு இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கூட்டு சேர்ந்துள்ளன.
- ❖ இத்திட்டத்தின் கீழ், விலை குறைந்த மற்றும் ஏற்கத் தகுந்த இன்புளுயின்சா தடுப்பு மருந்து தயாரிக்கப்படவிருக்கிறது. பெருகிவரும் இன்புளுயன்சாவிற்கு எதிரான செயல்படுந்திறன், பாதுகாப்பு, நோய் எதிர்ப்பு சக்தியின் காலம், வினைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.




- ❖ இந்தத் திட்டத்தின் முடிவு அனைவருக்கும் சுகாதார மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நிலையான வளர்ச்சி இலக்கு – 3 ஐ அடைய உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ மேலும் இது இன்புளுயின்சா தொற்று ஏற்பட்டால் சிறப்பாக செயல்பட சர்வதேச சமூகத்திற்கு உதவும். மேலும் இது இந்தியாவின் தேசிய சுகாதார திட்டத்திற்கு ஊக்கமளிக்கும்.

## ரஷ்யாவின் புதிய இடைமறிப்பு ஏவுகணை சோதனை

- ❖ ரஷ்ய இராணுவமானது ரஷ்யாவின் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பிற்காக புதிய இடைமறிப்பு ஏவுகணையை சாரி - சகன் (கஜகஸ்தான் குடியரசு) என்ற இடத்திலிருந்து

வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- உலகில் எந்த ஒரு ஏவுகணையுடனும் ஒப்பிட இயலாத அளவிற்கு நொடிக்கு 4 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறனுடையது.
- எனவே எதிராளியின் ஏவுகணையை மிக உயரத்தில் மற்றும் பாதுகாப்பான இடத்திற்கு அப்பால் வெற்றிகரமாக அது இடைமறித்து அழிக்கும்.

## இராணுவப் பயிற்சி - வோஸ்டோக் 2018

- இரஷ்யா தனது மத்திய மற்றும் கிழக்கு இராணுவ மாகாணங்களில் 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 11 முதல் செப்டம்பர் 15 வரை இராணுவப் பயிற்சியான வோஸ்டோக் 2018-ஐ (கிழக்கு - 2018) நடத்தவிருக்கிறது.




- சாபேட் - 81 க்குப் (மேற்கு 8) பிறகு நடைபெறவிருக்கும் மிகப்பெரிய போர் பயிற்சி இந்த வோஸ்டோக் 2018 ஆகும். 1981-ல் அப்போதைய சோவியத் யூனியன் சாபேட் 81 - ஐ 1,00,000 முதல் 1,50,000 வீரர்களுடன் நடத்தியது.
- ரஷ்யாவின் இராணுவம், விமானப்படை, கப்பற்படை ஆகிய பிரிவுகளுடன் சீனா மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளும் இப்பயிற்சியில் பங்கேற்கவிருக்கின்றன.
- மேற்கு நாடுகள் மற்றும் நேட்டோ படைகள் இரஷ்யாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பு மற்றும் விரோதப் போக்கை கடைபிடித்து வருகின்றன. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இரஷ்யா இப்போர் பயிற்சியை நடத்தவிருக்கிறது.

## உலகின் சிறிய மருத்துவ இயந்திர மனிதன்

- மனிதக் கண்ணால் காண முடியாத உலகின் சிறிய மருத்துவ இயந்திர மனிதனை டெக்ஸாஸ் பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர்.
- இந்த இயந்திர மனிதன் 120 நானோ மீட்டர் அளவுடையது. இதன் சிறிய அளவு, வேகமான நிறுவன அறிக்கைகள் ஆகியவற்றிற்காக இது உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.
- இது உயிரியல் செல்களுடன் ஊடாடும் தன்மையுடையது. இது எதிர்காலத்தில் புற்றுநோய் மற்றும் அல்சைமர் நோய்களின் சிகிச்சைகளுக்கு உதவும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உயிரி எரிபொருள் கொள்கையை செயல்படுத்தும் முதல் மாநிலம்

- இந்தியாவில் மே 2018-ல் மத்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட உயிரி எரிபொருள்கள் மீதான தேசிய கொள்கையை செயல்படுத்தும் முதலாவது மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.
- இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கான ஒப்புதலை உயர் அதிகாரம்மிக்க உயிரி எரிபொருள் ஆணையம் வழங்கியுள்ளது.
- மேலும் உயிரி எரிபொருள் விதிகள் 2018-ஐ அரசாங்கம் வெளியிடும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் மாநில அரசாங்கம் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிக்கும். மாற்று எரிபொருள் மற்றும் ஆற்றல் வளங்கள் தொடர்பான துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க இத்திட்டத்தின் கீழ் உதய்ப்பூரில் சிறப்பு மையம் ஏற்படுத்தப்படும்.
- இத்திட்டம் உயிரி எரிபொருளை முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறை என்று வகைப்படுத்துகிறது. நிதி மற்றும் ஊக்கத்தொகை ஆகியவற்றை அளிப்பதற்காக ஒவ்வொரு வகையின் கீழும் உயிரி எரிபொருள்கள் இவ்வாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

## ஆழ்கடல் பணிக்கான செயல்திட்டம்

- மத்திய புவி அமைச்சகமானது ஆழ்கடல் பணிக்கான (Deep Ocean Mission) செயல்திட்டத்தை வெளியிட்டுள்ளது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக் கோள்களை வடிவமைத்தல் மற்றும் ஏவுவதில் வெற்றியடைவதைப் போல ஆழ்கடல் ஆராய்ச்சியை மேற்கொள்ள இச்செயல்திட்டம் முன்மொழிகிறது.
- இதன் கீழ் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன.
- அவையாவன
    - அலை ஆற்றலின் மூலம் உப்பகற்றுதல் நிலையம் மற்றும்
    - 6000 மீ வரையிலான ஆழத்திற்கு சென்று ஆய்வு செய்வதற்கான நீர் மூழ்கி வாகனம்
- பாலிமெட்டாலிக் திரளை (Polymetallic nodules) ஆய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் சர்வதேச கடற்படுகை ஆணையம் (United nations International Seebed Authority) மத்திய இந்திய கடல் பகுதியில் 1,50,000 கிலோ மீட்டர் வரையிலான இடத்தை இந்தியாவிற்கு ஒதுக்கியுள்ளது.
- கடற்படுகையில் உள்ள இந்த வகையான சிதறிக் கிடக்கும் பாறைகள் இரும்பு, நிக்கல், மாங்கனிசு மற்றும் கோபால்ட் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.


- இந்தப் பரந்த ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்து 10 சதவிகித அளவுக்கு இந்தத் திரளை மீட்டெடுத்தால் இந்தியாவின் ஆற்றல் தேவையானது அடுத்த 100 ஆண்டுகளுக்கு பூர்த்தி செய்யப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- மத்திய இந்திய கடல் பகுதியின் கடற்படுகையில் 380 மில்லியன் மெட்ரிக் டன்கள் பாலிமெட்டாலிக் திரள்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

## காற்றின் தர ஆய்வு - C40 காற்றின் தர வலையமைப்பு

- இந்தியப் பத்திரிக்கையான பீடியாட்டிரிக்ஸ் (Pediatrics)-ன் ஏப்ரல் மாத இதழ் வெளியீட்டின் படி நாள்பட்ட இருமலால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 1999ஆம் ஆண்டில் 8 சதவீதத்திலிருந்து 2017-ஆம் ஆண்டில் 21.25 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- உலகத்தில் பெரும்பாலான 23 சதவீத இறப்புகள் சுற்றுச்சூழல் மாசுபாடுகளுடன் தொடர்புடையன.
- இந்தக் தகவல்களை C-40 காற்றின் தர வலையமைப்பு தொடக்க சந்திப்பின் போது அறிவிக்கப்பட்டது. இந்த C-40 காற்றின் தர வலையமைப்பானது காற்றின் மாசுபாடுகளை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட உலக முன் முயற்சியாகும்.

## 2019 நிதியாண்டிற்குள் 5 நதிநீர் இணைப்பு திட்டங்கள்

- நீர்வள ஆதாரங்கள், நதி மேம்பாட்டு மற்றும் கங்கை நதி புனரமைப்பு அமைச்சர் நிதின் கட்கரி 5 நதிநீர் இணைப்பு திட்டங்கள் நடப்பு நிதி ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.




- ரூ.2 லட்சம் கோடி மதிப்புள்ள இத்திட்டம் உலக வங்கி மற்றும் ADB-யிலிருந்து நிதி உதவியினை பெறும்.

- இத்திட்டத்தினை தேசிய திட்டமாக அடையாளப்படுத்துவதற்கான இசைவினை அமைச்சரவை அதன் குறிப்பில் அளித்துள்ளது.
- மேலும்
    - கென் - பெட்வா
    - கோதாவரி - காவேரி
    - தபி - நர்மதா
    - டாமன் கங்கா – பின்ஜல்

    ஆகியவை 5 முன்னுரிமைத் திட்டங்களில் அடங்கும்.

## கங்கை புத்தாக்கத் திட்டத்தை கண்காணிப்பதற்கான குழு

- உத்தரப் பிரதேசத்தில் ஹரித்வாரிலிருந்து உனாவ் வரையிலான கங்கையின் புத்தாக்கத் திட்டத்தைக் கண்காணிப்பதற்காக அலகாபாத் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியின் தலைமையில் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயமானது அலகாபாத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் முன்னாள் நீதிபதி தலைமையில் குழு ஒன்றை அமைக்கக் கேட்டுக் கொண்டது. அதனடிப்படையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## மீள இயலாத கொதிப்பு இல்லமாக மாறும் பூமி

- சமீபத்திய ஆய்வின் படி, மீள இயலாத கொதிப்பு இல்லமாக மாறும் நிலை பூமிக்கு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. பாரீஸ் பருவநிலை மாற்றம் 2015 - ஒப்பந்தத்தின் படி அனைத்து இலக்குகளும் எட்டப்பட்டாலும் உலக வெப்பநிலையானது 4 முதல் 5 டிகிரி அதிகரிக்கும் என்று இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.
- 'கொதிப்பு நிலை பூமி' பருவநிலையானது தொழில் புரட்சிக்கு முந்தைய வெப்பநிலையை விட உலக சராசரியில் 4 முதல் 5 டிகிரி செல்ஷியஸ் அதிகமாக நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். கடல்மட்ட உயர்வு தற்பொழுது உள்ளதைவிட 10-60 மீட்டர் உயரம் அதிகரிக்கும்.
- தற்பொழுது, உலக சராசரி வெப்பநிலையானது தொழில் புரட்சிக்குப் பின்னர் 1 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. இது ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் 0.17 டிகிரி செல்ஷியஸ் என்ற அளவில் அதிகரித்து வருகிறது.
- கிட்டத்தட்ட 200 நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட 2015 - பாரீஸ் பருவ நிலை மாநாட்டின் முடிவில் உலக வெப்பமாதலை 1.5 - 2 டிகிரி செல்ஷியஸ்க்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்பது முன்பு மதிப்பீடு செய்ததை விட மிகக் கடினமாகும்.
- இந்த ஆய்வானது 10 இயற்கையான கருத்து செயல்முறைகளை கருத்தில் கொண்டுள்ளது. இது குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாகும் போது இவை யாவும் திடீர் மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் கூறுகள் ஆகும்.
- இந்தக் கருத்து செயல்முறைகளாவன

1) நிலத்தடி உறைபனியின் நிரந்தரமான உருகுதல்
2) வலுவிழக்கும் நில மற்றும் கடற்கார்பன் உமிழ்வி
3) கடற்படுகையிலிருந்து மீத்தேன் ஹைடிரேட்ஸின் இழப்பு
4) கடலில் பாக்டீரியாவின் சுவாசிப்பு அதிகரித்தல்
5) வன உயிரிழப்பு - அமேசான் காடுகள் உயிரிழப்பு
6) வடதுருவத்தில் பனிப்போர்வை/அண்டார்டிகா கடல் பனி/துருவ பனிப்படலம் ஆகியவை குறைதல்
7) ஆர்டிக்கின் கோடைக்கால கடற்பனி இழப்பு

## UNESCOவின் பட்டியலில் கஞ்சன்ஜங்கா உயிர்க்கோள இருப்பு

- உலகின் உயரமான உயிர்ச்சூழல் மையமான இந்தியாவின் கஞ்சன்ஜங்கா உயிர்க்கோள இருப்பு யுனெஸ்கோவின் உயிர்க்கோள இருப்புக்கான உலக பிணையத்திற்கான பட்டியலில் (World Network of Biosphere Reserve) இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தோனேஷியாவின் பலேம்பாங்கில் 2018ம் ஆண்டு ஜூலை 23 முதல் 27 வரை நடைபெற்ற யுனெஸ்கோவின் 30வது மாநாட்டில் மனிதன் மற்றும் உயிர்க்கோளத் திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பு குழுவானது கஞ்சன்ஜங்கா உயிர்க்கோள இருப்பை உயிர்க்கோள இருப்புகளுக்கான உலக பிணையத்திற்கான பட்டியலில் இணைத்துள்ளது.
- ஒட்டுமொத்தமாக இந்தியா 18 உயிர்க்கோள இருப்புகளை கொண்டுள்ளது. அதில் 11 சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டு அப்பட்டியலில் இணைக்கப்பட்டவை.
- மீதம் உள்ள 7 இருப்புகளும் உள்நாட்டளவில் உயிர்க்கோள இருப்புகளாக அங்கீகரிக்கப்பட்டவை.

## இந்தியாவின் அதிக மாசுபட்ட நகரம் - குருகிராம்

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (Central Pollution Control Board - CPCB) தனது காற்றுத்தர குறியீட்டில் (Air Quality Index - AQI) 62 நகரங்களில் குருகிராம் நகரினை இந்தியாவின் அதிக மாசுபட்ட நகரமாக அறிவித்துள்ளது.



- குருகிராமின் AQI மிகவும் மோசமான பிரிவில் சேர்க்கக்கூடிய அளவான 300-ஐ தாண்டியுள்ளது.
- துகள்மப் பொருள் 2.5-ன் (Particulate Matter - PM) உச்சநிலை 189 மைக்ரோ கிராம் /மீ$^3$க்கு உயர்ந்துள்ளது. அனுமதிக்கக் கூடிய வரம்பு 60 மைக்ரோகிராம் /மீ$^3$ஆகும்.
- அரேபிய புழுதிப் புயலின் உட்புகுதலை பெறக்கூடிய மற்றும் தூசுகளை பிடித்து வைக்கக்கூடிய அதிக ஈரப்பதம் கொண்ட இடத்தில்

அமைந்திருப்பதே இந்நகரத்தின் PM அதிகரிப்பதற்கு காரணமாகும்.

- 6 நகரங்கள் 'மோசம்'என்ற நிலையிலும், ஒரு நகரம் (குருகிராம்) 'மிகவும் மோசம்' என்ற நிலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- தானே மற்றும் பூனே ஆகிய இரண்டு நகரங்கள் 'நன்று' என்ற நிலையில் உள்ளன. 26 நகரங்கள் 'திருப்தி' என்ற நிலையிலும் 27 நகரங்கள் 'மிதம்' என்ற நிலையிலும் உள்ளன.

## வாகனங்களின் மீதான வண்ணக் கோடுடைய ஸ்டிக்கர்கள்

- வாகனங்களில் எந்த வகையான எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது என்பதை குறித்துக் காட்டுவதற்காக முப்பரிமாண படிம அடிப்படையிலான வண்ண ஸ்டிக்கர்கள் ஒட்டுவது தொடர்பான மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் கருத்தினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.
- இந்திய உச்சநீதிமன்றமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 30க்குள் தேசியத் தலைநகரமான தில்லியில் செல்லும் வாகனங்களின் மீது வண்ணமிடப்பட்ட ஸ்டிக்கர்களின் பயன்பாட்டை செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தெரிவித்தது.
- மேலும் வாகனங்கள் மீதான வண்ணமிடப்பட்ட ஸ்டிக்கரானது தில்லி மற்றும் தேசியத் தலைநகரப் பகுதி ஆகியவற்றிற்கு மட்டும் பொருந்தும். தலைநகரில் ஏற்படும் காற்று மாசுபாட்டைத் தடுப்பதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டது.
- இதற்கு ஒப்புதல் அளிப்பதன் மூலம் வாகனங்களை இயக்க பயன்படுத்தப்படும் எரிபொருளின் வகையை முப்பரிமாண படிம அடிப்படையில் வண்ணமிடப்பட்ட ஸ்டிக்கர்களை பயன்படுத்தி அறிவதை செயல்படுத்தும் இந்தியாவின் முதலாவது நகரம் தில்லி ஆகும்.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை முன்மொழிந்த இத்திட்டத்தின் படி.
    - லேசான நீல வண்ணமானது வாகனங்கள் பெட்ரோல் மற்றும் CNG - மூலம் இயங்குவதைக் குறிக்கும்.
    - ஆரஞ்சு வண்ண ஸ்டிக்கரானது வாகனங்கள் டீசல் மூலம் இயங்குவதைக் குறிக்கும்.


## RUCO

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI – Food Safety and standards Authority of India) பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை சேகரித்து அதனை உயிரிடீசலாக மாற்றுவதை செயல்படுத்துவதற்காக RUCO (Repurpose used cooking oil) என்னும் துவக்க முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்களுக்காக இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் தரங்கள் குறித்த அறிவிக்கையை வெளியிட்டது. இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டு ஒரு மாதம் கழித்து RUCO துவக்க முயற்சியைத் தொடங்கியுள்ளது




- FSSAI விதிகளின்படி,
    - மொத்த போலார் கலவைகளின் அதிகப்பட்ட அனுமதிக்கப்பட்ட அளவானது 25% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    - போலார் கலவைகளின் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாகவுள்ள சமையல் எண்ணெய் உட்கொள்ளுவதற்கு பாதுகாப்பற்றது.
- இதைத் தவிர, பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் விதிகளின் பயனுள்ள செயல்பாட்டை உறுதி செய்வதற்காக இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது இந்தியாவின் உயிரிடீசல் சங்கம் (BAI – Biodiseal Association of India) மற்றும் உணவு தொழிற்துறை ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுகிறது.

## எரிபொருள் பயன்பாட்டிற்காக பெட்ரோலிய கரி (Petroleum Coke – Pet Coke) இறக்குமதி



- வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அயல்நாட்டு வர்த்தகத்திற்கான இயக்குனர் அலுவலகம் எரிபொருளாக பயன்படும் பெட்ரோலிய கரியை இறக்குமதி செய்ய தடை விதித்துள்ளது.
- ஆனால் இவ்வலுவலகம் சிமெண்ட், சுண்ணாம்பு சூளை, கால்சியம் கார்பைட் மற்றும் வளிமயமாக்கல் போன்ற சில குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் மட்டும் அந்த கரியை மூலப்பொருளாக பயன்படுத்த இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்திருக்கின்றது.
- முன்பு புதுதில்லியைச் சுற்றி ஏற்படும் மாசுவை தடுப்பதற்காக உச்சநீதிமன்றம் (அக்டோபர் 2017) இந்த கரியின் பயன்பாட்டை தடை செய்ததையடுத்து ஏற்பட்ட பெட் கோக் (Pet Coke) தொடர்பான கொள்கை குளறுபடிகளால் இந்த குறிப்பிட்ட தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டன.

- இரண்டு வகையான பெட் கோக் கரிகள் தயாரிக்கப்படுகின்றன.
    - எரிபொருள் தரம் கொண்ட பெட் கோக் (80%)
    - எண்ணெய் சுத்திகரிப்பின் போதான நெருப்பிலிட்டு சாம்பலாக்கப்படும் பெட் கோக் (20%)
- பெட் கோக் சாதாரண கரியை விட அதிக மாசுபடுத்தி ஆகும். மேலும் இது சுற்றுப்புறத்திற்கும் சுகாதாரத்திற்கும் அதிக கேட்டை விளைவிக்கின்றது.
- இது மில்லியனுக்கு 74000 துகள்கள் என்ற அளவில் அபாரமான அளவிற்கு கந்தக துகள்களை கொண்டு வாகன மாசுக்களைக் காட்டிலும் அதிக அளவிற்கு ஆகாய வளிமண்டலத்தில் மாசுக்களை வெளியிடுகின்றது.

## ஃபால் ஆர்மி புழு (FAW)

- சமீபத்தில் தெலுங்கானாவில் கரீம் நகர், காம ரெட்டி, சங்கா ரெட்டி, மேடக் மற்றும் கட்வால் மாவட்டங்களில் உள்ள சில இடங்களில் கொடிய விவசாய பூச்சியான ஃபால் ஆர்மி புழுக்களின் தாக்குதல் காணப்பட்டது.
- இது பலவிதமான பயிர்களை தாக்கி அழிப்பவையாக இருந்தாலும் இவை இலைகளில் உள்ள இனிப்புத் தன்மை காரணமாக மக்காச்சோளம் வகைகளையே பெரிதும் விரும்புகின்றன.



- இந்த ஃபால் ஆர்மி புழு (அல்லது ஸ்போடொப்டெரா ஃப்ருகீபெர்டா) ஆனது லீபிடோப்ட்டா வரிசையின் ஒரு இனமாகும் மற்றும் இது ஒரு லார்வா நிலையில் உள்ள அந்துப் பூச்சி ஆகும்.
- பூச்சியின் ஆயுட்காலமானது 30 முதல் 60 நாட்கள் வரை இருக்கும். மேலும் ஒவ்வொரு தலைமுறையும் 400 கி.மீ. தூரம் இடம் பெயரும்.
- ஆப்பிரிக்காவில் உள்ள பல நாடுகளில் இது பெரிய அளவில் விவசாய இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
- இப்புழு நாட்டில் முதலில் கர்நாடகாவில் காணப்பட்டது பின்னர் தமிழ்நாட்டிற்கும் பரவியது.

## கேரளாவில் புயல் எச்சரிக்கை மையம்

- கேரளாவின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் புயல் எச்சரிக்கை மையமொன்று அமைக்கப்படுமென்று மத்திய புவி அறிவியல் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இது மேலும் கர்நாடகாவின் மங்களுருவில் C-கற்றை டாப்ளர் வானிலை ரேடார் ஒன்றை

அமைக்கவும் முன்மொழிந்துள்ளது.

- இது தற்போதைய அதிக மழைப்பொழிவு மற்றும் எதிர்கால தீவிரமான வானிலை நடவடிக்கைகள் குறித்த அக்கறையின் பேரில் எடுக்கப்பட்ட முடிவாகும்.
- தற்போது இந்திய வானிலை மையமானது 6 புயல் எச்சரிக்கை மையங்களைக் கொண்டுள்ளது.
    - கிழக்கு கடற்கரையில் சென்னை, விசாகப்பட்டினம், புவனேஸ்வர் மற்றும் கொல்கத்தா ஆகிய 4 மையங்கள்
    - மேற்கு கடற்கரையில் அகமதாபாத் மற்றும் மும்பை ஆகிய 2 மையங்கள்.

## கேரள பாரம்பரிய மீட்புத்திட்டம்

- சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் மன்றமானது (ICOMOS) கேரளாவின் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் மிகுந்த கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதத்தினை மதிப்பிடுவதற்கு கேரள பாரம்பரிய மீட்புத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ICOMOS (International Council on Monuments and Sites) ஒரு உலகளாவிய நினைவுச் சின்ன பாதுகாப்பு அமைப்பாகும்.
- கேரளாவில் வெள்ளத்தால் சேதமடைந்த கலாச்சார பாரம்பரியத்தை அவசரமாக மீட்டெடுப்பதற்கான தளத்தை அமைக்கும் முயற்சியை இது முன்னெடுக்கிறது.
- மத்திய அரசானது இதை கடுமையான இயற்கைப் பேரிடராக அறிவித்துள்ளது.
- ICOMOS ஆனது இந்த பேரிடருக்கு பிந்தைய பணிகளில் பணியாற்றுவதற்காக பாரம்பரிய சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு ஆய்வு மையத்தை (International Centre for the Study of the Preservation and Restoration of Cultural Property - ICCROM) அணுகி உள்ளது.
- ICCROM ஆனது இத்தாலியின் ரோம்-ஐ அடிப்படையாகக் கொண்ட, உலகம் முழுவதிலுமான கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சர்வதேச அரசாங்க அமைப்பு ஆகும்.
- ICOMOS ஆனது பிரான்சின் பாரிஸ்-ஐ தலைமையிடமாகக் கொண்ட உலக நினைவுச் சின்னப் பாதுகாப்பு அமைப்பு (அரசு சாரா அமைப்பு) ஆகும்.
- 1964 ஆம் ஆண்டு வெனிஸ் சாசனத்தின் விளைவாக வார்சாவில் (போலந்து) 1965ம் ஆண்டு இது நிறுவப்பட்டது.
- மேலும் இது கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கவும் குறிப்பாக உலக பாரம்பரிய ஒப்பந்தத்தை அமல்படுத்திடவும் யுனெஸ்கோ அமைப்பிற்கான ஒரு ஆலோசனை அமைப்பு ஆகும்.

## இமயமலைப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சி - 5 கருப் பொருள் அறிக்கைகள்

- இமயமலையின் தனித்துவம் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான சவால்கள் ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதமாக இந்திய இமயமலைப் பகுதிகளில் நீடித்த வளர்ச்சி மீதான 5

கருப்பொருள் அறிக்கைகளை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது (IHR - Indian Himalayan Region).

- இந்த அறிக்கை 5 கருப்பொருள் பகுதிகளில் உள்ள சவால்களை பட்டியலிட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையானது முக்கியத்துவம், சவால்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்முறைகள் மற்றும் எதிர்கால வழிமுறைகள் ஆகியவை குறித்து விவாதிக்கிறது.
- ஜூன் 2017-ல் நிதி ஆயோக்கினால் உருவாக்கப்பட்ட 5 பணிக் குழுக்கள் இந்த அறிக்கைகளை தயாரித்துள்ளன.
- அந்தப் பகுதிகளாவன
  1) நீர்ப் பாதுகாப்பிற்காக இமயமலையில் உள்ள நீரூற்றுகளின் இருப்பு மற்றும் அவற்றைப் புதுப்பித்தல்.
  2) இந்திய இமயமலைப் பகுதிகளில் நீடித்த சுற்றுலா
  3) மாற்று சாகுபடிகளுக்கான (Shifting Cultivation) மாற்று அணுகுமுறை
  4) இமயமலையில் உள்ளோருக்கான திறன் மற்றும் தொழில்முனைவோரை வலிமைப்படுத்துதல்.
  5) தகவல் தொடர்பான முடிவெடுப்பதற்கான தரவு/தகவல்

## இந்தியாவின் முதலாவது பயோ எரிபொருளால் இயங்கும் விமானம்


- ஸ்பைஸ்ஜெட் நிறுவனமானது டேராடூனிலிருந்து டெல்லிக்கு நாட்டின் முதலாவது பயோ எரிபொருளால் இயங்கும் விமானத்தை இயக்கியுள்ளது.
- வளர்ச்சியடையும் நாடுகளில் இந்தியா முதலாவதாக பயோ எரிபொருளால் இயங்கும் விமானத்தைச் சோதனை செய்துள்ளது. இதற்கு முன் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பயோ எரிபொருளால் இயங்கும் விமானச் சோதனையை வெற்றிகரமாக செய்துள்ளன.
- அதிவேக பயோஎரிபொருள் விமானத்தின் எரிபொருட்களை அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி மையம் (CSIR - Council of Scientific and Industrial Research) மற்றும் டேராடூனின் இந்திய பெட்ரோலிய நிறுவனம் ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன.
- அதிவேக பயோஎரிபொருள் விமானம் அமெரிக்க தரங்கள் சோதனை முறையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது பிராட் & விட்னி மற்றும் பம்பார்டியர் விமானத்தின் வணிகப் பயன்பாட்டிற்கான விவரக்குறிப்பு தரங்களைக் கொண்டுள்ளது.
- இந்த பயோ எரிபொருளானது தாவரங்கள் சார்ந்த எண்ணெய், சர்க்கரை, மிருகங்களின் கொழுப்பு மற்றும் உயிரினத் தொகுதி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
- இந்த பயோ எரிபொருளை தற்பொழுது விமானத்தின் பயன்பாட்டில் உள்ள எஞ்சின்களில் எந்த மாறுதலும் செய்யாமல் பயன்படுத்தலாம்.
- பயோ எரிபொருள் விமானப் பயணமானது சுத்தமானது மற்றும் கார்பன் உமிழ்வுகளை குறைக்கும் ஆற்றலுடையது. மேலும் இது விமானப் போக்குவரத்திற்கான செலவைக் குறைக்கும்.

## சிறுத்தை மீள்அறிமுகத் திட்டம்


- மத்தியப் பிரதேச வனத்துறையானது தனது சிறுத்தை மீள்அறிமுகத் திட்டத்தை உயிரூட்டுவதற்காக தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு (NTCA-National Tiger Conservation Authority) கடிதம் எழுதியுள்ளது.
- இந்தத் திட்டமானது 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டம் தடைபட்டுள்ளது.
- சிறுத்தையானது இந்தியாவில் 1952ஆம் ஆண்டில் 'மறைந்த உயிரினமாக' (Extinct) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கடைசியாகக் காணப்பட்ட 'ஆசிய சிறுத்தையானது' 1947-ல் சத்தீஸ்கரில் இறந்தது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சட்டமுறையிலான அதிகார அமைப்பாகும்.

## அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மைய (CSE) ஆய்வு

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் (CSE- Centre for Science and Environment) மூலம் மேற்கொண்ட 'நகர்ப்புற பயணம்' (The Urban Commute) என்ற ஆய்வில் போபால் நகரமானது குறைந்த உமிழ்வு மற்றும் ஆற்றல் பயன்பாட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பொதுப் போக்குவரத்து மற்றும் நடைப்பயணத்தின் அதிகப் பயன்பாட்டின் காரணமாக கொல்கத்தாவானது 6 மிகப்பெரிய நகரங்களில் மிகக் குறைந்த உமிழ்வைக் கொண்டுள்ளது.
- அதிக ஒட்டுமொத்த உமிழ்வு மற்றும் எரிபொருள் பயன்பாட்டின் காரணமாக டெல்லியின் தரம் கீழிறங்கியுள்ளது.
- இந்த ஆய்வு 14 நகரங்களில் கீழ்க்காண்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.
    - வெப்பத்தை வெளியேறாமல் பிடித்து வைக்கும் கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வு
    - நுண்துளைப் பொருள்கள் போன்ற நச்சு மாசுக்கள் மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு
    - நகர்ப்புற பயணத்தின் போது எரிக்கப்படும் சக்தி
- ஒட்டு மொத்த உமிழ்வு மற்றும் எரிபொருள் நுகர்வில் முதல் 3 இடங்கள்
    - போபால்
    - விஜயவாடா
    - சண்டிகார்




❖ ஒரு முறை பயணத்தில் ஏற்படும் உமிழ்வு மற்றும் ஆற்றல் நுகர்வில் முதல் 3 இடங்கள்
   - கொல்கத்தா
   - மும்பை
   - போபால்



# மாநிலச் செய்திகள்

## B-மையம்

- ஐதராபாத்தின் ஜினோம் பள்ளத்தாக்கில் உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிரிமருந்து துறைக்கான வர்த்தக மையத்தை (B – HUB) தெலுங்கான அரசு அமைக்கவிருக்கிறது.
- ஜினோம் பள்ளத்தாக்கில் பொது தனியார் கூட்டிணைவின் மூலம் இந்த மையம் அமைக்கப்படவிருக்கிறது. வாழ்க்கை அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மற்றும் தூய்மையான தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியாவின் முதலாவது ஒழுங்கமைக்கப்பட உள்ள திரள் இதுவாகும்.
- B-மையம் என்பது நாட்டில் இந்த வகையான முன்முயற்சியில் இது முதலாவது மையமாகும். இதன் நோக்கம் உயிரிமருந்துத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை செய்வதாகும்.

## யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அங்கீகாரம்


- "இந்தியாவின் இராஜஸ்தானில் உள்ள கோட்டை நகரமான ஜெய்ப்பூர்" யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோவின் செயல்முறை விதிகள் 2017-ன் படி ஒரு ஆண்டில் ஒரு இடத்தை மட்டும் பரிந்துரை செய்ய முடியும்.
- இதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாவிற்கு ஊக்கமளிப்பதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தில் மாறுதல்கள் ஏற்படும்.
- தற்பொழுது இந்தியாவில் 37 உலக பாரம்பரிய இடங்கள் உள்ளன.

## முக்கிய மந்திரி - யுவ நேஷ்தம்

- வேலையில்லாதோருக்கான சலுகைத் திட்டமான முக்கிய மந்திரி-யுவ நேஷ்தம்-ஐ ஆந்திரப் பிரதேச அரசு தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் அம்மாநிலத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 1000 ரூபாய் சலுகைத் தொகை அளிக்கப்படுகிறது.
- பயோமெட்ரிக் உறுதிப்படுத்துதல் மூலம் இந்த தொகையானது வேலையற்ற இளைஞர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

## முதலாவது டிரேகன்ஃப்ளை திருவிழா - தில்லி

- ஆகஸ்ட் 3 முதல் செப்டம்பர் 1 வரை முதலாவது டிரேகன்ஃப்ளை திருவிழாவை தில்லி கொண்டாடுகிறது.
- சூழலமைப்பை பேணுவதில் உதவும் பூச்சிகளுக்காக முதன்முறையாக இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.




- இத்திருவிழாவை உலக அளவிலான நிதி (WWF - World Wide Fund) மற்றும் பாம்பே இயற்கை வரலாற்று சங்கம் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.
- ஆகஸ்ட் 19-ல் டிரேகன்ஃப்ளை கணக்கெடுப்பை நோக்கி இத்திருவிழா இறுதி நிலையை அடையும்.

## தேசிய மக்கள் பதிவேடு இறுதிவரைவு- அஸ்ஸாம்

- அஸ்ஸாமின் தேசிய மக்கள் பதிவேட்டின் இறுதி வரைவை அஸ்ஸாம் மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- இவ்வரைவின்படி, மொத்தமுள்ள 3.29 கோடி நபர்களில் 2.9 கோடி மக்கள் தேசிய மக்கள் பதிவேட்டில் (National Register of Citizens) இடம் பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் ஆவர்.
- இவ்வரைவில் இடம்பெறாத 40.07 லட்சம் மக்கள் 'சட்ட விரோதமாக குடி பெயர்ந்தவர்கள்' என்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- 1951க்குப் பிறகு தேசிய மக்கள் பதிவேட்டை திருத்தும் முதல் மாநிலம் அஸ்ஸாம் ஆகும். இத்திருத்தமானது உண்மையான இந்திய மக்களின் பெயர்களை பட்டியலில் இணைப்பதற்காக மார்ச் 24, 1971 தேதி வரை தகுதிநிலையாகக் கொண்டு திருத்தப்படுகிறது.
- முதலாவது தேசிய மக்கள் பதிவேடானது 1.9 கோடி மக்களின் பெயர்களுடன் இந்த வருடம் டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1க்கு இடையிலான இரவில் வெளியிடப்பட்டது.

## முகல்சராய் இரயில்வே நிலையம்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள முகல்சராய் இரயில்வே நிலையம் முறையாக தீன் தயாள் உபத்யாய் இரயில்வே நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- உத்தரப் பிரதேச ஆளுநர் ராம் நாயக் இப்பெயர் மாற்றப் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்த பின்பு முகல்சராய் இரயில் நிலையம் இப்புதிய பெயர் பெற்றுள்ளது.
- தீன் தயாள் உபத்யாய் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி அன்று இந்த இரயில் நிலையத்திற்கு அருகில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.
- மேலும் முகல்சராய் ஆனது முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பிறந்த இடமாகும்.

## கொசு ஒழிப்பு இரயில் வண்டி

- வடக்கு இரயில்வேயின் டெல்லி கோட்டம் கொசு ஒழிப்பு சிறப்பு இரயில் வண்டியை ஆரம்பித்திருக்கின்றது. இது இரயில் பாதைகளில் ஏற்படும் கொசுவின் இனப்பெருக்கத்தை தடுப்பதற்கு உதவிடும்.
- சக்கரங்களின் மீதான கொசு ஒழிப்பான் என்ற இந்த வண்டி இரண்டு நாட்கள் கால கட்டத்தில் ஒரு சுழற்சியில் 150 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும்.
- தெற்கு தில்லி மாநகராட்சியானது இரயில்வே பாதைகளில் உள்ள வளைகளில் ஏற்படும் கொசுவின் இனப்பெருக்கத்தை தணித்துக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு அதிசக்தி பூச்சிக் கொல்லியையும் தெளிப்பானையும் இரயில் வண்டியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

## கோவாமைல்ஸ்

- பனாஜியில் கோவா சுற்றுலாத்துறை வளர்ச்சி நிறுவனத்தின் செயலி அடிப்படையிலான வாடகை மோட்டார் சேவையான 'கோவாமைல்ஸ்'-ஐ கோவா முதல்வர் மனோகர் பாரிக்கர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மனோகர் அஜ்கோன்கர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.
- இதன் மூலம் பயனாளர்களுக்காக பயணக் கட்டணத்தில் வெளிப்படைத் தன்மை இருக்கும். பயனாளர்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதை இது உறுதி செய்யும்.

## நகர ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையின் நாய்ப் படை



- நாட்டில் முதல் மாநிலமாக கர்நாடகா தனது நகர ஆயுதமேந்திய பாதுகாப்புப் படையின் நாய்ப் படையில் பெல்ஜியன் மலிநோயிஸ் என்ற வகையைச் சார்ந்த இரண்டு நாய்களைக் கொண்டதாக உருவெடுத்து இருக்கின்றது.
- இந்த குறிப்பிட்ட இனம் அமெரிக்கா உள்பட பிற நாட்டு காவல் படைகளிலும் உபயோகப்படுத்தப்படுகின்றது.
- மற்ற இனங்களைக் காட்டிலும் இவை அதிக மோப்ப சக்தி கொண்டவை. ஆகவே அவை

வெடிகுண்டு துப்பறிதல், கள்ளக் கடத்தலை கண்டறிதல் மற்றும் குற்றவியல் விசாரணைகள் ஆகியவற்றில் பயன்படுகின்றன.

## உலகின் மிகப்பெரிய பறவை சிலை

❖ கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள சதயமங்கலத்தில் ஜடாயு புவி மையத்தில் உலகின் மிகப்பெரிய பறவை சிலை என்று கூறப்படும் ஜடாயு சிலை ஆகஸ்டு 17-ஆம் தேதி முதலமைச்சர் பினராயி விஜயனால் திறந்து வைக்கப்பட இருக்கின்றது.



❖ இந்த 100 கோடி ரூபாய் திட்டமானது திரைப்பட இயக்குநர் மற்றும் சிற்பியான ராஜீவ் ஆஞ்சல் என்பவரின் கைவண்ணமாகும்.

## பசு காவலர்களுக்கு அடையாள அட்டை அளிக்கும் முதல் மாநிலம்

❖ பசு காவலர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதில் நாட்டிலேயே முதல் மாநிலமாக உத்தரகாண்ட் உருவெடுத்து இருக்கின்றது.

❖ பசு பாதுகாப்பு என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடுபவர்களில் இருந்து பசு பாதுகாவலர்களை உண்மையாக அடையாளம் காண்பதற்காக இம்முயற்சி எடுக்கப்பட்டு இருக்கின்றது.

## சசி பூசன் பெஹ்ரா குழு

❖ ஓலிவுட் என்றறியப்படும் ஒடியா திரைத்துறையின் மேம்பாட்டிற்கு கொள்கைகளை வகுப்பதற்காக ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் நிதி அமைச்சர் சசி பூசன் பெஹ்ரா தலைமையிலான அமைச்சர்கள் குழுவினை அமைத்துள்ளார்.

❖ திரைத்துறையினை புதுப்பிப்பதற்காக எடுக்கப்பட உள்ள முயற்சிகளையும் புவனேஷ்வரின் புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ள கலிங்கா ஸ்டுடியோவின் சீரமைப்புக்கான முயற்சிகளை பற்றியும் இக்குழு பரிந்துரை செய்யும்.

## தேசிய தலைநகரில் பிச்சையெடுத்தல் குற்றவிலக்களிக்கப்படுதல்

- டெல்லி உயர்நீதிமன்றம், டெல்லிக்கும் நீட்டிக்கப்பட்ட 1959ம் ஆண்டு பம்பாய் பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டத்தின் 25வது பிரிவை, சட்டவிரோதம் என்று அறிவித்திருக்கின்றது.
- இதன் மூலம் தேசிய தலைநகரத்தில் பிச்சையெடுத்தலை குற்றமாகக் கருதும் சட்ட விதியை ரத்து செய்திருக்கின்றது.
- பம்பாய் பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டம் பிச்சையெடுத்தற்கான முதல் தண்டனைக்கு 3 மாதம் சிறைத் தண்டனையென்றும், தொடர்ச்சியான தண்டனைக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்படுமென்றும் கூறுகின்றது.

## முக்கிய மந்திரி கன்யா உத்தன் யோஜனா

- பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் பெண் குழந்தைகளுக்கான "முக்கிய மந்திரி கன்யா உத்தன் யோஜனா" திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது பெண் குழந்தைகளுக்கு பிறப்பு முதல் பட்டதாரி ஆகும் வரை ரூ.54,100 வழங்குகிறது.
- இது பெண்களுக்கு அதிகாரமளிக்கும் மாநில அரசின் தீர்மானத்தின் வெளிப்பாடாகும்.
- இத்திட்டம் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறை ஆகிய மூன்று துறைகளால் இயக்கப்படும்.
- மேலும் முதலமைச்சர் இதர பல திட்டங்களையும் அறிவித்துள்ளார்.
  - "மிதிவண்டி திட்டம்" என்பதற்கான தொகை ரூ.2,500/- லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்துதல்.
  - கிஷோரி ஸ்வஸ்த்யா யோஜனா திட்டத்தின் கீழ் துப்புரவு துணி (Sanitary Napkin) வாங்குவதற்கான தொகை ரூ.150/- லிருந்து இருமடங்காக ரூ. 300க்கு உயர்த்தப்படுதல்.

## ஸ்வச்ச மேவ ஜயதே

- கர்நாடக அரசு ஒவ்வொரு கிராமப்புற குடிமகன்களையும் தூய்மைக்கான உறுதிமொழியை எடுப்பதற்காக "ஸ்வச்மேவ ஜயதே" என்ற கிராமப்புற தூய்மை மற்றும் துப்புரவு பிரச்சாரத்தை துவக்கியுள்ளது.
- பள்ளிக் குழந்தைகளின் உதவியோடு ஸ்வச் சர்வேக்சன் கிராமின் 2018 (SSG 2018) கணக்கெடுப்பை அனைத்து மாவட்டங்களிலும் அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

## ‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு ‘உச்சி மாநாடு

- உத்திரப்பிரதேசம் லக்னோவில் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு’ என்ற உச்சி மாநாட்டை ஆகஸ்ட் 10, 2018 அன்று துவக்கி வைத்தார்
- பிப்ரவரி 2018ல் உத்திரபிரதேசத்தில் நடைபெற்ற உத்திரப் பிரதேச முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டின் விளைவாக சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது.
- இந்த உச்சி மாநா ‘நயி உதான், நயி பச்சான்’ கோஷத்துடன் நடைபெற்றது.
- ‘ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) திட்டமானது அலிகாரில் பூட்டு தொழிற்துறை, வாரணாசியில் பனாரஸ் பட்டுநெசவு மற்றும் அமேதியில் ரொட்டி தயாரித்தல் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பாரம்பரிய தொழிலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கூடுதல் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்கள் - கர்நாடகா

- கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வில் அரசு தரப்பில் 4 கூடுதல் மாநில தலைமை வழக்குரைஞர்களை (Additional Advocate Generals - AAG) கர்நாடக அரசு நியமித்துள்ளது.
- அந்த 4 நபர்கள் A.S.பொன்னன்னா, N.தினேஷ் ராவ், சந்தேஷ் J.சௌதா மற்றும் நிதின் ரமேஷ் ஆகியோர் ஆவர். நிரந்தர அமர்வு தார்வாத் மற்றும் கலபுர்கி ஆகிய இடங்களில் உள்ளன. வழக்கறிஞர் I.S. பிரமோத் சந்திரா, திரு.சௌதாவை AAG - ஆக நியமிக்கப்பட்டதால் ஏற்பட்ட காலியிடத்தில் சிறப்பு பொது வழக்கறிஞர் - II ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

## கன்யாஸ்ரீ திட்டம் - குடும்ப வருமான உச்ச வரம்பு

- மேற்கு வங்க அரசானது பெண்கள் நல முதன்மைத் திட்டமான கன்யாஸ்ரீ திட்டத்தின் வருடாந்திர குடும்ப வருமான உச்ச வரம்பினை நீக்கியதன் மூலம் அனைவருக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.
- இத்திட்டத்தின் படி, 13 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண் குழந்தைகளில் 18 வயது வரை திருமணமாகாமல் இருப்பின், நிதி உதவியை பெறுவர்.
- கன்யாஸ்ரீ திட்டம் 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரிடையே நிகழும் குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்காக கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் படி வருடாந்திர குடும்ப வருமானம் 1.2 லட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- இத்திட்டத்தின் மூலம் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் 13 முதல் 18 வயது வரை ஒவ்வொரு ஆண்டும் 1000 ரூபாய் நிதி உதவியைப் பெறுவர். 13 வயது முதல் எஞ்சியுள்ள 18வயது வரை திருமணமாகாமல் இருந்தால், ஒரு முறை மானியத் தொகையான 25,000 ரூபாயை இத்திட்டத்தின் மூலம் பெறுவர்.

## ஷஹித் சமன் திவாஸ்

- மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த வீரத் தியாகிகளின் குடும்பங்களை கௌரவிப்பதற்காக மத்தியப் பிரதேசத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஷஹித் சமன் திவாஸ் அனுசரிக்கப்படும்.
- வீரத் தியாகிகள் பிறந்த ஊர் அல்லது அவர்களுடைய குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்போதைய ஊர்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அரசாங்கக் கட்டிடங்களுக்கு வீரத்தியாகிகளின் நினைவாக அவர்களுடைய பெயர் சூட்டப்படும்.

## பேரிடர் பதிலெதிர்ப்புப் படை - தெலுங்கானா

- தெலுங்கானா மாநில அரசானது முதன்முறையாக தலைநகரான ஹைதராபாத்தில் பேரிடர் பதிலெதிர்ப்புப் படைக்கான (DRF - Disaster Response Force) வாகனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அவசர சூழ்நிலைகளின் போது விரைவாக நடந்து கொள்வதற்காக தனது சொந்த பேரிடர் படையைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் அம்மாநில அரசு பேரிடர் பதிலெதிர்ப்புப் படையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தப் படைக்கு வழங்கப்பட்டுள்ள DRF வாகனங்கள் கிரேட்டர் ஹைதராபாத் நகராட்சி நிறுவனத்தின் 24 இடங்களில் நிறுத்தப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

## இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கான முதலாவது கருத்தரங்கு

- நிகழ் நேரத்தில் ஏற்படும் இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்காக முதலாவது கருத்தரங்கை பஞ்சாப் காவல்துறை ஏற்பாடு செய்திருந்தது.
- புது தில்லியில் உள்ள தேசிய விமர்சனத் தகவல் கட்டமைப்பு பாதுகாப்பு மையத்துடன் (National Critical Information Infrastructure Protection Centre) இணைந்து பஞ்சாப் காவல்துறை இக்கருத்தரங்கை நடத்தியது.

## மதம் சார்ந்த நூல்கள் அவமதிப்பு தண்டனைக்குரியது

- மதநல்லிணக்கத்தை பாதுகாப்பதற்காக அனைத்து மதம் சார்ந்த நூல்களை அவமதித்தலை ஆயுள் தண்டனைக்குரிய குற்றமாக மாற்றி இந்திய தண்டனை சட்டத்தை திருத்த பஞ்சாப் மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2018ம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (பஞ்சாப் திருத்தம்) மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் (பஞ்சாப் திருத்தம்) 2018 ஆகியவற்றிற்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஸ்ரீ குருகிரந்த் சாஹிப், ஸ்ரீமத் பக்வத் கீதா, புனித குர்-ஆன் மற்றும் புனித பைபிள் ஆகியவற்றை அவமதிக்கும் அல்லது சேதம் விளைவிக்கும் அனைவருக்கும் ஆயுள்

தண்டனை வழங்குவதற்கென இந்திய தண்டனைச் சட்டத்தில் 295AA என்ற பிரிவு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

## சத்தீஸ்கரின் நயா ராய்ப்பூர் பெயர் மாற்றம்

- முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் நினைவாக சத்தீஸ்கர் அரசு நயா ராய்ப்பூரை அடல் நகர் என மறுபெயரிட முடிவு செய்துள்ளது.
- சமுதாயத்திற்கு சிறந்த சேவைகளை வழங்கிய மக்களை கௌரவப்படுத்தும் வகையில் 'அடல் சுஷாஷன் விருதுகள்' என்றழைக்கப்படும் விருதுகளை உருவாக்கிட இது எண்ணுகிறது.
- இந்த விருதுகள் சத்தீஸ்கர் மாநிலம் உருவான தினமான நவம்பர் 1ம் தேதி அன்று வழங்கப்படும்.
- இது மாநில காவல் படைப் பிரிவை 'பொக்ரான் படைப்பிரிவு' என பெயரிடத் திட்டமிட்டுள்ளது.
- மேலும் இது முதலமைச்சரின் இரண்டாவது கட்ட 'விகாஸ் யாத்ரா'வை 'அடல் விகாஸ் யாத்ரா' எனப் பெயரிட ஒப்புதல் அளித்துள்ளது.

## இந்தியாவின் மிகப் பெரிய தொழில்நுட்ப மையம்

- ஜெய்ப்பூரில் உள்ள ஜாலனா தொழிற்சாலைப் பகுதியில் பாமாஷா தொழில்நுட்ப மையத்தை முதலமைச்சர் வசுந்தரா ராஜே திறந்து வைத்தார்.
- இது சுமார் 700 தொழில்முனைவோர்க்கு இடமளிக்கும்.
- இம்மாநிலம் ஒரு ஆண்டுக்கு முன்னர் புதிய துவக்கங்களுக்கு டிஜிட்டல் முறையில் தீர்வு வழங்குவதெற்கென 'ஐ-ஸ்டார்' ஐ தொடங்கி வைத்தது நினைவு கூறத்தக்கது.
- இவர் மேலும் ஆன்லைன் பணம் செலுத்தும் செயலியான 'பாமாஷா பணப் பை' ஐயும் திறந்து வைத்தார்.

## பந்தேல்கண்ட் விரைவுப் பாதை பெயர் மாற்றம்

- உத்திரப் பிரதேச அரசானது புதிதாக வரவுள்ள பந்தேல்கண்ட் விரைவு வழிப் பாதையை 'அடல் பாத்' எனப் பெயரிட முடிவு செய்துள்ளது.
- இது 289 கி.மீ நீளமும், 4 பாதைகளையும் உடைய அணுகல் கட்டுப்பாட்டு பாதை என முன்மொழியப்பட்டுள்ளது. இச்சாலையானது ஜான்சியில் தொடங்கி ஆக்ரா-லக்னோ விரைவு வழிப் பாதையில் இணைகிறது.
- இது உத்திரப் பிரதேச விரைவுப் பாதை தொழில்துறை அபிவிருத்தி ஆணையத்தால் (Uttar Pradesh Expressway Industrial Development Authority - UPEIA) முன்மொழியப்பட்டுள்ளது.

## இலவச மின்சாரம் – SC/ST குடும்பங்கள்

- தெலுங்கானா மாநில அரசானது பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகியோரின் குடும்பங்களுக்கு இலவச மின்சார வழங்குதலை அதிகப்படுத்தியுள்ளது. அவர்களின் குடும்பத் தேவைகளுக்காக 101 அலகுகள் மின்சாரம் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.
- தற்பொழுது இவர்களின் குடும்பங்களுக்காக 50 அலகுகள் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

*மற்ற நலத் திட்டங்கள்*

- மஸ்ஜித்களின் இமாம்கள் மற்றும் மொசின்ஸ் ஆகியோர்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் வெகுமதியானது 1500 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மேலும் அரசாங்கமானது கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் ஓய்வு வயதை 58-லிருந்து 65 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது.

## மாநிலங்களுக்கிடையேயான முதல் காற்று சக்தி திட்டம்

- இந்தியாவின் மாநிலங்களுக்கிடையேயான பரிமாற்ற முறை (inter-state transmission system - ISTS) ஏலத்தின் ஒரு பகுதியான 126 மெகா வாட் அளவுடைய காற்றுத் திட்டம் முதலாவதாக குஜராத்தின் புஜ் பகுதியில் இயக்கப்பட்டது.
- இத்திட்டமானது 2017ம் ஆண்டு மத்திய அரசின் நிறுவனமான இந்திய சூரிய ஆற்றல் நிறுவனம் (Solar Energy Corporation of India Ltd -SECI) நடத்திய முதல் ISTS ஏலத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது ஓஸ்ட்ரா கட்ச் விண்ட் பிரைவேட் லிமிட்டெட் ஆல் நடத்தப்படுகிறது.
- ISTS மூலம் ஒரு மாநிலத்தில் உருவாக்கப்படும் மின்சாரமானது மின் பற்றாக்குறையுள்ள மாநிலங்களுக்கு அனுப்பப்படும்.
- பீகார், ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகியவற்றால் குஜராத்தில் இத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மின்சாரம் வாங்கப்படுகிறது.

## மு ஹீரோ மு ஒடிசா

- ஒடிசாவின் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் முன்மாதிரியான படைப்புகளை அங்கீகரிப்பதற்காக 'மு ஹீரோ மு ஒடிசா' (I am hero; I am Odisha) என்ற பிரச்சாரத்தை அம்மாநில முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.
- இளைஞர்களிடையே உள்ள திறமையை அடையாளம் காண்பது மற்றும் அவர்களை சமூகத்தில் அங்கீகரிப்பதே இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.

## மேற்கு வங்காளத்திற்கு அளிக்கவிருக்கும் கடனுக்கு ஒப்புதல் - ADB

- மேற்கு வங்காளத்தில் ஆர்செனிக், புளோரைடு மற்றும் உப்புத் தன்மை ஆகியவற்றால்

பாதிக்கப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களில் உள்ள பத்து லட்சம் மக்களுக்கு பாதுகாப்பான, நீடித்த குடிநீர் சேவை அளிப்பதற்கான திட்டத்தை செயல்படுத்த 245 மில்லியன் மதிப்புடைய கடன் தொகையை வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ இத்திட்டம் ஆர்செனிக் மற்றும் புளோரைடுகளினால் ஏற்படும் நோய்களின் தாக்கத்தை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுகிறது மற்றும் பருவநிலை மாற்றத் தாங்கு தன்மை அதிகரிக்கிறது.
- ❖ பூர்பா மெதினிபூர், பன்குரா மற்றும் வடக்கு 24 பர்கானா ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள 3,90,000 குடும்பங்களுக்கு மீட்டர் இணைப்பின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் இத்திட்டத்தின்படி வழங்கப்படும்.

## கூகுள் - ஆந்திரப் பிரதேச மாநில பைபர் நெட்

- ❖ 10 லட்சம் மக்கள் பயனடையக் கூடிய வகையில் 12,000 கிராமங்களுக்கு மேல் இணையச் சேவையை அளிப்பதற்காக ஆந்திரப் பிரதேச மாநில பைபர் நெட் (APSFNL - Andhra Pradesh State Fiber Net Ltd) நிறுவனத்துடன் கூகுள் இணைந்துள்ளது.
- ❖ மேலும் நாடு முழுவதும் டிஜிட்டல் பணவழங்கீடுகள் செயலியை அதிகமான ஆன்லைன் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு கொண்டு செல்வதற்கான பணியின் ஒரு பகுதியாக தனது குறியீடான 'Tez' - ஐ 'Google Pay' ஆக மறுகுறியீடு செய்துள்ளது.
- ❖ இதற்கு முன்பு இந்தியாவில் உள்ள 400 இரயில் நிலையங்களில் இலவச WiFi சேவை அளிப்பதற்காக கூகுள் நிறுவனம் இரயில்டெல் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- ❖ மேலும் 'Google Station' மூலமாக பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு இடங்களில் WiFi சேவையை வழங்குகிறது.

## மாநில பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்திட திருத்த மசோதா

- ❖ மாநில தலைமை காவல்துறை அதிகாரியை (DGP) தேர்ந்தெடுத்திட மாநில பாதுகாப்பு ஆணையத்தை அமைப்பதற்காக பஞ்சாப் போலீஸ் (திருத்த மசோதா) 2018 என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இந்த மசோதா பஞ்சாப் போலீஸ் சட்டம், 2007 என்ற சட்டத்தை திருத்தியுள்ளது.
- ❖ இந்த மாநிலப் பாதுகாப்பு ஆணையமானது
    - o முதல்வர் - தலைவராக
    - o உள்துறை அமைச்சர் - துணைத் தலைவராக
    - o எதிர்க்கட்சித் தலைவர்
    - o ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி
    - o தலைமைச் செயலாளர்
    - o மாநில அரசின் உள்துறை விவகாரம் மற்றும் நீதித்துறைக்கான முதன்மைச் செயலாளர்.

- o மாநில தலைமை வழக்கறிஞர்

ஆகியோரைக் கொண்டது.

## இந்தியா உலக வங்கியுடன் கடன் ஒப்பந்தம்

- ❖ ராஜஸ்தானில் மின் விநியோகத்துறை சீர்திருத்தங்களுக்காக 250 மில்லியன் டாலர் மதிப்புடைய வளர்ச்சி கொள்கைக்கான கடன் ஒப்பந்தம் ஒன்றில் உலக வங்கியுடன் மத்திய அரசாங்கமும் இராஜஸ்தான் மாநில அரசும் கையெழுத்திட்டு இருக்கின்றன.
- ❖ இந்த கடனானது உலக வங்கியின் கடனளிப்புப் பிரிவான வளர்ச்சி மற்றும் மறுகட்டமைப்பிற்கான சர்வதேச வங்கியால் அளிக்கப்படும்.
- ❖ திட்டம் ஆதரவளிக்கும் பகுதியான மாநில அரசிற்கும், மின் விநியோக நிறுவனங்களுக்கும் இடையேயான வருடாந்திர செயல்திறனுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் விநியோகத் துறையில் ஆளுகையை வலுப்படுத்துவது போன்ற முக்கிய பகுதிகள் அதில் உள்ளன.
- ❖ மேலும் இது ஏழை மக்களுக்கு மின்சாரத்தை எளிதில் அணுகிடவும் பெற்றிடவும் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் கூடுதலாக இந்திய அரசின் திட்டமான Domestic Efficient lighting program என்ற திட்டத்திற்கும் உதவிடும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## புகழ்மிக்க பீல்ட்ஸ் விருது - அக்ஷய் வெங்கடேஷ்

- ❖ ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சர்வதேச கணிதவியலாளருக்கான காங்கிரஸ் மாநாட்டில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கணிதவியலாளர் அக்ஷய் வெங்கடேஷ்க்கு புகழ்மிக்க பீல்ட்ஸ் விருது வழங்கப்பட்டது.



- ❖ மொத்தம் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நபர்களில் இவரும் ஒருவர். இவருடைய வயது 30 ஆகும். இவ்விருது கணிதத்திற்கான நோபல் பரிசு என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ மற்ற மூன்று வெற்றியாளர்கள்:
    - o கவ்ச்சர் பிர்கர் (ஈரானிய குர்திஸ் இனத்தைச் சேர்ந்தவர்)
    - o ஜெர்மனியின் பீட்டர் ஸ்கோல்ஸ்
    - o இத்தாலியின் அலிசோ பிகாலி
- ❖ பீல்டு விருதானது ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் 40 வயதுக்குக் கீழ்

உள்ள புகழ்மிக்க கணிதவியலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

- துரந்தோவில் 1924ம் ஆண்டின் கணிதக் காங்கிரசை நடத்திய கனடாவின் கணிதவியலாளர் ஜான் சார்லஸ் பீல்ட்ஸ்-ன் வேண்டுகோளின் படி 1932ஆம் ஆண்டு இவ்விருது தொடங்கப்பட்டது.
- ஒவ்வொரு வெற்றியாளரும் 15,000 கனடா டாலர்கள் அளவுக்கு பரிசுத் தொகையைப் பெறுவார்கள். எப்பொழுதும் குறைந்தபட்சம் இரண்டு நபர்கள் அல்லது நான்கு நபர்கள் இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில் கௌரவிக்கப்படுவார்கள்.

## ராஜுவ் சத்பாவனா விருது


- மத நல்லிணக்கம் மற்றும் அமைதியை ஊக்குவித்ததற்காக முன்னாள் மேற்கு வங்காள ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி 24-வது ராஜுவ் காந்தி சத்பாவனா விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவ்விருது 1992ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்விருது பத்து லட்சம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- ராஜீவ்காந்தியின் பிறந்த தின நினைவாக ஆகஸ்ட் 20 அன்று இவ்விருது வழங்கப்படவிருக்கிறது. இத்தினம் சத்பாவனா திவாஸ் தினமாக (மத நல்லிணக்க தினமாக) கொண்டாடப்படுகிறது.
- இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் முகமது அசாருதீன் மற்றும் ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான கோபால கிருஷ்ணா ஆகியோர் 2017ஆம் ஆண்டு இவ்விருதைப் பெற்றனர்.

## சிறந்த பாராளுமன்றத்திற்கான விருதுகள்

- 5 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த பாராளுமன்றத்தினருக்கான விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- இவ்விருது பெற்ற 5 பாராளுமன்ற உறுப்பினர்கள்
    1) நஜ்மா A ஹெப்துல்லா, மணிப்பூரின் ஆளுநர் (2013)
    2) ஹுக்கூம்தேவ் நாராயண் யாதவ், பிஜேபியின் மக்களவை உறுப்பினர் (2014)
    3) குலாம் நபி ஆசாத், காங்கிரஸ் தலைவர் (2015)
    4) தினேஷ் திரிவேதி, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் (2016)
    5) பரத்துருஹரி மஹாதப், லோக் பிஜு ஜனதா தல் (2017) ஆகியோர் ஆவார்.
- இவ்விருது 1992ஆம் ஆண்டு அப்போதைய லோக் சபாவின் சபாநாயகர் சிவராஜ் பாட்டீல் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- இவ்விருது இதுவரை 18 சிறந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவ்விருதைப் பெற்ற முதல் நபர் சமாஜ்வாதி ஜனதா கட்சியைச் சேர்ந்த சந்திர சேகர் ஆவார்.

## பிங்காலி வெங்கைய்யா - 141வது பிறந்த நாள் ஆண்டு விழா

- 2018ம் ஆண்டு ஆகஸ்டு 2ம் தேதி சுதந்திரப் போராளியும், இந்திய தேசியக் கொடியின் வடிவமைப்பாளருமான பிங்காலி வெங்கைய்யாவின் 141வது பிறந்த நாள் ஆண்டு விழா அனுசரிக்கப்பட்டது.




- இந்திய தேசியக் கொடி (மூவர்ணக் கொடி) பிங்காலி வெங்கைய்யாவால் வடிவமைக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் சுயராஜ்யக் கொடியை அடிப்படையாகக் கொண்டது.

## AIBD தலைவர்

- ஒலிபரப்புதல் வளர்ச்சிக்கான ஆசியா-பசிபிக் நிறுவனம் அனைத்து இந்திய வானொலியின் பொது இயக்குநர் பயஸ் ஷெஹர்யாரை அந்நிறுவனத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது (AIBD – Asia-Pacific Institute Broadcasting Development).
- AIBD-ன் தலைவர் பதவிக்கு முதன் முறையாக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் தலைவர் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

*AIBD*

- யுனெஸ்கோவின் ஆதரவோடு 1977-ஆம் ஆண்டு AIBD உருவாக்கப்பட்டது.
- இதன் முதல் மாநாட்டை மலேசியா நடத்தியது. இதன் தலைமையிடம் கோலாலம்பூரில் அமைந்துள்ளது.
- இது மின்னணு ஊடகங்கள் வளர்ச்சித் துறையில் ஆசியா மற்றும் பசிபிக்கின் ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தில் உள்ள நாடுகளுக்கு சேவையளிக்கும், பிராந்திய அரசுகளுக்கிடையேயான நிறுவனமாகும் (UN-ESCAP – United Nations Economic and Social Commission for Asia and Pacific).
- கொழும்புவில் நடைபெற்ற 44-வது வருடாந்திர மாநாட்டின் போது AIBD இன் தலைவருக்கான தேர்தல் நடைபெற்றது.

## பார்ச்சூனின் (Fortune) '40-ன் கீழ் 40' தரவரிசை

- வணிகத்தில் 40 வயதுக்கு கீழ் உள்ள மிகவும் செல்வாக்கு வாய்ந்த இளம் தலைமுறைக்கான வருடாந்திர தரவரிசை '40-ன் கீழ் 40' என்ற வரிசையினை பார்ச்சூன் இதழ் வெளியிட்டுள்ளது.
- முகநூலின் சக நிறுவனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் மார்க் சுகர்பெர்க்குடன் இன்ஸ்டாகிராமின் சக நிறுவனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் கெவின் சிஸ்ட்ரோம் 40-ன் கீழ் 40 பட்டியலில் முதலிடத்தினை பகிர்ந்து கொள்கின்றனர்.




- பார்ச்சூனின் படி, லோகன் க்ரீன் மற்றும் ஜான் சிம்மர் ஜோடி பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.
- மெய்ச் சுவான் - டியான்பிங்கின் முதன்மை செயல் அலுவலரும் சீன வணிகருமான வாங்க் சிங் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.
- இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நான்கு இந்திய வம்சாவளியினர் :
    - திவ்யா சூர்யதேவரா, நான்காவது இடம் (ஜெனரல் மோட்டார்ஸின் தலைமை செயல் அலுவலர்)
    - பஜூ பத், 24வது இடம் (ராபின்ஹுட்டின் சக நிறுவனர் மற்றும் சக தலைமை செயல் அலுவலர்)
    - அணு துகல், 32வது இடம் (Female Founders Fund ன் நிறுவன பங்குதாரர்)
    - அஞ்சலி சத், 14 வது இடம் (விமியோவின் தலைமை செயல் அலுவலர்)

## புத்திக் கூர்மைக்கான உலகப் பட்டியலில் கொல்கத்தா நபர் முன்னிலை

- 43 வயதுடைய கொல்கத்தாவைச் சேர்ந்த மூத்த நிபுணரான அமீத் சகாய் பெருமைமிகு புத்திக் கூர்மைக்கான உலகப் பட்டியலில் 148 புள்ளிகள் பெற்று இரண்டு அமெரிக்கர்களுடன் சேர்ந்து முதலிடத்தைப் பிடித்திருக்கின்றார்.

- இவர் மென்பொருள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த பொருட்கள், உயர்தர ஒலிப்பதிவு மற்றும் இயந்திரப் பொருட்கள் ஆகியவற்றுக்கான சர்வதேச விற்பனையைப் பின்னணியாக கொண்டவர்.
- மேலும் இவர் சர்வதேச உயர்தர புத்தி கூர்மை சங்கத்திலும் உறுப்பினராக உள்ளார்.



## வெள்ளை மாளிகை பத்திரிகை நிரூபர் சங்கம்

- வெள்ளை மாளிகை பத்திரிகை நிரூபர் சங்கத்தின் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய –அமெரிக்கர் அனிதா குமார் ஆவார்.
- அதிபர் தொடர்பான செய்திகளை பற்றி சேகரிக்கும் பத்திரிக்கையாளர்களில் முதலிடத்திலுள்ள சங்கம் இந்த வெள்ளை மாளிகை பத்திரிகை நிரூபர் சங்கம் ஆகும்.
- 2012-லிருந்து வெள்ளை மாளிகை தொடர்பான செய்திகளை இவர் சேகரித்து வருகிறார். மேலும் இவர் இக்குழுவிற்கு போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

## தேசிய பெண்கள் ஆணையம் (NCW)

- ரேகா சர்மா தேசிய மகளிர் ஆணையத்தின் (NCW) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நியமனத்திற்கு முன்னதாக இவர் அந்த ஆணையத்தின் உறுப்பினராகவும் செப்டம்பர் 2017ல் லலிதா குமாரமங்கலம் பதவி விலகிய பின்னர் கூடுதல் பொறுப்பாளராகவும் பொறுப்பேற்றிருந்தார்.
- தேசிய பெண்கள் ஆணையமானது 1992ம் ஆண்டு தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் 1990-ன் கீழ் நிறுவப்பட்ட சட்டப் பூர்வமான அமைப்பாகும்.
- இது பெண்களின் அத்தியாவசிய நலன், பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பிற்கான தேசிய அளவிலான மிக உயர்ந்த அமைப்பாகும்.
- இது மாதாந்திர செய்திமடலான ராஷ்ட்ரிய மஹிலா என்ற பத்திரிக்கையை இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தொடர்ந்து வெளியிடுகிறது.

## சர்வதேச புவியியல் தேனீ உலக சாம்பியன்ஷிப்

- ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்ற சர்வதேச புவியியல் தேனீ இளையோர் பிரிவில் உலக சாம்பியன்ஷிப்பை இந்திய-அமெரிக்க உயர்நிலைப் பள்ளி மாணவர் ஏவி கோயல் வென்றார்.
- 14 வயதுடைய ஏவி கலிபோர்னியாவின் சான்ஜோஸ்-ல் சில்வர் க்ரீக் உயர்நிலைப்

பள்ளியில் 10 வது நிலையில் உள்ளார்.


- 10 பதக்கப் போட்டிகளில் ஏழு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று மொத்த பதக்கப்பட்டியலில் அவர் முதலிடத்தைப் பிடித்தார்.
- மேலும் அவர் உலக சாம்பியன்ஷிப் பட்டத்திற்கான கீழ்க்காணும் மூன்று நிகழ்வுகளிலும் முதலிடத்தைப் பிடித்தார்.
  - சர்வதேச புவியியல் தேர்வு
  - சர்வதேச புவியியல் தேனீ
  - சர்வதேச புவியியல் கண்காட்சி
- 2016-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தப் போட்டியானது சர்வதேச கல்விப் போட்டி என்ற அமைப்பால் நடத்தப்பட்டு சர்வதேச வரலாறு தேனீ மற்றும் கிண்ணம் (International History Bee and Bowl) என்ற அமைப்பால் கண்காணிக்கப்படுகிறது.

## ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி

- நீதிபதி கீதா மிட்டல் ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் ஸ்ரீநகரில் ஆளுநர் N.N. வோஹ்ராவினால் அளிக்கப்பட்ட அலுவலக உறுதிமொழியினை எடுத்துக் கொண்டார்.
- இவர் ராமலிங்கம் சுதாகருக்குப் பிறகு அப்பதவிக்கு வந்துள்ளார்.

## வரலாற்றில் அதிக செல்வாக்கு மிகுந்த பெண் - BBC

- BBC வரலாற்று இதழினால் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு மூலம் நோபல் பரிசு பெற்றுள்ள அறிவியலாளர் மேரி கியூரி வரலாற்றில் அதிக செல்வாக்கு மிகுந்த பெண்ணாக விருது பெற்றுள்ளார்.



- வரலாற்று அறிவியலுக்கான பிரிட்டிஷ் சங்கத்தின் தலைவர் பட்ரிசியா ஃபரா மேரி

கியூரியினை பரிந்துரை செய்தார்.

- மேரி கியூரி 1903 மற்றும் 1911 ஆகிய வருடங்களில் முறையே இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகியவற்றுக்கான நோபல் பரிசினை வென்றுள்ளார்.
- மேரி கியூரி,
  - இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண் ஆவார்.
  - பிரான்சின் சோர்போனில் பணியாற்றிய முதல் பெண் பேராசிரியர் ஆவார்.
  - இரண்டு நோபல் பரிசுகளை வென்ற முதல் பெண் ஆவார்.
  - இரண்டு அறிவியல் பிரிவுகளில் நோபல் பரிசு வென்ற முதல் நபர் ஆவார்.

## 2018 அல்பானி மருத்துவ மையப் பரிசு

- அமெரிக்காவைச் சேர்ந்த
  - ஜேமஸ் அலிசன்
  - கார்ல் ஜூன் மற்றும்
  - ஸ்டீவன் ரோசன்பெர்க்

  ஆகிய மூன்று ஆராய்ச்சியாளர்கள் மருத்துவம் மற்றும் உயிரிமருத்துவ ஆராய்ச்சியில் 2018 ஆம் ஆண்டிற்கான அல்பானி மருத்துவ மையப் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- நியூயார்க்கின் அல்பானியில் 2018 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சியாளர்கள் இவ்விருதைப் பெறவுள்ளனர்.
- புற்று நோய், எச்ஐவி மற்றும் இதர நோய்களுக்கு புதுமுறை மருத்துவ சிகிச்சைக்கு வழி வகுக்கும் நோய் எதிர்ப்பியல் ஆராய்ச்சி மற்றும் அவர்களுடைய கருத்துகளை பயனுள்ள நோய் நீக்கல் முறைக்கு மாற்றுதல் ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இந்த விருது அல்பானி மருத்துவ மையத்தால் வழங்கப்படும் மருத்துவம் மற்றும் உயிரிமருத்துவ ஆராய்ச்சிகளுக்கான ஐ.நா.வின் இரண்டாவது உயரிய விருது ஆகும்.
- இந்த விருது மறைந்த மோரிஸ் "மார்டி" சில்வர்மேன் என்பவரால் 2000 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது $5,00,000 பரிசுத் தொகையைக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் பணக்காரப் பெண்மணி

- கோடக் வெல்த் ஹுரூன் 2018 ஆம் ஆண்டிற்கான முதன்மை பணக்காரப் பெண்கள் பட்டியலில் கோத்ரேஜ் குடும்பத்தின் வழித்தோன்றலான மூன்றாம் தலைமுறை வாரிசுகளான ஸ்மிதா வி கிருஷ்னா (ரூ.37,570 கோடி) முதலிடம் பிடித்துள்ளார்.
- HCL–ன் சிஇஓ மற்றும் நிர்வாக இயக்குநரான ரோஷ்னி நாடார் இப்பட்டியலில்

இரண்டாவது இடம் (ரூ.30,200 கோடி) பிடித்துள்ளார்.

- டைம்ஸ் குழுவின் தலைவரான இந்து ஜெயின் இப்பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். இவரின் சொத்து மதிப்பு ரூ.26,240 கோடி ஆகும்.
- பயோகானின் நிறுவனர் மற்றும் மேலாண் இயக்குநரான கிரண் மஜூம்தார் – ஷா இப்பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளார். HCL நிறுவனரான ஷிவ் நாடாரின் மனைவி கிரண் நாடார் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.
- ஹூயுரன் இந்திய பணக்கார பட்டியலில் பெண்கள் 2012-ல் 4 சதவீதமாக இருந்தனர். இது தற்போது 9 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- தொழிற்துறை வாரியாக, 22 பெண்களைக் கொண்ட மருத்துவத் துறை இப்பட்டியலில் முன்னிலை வகிக்கிறது.
- இதற்கு அடுத்து 12 பெண்களைக் கொண்ட மென்பொருள் துறை இரண்டாமிடத்திலும் அதற்கு அடுத்து 8 பெண்களைக் கொண்ட உணவு மற்றும் பானங்கள் துறை மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- நகர வாரியாக, தலா 25 பெண்களைக் கொண்டு மும்பை மற்றும் தில்லி ஆகிய இரு நகரங்கள் இந்தியாவில் மிகப்பெரிய பணக்கார பெண்கள் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றன. இந்த இரண்டு நகரங்களுக்கு அடுத்து பெங்களூரு (14) இடம் பிடித்துள்ளது.

## கல்கத்தா விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் மன்ற வருடாந்திர விருதுகள்

- கல்கத்தாவில் நடைபெற்ற கல்கத்தா விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் மன்றத்தின் வருடாந்திர நிகழ்ச்சியில் இந்திய கால்பந்து அணியின் தலைவர் சுனில் சேத்ரி 'வருடத்தின் சிறந்த விளையாட்டு வீரர்' என விருதளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.





- மற்ற விருது பெற்றவர்கள்
    - நாட்டின் சிறந்த இளநிலை விளையாட்டு வீரர் : இஷான் போரெல்
    - வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் : ஆரோன் கோஷ், அருண் லால், அக்தர் அலி
    - சிறந்த தடகள வீரர் (ஆண்) : சஃபிகுல் மண்டல்
    - சிறந்த தடகள வீரர் (பெண்) : பைரவி ராய்

## WHO - புகையிலை ஒழிப்பு தின விருது 2018

- புகையிலை கட்டுப்பாட்டிற்கென அசாதாரண பங்களிப்பு வழங்கியதற்காக டெல்லி அரசின் உடல்நல கூடுதல் இயக்குநரான S.K.அரோராவிற்கு மதிப்புமிக்க WHO புகையிலை ஒழிப்பு தின விருது 2018 வழங்கப்பட்டது.
- டெல்லியில் புகையிலை நோய்த் தாக்கமானது கடந்த ஆறு வருடங்களில் 6.5% குறைந்துள்ளது. இது இந்தியாவின் மற்ற பகுதிகளின் சராசரி அளவைவிட அதிகமாகும்.
- தேசிய உடல்நலக் கொள்கை 2017 ஆனது புகையிலை நோய் தாக்கத்தை 2020ல் 15% அளவிலும் 2025ல் 30% அளவிலும் ஒப்பீட்டளவில் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.
- டெல்லி இந்த இலக்கை 2017க்கு முன்னரே அடைந்துள்ளது.

## ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் மறைவு

- சுவிட்சர்லாந்தின் பெர்னில் ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் மற்றும் நோபல் அமைதிப் பரிசு பெற்றவரான கோபி அனான் காலமானார்.
- இவர் ஐ.நா.வின் ஏழாவது பொதுச் செயலாளராக 1997 முதல் 2006 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். இவர் ஐ.நா.வின் பொதுச் செயலாளராக இரு முறை பணியாற்றியுள்ளார்.
- இவர் ஐ.நா.வின் பொதுச் செயலாளராக பணியாற்றியுள்ள முதலாவது ஆப்பிரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்தவர். மேலும் ஐ.நா.வின் அதிகாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது பொதுச் செயலாளர் இவராவார்.



- இவர் 1999ஆம் ஆண்டு ஐ.நா.வின் உலக உடன்படிக்கை முயற்சியைத் தொடங்கினார் (UN Global Compact Initiative). இவர் தொடங்கிய இந்த முயற்சியானது தற்பொழுது உலகில் பெருநிறுவனத்தின் சமூக பொறுப்புடைமையை (CSR - Corporate Social Responsibility) ஊக்குவிப்பதற்கான திட்டமாகும்.
- மேலும் கோபி அனான் பவுண்டேசனை நிறுவி அதன் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார். நெல்சன் மண்டேலா தொடங்கிய சர்வதேச நிறுவனமான 'தி எல்டர்ஸ்' (The Elders) என்ற அமைப்பின் தலைவராகவும் அவர் செயல்பட்டுள்ளார்.
- 2001ஆம் ஆண்டு நோபல் அமைதிப் பரிசினை ஐ.நா.சபையுடன் இணைந்து கோபி அனானும் பெற்றுள்ளார்.
- 2005ஆம் ஆண்டு ஐ.நா.வுக்குள்ளேயே இரு புதிய அரசுகளுக்கிடையேயான அமைப்புகளை உருவாக்குவதில் இவர் பெரும் பங்காற்றியுள்ளார். அமைதியை ஏற்படுத்தும் ஆணையம்

மற்றும் மனித உரிமைகள் மன்றம் ஆகியவை அந்த இரு அரசுகளுக்கிடையேயான அமைப்புகள்.

## வாஜ்பாயின் மறைவிற்குப் பின் மூன்று விருதுகள்

- ❖ முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் மறைவையடுத்து 3 விருதுகள் ஏற்படுத்தப்படும் என்று மத்தியப் பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சவ்கான் அறிவித்துள்ளார்.
    1) 1-வது விருது - கவிஞர்கள்
    2) 2-வது விருது - பத்திரிக்கைத் துறையில் சிறந்த பங்களிப்பை ஆற்றியவர்கள்
    3) 3-வது விருது - நிர்வாகத்தில் சிறப்பாக பணியாற்றுபவர்கள்



## ஐ.நா.வின் 'லீஜியன் ஆப் மெரிட்' (Legion of Merit) விருது

- ❖ வாஷிங்டன் DCயின் பெண்டகனில் இந்திய இராணுவத்தின் ஓய்வு பெற்ற தலைமை இராணுவ அதிகாரியான ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக்கிற்கு 2018 ஆம் ஆண்டிற்கான ஐ.நா. வின் 'லீஜியன் ஆப் மெரிட்' (தளபதிக்கான பட்டம்) விருது வழங்கப்பட்டது.
- ❖ இந்திய இராணுவத்திற்கு தனது பங்களிப்பை ஆற்றியதற்காக ஜெனரல் தல்பீர் சிங்கிற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாட்டு இராணுவ தொடர்புகளில் பங்காற்றியதற்காகவும் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவைச் சேர்ந்த இராணுவ வீரருக்கு இவ்விருது வழங்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். இதற்குமுன் இவ்விருது 1946ஆம் ஆண்டு ஜெனரல் இராஜேந்திரசிங் ஜடேஜாவிற்கு வழங்கப்பட்டது.
- ❖ லீஜியன் ஆப் மெரிட் விருது 4 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.
    1) தலைமை தளபதிக்கான பட்டம்
    2) தளபதிக்கான பட்டம்
    3) அதிகாரிக்கான பட்டம்
    4) படைக்கான பட்டம்

## அதிக தேசபக்தியுள்ள குறியீடு

- ❖ ஐக்கிய இராஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்நேர சந்தை ஆராய்ச்சி மற்றும் தரவு பகுப்பாய்வு நிறுவனமான யுகவ் (Yougov) என்ற நிறுவனத்தால் பாரத ஸ்டேட் வங்கி (SBI) மிகவும் தேசபக்தியுள்ள குறியீடாக தரவரிசை படுத்தப்பட்டுள்ளது.
- ❖ துறைகளின் அடிப்படையில் நிதித்துறை உயர் மட்டத்திலும் அதனைத் தொடர்ந்து வாகனம், நுகர்வோர் பொருட்கள், உணவு மற்றும் தொலைத் தொடர்பு துறைகள் அடுத்த இடங்களிலும் உள்ளன.
- ❖ துறைவாரியான ஆராய்ச்சி முடிவுகள்
    - o நிதித்துறை – எஸ்.பி.ஐ, எல்.ஐ.சி
    - o வாகனத் துறை – டாடா மோட்டார்ஸ், பாரத் பெட்ரோலியம், மாருதி சுசூகி
    - o உணவுத் துறை – அமுல்
    - o தனிநபர் உபயோகம் – பதஞ்சலி
    - o வாய் பராமரிப்பு – கோல்கேட், டாபர், வீக்கோ
    - o தொலைத்தொடர்பு - பி.எஸ்.என்.எல், ரிலையன்ஸ் ஜியோ
    - o வீட்டு பராமரிப்பு பொருட்கள் – நிர்மா
    - o பானங்கள் வகை – டாடா டீ, தாஜ்மஹால்

## அதிக சம்பளம் பெற்ற பெண் விளையாட்டு வீரர்கள்

- ❖ உலகின் மிக அதிக வருவாய் பெற்ற பெண் விளையாட்டு வீரர்களுக்கான (ஜுன் 2017 மற்றும் ஜுன் 2018 இடையே) ஃபோர்ப்ஸ் பட்டியலில் இந்தியாவின் பிரபல இறகுப் பந்தாளர் மற்றும் ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற பி.வி. சிந்து (23) 7வது இடத்தைப் பிடித்துள்ளார்.

**THE TOP 10**

| PLAYER | SPORT | TOTAL EARNINGS | PRIZE MONEY | ENDORSEMENTS |
|---|---|---|---|---|
| Serena Williams | Tennis | $18.1 million | $62,000 | $18 million |
| Caroline Wozniacki | Tennis | $13 million | $7 million | $6 million |
| Sloane Stephens | Tennis | $11.2 million | $5.7 million | $5.5 million |
| Garbine Muguruza | Tennis | $11 million | $5.5 million | $5.5 million |
| Maria Sharapova | Tennis | $10.5 million | $1 million | $9.5 million |
| Venus Williams | Tennis | $10.2 million | $4.2 million | $6 million |
| P. V. Sindhu | Badminton | $8.5 million | $500,000 | $8 million |
| Simona Halep | Tennis | $7.7 million | $6.2 million | $1.5 million |
| Danica Patrick | NASCAR | $7.5 million | $3 million | $4.5 million |
| Angelique Kerber | Tennis | $7 million | $3 million | $4 million |

- இந்தப் பட்டியலில் புகழ்மிக்க டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் தனது பரிசுத் தொகையான மொத்தம் $ 62,000 உடன் சேர்த்து 18.062 மில்லியன் டாலர் சம்பாதித்து முதலிடத்தில் உள்ளார்.
- மிக அதிகம் சம்பாதிக்கும் 10 பெண் விளையாட்டு வீரர்களில் 8 பேர் டென்னீஸ் வீரர்கள் ஆவர். மீதமுள்ள இரண்டு பேர் கார் பந்தய வீரர்கள் ஆவர்.

## ரவீணா தண்டன் - சஞ்சய் காந்தி தேசிய பூங்காவின் விளம்பரத் தூதர்

- மும்பை நகரைச் சேர்ந்த சஞ்சய் காந்தி தேசிய பூங்காவின் (SGNP) விளம்பரத் தூதுவராக பாலிவுட் நடிகை ரவீணா தண்டன்-ஐ மகாராஷ்டிரா அரசு நியமித்துள்ளது.
- அவர் சுற்றுச்சூழல் உணர்வுள்ள குடிமகனாக இருப்பதால் சக குடிமக்களுக்கு விழிப்புணர்வைப் பரப்புவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இது மகாராஷ்டிராவில் மும்பைக்கு அருகில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். முன்னர் இது போரிவளி தேசிய பூங்கா என்றழைக்கப்பட்டது. 1996ல் தற்போதைய பெயரான சஞ்சய் காந்தி என்ற பெயருக்கு மாற்றப்பட்டது.
- மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள மிகப்பெரிய பூங்காக்களில் ஒன்றாக இது குறிப்பிடத்தக்கது மற்றும் உலகில் மிகவும் அதிகமான பார்வையாளர்கள் வருகையுடைய பூங்காக்களில் ஒன்றாகவும் உள்ளது.
- 2000 ஆண்டுகள் பழமையான சில 160 குடைவரைக் குகைகள் இந்த பூங்காவின் உள்ளே அமைந்துள்ளன மற்றும் இது ஒரு பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளமாகும்.

## வி.எஸ்.நய்ப்பால் - மறைவு

- காலனித்துவம், கருத்துவாதம், மதம் மற்றும் அரசியல் மீதான விமர்சனத்தால் அறியப்பட்டவரான நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் வி.எஸ்.நய்ப்பால் தனது 85வது வயதில் ஆகஸ்டு 11ஆம் தேதியன்று காலமானார்.



- சர்.வித்யதார் சூரஜ்பிரசாத் நய்ப்பால் ஆகஸ்ட் 17, 1932 அன்று ட்ரினிடாடில் பிறந்தார்.
- நய்ப்பால் 30க்கும் மேற்பட்ட கற்பனை மற்றும் கற்பனையல்லாத புத்தகங்களை எழுதியுள்ளார். 'தி மிஸ்டிக் மஸ்ஸீர்' என்பது அவரது முதல் புத்தகமாகும்.
- அவரது மிகவும் பிரபலமடைந்த நாவலான 'A House for Mr.Biwas' ஆனது 1961ல் வெளியிடப்பட்டது.

- இவர் 1971ஆம் ஆண்டில் மேன்புக்கர் பரிசு மற்றும் 1990ல் இலக்கியத்திற்கான சேவைக்காக நைட்ஹுட் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
- இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2010ல் இவருக்கு வழங்கப்பட்டது.

## 2017ஆம் ஆண்டின் சிறந்த நல்லாசிரியருக்கான தேசிய விருது



- கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலுமிச்சம்பட்டியில் மதுக்கரை பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியரான R.சத்தி 2017ஆம் ஆண்டின் சிறந்த நல்லாசிரியர் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவ்விருது மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினால் வழங்கப்படுகிறது.
- இவ்விருதானது ஆசிரியர் தினமான செப்டம்பர் 5 அன்று குடியரசுத் துணைத் தலைவர் M.வெங்கய்ய நாயுடு அவர்களால் வழங்கப்படவிருக்கிறது.
- இவ்விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 45 நபர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சத்தி என்ற ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சமீபத்தில் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது தேசிய விருதுகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு புதிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.
- தற்பொழுது அரசு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களுடைய பெயர்களை நேரடியாக ஆசிரியர்களுக்கான தேசிய விருதுக்கு அனுப்பலாம்.
- இதற்கு முன் ஆசிரியர்களின் பெயர்களை மாநில அரசு தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும்.

## இலங்கையின் தேசிய செயல்திறனுக்கான விருதுகள் 2018

- சிறந்த ஆற்றல் சேவையளிக்கும் நிறுவனத்தின் 'ஆற்றல் செயல்திறனின் முன்னேற்றம்' என்ற பிரிவில் 'போர்ப்ஸ் மார்ஷல் லங்கா' நிறுவனம் 'கோல்டன் பிளேம் விருதுக்குத்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இலங்கையின் 2018வது ஆண்டிற்கான தேசிய செயல்திறனுக்கான விருதுகளை இலங்கை நீடித்த ஆற்றல் ஆணையம் உருவாக்கியுள்ளது.

## சதீஷ் ரெட்டி - DRDO-ன் புதிய தலைவர்

- புகழ்பெற்ற விண்வெளி ஆராய்ச்சியாளரான டாக்டர் G.சதீஷ் ரெட்டி பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (DRDO-Defence Research and Development Organisation) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2 ஆண்டுகள் இப்பதவியில்

நீடிப்பார்.


- DRDO-ன் தலைவராக பதவி வகிக்கும் இவர் அதே நேரத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் (DDR&D - Department of Defence Research and Development) செயலாளராகவும் செயல்படுவார்.



- இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன் இவர் பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகராகவும் ஏவுகணைகள் மற்றும் போர்த்திறன் சார்ந்த அமைப்புகளின் (DGMSS - Director General, Missiles Strategic System) பொது இயக்குநராகவும் பணியாற்றினார்.
- 2018ஆம் ஆண்டு மே மாதத்தில் DRDO-ன் தலைவர் டாக்டர் S.கிறிஸ்டோபர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்பு DRDO-ன் தலைவர் பதவி காலியாக உள்ளது.
- ஐக்கிய இராஜ்ஜியத்தின் ராயல் ஏரோநாட்டிக்கல் சொசைட்டியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற இந்தியாவில் பணியாற்றும் முதலாவது பாதுகாப்பு ஆராய்ச்சியாளர் டாக்டர்.சதீஷ் ரெட்டி ஆவார்.
- சிறந்த பொறியாளருக்கான முதலாவது IEI (Institution of Engineers India) மற்றும் IEEE (Institute of Electrical and Electronics Engineers - America) உடன் இணைந்து வழங்கும் விருதுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## குல்தீப் நய்யர் - மறைவு

- முதுபெரும் பத்திரிக்கையாளர், ஆசிரியர் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலரான குல்தீப் நய்யர் (95) 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23ல் புது தில்லியில் மறைந்தார்.
- நய்யர் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார் மற்றும் "வித்அவுட் பியர் : தி லைப் அண்ட் டிரயல் ஆப் பகத் சிங்", "நேருவிற்குப் பின் இந்தியா", மற்றும் "எமர்ஜென்சி ரீடோல்டு" உள்ளிட்ட 15 புத்தகங்களை எழுதியுள்ளார்.



- நெருக்கடி நிலையின் போது நிர்வாகத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னின்று நடத்தியதற்காக உள்நாட்டுப் பாதுகாப்பு பராமரிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- பத்திரிக்கைத் துறையில் இவது பங்களிப்பின் காரணமாக 2015ஆம் ஆண்டில் இவருக்கு "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கப்பட்டது. இவ்விருது ராம்நாத் கோயங்கா சிறந்த விருதுகளின் 8வது பதிப்பின் போது வழங்கப்பட்டது.

- இவர் 1990-ல் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கான இந்தியாவின் உயர் ஆணையராகப் பணியாற்றியுள்ளார். மேலும் இவர் மேலவையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

## ஆசியாவை மாற்றியமைத்ததில் பெரும் பங்களிப்பாளர் விருது ( Game Changer award )

- இந்தியாவில் பிறந்தவரும் பெப்ஸிகோவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான இந்திரா நூயி, உலகளாவிய கலாச்சார அமைப்பான ஆசியச் சங்கத்தால் (global cultural organisation Asia Society) 2018 ஆம் ஆண்டின் ஆசியாவை மாற்றியமைத்ததில் பெரும் பங்காளிப்பாளர் என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



- நூயி 'அவரது முன்னோடிகளின் வணிகச் சாதனைகளை அங்கீகரித்தல், மனிதாபிமான சாதனைகள், சிறுமிகள் மற்றும் பெண்களுக்காக வாதிடுதல் ஆகியவற்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர் 12 ஆண்டுகளுக்குப் பிறகு பெப்சிகோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.
- இந்த 2018 ஆசியாவை மாற்றியமைத்தலில் பெரும்பங்களிப்பாளர் விருதானது வரையறுக்கப்பட்ட தைரியம், அற்புதமான வேலைகள், உலகின் சக குடிமகன்களை ஊக்குவித்தல் போன்றவற்றில் தடைகளை உடைத்தல் போன்ற தகுதிகளில் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வரும் அக்டோபரில் வழங்கப்படவுள்ளது.

## UNEP-ன் துணை பொதுச் செயலாளர் சத்யா S. திரிபாதி

- ஐ.நா.வின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பிற்கான (UNEP – United Nations Environment Programme) நியூயார்க் அலுவலகத்தின் தலைவராகவும் துணைப் பொதுச் செயலாளராகவும் இந்தியாவைச் சேர்ந்த சத்யா S. திரிபாதியை ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்தோரஸ் நியமித்துள்ளார்.
- இதற்கு முன் திரினிடாட் மற்றும் டோபாகோவைச் சேர்ந்த எலியாட் ஹாரிஸ் துணைப் பொதுச் செயலாளராக பணியாற்றினார். ஐ.நா.வின் மூத்த நிலையில் உள்ள பதவிகளுக்கு மூன்றாவது இந்தியராக திரிபாதி நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2017 ஆம் ஆண்டு முதல் திரிபாதி UNEP-ன் நீடித்த வளர்ச்சிக்கான செயற்பாடு நிரல்கள் 2030-ன் மூத்த ஆலோசகராகப் பணியாற்றினார்.

- இதற்குமுன் இவர் வளரும் நாடுகளில் காடுகளை அழித்தல் மற்றும் வனம் தரங்குறைதலிருந்து வெளியேறும் உமிழ்வுகளை குறைத்தலுக்கான ஐ.நா. அலுவலகத்தின் (REDD – Reducing Emission from Deforestation and Forest Degradation) நிர்வாகத் தலைவர் மற்றும் இயக்குநராகப் பணியாற்றினார்.



- ஐ.நா.வில் மிக மூத்த இந்திய அதிகாரியாக அதுல் கரே செய்முறைசார் சேவைத் துறையின் தலைவராக (Under Secretary General) பதவி வகிக்கிறார்.

## காகாடு பயிற்சி 2018

- ஆஸ்திரேலியாவின் டார்வினில் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 15 வரை பன்னாட்டு பிராந்திய கடல்வழி ஈடுபாட்டுப் பயிற்சியான 'காகாடு 2018'-ன் 14வது பதிப்பு தொடங்கியது.
- பன்னாட்டு பிராந்திய கடல்வழி ஈடுபாட்டுப் பயிற்சியான 'காகாடு - 2018' ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ராயல் ஆஸ்திரேலிய விமானப் படையின் உதவியுடன் (RAAF- Royal Australian Air Force) ராயல் ஆஸ்திரேலிய கப்பற்படை நடத்துகிறது.



- இந்திய கப்பற்படையின் சார்பாக ஐஎன்எஸ் சஹ்யாதிரி அதில் பங்கேற்கிறது.
- பிராந்திய கப்பற்படைகளில் பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியக் கப்பற்படையின் பங்கேற்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மேலும் இது இந்திய பசிபிக் பகுதிகளில் அமைதி மற்றும் நிலைப்புத் தன்மையை உறுதி செய்வதில் இந்தியாவின் பங்களிப்பிற்கு ஊக்கப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2018 ஆம் ஆண்டின் சிறந்த இந்தி புத்தகம்

- 2018ஆம் ஆண்டின் சிறந்த இந்தி புத்தகமாக வைரமுத்துவின் 'கள்ளிக்காட்டு இதிகாசம்' என்ற புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக FICCI (Federation of Indian Chambers of Commerce & Industry) அறிவித்துள்ளது.



- இதற்கு முன் இப்புத்தகம் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளது.
- இப்புத்தகத்தின் இந்தி மொழிபெயர்ப்பு கடந்த ஆண்டு மொழிபெயர்ப்பாளர் எச்.பாலசுப்பிரமணியம் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டு 'நாகாபானி வன் கா இதிகாஸ்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.


# விளையாட்டுச் செய்திகள்

## IAAF வைர லீக்

- மொனாக்கோ வைர லீக் போட்டியின் ஸ்டிபில்சேஸில் 3000 மீ தூரத்தை 8 நிமிடங்கள் 44.32 வினாடிகளில் கடந்து கென்யாவின் பீட்ரைஸ் செப்கோச் உலக சாதனை படைத்துள்ளார்.
- 2016ஆம் ஆண்டு பஹ்ரைனின் ரூத் ஜெபட் 8 நிமிடங்கள் 52.78 வினாடிகளில் அத்தொலைவைக் கடந்ததே உலக சாதனையாக இருந்தது. இச்சாதனையை பீட்ரைஸ் செப்கோச் முறியடித்துள்ளார்.

## 1000வது டெஸ்ட் - இங்கிலாந்து

- 1000வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை விளையாடிய ஒரே நாடு இங்கிலாந்து ஆகும்.



- எட்க்பாஸ்டனில் இந்தியாவுக்கு எதிரான தொடக்க டெஸ்ட் போட்டியின் போது இங்கிலாந்து இந்த மைல்கல்லை எட்டியது.
- இதுவரை இங்கிலாந்து ஆண்களுக்கான டெஸ்ட் போட்டியில் 1877ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடத் தொடங்கியதிலிருந்து 999 போட்டிகளை விளையாடியுள்ளது. இந்த 999 போட்டிகளில் 357 டெஸ்ட்களில் வெற்றியும், 297 டெஸ்ட்களில் தோல்வியும் 345 போட்டிகளில் எந்த முடிவும் எட்டப்படாமலும் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளது.

## 2018 RBC கனடாவின் ஓபன் கோல்ப் பட்டம்

- கனடாவின் ஒக்வில்லியின் கிலென் அபே கோல்ப் சங்கத்தில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டிற்கான RBC கனடாவின் ஓபன் விளையாட்டில் டஸ்டின் ஜான்சன் வெற்றி பெற்றுள்ளார்.
- தற்பொழுது இவர் உலகில் முதல் இடத்தில் உள்ளார். டைகர் வுட்ஸ்குப் பிறகு (2005-09) தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகளில் குறைந்தபட்சம் மூன்று முறை வெற்றி பெற்ற முதலாவது வீரர் இவராவார்.

## பிரிக்ஸ் U-17 கால்பந்து 2018

- 2018ஆம் ஆண்டிற்கான 17 வயதிற்குட்பட்ட பிரிக்ஸ் பெண்கள் கால்பந்து போட்டி தென்ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பெர்க்கில் நடத்தப்பட்டது.
- இதில் பிரேசில் வெற்றியாளராகவும், சீனா இரண்டாமிடத்தையும் பிடித்து 2018ம் ஆண்டுப் பதிப்பினை நிறைவு செய்துள்ளன.
- இக்கோப்பையின் முதல் வரலாற்றுப் பதிப்பு, இந்தியாவில் நடந்த 8வது பிரிக்ஸ் மாநாட்டின் நிகழ்ச்சியை முன்னிட்டு 2016ம் ஆண்டில் இந்தியாவின் கோவா மாநிலத்தில் விளையாடப்பட்டது.
- துவக்கப் பதிப்பில் பிரேசில் முதலிடத்தையும், தென்னாப்பிரிக்கா இரண்டாமிடத்தையும் பிடித்தன.
- இப்போட்டி ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு முறையும், ஒவ்வொரு போட்டியும் பிரிக்ஸ் நாடுகளில் நடத்தப்படும்.
- 2017ஆம் ஆண்டின் சியாமென் மாநாட்டின் போது பிரிக்ஸ் கால்பந்து கோப்பை நடத்தப்படவில்லை.

## பாட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டி

- சீனாவின் நன்ஜிங்கில் நடைபெற்ற பாட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த கரோலினா மெரின் வெற்றி பெற்றார்.
- இவ்வெற்றியின் மூலம் மூன்று உலகப் பதக்கங்களை வென்ற ஒரே வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

- உலகளவில் சிந்துவின் இரண்டாவது வெள்ளி மற்றும் நான்காவது பதக்கம் இதுவாகும்.
- உலக சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் சிந்து தொடர்ந்து இரண்டாவது முறையாக தோல்வி அடைந்துள்ளார்.
- கென்டோ மொமொடா என்பவர் ஜப்பானின் முதலாவது வீரராக உலக ஆண்கள் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.



## விராட் கோலி - ஐசிசி தரவரிசைப் பட்டியல்

- இங்கிலாந்திற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கோலி அடித்த 200 ரன்களானது ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் அவருக்கு முதலிடத்தை பெற்றுக் கொடுத்துள்ளது.




- ஆஸ்திரேலியாவின் முன்னாள் கேப்டன் ஸ்டீவ் ஸ்மித்தை அவர் இரண்டாமிடத்திற்கு அனுப்பினார்.
- கோலி இங்கிலாந்திற்கு எதிராக எட்க்பாஸ்டனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிஸ்ஸில் 149 ரன்கள் குவித்து தனது 22 சதத்தைப் பூர்த்தி செய்தார்.
- அவர் இரண்டாவது இன்னிஸ்ஸில் 51 ரன்கள் சேர்ந்தார்.
- 2011ம் ஆண்டில் சச்சின் டெண்டுல்கருக்குப் பிறகு, டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இடம் பிடித்த முதல் இந்திய மட்டை வீச்சாளர் என்ற நிலையை கோலி அடைய இச்சாதனை உதவி புரிந்துள்ளது.
- டெண்டுல்கர் மற்றும் கோலி ஆகியோரைத் தவிர, திலீப் வெங்சர்க்கார், ராகுல் திராவிட், வீரேந்தர்

Last Updated - 04 August 2018

Batting Rankings

| Pos | Player | |
|---|---|---|
| 1 | Virat Kohli | IND |
| 2 | Steve Smith | AUS |
| 3 | Joe Root | ENG |
| 4 | Kane Williamson | NZ |
| 5 | David Warner | AUS |
| 6 | Cheteshwar Pujara | IND |
| 7 | Dimuth Karunaratne | SL |
| 8 | Dinesh Chandimal | SL |
| 9 | Dean Elgar | SA |
| 10 | Aiden Markram | SA |

சேவாக் மற்றும் கௌதம் காம்பீர் ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்த மற்ற இந்திய மட்டை வீச்சாளர்கள் ஆவர்.

## தன் பாலினத்தவர் விளையாட்டுகள் - பாரீஸ்

- தன்பாலினத்தவர் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகியோரின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக தன்பாலினத்தவர் விளையாட்டுகள் எண்ணுகின்றன.
- பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரத்தில் 10வது தன்பாலினத்தவர் விளையாட்டுகள் நடத்தப்பட்டன.
- இவ்விளையாட்டுகள், 1982ம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோவில் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் நடத்தப்படுகின்றன.
- தன்பாலினத்தவர் விளையாட்டுகளுக்கான கூட்டமைப்பு, இவ்விளையாட்டின் 11வது பதிப்பிற்கான தலமாக ஹாங்காங்கை தேர்வு செய்துள்ளது.

## பெண்கள் உலக கோப்பை ஹாக்கி 2018

- பெண்களுக்கான ஹாக்கி உலகக் கோப்பையை 2018-ல் 8-வது முறையாக வென்று நெதர்லாந்து உலக சாதனை படைத்துள்ளது.
- இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அயர்லாந்தினை 6-0 என்ற கணக்கில் வீழ்த்தி நெதர்லாந்து அணி வென்றுள்ளது.
- பெண்களுக்கான ஹாக்கிப் போட்டியில் கிட்டி வான்மாலே அதிக கோல்களை அடித்துள்ளார்.



- ஸ்பெயின், ஆஸ்திரேலியாவினை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி மூன்றாவது இடத்தினை வென்று அதன் முதல் உலகக் கோப்பை பதக்கத்தினை வென்றுள்ளது.
- இந்தியா 8-வது இடத்தில் இப்போட்டியை நிறைவு செய்துள்ளது.
- 2018ம் ஆண்டின் பெண்கள் ஹாக்கி உலகக் கோப்பையின் இறுதி ஆட்டத்தில் நெதர்லாந்து அயர்லாந்தை 6-0 என்ற கணக்கில் வீழ்த்தி எட்டாவது முறையாக ஹாக்கி உலகக் கோப்பை வெற்றியாளர்கள் என்ற சாதனையைப் பெற்றுள்ளது.
- எப்போதும் இல்லாததாக அயர்லாந்து அணி எந்த ஒரு ஹாக்கி உலகக் கோப்பையின் இறுதி ஆட்டத்திலும் முதல் முறையாக பங்கேற்கின்றது. மேலும் 16 ஆண்டுகளுக்கு பிறகு

இந்த உலகக் கோப்பையில் அவர்களது முதல் பங்கற்பாகும்.

- அயர்லாந்து அணி உலகக் கோப்பை அரை இறுதி ஆட்டத்திற்கும் முதல் முறையாக தகுதி பெற்றது. ஆகஸ்டு 3ம் தேதி இந்தியாவை பெனால்டி முறையில் வீழ்த்தி இறுதி நான்கு அணிகளுள் தங்களது இடத்தை அயர்லாந்து அணி பதிவு செய்தது.

## உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் 2018 - மற்ற நிகழ்வுகளின் வெற்றியாளர்கள்


*ஆடவர் ஒற்றையர் பிரிவு*



- சீனாவின் சியூகியை தோற்கடித்து ஜப்பானின் கென்டோ மோமோடா போட்டியை (தங்க பதக்கம்) வென்றுள்ளார்.
- இவர் சாம்பியன்ஷிப்பை வென்ற முதல் ஜப்பானியர் ஆவார்.

*ஆடவர் இரட்டையர் பிரிவு*

- சீன ஜோடி லி ஜூன்குய் மற்றும் லியு யூச்சென் ஜப்பானிய ஜோடியான தக்சேசி கமூரா மற்றும் கெய்கோ சோனோடா ஆகியோரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளனர்.




*மகளிர் இரட்டையர் பிரிவு*

- ஜப்பானிய ஜோடி மயூ மத்சுமாடோ மற்றும் வக்கானா நாகாஹறா மற்றுமொரு ஜப்பானிய ஜோடியான யூகி புருசிமா மற்றும் சயாகா ஹிரோடா ஆகியோரை தோற்கடித்து போட்டியை வென்றுள்ளனர்.

*கலப்பு இரட்டையர் பிரிவு*

- சீன ஜோடியான சேங்க் சிவேய் மற்றும் ஹிவாங் யாகியாங் ஆகியோர் மற்றுமொரு சீன ஜோடியான வாங்க் யிலு மற்றும் ஹிவாங் டாங்பிங் ஆகியோரைத் தோற்கடித்து போட்டியினை வென்றுள்ளனர்.

## COTIF கோப்பை 2018

- ஸ்பெயினில் நடைபெற்று வரும் 2018 ஆம் ஆண்டிற்கான கோட்டிப் கோப்பை போட்டியில் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக கோப்பையை ஆறு முறை வென்ற அர்ஜெண்டினாவை இந்தியாவின் கால்பந்து அணி 2-1 என்ற கணக்கில் வீழ்த்தி சாதனை படைத்துள்ளது.
- இந்தியா முதன்முறையாக இப்போட்டியில் விளையாடி வருகிறது.

## மேற்கு ஆசியா கால்பந்து பெடரேஷன் கோப்பை

- ஜோர்டானின் அமானில் நடைபெற்ற மேற்கு ஆசியா கால்பந்து பெடரேஷன் கோப்பையில் 16 வயதுக்குட்பட்ட இந்திய அணியானது 16 வயதுக்குட்பட்ட சாம்பியனான ஈராக்கை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.
- இது ஈராக் அணிக்கு எதிராக எந்தவொரு நிலையிலும், அனைத்து வயது நிலையிலும் இந்தியக் கால்பந்து அணியின் முதலாவது வெற்றி இதுவாகும்.

## உலக இளையோர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் - 2018

- உலக இளையோர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் - 2018, சென்னையில் நடைபெற்றது.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இந்த தனிநபர்கள் நிகழ்வு 2009 லிருந்து ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது.



- அணி நிகழ்வு இரண்டு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும்.
- இறுதிப் போட்டியில் 2-0 என்ற கணக்கில் இங்கிலாந்தினை தோற்கடித்து எகிப்தின் தேசிய இளையோர் ஸ்குவாஷ் அணி உலக இளையோர் ஸ்குவாஷ் - 2018ன் சாம்பியனாகி உள்ளது.
- இந்தியா 11வது இடத்தைப் பெற்றுள்ளது.

| நிகழ்வு | வெற்றியாளர் | இரண்டாமிடம் |
|---|---|---|
| ஆண்களுக்கான தனிநபர் | முஸ்தபா அசல் (எகிப்து) | மர்வான் தரேக் (எகிப்து) |
| பெண்களுக்கான தனிநபர் | ரோவன் எலாரபி (எகிப்து) | ஹானியா எல் ஹமாமி (எகிப்து) |
| ஆண்களுக்கான அணி | எகிப்து | இங்கிலாந்து |

## ஆசிய நாடுகள் கோப்பை 2018

- ஈரானில் நடைபெற்ற 2018ம் ஆண்டின் ஆசிய நாடுகள் கோப்பையில் நடந்த மின்னல்வேக பிரிவில் (Blitz) இந்திய மகளிர் செஸ் அணி தங்கத்தை வென்றது.



- 2014ம் ஆண்டுப் பிறகு இப்போட்டியில் இது இந்தியாவின் முதல் தங்கப் பதக்கமாகும்.
- மேலும் இந்தியா துரிதம் (Rapid) மற்றும் பழைமையான (Classical) போட்டிப் பிரிவுகளிலும் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதங்கங்களை வென்றுள்ளது.

## வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) 2018

- வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) 2018 அல்லது சிட்டி ஓபன் 2018 போட்டி இவ்வாண்டு ஜூலை 28 முதல் ஆகஸ்டு 5 வரை அமெரிக்காவில் ராக் க்ரீக் பார்க் டென்னிஸ் மையத்தில் நடைபெற்றது.
- வாஷிங்டன் ஓபன் (டென்னிஸ்) ஒரு வருடாந்திர கடின தரை டென்னிஸ் போட்டியாகும். இவ்வருடம் இப்போட்டியின் 50வது பதிப்பாகும்.
- ஜெர்மனியின் அலெக்சாண்டர் வெரேவ் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாவுர் என்பவரை வீழ்த்தி ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.
- ரஷ்யாவின் ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா குரோசியாவின் டோனா வேதிக்கை தோற்கடித்து பெண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.
- ஆண்கள் இரட்டையர் பிரிவில் ஜேமி முர்ரே (UK), புருனோ சோயர்ஸ் (பிரேசில்) இணை மைக் பிரயான் (அமெரிக்கா), எட்வர்ட் ரோஜர் வாசலின் (பிரான்ஸ்) இணையை வென்றது.
- பெண்கள் இரட்டையர் பிரிவில் ஹன் சின்யுன் (சீனா), டரிஜா ஜீராக் (குரோஷியா) இணை அலெக்ஸா குவரசி (சிலி), எரின் ரூட்லிபி (நியூசிலாந்து) இணையை வென்றது.





## ஐரோப்பிய சுற்றுப் பயணக் கோப்பை

- பிஜி சர்வதேசப் போட்டியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அந்தோனி குவாயலை தோற்கடித்து இந்திய குழிப்பந்தாட்டக்காரர் ககன்ஜீத் புல்லர் முதல் ஐரோப்பிய சுற்றுலா கோப்பை வென்றுள்ளார்.



- இவ்வெற்றி புல்லரின் முதல் ஐரோப்பிய சுற்றுப் பயணக் கோப்பை வெற்றி மற்றும் 9-வது ஆசிய சுற்றுப் பயணக் கோப்பை வெற்றியாகும். இத்துடன் மொத்தமாக இது 10-வது வெற்றியாகும்.
- இதனால் ஆசிய சுற்றுப் பயணக் கோப்பைப் போட்டியில் வென்ற பெரிய சாதனை படைத்த இந்திய ஆட்டக்காரரும், ஆஸ்திரேலிய சுற்றுப் பயணக் கோப்பையை வென்ற முதல் இந்தியரும் இவர் ஆவார்.

## நேபாளம் - நெதர்லாந்து சர்வதேச ஒருநாள் போட்டி

- நெதர்லாந்தினை வீழ்த்தி நேபாளம் தனது முதல் சர்வதேச ஒருநாள் போட்டியினை வென்று சாதனை படைத்துள்ளது.
- 15 வருடங்கள் மற்றும் 335 நாட்கள் என்ற வயதில், ரோகிஸ் குமார் பவ்டல் (நேபாளம்) சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடும் 4-வது இளம் கிரிக்கெட் வீரராக ஆகி சாதனை படைத்துள்ளார்.
- பாகிஸ்தானைச் சேர்ந்த ஹசன் ரசா சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடிய முதல் இளம் கிரிக்கெட் வீரராக உள்ளார். இவர் தனது அறிமுக ஆட்டத்தினை 1996-ல் ஜிம்பாப்வேக்கு எதிரான போட்டியில், தனது 14 வருடங்கள் மற்றும் 233 நாட்கள் என்ற வயதில் விளையாடினார்.

## மெசி - பார்சிலோனாவின் அணித் தலைவர்

- 2018-19 காலத்திற்கான பார்சிலோனாவின் புதிய அணித்தலைவராக லியோனல் மெசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

- ஆன்ட்ரஸ் இனிஸ்தா ஜப்பானிய சங்கம் விசல் கோப்-உடன் சேர்ந்த பிறகு அவரது பொறுப்பை 31 வயதான அர்ஜென்டினாவினைச் சேர்ந்த மெசி எடுத்துக் கொள்கிறார்.




- செர்ஜியோ பஸ்குட்ஸ் துணை அணித்தலைவராக இருப்பார். மெசி 2001-ல் இச்சங்கத்தில் இணைந்தார். மேலும் இச்சங்கத்தின் அதிக கோல் அடித்தவராகவும் உள்ளார்.

## ITF Futures ஆடவருக்கான டென்னிஸ் போட்டி

- இந்தோனேசியாவில் நடைபெற்ற ITF Futures ஆடவருக்கான டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் மைக்கேலினை தோற்கடித்து இந்தியாவின் நிக்கி பூனச்சா வெற்றி பெற்றுள்ளார்.




- இது ஒற்றைப் போட்டிகளில் இவரின் முதல் வெற்றியாகும்.
- இவர், டேவிஸ் கோப்பை வெற்றியாளர் ராம்குமார் ராமநாதனுடன் சேர்ந்து 3 இரட்டையர் பிரிவினை வென்றுள்ளார்.
- ஆடவர் இரட்டையர் பிரிவு -ஜஸ்டின் பார்கி மற்றும் கிரிஸ்டோபர் ருங்கட் (இந்தோனேசியா)

## டொராண்டோ மாஸ்டர்ஸ்

- டொராண்டோ மாஸ்டர்ஸ்ஸில் ஸ்டீபெனாஸ் சிட்சிபாஸ்ஸை தோற்கடித்து ரபேல் நடால் தனது 80 வது வெற்றியை அடைந்துள்ளார்.
- இவ்வெற்றி 32 வயதான ஸ்பெயினைச் சேர்ந்த இவ்வீரருக்கு உயர்தர மாஸ்டர் நிலையில் 33 வது வெற்றியையும், ஒட்டுமொத்த அளவில் 80 வது வெற்றியையும் பெற்றுத் தந்துள்ளது.



- இவர் தற்போதைய காலகட்டத்தில் 5 போட்டிகளை வென்றுள்ளார். மேலும் லண்டனில் நடைபெற்ற இவ்வருட ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் முதல் இடத்தையும் பெற்றுள்ளார்.

## இந்தியாவின் இளமையான குழிப்பந்தாட்டக்காரர்

- இந்திய குழிப்பந்தாட்டக்காரர் வீரஜ் மடப்பா சமீபத்தில் பெங்களூருவில் நடைபெற்ற Take Solutions Masters ஆசியப் போட்டியில் முதல் பதக்கத்தினை வென்றுள்ளார்.



- இதற்கு முன்பு இந்தோனேசியா இன்விட்டேஷனல் கோப்பையை வென்ற ககன்ஜித் புல்லர் இச்சாதனையை படைத்திருந்தார்.
- ஆசிய போட்டியை வென்ற இந்தியாவின் இளமையான குழிப்பந்தாட்டக்காரர் என்பதைத் தவிர மடப்பா இப்பருவத்தில் கண்டப் போட்டியை வென்ற முதல் குழிப்பந்தாட்டக்காரர் (ரூகி) மற்றும் இளமையான விளையாட்டாளரும் ஆவார்.

## இந்தியாவின் 53-வது கிராண்ட் மாஸ்டர்

- ❖ அபுதாபி மாஸ்டர்ஸ் போட்டியில் நிஹல் சரின் அவருடைய மூன்றாவது மற்றும் இறுதிச் சுற்றில் வெற்றி அடைந்து இந்தியாவின் 53வது கிராண்ட் மாஸ்டர் ஆக உருவெடுத்துள்ளார்.



- ❖ இவருடைய தற்போதைய ELO மதிப்பீடானது 2556 ஆகும். இவர் செஸ் வரலாற்றில் 12-வது இளைய கிராண்ட் மாஸ்டர் ஆவார்.
- ❖ கடந்த ஜூனில் பிரக்னாநந்தா இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
- ❖ மேலும் சரின் கேரளாவின் மூன்றாவது கிராண்ட் மாஸ்டர் ஆவார். இவருக்கு அடுத்து G.N. கோபால் மற்றும் S.L. நாராயணன் ஆகியோர் உள்ளனர்.

## பெண்கள் கிராண்ட் மாஸ்டர்

- ❖ லட்டிவியாவின் ரீகாவில் நடைபெற்ற ரீகா தொழில்நுட்ப பல்கலைக்கழக ஓபன் செஸ் போட்டியில் இறுதிப் போட்டியை நிறைவு செய்ததையடுத்து 17 வயதுடைய R.வைசாலி பெண்கள் கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.



- ❖ சமீபத்தில் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற பிரக்னா நந்தாவின் மூத்த சகோதரி R.வைசாலி ஆவார்.
- ❖ பத்மஸ்ரீ கொனேரு ஹம்பி, சுபாராமன் விஜயலட்சுமி மற்றும் ஹரிக்கா டிரோனாவல்லி ஆகியோரைக் கொண்ட சிறப்புப் பட்டியலில் வைசாலியும் இணைந்துள்ளார்.
- ❖ கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறுவதற்கு, வீரர் 3 இயல்களைப் பெற வேண்டும். மேலும் கலப்பு ELO மதிப்பீடான 2500 புள்ளிகளைப் பெற வேண்டும்.

## SAFF 15 வயதுக்குட்பட்ட மகளிர் சாம்பியன்ஷிப்

- ❖ தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பின் 15 வயதுக்குட்பட்ட மகளிர் சாம்பியன்ஷிப்

போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

- ❖ பூட்டானின் திம்புவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா வங்காள தேசத்தை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தியது.
- ❖ இது SAFF-ன் 2வது 15 வயதிற்குட்பட்ட மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியாகும்.
- ❖ 2017ல் நடைபெற்ற தொடக்கப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி வங்காள தேசம் வெற்றி பெற்றது.
- ❖ SAFF 15 வயதிற்குட்பட்ட மகளிர் சாம்பியன்ஷிப் என்பது 7 தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 15 வயதிற்குட்பட்ட தேசிய மகளிர் அணிக்கான கால்பந்து போட்டி பந்தய கூட்டமைப்பு ஆகும்.

## ஆசிய விளையாட்டுக்கள் - 18வது பதிப்பு




- ❖ ஆசிய விளையாடுக்களின் 18வது பதிப்பு இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் தொடங்கியது. இப்போட்டியானது ஆகஸ்ட் 18 முதல் செப்டம்பர் 2 வரை இந்த ஆண்டு நடக்கவுள்ளது.
- ❖ முதன்முறையாக வீடியோ விளையாட்டுக்கள் முறையிலான போட்டிகள் மற்றும் கேனோ போலோ ஆகியவை செயல்விளக்க முறையில் நடத்தப்படவிருக்கின்றன.
- ❖ இப்போட்டியின் பிரம்மாண்ட தொடக்கவிழாவில் இந்திய கொடி தாங்கிச் செல்பவரான ஈட்டி எறியும் வீரர் நீரஜ் சோப்ரா தலைமையில் இந்தியக் குழு கலந்து கொள்கிறது.

## உலக அளவில் இந்தியாவின் முதலாவது பதக்கம் - சைக்கிள் போட்டி



- ❖ இந்தியாவின் சைக்கிள் ஓட்டுபவரான எஸ்ஸோ அல்பென் (17) சைக்கிள் போட்டியில் உலக அளவில் இந்தியாவின் முதலாவது பதக்கத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.
- ❖ ஸ்விட்சர்லாந்தின் அய்கிலேயில் நடைபெற்ற UCI ஜூனியர் டிராக் சைக்கிளிங் உலக சாம்பியன்ஷிப்பில் (UCI Junior Track Cycling World Championships) ஆண்களுக்கான கெய்ரின் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்று இச்சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார்.

- இவர் இறுதிப் போட்டியில், தங்கப் பதக்கம் வென்றவரான செக் குடியரசைச் சேர்ந்த ஜக்குப் ஸ்டாஸ்டினியை விட 0.017 வினாடிகள் பின் தங்கி அப்போட்டியை நிறைவு செய்துள்ளார்.
- எஸ்ஸோ அந்தமான் நிகோபாரைச் சேர்ந்தவர். இவர் சைக்கிள் போட்டியில் ஜூனியர் ஸ்பிரிண்ட் பிரிவில் தற்பொழுது உலக அளவில் முதலிடத்தில் உள்ளார்.
- எஸ்ஸோ மலேசியாவில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டிற்கான ஆசியான் டிரக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப்பில் தொடர்ந்து மூன்று முறை தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## 5 கேட்சுகளைப் பிடித்த 4வது இந்திய விக்கெட் காப்பாளர்

- இங்கிலாந்திற்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது நாளில் ஐந்து கேட்சுகளைப் பிடித்த 4வது இந்திய விக்கெட் காப்பாளராக ரிஷப் பந்த் ஆனார்.



- இந்த சாதனையைப் பொறுத்த வரையில் டெஸ்ட் தொடரில் ஐந்து கேட்சுகளைப் பிடித்த மற்ற இந்திய விக்கெட் காப்பாளர்களுடன் ரிஷப் பந்த் இணைகிறார்.
- இதற்கு முன் நரேன் தம்ஹானே, கிரண் மோர் மற்றும் நமன் ஓஜா ஆகியோர் உள்ளனர்.
- மேலும் டெஸ்ட் அரங்கில் அறிமுக ஆட்டத்தில் ஐந்து கேட்சுகளைப் பிடித்த முதல் ஆசிய மற்றும் உலகின் மூன்றாவது விக்கெட் காப்பாளர் இவரேயாவார்.
- முன்னதாக இவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது ஆட்டத்தை 6 ஓட்டங்களுடன் (six) தொடங்கிய முதல் இந்திய மற்றும் ஒட்டு மொத்தத்தில் 12வது மட்டையாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

## துப்பாக்கி சுடுதல் உலக கோப்பை - 2020

- 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு முன்னர் நடைபெற இருக்கும் ஒருங்கிணைந்த ISSF (International Shooting Sports Federation) உலக கோப்பைப் போட்டியை நடத்தும் உரிமை புது டெல்லிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் ஒருங்கிணைந்த உலக கோப்பைப் போட்டியானது குழல் துப்பாக்கி, கைத்துப்பாக்கி மற்றும் சிறு துப்பாக்கி சுடுதல் ஆகிய நிகழ்வுகளை உள்ளடக்கியது ஆகும்.

- இது 2012லிருந்து நடைபெற்று வரும் 7வது கண்டம் அல்லது உலகளாவிய பன்னாட்டு துப்பாக்கி சுடும் போட்டி ஆகும்.

## யோனெக்ஸ் – சன்ரைஸ் வியட்நாம் ஓபன் - 2018

- யோனெக்ஸ் – சன்ரைஸ் என அழைக்கப்படும் 2018 வியட்நாம் ஓபன் ஆனது வியட்நாமில் ஹோசிமின் நகரில் உள்ள குகுயென் டு கலாச்சார விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது.
- இந்தப் போட்டியை ஹாச்சிமின் நகர பூப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.
- இது 2018 BWF உலக சுற்றுப் பயணத்தின் 6-வது சூப்பர் 100 போட்டியாகும். இது 1996ல் துவங்கிய வியட்நாம் ஓபன் சாம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாகும்.

| நிகழ்வு | முதலிடம் | இரண்டாமிடம் |
|---|---|---|
| **ஆடவர் ஒற்றையர்** | சேஷர் ஹிரன் ரஸ்டாவிடோ (இந்தோனேசியா) | அஜய் ஜெயராம் (இந்தியா) |
| **மகளிர் ஒற்றையர்** | யெயோ ஜியா மின் (சிங்கப்பூர்) | ஹான் யுயி (சீனா) |
| **ஆடவர் இரட்டையர்** | கோ சங் ஹியூன், ஷின் பாயிக் சேயோல் (தென் கொரியா) | லீ ஷெங் மூ, யாங் போ-ஹிவான் (சீன தைபே) |
| **மகளிர் இரட்டையர்** | மிசாடோ அரடாமா, அகேனே வாட்னபே (ஜப்பான்) | நமி மட்சுயாமா, சிஹாரு ஷிடா (ஜப்பான்) |
| **கலப்பு இரட்டையர்** | நிப்ட்போன் ஃபூங்ஃபுபேட், சாவித்ரி அமித்ரா பாய் (தாய்லாந்து) | அல்பியான் ஈகோ ப்ரேசிய்யா, மார்ஷீலாக்சாஸா இஸ்லாமி (இந்தோனேசியா) |

## ஜீலன் கோஸ்வாமி ஓய்வு

- மூத்த இந்திய பெண் கிரிக்கெட் வீரரான ஜீலன் கோஸ்மி சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.
- இவர் 2010ம் ஆண்டில் அர்ஜுனா விருதைப் பெற்றார். மேலும் இவர் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கப்பட்ட இரண்டாவது பெண் கிரிக்கெட் வீரராகவும் ஆனார்.



- 2007ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் மன்றத்தின் (ICC) ஆண்டின் பெண்களுக்கான 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதினைப் பெற்றார். இந்த விருதினைப் பெற்ற முதல் இந்திய வீரர் இவரேயாவார்.

## கோ-கோவுக்கு அங்கீகாரம்

- ஆசிய ஒலிம்பிக் மன்றமானது (Olympic Council of Asia -OCA) இந்தியாவின் உள்நாட்டு விளையாட்டான கோ-கோவிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
- ஜகர்த்தாவில் நடைபெற்ற OCA பொதுச்சபையில் கோ-கோவை அங்கீகரிக்கும் இந்த முடிவானது எடுக்கப்பட்டது.
- ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கோ-கோவும் உள் அரங்கு செயல் விளக்கப் போட்டியாக இப்போது சேர்க்கப்பட்டது.

## FIFA U-20 உலகக் கோப்பை - பிரான்ஸ் 2018

- ஜப்பானின் கால்பந்து வரலாற்றில் முதல் முறையாக 2018ம் ஆண்டின் FIFA U-20 மகளிர் உலகக் கோப்பை இறுதி போட்டியில் ஸ்பெயினை வீழ்த்தி ஜப்பான் அணி கோப்பையை கைப்பற்றியுள்ளது.




- தகாரடா சவோரி கோல் அடிக்க உதவி புரிந்தமைக்காகவும் தானே அடித்த கோல் காரணமாகவும் சிறந்த ஆட்டக்காரராக தேர்வு செய்யப்பட்டார்.
- மேலும் தகாரடாவுக்கு வெண்கல காலணி மற்றும் அடிடாஸ் சில்வர் பந்து வழங்கப்பட்டது. அதே வேளையில் மினாமி என்ற வீரருக்கு வெண்கல பந்து வழங்கப்பட்டது.
- ஜப்பான் அணியானது ஃபேர்-ப்ளே (Fair-Play) விருதையும் பெற்றது. இத்துடன் FIFA U-20 உலகக் கோப்பை பிரான்ஸ் 2018 முடிவடைந்தது. இங்கிலாந்து அணியானது இதுவரைப் பெறாத நிலையான மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

## பெல்ஜியன் கிராண்ட் பிரிக்ஸ்

- பெல்ஜியன் கிராண்ட் பிரிக்ஸில் பெராரியின் ஓட்டுநர் செபஸ்டியன் விட்டல் மெர்சிடஸ் ஓட்டுநர் லிவீஸ் ஹிமில்டனை தோற்கடித்தார்.




- ரெட் புல் அணிக்காக நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டெப்பன் மூன்றாவது இடம்பெற்று போட்டியை நிறைவு செய்தார்.
- 2009 ஆம் ஆண்டிற்குப் பின் பெராரியின் முதலாவது வெற்றி இதுவாகும்.

## T20 வரலாற்றில் அதிக ஓட்டங்களை கட்டுப்படுத்திய பந்து வீச்சாளர்


- T20 வரலாற்றில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் முகமது இர்பான் அதிக ஓட்டங்களை கட்டுப்படுத்திய பந்து வீச்சாளர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
- இவர் பந்துவீச்சில் 4-3-1-2 என்பதில், 23 பந்துகளில் ரன்கள் எதுவும் கொடுக்காமல் இவர் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவர் 2018 ஆம் ஆண்டின் கரீபியன் பிரீமியர் லீக்கில் பார்படாஸ் டிரைடென்ட்ஸ் அணிக்காக விளையாடிய போது இதனை நிகழ்த்தினார்.
- இதற்கு முன் இந்தச் சாதனையை தென் ஆப்பிரிக்காவின் கிறிஸ் மோரீஸ் மற்றும் இலங்கையின் சனாகா வெலகேரா (2 for 2) பகிர்ந்துள்ளனர்.



# முக்கிய தினங்கள்

## ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினம் - ஜூலை 30

- ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. ஆள்கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க மற்றும் அவர்களை ஊக்கப்படுத்த இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்காக மருந்துகள் மற்றும் குற்றங்கள் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (United Nations Office on Drugs and Crime - UNODC) தேர்ந்தெடுத்துள்ள கருத்துருவானது "குழந்தைகள் மற்றும் சிறு வயதினரின் கடத்தலுக்கு பதில் அளித்தல்" ஆகும்.
- இத்தினம் கடத்தப்பட்ட குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இத்தினத்தை அனுசரிப்பதன் மூலம் கவனத்திற்கு கொண்டு வருகிறது. மேலும் கடத்தப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நீதி அளிப்பது ஆகியவற்றுக்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க இத்தினம் ஊக்கப்படுத்துகிறது.







- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2013ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் ஆள்கடத்தலுக்கு எதிரான உலக தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

## உலக தாய்ப்பாலூட்டும் வாரம் 2018

- தாய்ப்பாலூட்டுவதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 01 முதல் ஆகஸ்ட் 07 வரை உலக தாய்ப்பாலூட்டும் வாரமாக (2018) அனுசரிக்கப்படுகிறது.

**CRITICAL MISS**

Unicef's 'Capture the Moment' report found too many newborns miss out on lifesaving breast milk.

- Cultural practices, such as regarding colostrum (sticky, yellowish first milk high in antibodies, carbohydrates and protein, low in fat) as impure, a family elder feeding the baby honey, or giving the newborn sugar water
- The inability of the mother to express enough milk (1% to 5% of cases in India).
- Promotion and marketing of infant food or drinks, including infant formula
- Rising Caesarean sections, which result in delayed initiation to breast milk
- Mother's physical discomfort or an inability to do so because of health or work issues.

- தாய்ப்பாலூட்டுவதன் மீதான யுனிசெப் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி உலகம் முழுவதும் 7.8 கோடி குழந்தைகளுக்கு பிறந்த 1 மணி நேரத்திற்குள் தாய்ப்பால் அளிக்கப்படுவதில்லை என்று குறிப்பிடுகிறது.
- குழந்தை பிறந்த 1 மணி நேரத்திற்குள் தாய்ப்பாலூட்டுதலை தொடங்க வேண்டும்.
- இந்தியாவில் தாய்ப்பாலூட்டுதல் ஆனது 2005-ல் 23.4 சதவீதத்திலிருந்து 2015-ல் 41.5 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.
- உலகம் முழுவதும் தாய்ப்பாலூட்டுதல் ஆனது 2015-ல் 37 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.
- தாய்ப்பாலூட்டுதல் குறைபாடானது கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்காவில் (65 சதவீதம்) அதிகமாகக் காணப்படுகிறது. இது கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக்கில் (32 சதவீதம்) குறைவாகக் காணப்படுகிறது.
- பிறந்த 2 மணி முதல் 23 மணி நேரத்திற்குள் பாலூட்டப்படும் குழந்தைகள், பிறந்த 1 மணி நேரத்திற்குள் பாலூட்டப்படும் குழந்தைகளுடன் ஒப்பிடும் போது இறப்பதற்கு 33 சதவீதம் அதிக வாய்ப்புகள் உள்ளதாக தெரிகின்றன.

## சர்வதேச நண்பர்கள் தினம் - ஜூலை 30

- யுனெஸ்கோவின் பரிந்துரைக்குப் பிறகு துவக்க முயற்சியாக நண்பர்களுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது. யுனெஸ்கோவின் பரிந்துரையை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 1997-ல் ஏற்றுக் கொண்டது.
- அமைதிக் கலாச்சாரம் என்பது விழுமியங்கள், உளப்பாங்கு மற்றும் ஒழுக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். இது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படைக்

காரணங்களான வன்முறையை நிராகரிப்பது மற்றும் மோதல்களைத் தடுக்க முயல்வது ஆகியவற்றைக் குறிப்பதாகும்.



- சர்வதேச நண்பர்கள் தினத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2011-ல் வலியுறுத்தியது. மக்கள், நாடுகள், கலாச்சாரங்கள், மற்றும் தனிநபர்களுக்கிடையேயான நண்பர் என்ற உறவின் மூலம் அமைதிக்கான முயற்சிகள் மற்றும் பிரிவுகளுக்கிடையேயான தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என்று இத்தினத்தை அனுசரிப்பதன் மூலம் ஊக்கமளிக்கப்படுகிறது.
- இத்தினமானது அமைதியின் கலாச்சாரத்தின் மீதான திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு ஆதரவளிக்கிறது. மேலும் அமைதியின் கலாச்சாரம் மற்றும் உலகில் உள்ள குழந்தைகளுக்கான அகிம்சையின் சர்வதேச தசாப்தத்திற்கு (2001-2010) இத்தினம் ஆதரவளிக்கிறது

## உலக வனப் பாதுகாவலர் தினம் - ஜூலை 31

- உலக வனப் பாதுகாவலர் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூலை 31ம் தேதி அனுசரிக்கப்படுகின்றது. இது உலகம் முழுவதிலும் வனப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள வனப் பாதுகாவலர்களின் சீரிய பணிகளை அங்கீகரிக்கும் விதத்தில் கொண்டாடப்படுகின்றது.
- இதன் நோக்கம் பூமியின் இயற்கையான பொக்கிஷங்களையும், கலாச்சார புராதனங்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் தாக்கப்படும் அல்லது கொல்லப்படும் வனப் பாதுகாவலர்களை கவுரவிப்பது ஆகும்.




- 1992ல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச வனப் பாதுகாவலர் கூட்டமைப்பால் (International Ranger Federation) இத்தினம் ஆரம்பிக்கப்பட்டது. இத்தினம் 2007ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

## தேசிய தர்பூசணி தினம் - ஆகஸ்டு 3

- ஒவ்வொரு மனிதரின் விரும்பத் தகுந்த கோடைக்கால பழமான தர்பூசணி பழத்தை கொண்டாடும் வகையில் தர்பூசணி தினம் ஒரு வருடாந்திர விடுமுறை தினமாகும்.
- இப்பழம் ஏறக்குறைய 92 சதவிகித அளவிற்கு நீரையும், விட்டமின் A மற்றும் C ஆகியவற்றையும் ஆன்டிஆக்சிடென்ட்களான சில வகை புற்றுநோய் அபாயங்களை குறைத்திடும் கேரட்டேநோயிட் மற்றும் லைகோபேன் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.




- தர்பூசணி 4000 வருடங்களுக்கு முன்பு ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலப் பகுதியில் தோன்றியதாக கருதப்படும் ஒரு பழமையான பழம் ஆகும்.
- அமெரிக்காவின் ஒக்லஹோமா மாநிலத்தின் அலுவல்பூர்வ காய்கறி தர்பூசணி ஆகும்.

## நண்பர்கள் தினம் - ஆகஸ்டு 5

- முதல் சர்வதேச நண்பர்கள் தினம் - 1958ஆம் ஆண்டு பராகுவே நாட்டில் முன்மொழியப்பட்டது.
- உலக நண்பர்கள் கூட்டமைப்பு - 1958ஆம் ஆண்டு ஜூலை 30ம் தேதியை முதல் நண்பர்கள் தினமாக முன்மொழிந்தற்குப் பிறகு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை இத்தினத்தை அலுவல் பூர்வ கொண்டாட்டமாக அறிவித்தது.




- அமெரிக்காவில் வெற்றிகரமாக இத்தினம் அனுசரிக்கப்பட்டபின், ஐ.நா.வின் பொதுச் செயலாளர் கோபி அனானின் மனைவி நானி அனான் 1998ஆம் ஆண்டு ஐ.நா.சபையில் வின்னி தி பூ (Winnie the Pooh) என்பதை உலகளாவிய நட்பிற்கான தூதராக அறிவித்தார்.

- நண்பர்கள் தினக் கொண்டாட்டங்கள் உண்மையில் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தினங்களில் அனுசரிக்கப்படுகின்றன.
- ஆனால் தற்போது, அமெரிக்கா மற்றும் இந்தியா உள்பட்ட நாடுகளில் ஆகஸ்டு மாதம் முதல் ஞாயிறு இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- நண்பர்கள் தினம் இந்தியாவில் ஆகஸ்டு மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாடப்படுகின்றது.
- இவ்வருடம் இத்தினம் ஆகஸ்டு 5ம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.

## ஹிரோசிமா தினம் – ஆகஸ்ட் 6

- ஜப்பானிய நகரம் ஹிரோசிமா மீது அணுகுண்டு வீசப்பட்ட தினமான ஆகஸ்ட் 6, 1945 ஹிரோசிமா தினமாக ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூறப்படுகிறது.
- இரண்டாம்  உலகப் போரில் அணுகுண்டு போடப்பட்ட 73-வது ஆண்டு நிறைவினை இத்தினம் குறிக்கிறது.



- ஆகஸ்ட் 6, 1945-ல் அமெரிக்க வெடிகுண்டு விமானம்  எனோலா கே இராணுவப் போரில் இதுவரை பயன்படுத்தாத 'Little Boy' என்று பெயரிடப்பட்ட முதல் அணுகுண்டினை ஹிரோசிமா மீது வீசியது.

## தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்டு 07

- தேசிய கைத்தறி தினம் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு 7ம் தேதியன்று நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களை போற்றும் வண்ணம் அனுசரிக்கப்படுகின்றது.




- இந்த வருடம் தேசிய கைத்தறி தினத்தின் மூன்றாவது பதிப்பாகும்.

*பின்னணி*

- 2015ம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அரசு ஆகஸ்டு 7ம் தேதியை தேசிய கைத்தறி தினமாக அறிவித்தது.
- பிரிட்டிஷ் அரசால் ஏற்படுத்தப்பட்ட வங்கப் பிரிவினைக்கு எதிராக போராடுவதற்காக இதே தினம் 1905ஆம் ஆண்டில் கல்கத்தாவின் டவுன் ஹாலில் ஆரம்பிக்கப்பட்ட சுதேசி இயக்கத்தை நினைவு கூர்வதற்காக ஆகஸ்டு 7ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2015ம் ஆண்டு ஆகஸ்டு 7ம் தேதியன்று, தமிழ்நாட்டில் சென்னையில் பிரதமர் நரேந்திர மோடியால் முதல் தேசிய கைத்தறி தினம் அனுசரிக்க ஆரம்பிக்கப்பட்டது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 76ம் ஆண்ட விழா – ஆகஸ்ட் 08

- 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ம் தேதி இந்தியாவின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 76வது ஆண்டு விழா ஆகும்.




- 1942ம் ஆண்டு இந்த நாளில் மகாத்மா காந்தி (தேசத் தந்தை) இந்தியாவிலிருந்து வெள்ளையர்களை வெளியேற்றுவதற்காக எல்லா இந்தியர்களுக்கும் 'செய் அல்லது செத்து மடி'என்ற சொற்பொழிவாற்றி அழைப்பு விடுத்தார்.


- வெள்ளையனே வெளியேறு இயக்கம் (பாரத் சோடோ அந்தோலன் அல்லது ஆகஸ்ட் இயக்கம் அல்லது ஆகஸ்ட் கிராந்தி) இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு மிக முக்கியமான மைல்கல் ஆகும்.
- ஆகஸ்ட் 8, 1942 அன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (AICC)ன் பாம்பே கூட்டத் தொடரில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்று சிவில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டது.

## சர்வதேச பூனை தினம் - ஆகஸ்டு 8

- ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு 8ம் தேதி சர்வதேச பூனை தினம் ஒரு கொண்டாட்டமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2002ம் ஆண்டு விலங்குகள் நலனுக்கான சர்வதேச நிதி மூலம் ஏற்படுத்தப்பட்டது.

## உலகின் பூர்வ குடிகளுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்டு 9

- உலகம் முழுவதும் ஆகஸ்டு 9ம் தேதி உலக பூர்வ குடிகளுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்பட்டது.
- இதன் நோக்கம் மனித உரிமைகள், சுற்றுச் சூழல், சுகாதாரம் மற்றும் சமூக மேம்பாடு போன்ற பகுதிகளில் பூர்வ குடிகள் சந்திக்கும் பிரச்சினைகளை தீர்க்க சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே ஆகும்.





- 2018ம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு பூர்வகுடி மக்களின் இடப்பெயர்ச்சி மற்றும் குடியேற்றம்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பூர்வகுடி மக்களின் உரிமைகள் என்ற தீர்மானத்தின் மூலம் 2019ம் வருடத்தை பூர்வகுடிகளின் மொழிகளுக்கான சர்வதேச வருடமாக அறிவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1994ம் ஆண்டு டிசம்பர் 23ம் தேதி தனது தீர்மானத்தின்

மூலமாக ஆகஸ்டு 9ம் தேதியை உலக பூர்வகுடிகளுக்கான சர்வதேச தினமாக அறிவித்தது.

- இத்தினம் 1982ம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டின் மீதான பூர்வகுடி மக்களின் துணை ஆணையம் மீதான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் முதல் சந்திப்பை குறிப்பிடுகின்றது.

## உலக உயிர் எரிபொருள் தினம் – ஆகஸ்ட் 10

- உலக உயிர் எரிபொருள் தினம் (சர்வதேச பயோடீசல் தினம்) ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் - 10 அன்று கடைபிடிக்கப்பட்டு, புதைப்படிவ எரிபொருளின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- இந்த நாளில் 1893ம் ஆண்டு சர் ருடால்ப் டீசல் (டீசல் எந்திரத்தின் கண்டுபிடிப்பாளர்) முதன் முறையாக வேர்க்கடலை எண்ணெய்யில் இயந்திரத்தை வெற்றிகரமாக இயக்கினார்.





- இந்தியாவில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் உலக உயிர் எரிபொருள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு புதுடில்லி அறிவியல் மையத்தில் (விக்ஞான் பவன்) உலக உயிர் எரிபொருள் தின நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

## உலக புகைப்படத் தினம் – ஆகஸ்ட் 19

- உலகம் முழுவதும் உள்ள புகைப்படம் எடுப்பவர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 ஆம் தேதி உலக புகைப்பட தினம் அனுசரிக்கப்படுகிறது. இத்தினம் ஒரு ஒற்றைப் புகைப்படத்தை ஒரு எளிய நோக்கத்துடன் பகிர்ந்து கொள்ள மற்றும் அவர்களுடைய புகைப்பட உலகத்தை வெளி உலகத்துடன் பகிர்ந்து கொள்ள ஊக்கமளிக்கிறது.

## உலக கொசுக்கள் தினம் - ஆகஸ்ட் 20

- உலக கொசுக்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.




- பெண் கொசுக்களின் மூலம் மலேரியா ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்கு பரவுவதை 1897 ஆம் ஆண்டு பிரிட்டன் மருத்துவர் சர் ரொனால்டு ரோஸ் கண்டறிந்ததன் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## சத்பாவன திவாஸ் (நல்லிணக்க நாள்) - ஆகஸ்ட் 20

- இந்த தினம் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் நாளாகும்.
- இந்த நாளில் சமூக நல்லிணக்கம், அமைதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக ராஜீவ் காந்தி அளித்த பங்களிப்பை நினைவு கூறும் வகையில் ராஜீவ் காந்தி சத்பாவன விருது வழங்கப்படுகிறது.
- இந்த ஆண்டு 24வது ராஜீவ் காந்தி சத்பாவன விருது கோபால கிருஷ்ண காந்திக்கு அளிக்கப்பட்டது.

## உலக மூத்த குடிமக்கள் தினம் – ஆகஸ்ட் 21

- உலக மூத்த குடிமக்கள் தினமானது ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- மூத்த குடிமக்களின் நிலைமை குறித்த விழிப்புணர்வை வளர்க்கவும் முதுமைக் கூர்வு செயல்பாடு வழியாக உதவுவதுமே இதன் நோக்கமாகும்.
- இத்தினமானது முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் ஆகஸ்ட் 19, 1988 அன்று ஆகஸ்ட் 21ஆம் தேதியை அமெரிக்காவின் தேசிய மூத்த குடிமக்கள் தினமாக அறிவித்து பிரகடனத்தை கையொப்பமிட்ட பிறகு அலுவல்பூர்வமாக கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.
- மற்ற நாடுகளும் முதியவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக பின்னர் இத்தினத்தை ஏற்றுக் கொண்டன.
- பின்னர் டிசம்பர் 14, 1990ல் ஐநா பொதுச்சபையானது ஆகஸ்ட் 21ஐ உலக மூத்த குடிமக்கள் தினமாக அனுசரிப்பதாக அறிவித்தது.

## தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு மற்றும் அஞ்சலி தினம் – ஆகஸ்ட் 21

- ஐ.நா பொதுச் சபை ஆனது ஆகஸ்ட் 21ம் தேதியை தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்தல் மற்றும் அஞ்சலி செலுத்துதல் ஆகியவற்றுக்கான சர்வதேச தினமாக நிறுவியுள்ளது.




- இந்த தினம் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பி பிழைத்தவர்களை கௌரவிக்கவும் ஆதரவளிக்கவும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை அவர்கள் முழுமையாக அனுபவிப்பதை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் அனுசரிக்கப்படுகிறது.

## அடிமை வணிகம் மற்றும் அவற்றை ஒழித்தலை நினைவு கூறுவதற்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 23

- உலகம் முழுவதும் ஆகஸ்ட் 23ஆம் தேதி அடிமை வணிகம் மற்றும் அவற்றை ஒழித்தலை நினைவு கூறுவதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்பட்டது.
- அட்லாண்டிக் அடிமை வணிகத்தை நினைவு கூறுவதற்காக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO-United Nations Educational, Scientific and Cultural Organisation) இத்தினத்தை தேர்ந்தெடுத்தது.
- தற்பொழுது ஹய்தி என்றறியப்படும், சாந்தோ டோமிங்கோ தீவின் மேற்குப் பகுதியில் 1791ஆம் ஆண்டு ஏற்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களின் கிளர்ச்சியைக் குறிப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஆப்பிரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த ஆண்கள் மற்றும் பெண்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். அவ்வாறு விற்கப்பட்டவர்கள் அடிமை அமைப்பிற்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டனர்.
- இந்த ஹய்தி புரட்சியானது 1804ஆம் ஆண்டில் அடிமைகளின் சுதந்திரம் மற்றும் விடுதலைக்கு இட்டுச் சென்றது.




- இந்த நாள் முதன்முறையாக பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டது. குறிப்பாக 1998ஆம் ஆண்டு ஹய்தியிலும் 1999ஆம் ஆண்டு செனெகலிலும் கொண்டாடப்பட்டது.

## சர்வதேச வண்ண நீர்த் திருவிழா 2018 – ஆகஸ்ட் 23

- ஆகஸ்ட் 23ல் ராஞ்சியின் ஆடுரே இல்லத்தில் 2018ஆம் ஆண்டிற்கான வண்ண நீர்த் திருவிழா தொடங்கியது.
- 5 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவின் நோக்கம் உள்ளூர் கலைஞர்களை சர்வதேச கலையுடன் தொடர்படுத்துகிறது. மேலும் இது ஜார்க்கண்ட் மாநிலத்தின் சிறந்த கலை மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது.



- இத்திருவிழாவை ஜார்க்கண்ட் மாநில கலை, கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்திருந்தது.

## சமஸ்கிருத திவாஸ் - ஆகஸ்ட் 26


- சமஸ்கிருத திவாஸ் ஒவ்வொரு ஆண்டும் சரவண பூர்ணிமாவில் (இந்து நாள்காட்டியின் படி ஷர்வண மாதத்தின் முழுநிலவு நாளன்று) கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டு இது ஆகஸ்ட் 26, 2018ல் கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டு இது ஆகஸ்ட் 6 மற்றும் 7ம் தேதிகளில் கொண்டாடப்பட்டது.
- சமஸ்கிருத திவாஸ் முதன் முதலில் 1969ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இது சமஸ்கிருதத்தின் தாக்கத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றி பேசும் பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கியது.

## தெலுங்கு மொழி நாள் – ஆகஸ்ட் 29

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29 ஆம் நாள் 'தெலுங்கு மொழி நாளாக' அனுசரிக்கப்படுகிறது.
- தெலுங்கு கவிஞர் கிடுகு வெங்கட இராமமூர்த்தியின் பிறந்த தினத்துடன் ஒன்றி பொருந்துவதற்காக இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது தெலுங்கு மொழியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நிதிகள் மற்றும் விருதுகளை வழங்குகிறது.
- ஆந்திரப் பிரதேச அரசின் சார்பாக கலாச்சாரத் துறையானது இத்தினத்தை அனுசரிக்கிறது.

## தேசிய விளையாட்டுகள் தினம் – ஆகஸ்ட் 29

- புகழ்பெற்ற இந்திய ஹாக்கி அணி வீரர் மேஜர் தயன் சந்த் பிறந்த தினத்தின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 29 ஆம் தேதி தேசிய விளையாட்டுகள் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.




- நாட்டில் உள்ள சிறந்த விளையாட்டு வீரர்களின் சாதனைகளை கொண்டாடுவதற்காக

இந்தியக் குடியரசுத் தலைவரால் அர்ஜுனா மற்றும் கேல் ரத்னா விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் இந்த தினத்தில் வழங்கப்படுகின்றன.

## அணுஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 29

- ஐ.நா. பொதுச் சபையின் 64வது அமர்வின் போது ஆகஸ்ட் 29 ஆம் தேதியை அணு ஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




- அணுஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினத்தின் தொடக்க விழா 2010 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
- அணுஆயுத சோதனையை ஒழிப்பதற்கான முக்கிய செயல்முறை விரிவான அணுஆயுத சோதனை தடை ஒப்பந்தமாகும் (CTBT – Comprehensive Nuclear – Test Ban Treaty)
- இது 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று ஐ.நா. பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இதுநாள் வரை 183 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தை 166 நாடுகள் உறுதி செய்துள்ளன.
- 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் CTBT கையெழுத்து இடுவதற்காக தொடங்கப்பட்ட பின்பு 10 அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

1. இந்தியா 1998-ல் இரண்டு சோதனைகளை நடத்தியுள்ளன. (மேலும் இந்தியாவானது 1974-ல் ‘அமைதியான அணு ஆயுத சோதனை’ எனும் பெயரால் ஒரு அணு ஆயுத சோதனையினை நடத்தியது)
2. பாகிஸ்தான் 1998-ல் இரண்டு சோதனைகளை நடத்தியுள்ளன.
3. கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு 2001, 2009, 2013, 2016 ஆகிய ஆண்டுகளில் சோதனைகளை நிகழ்த்தியுள்ளன.

# இதரச் செய்திகள்

## டிஜிட்டல் கல்வியறிவு நூலகம்

- இளைஞர்களுக்கு ஆன்லைன் தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான திறனை வளர்ப்பதற்காக முகநூலானது “டிஜிட்டல் கல்வியறிவு நூலகம்” தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

- 11 முதல் 18 வயதுடைய இளைஞர்களின் பயிற்றுநர்களுக்காக ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் இணையம் மற்றும் சமூகத்திற்கான பெர்க்மேன் க்ளெய்ன் மையமானது ஊடாடு பாடங்கள் மற்றும் காணொளியை வடிவமைத்துள்ளன.

## சந்தாலி

- தனது சொந்த எழுத்து வடிவத்தில் விக்கிப்பீடியாவின் வலைபதிப்பைப் பெற்ற முதல் இந்திய பழங்குடியின மொழியாக சந்தாலி உருவெடுத்துள்ளது.
- விக்கிப்பீடியாவின் சந்தாலி பதிப்பின் முகப்பு பக்கம், ஒல் சிக்கி படிவத்தினை உருவாக்கிய ரகுநாத் முர்மூவினை பற்றிய கட்டுரையை தாங்கியுள்ளது.

### *சந்தாலி மொழி*

- இது இந்திய அரசியலமைப்பில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 22 மொழிகளில் ஒன்றாகும்.
- இது ஒல் சிக்கி படிவத்தில் எழுதப்பட்டுள்ளது. இது 2001-ல் இந்தியாவில் மட்டும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 6.4 மில்லியன் மக்களால் பேசப்படும் மொழியாகும்.
- பெரும்பான்மையாக ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா மற்றும் அசாம் ஆகிய பகுதிகளில் இம்மொழியை அதிகம் பேசுபவர்கள் உள்ளனர். இது வங்காள தேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலும் பேசப்படும் மொழியாகும்.

## ‘நமது பாதுகாப்பு, நமது உரிமைகள்’ பிரச்சாரம்

- அம்னிஸ்டி இண்டர்நேஷனல் இந்தியா (Amnesty International India) என்ற அமைப்பானது ‘நமது பாதுகாப்பு, நமது உரிமைகள்’ என்ற புதிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இதன் நோக்கம் குழந்தைகளிடையே பாலின பிரச்சனைகள் அடையாளம் காண்பது மற்றும் புரிந்து கொள்வதற்கு உதவுவதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- அம்னிஸ்டி இண்டர்நேஷனல் இந்திய அமைப்பானது பாரத் கியான் விக்யான் சமிதி, நகர்ப்புற எழுச்சிக்கான மக்கள் இயக்கம் (PARA People; Action for Global Awakening) மற்றும் சமூகக் கல்விக்கான நிறுவனத்துடன் இணைந்து இப்பிரச்சாரத்தை நடத்தவிருக்கிறது.
- இப்பிரச்சாரமானது பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினமான அக்டோபர் 11 - அன்று முடிவடையும்.

## ராஜ் பவன் - கர்நாடக ஆளுநர்

- கர்நாடக ஆளுநர் வாஜ்பாய் வாலா தனது அலுவல் பூர்வ குடியிருப்பை ஆகஸ்ட் 16 முதல் ஆகஸ்ட் 31 வரை பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைத்துள்ளார்.
- இதற்கு முன் இக்கட்டிடம் ‘பெங்களூரு குடியிருப்பு’ என்று அழைக்கப்பட்டது. இது 1840 மற்றும் 1842 இடையிலான காலகட்டத்தில் பிரிட்டிஷ் பேரரசின் மைசூரு பகுதியின் ஆணையரான சர் மார்க் கப்பன் என்பவரால் கட்டப்பட்டது.

- ராஜ் பவனில் உள்ள 19 படுக்கை அறைகளின் பெயர்கள் இந்தியாவின் புகழ்பெற்ற ஆறுகள் மற்றும் மலைகளின் பெயரில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகப் பழமையான பாலாடைக்கட்டி

- ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகப்பழமையான திட பாலாடைக் கட்டியினை 3200 ஆண்டுகள் பழமையான கல்லறையில் இருந்து கண்டுபிடித்துள்ளனர். அதே போல் உயிர்க் கொல்லும் திறனுடைய நோய்க்கான சான்றும் கிடைத்துள்ளது.



- இந்த பாலாடைக் கட்டியானது கி.மு.13ம் நூற்றாண்டில் எகிப்தின் மேம்பிஸ் பகுதியின் மேயரான தாமிஸ் என்பவரின் கல்லறையிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது முதலில் 1885ல் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் மணற் சரிவினால் மூடப்பட்டு 2010ல் மீண்டும் கண்டறியப்பட்டது.

## கலீத் ஹோசினியின் ‘கடல் பிரார்த்தனை ‘(Sea Prayer)

- அதிக விற்பனையான தி கைட் ரன்னர் (The Kife Runner) புத்தகத்தின் எழுத்தாளரான கலீத் ஹோசினி தனது சமீபத்தியப் புத்தகமான ‘Sea Prayer’ ஐ விரைவில் வெளியிட உள்ளார்.
- இப்புத்தகமானது செப்டம்பர் 2015ல் துருக்கி கடற்கரையில் சடலமாகக் கிடந்த 3 வயது சிரிய நாட்டுச் சிறுவனுக்கு காணிக்கையாகும்.



- இந்தப் புத்தகமானது ப்ளூம்ஸ்பெரியால் வெளியிடப்படுகிறது.
- முன்னதாக ‘Sea Prayer’ ஆனது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையருடன் (UNHCR – United Nations High Commissioner for Refugees) இணைந்து

வழங்கப்பட்ட ஒரு 'மெய்நிகர்' திரைப்படமாகும்.

- கலீத் ஹோசினி ஒரு ஆப்கானிஸ்தானில் பிறந்த அமெரிக்க நாவலாசிரியர் ஆவார்.
- இவர் 'தி கைட் ரன்னர்', 'எ தௌசண்ட் ஸ்பெலண்டிட் சன்ஸ்' மற்றும் 'அண்ட் தி மௌண்டெயன்ஸ் எக்கோவ்டு' போன்ற புத்தகங்களை எழுதியுள்ளார்.
- முன்னதாக இவர் UNHCRன் நல்லெண்ண தூதுவராக 2006ல் நியமிக்கப்பட்டார்.

- - - - - - - - - - - - - - -